
# சோமாஸ்கந்தன்

# SOMASKANDAN





அதிபர் வ.ஆறுமுகம் சிறப்பு மலர்

PUTTUR SRI SOMASKANDA COLLEGE MAGAZINE 2006

Volume : XIII

உ

சிவமயம்

# சோமாஸ்கந்தன்

# SOMASKANDAN 2006

## அதிபர் வ. ஆறுமுகம் சிறப்பு மலர்

## Puttur Sri Somaskanda College Magazine 2006

10.09.2005 தொடக்கம் 31.10.2006 வரையான காலப்பகுதிக்குரியது

## 'சோமாஸ்கந்தன்' மலர்க்குழு - 2006


முகாமையாளர் : திரு. கு. வாகீசன்

பதிப்பாசிரியர் : திரு. ச. லலீசன்

உதவிப் பதிப்பாசிரியர் : திருமதி. சி. ஜெயராஜா

செயற்குழு உறுப்பினர் :

திரு. மு. முரளிதரன். திரு. பொ. சற்குணநாதன்.
திரு. க. தில்லைநாதன் திருமதி. மே. பிலிப் தம்பிராஜா.
திருமதி. த. சத்தியலிங்கம். திருமதி. வ. ஸ்ரீவடிவேலு.
திரு. வீ. செவ்வந்திநாதக்குருக்கள் செல்வி. க. கந்தசாமி.
திருமதி. க. பிரபாகரன் திருமதி. து. சிவயோகன்

கணினி வடிவமைப்பு : தகவல் தொழினுட்ப மையம்
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

தொலைபேசி இல : 021-4591644

மின் அஞ்சல் : puttursssc@yahoo.com

அச்சுப் பதிப்பு : ஷாம்பவி பதிப்பகம்,
276, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.


சாதனை படைத்த மாணவர் வரிசையில் இடம்பெறும் புகைப் படங்களுக்குத் தகுதி பெற்றோர்.

*வலய மட்டத்தில் முதலிடம் மாத்திரம், அல்லது மாவட்ட மட்டத்தில் 1 ஆம் /2 ஆம் /3 ஆம் இடங்கள். அல்லது மாகாண மட்டம், தேசிய மட்டத்தில் பங்கு பற்றியமை மற்றும் க.பொ.த (உ/த) அதியுச்ச பெறுபேறு(3A) அல்லது அதற்கு ஈடான பெறுபேறு, க.பொ.த. (சா/த) அதியுச்ச (10 A) பெறுபேறு, தரம் 5 புலமைப் பரிசில் சித்தி.- பதினோராவது மலர் தொடக்கம் இந்நடைமுறையே கைக்கொள்ளப்படுகிறது. பிற்காலங்களில் கல்லூரி பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வோருக்கு இத்தகவல் உதவியாக அமையுமென நம்புகிறோம்.*

# தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

- மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

# நிறுவுநர் நினைவுக் கீதம்

*இராகம் : சங்கராபரணம்    தாளம் : ஆதி*

மழவரின் மைந்தன் தினமே - நம்
மனதினில் வழுத்துவம் நிதமே
கொடைத்திறம் படைத்த வள்ளல் - அவர்
பதத்தினைப் பணிசெய் மனமே

சிவனார் உறையும் கோவில் - எங்கள்
சோமாஸ் கந்தப் பள்ளி
அன்னம் பாலிக்கும் சத்(தி)ரம் - அவர்
அமைத்தனர் அறிநீ மனமே

சைவமும் தமிழும் ஓங்க - நம்
பிறவியின் மாண்பை நுகர
அளித்தனன் இலவசக் கல்வி - அதை
அறிநீ உணர்நீ மனமே

நிறுவுநர் கந்தையா மகிமை - நம்
நினைவிடை நிலவுதல் பெருமை
அறிவொளி உணர்வொளி பெருக - அவர்
ஆற்றிய தொண்டுகள் புகழ்வோம்.

அரனாலயம், அறிவாலயம், அமுதாலயம் அமைத்த வள்ளல்



அமரர் மழவராயர் கந்தையா அவர்களின்

திருவடித் தாமரைகளுக்கு இம்மலர்ப் படையல் அர்ப்பணம்

பதவி ஓய்வு பெறும்

## எங்கள் அதிபர்



**திரு வயிரவநாதன் ஆறுமுகம்**

**B.Sc. (Hons.), P.G.D.E., A.I.J.P.**

புத்தூர் சிவன் கோவிற் பிரதமகுரு
சிவஸ்ரீ சாமி.சோமசுந்தரக் குருக்கள் அவர்கள்
வழங்கிய

# ஆசிச் செய்தி



எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிவரும் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை நல்லாற்றுப்படுத்திய அதிபர் பெருமகன் அகவை அறுபதை எய்தித் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

சமய விழுமியங்களை முறையாகக் கைக்கொள்வதன் மூலம் மாணவர் மத்தியில் உயரிய ஒழுக்கத்தைப் பேணலாம் என நம்பி அதில் வெற்றி கண்டவராக அதிபர் அவர்கள் திகழ்கிறார். தற்போது கல்லூரியில் இடம்பெற்றுவரும் அறுபத்து மூவர் குருபூசைகள், திருவாசக விழா, வாணிவிழா, நாவலர் விழா என அனைத்துச் செயற்பாடுகளும் சைவத்தைக் காக்கும் கலைக் கூடமாக எமது கல்லூரியை விளங்கச் செய்து வருகின்றன.

நிறுவுநர் மழவராயர் கந்தையா வள்ளலாரின் பிறந்த தினத்தன்று எமது ஆலயத்திலிருந்து நிறுவுநரைக் கல்லூரிக்கு எழுந்தருளச் செய்து பரிசளிப்பு நிகழ்வையும் நடாத்தி யாவருக்கும் மதியவிருந்தளித்து அத்தினத்தையே அர்த்தமுள்ள தினமாக மாற்றிய உத்மராக அதிபர் விளங்குகிறார்.

ஓய்வுக் காலத்திலும் கல்லூரிக்காகப் பணி செய்து ஷேமமாய் வாழ விசாலாட்சி அம்பிகா சமேத விசுவநாத சுவாமியின் திருவருள் கிடைப்பதாக.

*"சர்வே ஜனகா சுகினோ பவந்து"*

நல்லைக்குருமணி

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



ஈழத்தில் சைவச் சூழலில் ஆங்கில மொழிமூலமான கல்வியை வழங்கும் உயரிய நோக்குடன் நிறுவப்பெற்றதே புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ஆகும்.

எமது ஆதீனம் அமைந்துள்ள நிலத்தை, சைவஞ் சார்ந்த செயற்பாடுகளுக்கெனக் கொடையாக வழங்கிய வள்ளல் அமரர் மழவராயர் கந்தையாவால் நிறுவப்பெற்ற பெருமை இக்கல்லூரிக்கு உண்டு.

சைவத்தையும் தமிழையும் காக்கும் செயற்பாடுகள் அன்று தொட்டுப் புனிதமாக இடம்பெறத் தொடங்கின. ஈழத்தில் அறுபத்து மூன்று நாயன்மாரது குருபூசை நிகழ்வுகள் ஒழுங்காகக் கைக்கொள்ளப்பெறும் ஒரேயொரு கல்வி நிறுவனமாக ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி திகழ்கிறது. அது மாத்திரமல்லாமல் திருவாசக விழா, வாணி விழா, நாவலர் குருபூசை விழா, சந்தான குரவர் குருபூசைகள் எனச் சமய வழியில் ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்கும் உயரிய பணியை இக்கல்லூரிச் சமூகத்தினர் ஆற்றி வருகின்றனர்.


இப்பணிகளை கடந்த பத்தாண்டு காலமாக நல்லாற்றுப்படுத்திய பெருமகன் அதிபர் திரு வ.ஆறுமுகம் ஆவார். இக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் இக்கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றி அதிபராகச் சேவையாற்றியமை காலம் செய்த கொடையாகும்.

இன்று அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர் உள்ளத்தால் என்றும் இளமையானவராக இருப்பதால் அவரது சேவை தொடர்ந்தும் கல்லூரிக்குக் கிடைக்கும் என நம்புகிறோம்.

ஓய்வுக் காலத்திலும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு எய்த வாழ்த்துகிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

## யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும்
### கல்லூரியின் தர்மகர்த்தா சபைத் தலைவரும் (பதவி வழி) ஆகிய
### திரு வே.தி. செல்வரத்தினம் அவர்கள் வழங்கிய
# வாழ்த்துச் செய்தி



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கடந்த பத்தாண்டுகளாக அதிபராகச் சேவையாற்றிய திரு வ.ஆறுமுகம் அவர்கள் பணி ஓய்வு பெறுவதையிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆசிரியராக, அதிபராக எனப் பல தளங்களில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் பணியாற்றியுள்ள திரு வ. ஆறுமுகம் அவர்கள் சிறந்த கல்வித் தொண்டர். 'மம்மர் அறுக்கும் மருந்து' ஆகிய கல்வியை மாணவர்கள் உரிய வழிகளில் பெற்றுக் கொள்ள அளப்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார். குறிப்பாகக் கல்லூரியின் தர்ம சாதனங்களைப் பரிபாலிப்பதில் நேர்மையானவராகவும் நம்பகத்தன்மை மிகுந்தவராகவும் விளங்கியுள்ளார்.

எமது கல்வி வலயப் பாடசாலைகளை வழிநடத்தும் அதிபர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக திரு வ.ஆறுமுகம் அவர்களைக் கொள்ளலாம்.

**கோப்பாய்க் கல்விக் கோட்டப் பணிப்பாளர்**
**திரு இ.சிவஞானசுந்தரம் அவர்கள்வழங்கிய**

# *வாழ்த்துச் செய்தி*



அதிபர் வ. ஆறுமுகம் அவர்கள் அகவை அறுபதை எய்தியதால் ஓய்வு பெறுகிறார். உடல் நலத்திலும் உள நலத்திலும் ஒரு துடிப்பான இளைஞனாகச் செயற்படும் இவரா ஓய்வு பெறுகிறார்?

திரு வ.ஆறுமுகம் அவர்கள் பதவி வழியாக மாத்திரமே ஓய்வு பெறுகிறார். மறுபக்கத்தில் கல்லூரியின் பழைய மாணவராகிய இவரது வழிகாட்டல் கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைக்கும் எனப் பலரும் எதிர்பார்த்துள்ளனர்.

சிறந்த ஆளுமை மிக்க அதிபராக விளங்கி கல்வி சார் நிலையிலும் பௌதிக வளம்சார் நிலையிலும் கல்லூரியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திய திரு வ. ஆறுமுகத்தின் ஓய்வுக் காலம் சிறக்கவும் 'சோமாஸ்கந்தன்' மலர் வெளியீடு சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

## பிரதி அதிபர் திரு கு. வாகீசன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



பணிஓய்வு பெறும் அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்கள் தனது 34 வருட சேவைக் காலத்தில் 20 வருடங்களை குறிப்பாக தனது மொத்த சேவைக் காலத்தின் மூன்றில் இரண்டு பங்கை எமது கல்லூரிச் சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றியுள்ளார்கள். பழைய மாணவர் சங்கம் , அபிவிருத்திச் சங்கம், தர்மகர்த்தா சபை ஆகியவற்றினை ஒருங்கிணைத்து அவற்றின் தொழிற்பாடுகளை உச்ச நிலைக்கு வளர்த்தெடுத்ததுடன், பாடசாலைச் சமூகத்தையும் விழிப்படையச் செய்த பெருமையைப் பெற்றவர் என்றால் மிகையாகாது.

வலிகாம ஒட்டுமொத்த இடப்பெயர்வின் போது தென்மராட்சியில் மட்டுவில் பதியில் இருந்து 1995ஆம் ஆண்டு எமது பாடசாலையின் அதிபர் பதவியினைப் பொறுப்பேற்றுக் கொண்ட இவர்கள் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கூடாக இன்றைய நிலைக்கு இப்பாடசாலையை மிளிரச் செய்தவர்கள்.

இவர்கள் ஓய்வுபெறும் காலம் எமது பாடசாலையின் பவளவிழா ஆண்டு ஆகும். பாடசாலையின் பல்வேறு பதிவுகளை எதிர்காலத்துக்கென ஆவணப்படுத்திய பெருமையும் இவரையே சாரும். பவளவிழா மணிமண்டபம் , சோமாஸ்கந்தன் ஆலயம், திருவள்ளுவர் மையம் ஆகிய செயற்பாடுகளுடன் பவளவிழா இறுதி நிகழ்வு, பவளவிழாச் சஞ்சிகை வெளியீடு, முன்னாள் பாடசாலையின் பணியாளர்கள் கௌரவிப்பு ஆகியன யாவும் தற்போதய அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறைவுறாது இருப்பினும் ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் தான் தொடங்கிய பணிகள் தனது ஓய்வு காலத்திலும் செவ்வனே நிறைவுபெற ஆக்கமும் ஊக்கமும் தந்து தொடர்ந்தும் முன்னின்று உழைக்க வேண்டுமென்று நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறாக பாடசாலையே தன்னுயிராக வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அதிபர் அவர்களின் பணி என்றும் எமது பாடசாலைக்கு கிடைக்க நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அவருக்கு வழங்க வேண்டும் என்று எமது பாடசாலையில் கோயில் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றேன்.

கல்லூரியின் நலம்புரிக் கழகத்தின் சார்பில் அதன் தலைவர்

## திரு சு. மோகனராசன் அவர்கள் விடுக்கும்

# வாழ்த்துச் செய்தி



அதிபர் திரு வ. ஆறுமுகம் அவர்கள் எமது கல்லூரியில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்லூரியின் அபிவிருத்திக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து தன்னாலியன்ற அதியுச்ச சேவையைத் தந்த பெருமகன்.

இவருடைய காலத்தில் பாடசாலையில் கூடுதலான பௌதிகத் தேவைகள் நிறைவு பெற்றன. சரியான திட்டமிடலுடனும் அர்ப்பணிப்புடனும் சிக்கனத்துடனும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து நிறைவு செய்தவர்.

இவருடைய காலத்தில் ஆசிரியர்களை மட்டும் அங்கத்தவராகக் கொண்டியங்கிய ஆசிரியர் கழகம் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய நலம்புரிக் கழகமாக மலர்ந்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

அதிபர் அவர்களுடைய சேவை எமது பாடசாலைக்கு என்றென்றும் தேவை என்பதை அனைவரும் உணர்வர். சிறந்த ஆலோசகராக, வழிகாட்டியாக, நலம்விரும்பியாக பல்வேறு வழிகளிலும் தொடர்ந்தும் எமக்கு அவர் உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

அதிபர் அவர்கள் எல்லா நலங்களும் பெற்று நிறைவுற வாழ எம்கல்லூரியில் கோயில் கொண்டருளும் சோமாஸ்கந்தப் பெருமான் அருள் புரிய வேண்டுமென இறைஞ்சுகிறோம்.

# பதிப்புரை



எங்கள் கல்லூரியின் வரலாற்றுப் பதிவாக அமையும் 'சோமாஸ்கந்தனின்' பதின்மூன்றாவது பிரசவிப்பில் சந்திக்கின்றோம். இம்மலர் வழமையான மலர்களிலிருந்து சற்று வித்தியாசமானது.1966 இல் வெளியாகிய அதிபர் திரு சு.குமாரசுவாமி சிறப்பு மலரை ஒத்தது.

அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்கள் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தவர் என்பதில் யாருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் கிடையா. வாழ்வை அர்ப்பணித்த பெருமகனைக் கௌரவிக்கும் முயற்சியே இம்மலர். 1995 இல் யுத்த வடுக்களால் நொந்து போன கல்லூரி அன்னைக்கு மறு வாழ்வளித்தவருக்காக இக்காகிதப் ப'க்களின் காணிக்கை இடம்பெறுகிறது.எமது வழமையான அம்சங்களுடன் அதிபர் குறித்த அறிஞர்களதும் மாணவர்களதும் நயப்புரைகள் மலரை அணிசெய்கின்றன.

இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளும் கடந்த ஆகஸ்ட் 11 முதல் தீவிரமடைந்த யுத்த முனைப்புகளும் எம்மை எமது பணியில் ஈடுபடுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தின.மலரின் கணினி வடிவமைப்பை மேற்கொள்வதில் மின்சாரத்துடனான போராட்டம் முக்கிய இடத்தைப் பெற்றது. இதற்கு முந்திய காலங்களில் சஞ்சிகை முகாமையாளரும் பதிப்பாசிரியரும் இரவுப் பொழுது பாடசாலையில் தங்கி சஞ்சிகை தொடர்பான பணிகளில் ஈடுபடுவது வழக்கமாக இருந்தது. இம்முறை இரவில் வழங்கப்படும் சில மணி நேர மின்விநியோகம், காலையில் வழங்கப்படும் ஒருமணி நேர மின்விநியோகம் என்பவற்றின் துணைக் கொண்டு எமது இல்லங்களில் இருந்தவாறு மலர் வடிவமைப்பின் பெரும்பங்கை மேற்கொள்ள நேரிட்டுள்ளது. இதனால் எமது எதிர்பார்ப்பிற்கேற்றவாறு மலர் வடிவமைப்பை முழுமைப்படுத்த இயலாது போய்விட்டது என்றே கூறவேண்டும்.

இம்மலர் வெளியீட்டை எவ்வாறு மேற்கொள்வது என்பது முதல் எப்போது

மேற்கொள்வது என்பது வரை ஆலோசனைகளையும் தேவையான உதவிகளையும் நல்கிவரும் மலர்க்குழுவினர் யாவருக்கும் எமது நன்றி.

ஆசியுரை, வாழ்த்துரை, நயப்புரை எனப் பல்வேறு முகங்களைக் காட்டி ஆறுமுகத்தின் அழகை இரசித்த இதயங்களுக்கு எம்நன்றி.

மலரில் இடம்பெற்றுள்ள புகைப்படங்களுக்கான படப்பிடிப்புகள் இம்முறையும் எம்மாலேயே மேற்கொள்ளப்பெற்றன. ஆயினும் சிலகாலங்களுக்கு முன்னர் எமது டிஜிற்றல் புகைப்படக் கருவி பழுதுற்ற நிலையைக் கண்டு, மனம் நொந்து தனது கருவியை வழங்கியுதவி, படப்பிடிப்புகள் சீர்பெற உதவிய செல்வன் இ.கோகுல்நாத்திற்கு விசேடமாக நன்றியுரைக்க வேண்டும்.

யாழ் ஷாம்பவி பதிப்பக உரிமையாளர் திரு சீ.புவீந்திரன், அட்டைப்படத்தை கொழும்பில் பதிப்பித்து ' போக்குவரத்துத் தடைப்பட்டுள்ள வேளையிலும் ' எமது கரங்களை உரிய நேரத்தில் எட்டச் செய்வதற்காக அரும்பாடுபட்ட எமது கல்லூரியின் பழைய மாணவர் திரு வ. கணபதிப்பிள்ளை போன்றோர் எம்முள் ஒருவராகி இம்மலர் வெளியீட்டில் பங்கெடுக்கின்றனர். யாவருக்கும் எமது நன்றி

பவள விழா ஆண்டு என்ற முனைப்புடன் ' இவ்வாண்டில் பவளவிழா மலர், சோமாஸ்கந்தன் மலர் என்ற இரண்டு மலர்களை வெளியிட்டு அழகு பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அச்சடிக்கும் காகிதம் உட்பட யாவற்றையுமே கறுப்புச் சந்தையில் வாங்கும் கட்டாயத்தில் உள்ள எம்மால் என்ன செய்ய முடியும்?. 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்ற மகான் செல்லப்பா சுவாமிகளின் ஆப்த வாக்கியம் ஒன்றை அசைபோடுவதைத் தவிர.

சோமாஸ்கந்தனின் முகிழ்ப்பு இனிவரும் காலங்களிலும் இனிதாக அமைய வேண்டும். உங்கள் யாவரதும் வழமையான ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் இதற்குப் பலம் சேர்க்க வேண்டும். கல்லூரித் தாயின் பெருமை மேலோங்கவும் நாடு நலம் பெறவும் பிரார்த்திப்போம்.

அன்புடன்

**ச.லலீசன்**

பதிப்பாசிரியர்.

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரியில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் சோமாஸ்கந்தப் பெருமானின் பாதங்களைப் பணிந்து 2006 ஆம் ஆண்டிற்குரியதும் எனது பணிக்கால நிறைவுக்குரியதுமான அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

## நிறுவுநரின் 119 ஆவது பிறந்த நாள்.

எமது கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா வள்ளல் அவர்கள் எமது பிரதேசத்தின் அறிவுப் பயிர் வளர்ச்சிக்காக இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் அமைத்த கவின் கலைக் கூடமே எமது கல்லூரி ஆகும். சைவச் சூழலில் ஆங்கில மொழி மூலமான இலவசக் கல்வியை இலங்கையில் முதன்முதலாக வழங்கிய பெருமகனாக வள்ளலார் அவர்கள் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறார்கள். 10.09.1887 இல் இம்மண்ணில் அவதரித்து இம்மண்ணுக்காக வாழ்ந்த அன்னாரது பணிகளை மதித்து அவரது பிறந்த நாளை நிறுவுநர் நினைவுநாளாகவும் கல்லூரியின் பரிசில் நாளாகவும் கொண்டாடி ஆசிபெறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். அந்த வகையில்தான் இடர்சூழ்ந்த பொழுதிலும்கூட நிகழ்வுகளை நடாத்த வேண்டுமென்ற ஆர்வமேலெழுகை எம்முள் ஏற்பட்டது. ஆயினும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 08.09.2006 வெள்ளிக்கிழமை முதல் குடாநாட்டு மாணவர்கள் பாடசாலைகளுக்குச் வருவதைத் தவிர்த்த நிலையில் பரிசளிப்பு வைபவம் தொடர்பான நிகழ்வுகளை 10.09.2006 இல் நடாத்த முடியாமற் போய்விட்டது.

## பவளவிழா ஆண்டு

22.04.1931 இல் சித்திரை மாத மிருகசீரிட நட்சத்திர நாளில் எமது கல்லூரியில் முதன்முதலாக வித்தியாரம்பம் செய்து வைக்கப்பெற்றது. அன்று முதல் பல சோதனைகளையும் சாதனைகளையும் கண்டு, கல்விச் செல்வத்தின் உயர்ச்சிக்காக எமது கல்லூரி அளப்பரிய சேவையாற்றி வருகிறது. இச்சேவைகளைக் கௌரவிக்கும் முகமாக கல்லூரி அன்னையின் பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற வேணவாவின் காரணமாகக் கல்லூரிச் சமூகத்தவர் யாவரும் ஒன்றிணைந்து பவளவிழாச் சபையை அமைத்தனர். நிறுவுநரால் அத்திவாரமிடப்பெற்ற புனித நாளான தைமாத அத்த நட்சத்திர நாளில், 21.01.2006 அன்று பவளவிழாப் பிரகடன நிகழ்வு வெகுசிறப்பாக இடம்பெற்றது. கல்லூரியின் பழைய மாணவரும் வாணாள் பேராசிரியருமாகிய வி.கே. கணேசலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பவளவிழாவைப் பிரகடனம் செய்து வைத்தார்கள். யாழ் தினக்குரல் பத்திரிகையில் இது தொடர்பான சிறப்பிதழ் ஒன்றும் பிரசுரிக்கப்பெற்றது.

கடந்த 01.05.2006 சித்திரை மாத மிருகசீரிட நாளில் கல்லூரியின் உயர்ச்சிக்காகச் சேவையாற்றிய ஆசிரியப் பெருமக்களை கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. உதயன், தினக்குரல், வீரகேசரி, ஈழநாதம் பத்திரிகைகளின் வாயிலாக நாம் விடுத்த வேண்டுகோளுக்கு மதிப்பளித்து அறுபதிற்கும் மேற்பட்ட முன்னாள்

ஆசிரியர்கள் நேரில் சமுகந்தந்து கௌரவத்தை ஏற்பதற்கு ஒப்புதல் அளித்திருந்தனர். ஆயினும் அன்றையதினம் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் நிகழ்வை ஒத்திவைக்கவேண்டியதாயிற்று. இதே போல் அதிபர் குமாரசுவாமி மணிமண்டப நிர்மாணப்பணி, திருக்குறள் மையம், திருவள்ளுவர் உருவச்சிலை நிர்மாணப்பணி, ஸ்ரீ சோமாஸ்கந்தருக்கெனத் தனியான ஆலய அமைப்புப் பணி, நிறுவுநர் நினைவாலய அமைப்புப் பணி, பவளவிழாச் சஞ்சிகை வெளியீடு என நாம் திட்டமிட்டிருந்த பணிகள் யாவும் இவ்வாண்டின் ஆரம்பம் முதல் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளாலும் தற்போது நடைபெறும் யுத்த நடவடிக்கைகளாலும் நிறைவேற்ற முடியாமற்போயின. பவளவிழா நிகழ்வுகளில் பிரகடன நிகழ்வைச் சிறப்பாக நடாத்திய மனநிறைவு என்றும் எம்முள் நிலைத்திருக்கும்.

## மாணவர்கள்

தற்போது எமது கல்லூரியில் 1574 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள்.

| தரம் | மாணவர் தொகை |
|---|---|
| 01 – 05 | 546 |
| 06 – 11 | 785 |
| 12 – 13 | 243 |

## ஆசிரியர்கள்

தற்போது எமது கல்லூரியில் 18 ஆண்களும் 47 பெண்களுமென மொத்தம் 65 ஆசிரியர்கள் சம்பளப்பட்டியலில் உள்ளனர். இவர்களைவிட தற்காலிக இடமாற்றம் பெற்றுவந்த ஒருவர், உள்ளகப் பயிற்சி ஆசிரியர் இருவர் என ஆசிரியப் பணியில் ஈடுபடுகின்றனர் கல்லூரியின் நிரந்தர ஆசிரியர்களில்

| | |
|---|---|
| விஞ்ஞானப் பட்டதாரிகள் | 08 |
| வணிக முகாமைத்துவப்பட்டதாரிகள் | 04 |
| கலைப்பட்டதாரிகள் | 20 |
| பயிற்றப்பட்டோர் | 33 |

ஆக உள்ளனர்.

## கல்வி சாரா ஊழியர்

கல்லூரியின் கல்வி சாரா ஊழியர்களின் எண்ணிக்கை 12 ஆகும்

இவர்களில் முகாமைத்துவ உதவியாளர் 01

| | |
|---|---|
| திட்டமிடல் நிதி உதவியாளர் | 02 |
| நூலக உதவியாளர் | 01 |
| சுகாதாரப் பணியாளர் | 01 |
| தோட்டப் பணியாளர் | 01 |
| ஆய்வுகூட உதவியாளர் | 02 |

காவல் பணியாளர் 01
காரியாலய பணியாளர் 02
காரியாலயப் பணியாளர் (நிவாரணக் காவலாளர்) 01

## இளைப்பாறியோர்.

கல்லூரி ஆசிரியை திருமதி தங்கலட்சுமி தேவராஜன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் கொழும்பில் வாழ வேண்டிச் சுயவிருப்பின் பேரில் கடந்த 30.04.2006 தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளார். கல்லூரியில் 27 வருடங்கள் ஆய்வு கூட உதவியாளராகவும் எழுதுநராகவும் பணியாற்றிய திரு த.விஸ்வலிங்கம் அவர்கள் கடந்த 24.02.2006 தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளார். இவர்களது ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமான் அருள்புரிவாராக.

## இடமாற்றம் பெற்று வந்தோர்.

திரு யோகராஜா ஜெயகாந்தன் யாழ். சென் சாள்ஸ் ம. வி. யிலிருந்தும் திரு சின்னத்துரை சிவராம் மன்னார் இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையிலிருந்தும் இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ளனர். திருமதி கௌசல்யா காந்தரூபன் தற்காலிக இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ளார். வாழ்த்தி வரவேற்கிறோம்

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திரு குகதாசசர்மா சிவகுமார், திரு அந்தோனி இராஜசிங்கம், திருமதி சுமதி பேமராஜ் திரு சின்னத்துரை சிவராம் ஆகியோர் தமது வாழ்விடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளுக்கு சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்..இவர்களது சேவைக்கு எமது நன்றி

## புதிதாக வருகை தந்தோர்.

கடந்த ஆண்டு வழங்கப்பெற்ற பட்டதாரிகளுக்கான நியமனத்தின் கீழ் ஐவர் புதிதாக நியமனம் பெற்று எமது கல்லூரியில் சேவையாற்ற வருகை தந்துள்ளனர். திரு வல்லிபுரம் திலீபன், திருமதி மாலினி குகாநந்தன், செல்வி மார்க்கண்டு கோகுலவதனி ஆகியோர் ஆசிரியர்களாகவும் திருமதி நளாயினி இளமுருகன், திருமதி இலக்குணதேவி கந்தசாமி ஆகியோர் திட்டமிடல் நிதி உதவியாளர்களாகவும் நியமனம் பெற்று வருகை தந்துள்ளனர். இவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்..

## நீங்காத நினைவலைகள்

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு இராமசாமி உருத்திரா 01.12.2005 இலும், திரு இராஜதுங்கம் சிவநேசராஜா 05.12.2005 இலும் திரு க.அரிராசசிங்கம் 14.12.2005 இலும் செல்வி கிருஷ்ணாதேவி முத்துக்குமாரு 13.03.2006 இலும் திருமதி பத்மாவதி மழவராயர் 11.08.2006 இலும் இவ்வுலக வாழ்வை நீத்தனர். கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த இவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

இவர்களைவிட கல்லூரியில் கடந்த ஆண்டு தரம் 9 T வகுப்பில் கல்வி கற்ற கணேசநாதன் ரிஷிகாந்த் 12.09.2005 இல் அகால மரணமடைந்துள்ளார். இவரது ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தேர்வில் எமது கல்லூரி மாணவர் அறுவர் சித்தி பெற்றுள்ளனர். இவர்களைவிட 10 மாணவர்கள் 100 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

க.பொ.த.(சா/த) 2005 பரீட்சையில் 5 மாணவர்கள் 4A யிலும் கூடிய பெறுபேற்றினைப் பெற்றுள்ளனர் . பரீட்சைக்குத் தோற்றிய 92 மாணவர்களுள் 48 மாணவர் சித்திபெற்று எமது கல்லூரியில் கல்வியைத் தொடர்கின்றனர். இச்சித்திவீதம் கடந்த காலங்களைவிட அதிகமானதாகும்.

பாட ரீதியான சித்தி வீதம் வருமாறு

### க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறு - டிசம்பர் 2005

| பாடம் | விண்ணப் பித்தோர் | தோற்றி யோர் | A | B | C | S | W | சித்தி | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சமயம் | 96 | 92 | 45 | 16 | 19 | 12 | - | 92 | 100 |
| தமிழ் | 96 | 92 | 11 | 19 | 31 | 24 | 7 | 85 | 92 |
| ஆங்கிலம் | 96 | 92 | - | - | 4 | 11 | 77 | 15 | 16 |
| விஞ்ஞானம் | 96 | 92 | 2 | 5 | 8 | 24 | 53 | 39 | 42 |
| கணிதம் | 96 | 92 | 9 | 6 | 9 | 16 | 52 | 40 | 43 |
| சமூகக் கல்வி | 96 | 92 | - | 3 | 26 | 31 | 32 | 60 | 65 |
| சித்திரம் | 42 | 39 | - | 1 | 2 | 14 | 22 | 17 | 44 |
| சங்கீதம் | 39 | 38 | - | 2 | 5 | 17 | 14 | 24 | 63 |
| நடனம் | 15 | 15 | 3 | 1 | 6 | 3 | 2 | 13 | 87 |
| விவசாயம் | 36 | 31 | - | 1 | 11 | 15 | 4 | 27 | 87 |
| வர்த்தகம் | 26 | 25 | 1 | - | 5 | 8 | 11 | 14 | 56 |
| மனையியல் | 36 | 36 | | - | 2 | 14 | 20 | 16 | 44 |
| புவியியல் | 96 | 92 | 1 | 8 | 9 | 31 | 43 | 49 | 53 |
| தமிழ் இலக்கியம் | 37 | 36 | 4 | 1 | 6 | 13 | 12 | 24 | 67 |
| சுகாதாரமும் உடற். | 59 | 58 | 14 | 11 | 18 | 8 | 4 | 62 | 93 |

க.பொ.த. (உ/த) 2005 பரீட்சையில் செல்வி சிந்துஜா இரட்ணசிங்கம், செல்வி பிரியங்கா தங்கராஜா ஆகியோர் 3A சித்தி பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிய 97 பேருள் 63 பேர் பல்கலைக்கழக அநுமதிக்கான தகைமையைப் பெற்றுள்ளனர்.

சில தினங்களுக்கு முன் (06.10.2006 இல்) வெளியாகிய க.பொ.த. (உ/த) 2006 பரீட்சையில் இன்னும் சிறப்பான பெறுபேறுகள் மாணவர்களால் எய்தப்பட்டுள்ளன. உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் செல்வன் இ.கோகுல்நாத் 2A B என்ற பெறுபேற்றினைப் பெற்று மருத்துவபீடத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். ஏறத்தாழ 25 வருடங்களின் பின் இப்பெறுபேறு பெற்றுக்கொள்ளப்பட்டமை கல்லூரியின் சாதனையாகக் கருதப்படக் கூடியதாகும்.

மேலும் செல்வி கமலச்செல்வி விசுவலிங்கம், செல்வி மதுரா துரைராஜசிங்கம் ஆகியோா் 3A பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இதனைவிட 2A B பெறுபேற்றினை இருவரும் 2A C பெறுபேற்றினை மூவரும் A 2B பெறுபேற்றினை மூவரும் பெற்றுள்ளனர். இவர்களுக்கும் இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறு - 2005

| பாடம் | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | சித்தி | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பௌதிகவியல் | 4 | 1 | - | - | - | 1 | - | 1 | 100 |
| இரசாயனவியல் | 4 | 1 | - | - | - | - | 1 | - | 00 |
| இணைந்த கணிதம் | 2 | - | - | - | - | - | - | - | 00 |
| உயிரியல் | 2 | 1 | - | - | - | 1 | - | 1 | 100 |
| இந்துநாகரிகம் | 76 | 67 | 10 | 13 | 16 | 22 | 6 | 61 | 91 |
| தமிழ் | 103 | 79 | 3 | 9 | 32 | 23 | 12 | 67 | 85 |
| அளவையியல் | 85 | 65 | 11 | 5 | 18 | 15 | 16 | 49 | 75 |
| விவசாயம் | 13 | 11 | - | - | 2 | 1 | 8 | 3 | 27 |
| சங்கீதம் | 4 | 3 | - | - | 1 | - | 2 | 1 | 33 |
| புவியியல் | 16 | 12 | 1 | - | 6 | 2 | 3 | 9 | 75 |
| பொருளியல் | 29 | 23 | 2 | 1 | 7 | 11 | 2 | 21 | 91 |
| வணிகக் கல்வி | 18 | 14 | - | - | 4 | 7 | 3 | 11 | 79 |
| கணக்கியல் | 18 | 14 | - | - | 6 | 5 | 3 | 11 | 79 |

## க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறு - 2006

| பாடம் | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | சித்தி | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பௌதிகவியல் | 8 | 7 | 1 | 1 | 1 | 3 | 1 | 6 | 86 |
| இரசாயனவியல் | 8 | 7 | - | 1 | 1 | 4 | 1 | 6 | 86 |
| இணைந்த கணிதம் | 4 | 4 | - | - | 2 | 1 | 1 | 3 | 75 |
| உயிரியல் | 4 | 3 | 1 | 1 | 1 | - | - | 3 | 100 |
| தமிழ் | 96 | 81 | 15 | 19 | 17 | 19 | 11 | 70 | 86 |
| இந்துநாகரிகம் | 61 | 56 | 5 | 9 | 16 | 16 | 4 | 46 | 82 |
| அளவையியல் | 80 | 68 | 7 | 13 | 11 | 16 | 21 | 47 | 69 |
| புவியியல் | 12 | 9 | - | 1 | 4 | 1 | 3 | 6 | 67 |
| விவசாயம் | 25 | 20 | - | 3 | 9 | 5 | 3 | 17 | 85 |
| கிறிஸ்தவம் | 1 | 1 | - | - | 1 | - | - | 1 | 100 |
| சங்கீதம் | 2 | 2 | - | 1 | 1 | - | - | 2 | 100 |
| பொருளியல் | 24 | 18 | - | - | 5 | 6 | 7 | 11 | 61 |
| கணக்கியல் | 17 | 13 | 1 | 2 | 3 | 4 | 3 | 10 | 77 |
| வணிகக் கல்வி | 17 | 13 | - | - | 4 | 2 | 7 | 6 | 46 |

**பல்கலைக்கழக அநுமதி பெற்றோர்**

01. சிந்துஜா இரத்தினசிங்கம்
02. பிரியங்கா தங்கராசா
03. உஷா தயானந்தன்
04. ஜெயந்தினி மகேந்திரம்

05. தயாளினி விஷ்ணுசிங்கம்
06.. கேதாரணி இராசரட்ணம்
07. வானதி ஆறுமுகம்
08. சர்மிளா தம்பிப்பிள்ளை
09. சிவசுப்பிரமணியம் விஜயராகவன்
ஆகியோர் கலைப்பிரிவுக்கும்
10. மதுரா தம்பையா
11. பிரதீபா கணபதிப்பிள்ளை
ஆகியோர் பிரயோக கணிதப்பிரிவுக்கும் தெரிவாகியுள்ளனர்.

## போட்டி முடிவுகள்

**தமிழ்த்தினப் போட்டி – 2006**
**கோப்பாய்க் கோட்ட மட்டம்**

| | | |
|---|---|---|
| பேச்சு பிரிவு 03 | க.வேணிஜா | 03ஆம் இடம் |
| பேச்சு பிரிவு 05 | பா.பாலசுதன் | 03ஆம் இடம் |
| பாவோதல் பிரிவு 01 | கெ.சிவகஜன் | 02ஆம் இடம் |
| பாவோதல் பிரிவு 05 | செ.றிரோஜா | 02ஆம் இடம் |
| விவாதம் (திறந்த போட்டி) | | 03ஆம் இடம் |
| தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி) | | 01ஆம் இடம் |
| இசை தனி பிரிவு 05 | கு.நதியா | 01ஆம் இடம் |
| நடனம் குழு 01 | | 03ஆம் இடம் |

வலயமட்டம் உட்பட ஏனைய மட்டப் போட்டிகள் நடைபெறவேண்டியுள்ளன.

## English Day Competition – 2006
Divisional Level - Kopay

**Copy Writing**

| | | |
|---|---|---|
| S. Ushalini | Gr 06 | 01st Place |
| M.Kajani | Gr 06 | 02 nd Place |
| N.Jenuka | Gr 08 | 01 st Plac |
| T.Thilaksika | Gr 08 | 02 nd Place |
| T. Miruna | Gr 09 | 02 nd Place |
| T.Suwarna | Gr 10 | 02 nd Place |
| K.Mathanaka | Gr 11 | 01st Place |
| Shobiga | Gr 12 | 03rd Place |
| M.Thurja | Gr 13 | 03rd Place |

**Dictation**

| | | |
|---|---|---|
| M.Kajani | Gr 06 | 02nd Place |
| K.Mayoorathy | Gr 06 | 03 rd place |
| S.Aruleesan | Gr 08 | 02nd Place |
| J.Pamina | Gr 11 | 01st Place |
| S.Tharmini | Gr 12 | 01st Place |

**Creative Writing**

| | | |
|---|---|---|
| V.Sarani | Gr 07 | 03rd Place |
| S.Aruleesan | Gr 08 | 01st Place |
| T.Lenuja | Gr 08 | 03rd Place |
| S.Tharmini | Gr 12 | 03rd Place |
| T.Thileepan | Gr 13 | 02nd Place |

**Recitation**

| | | |
|---|---|---|
| V.Aaruran | Gr 03 | 1st Place |
| K.Mayurani | Gr 06 | 2nd Place |
| T.Prashanthy | Gr 07 | 3rd Place |
| T.Gangasuthan | Gr 08 | 2nd Place |
| M.Puhalarasi | Gr 09 | 3rd Place |
| A.Veenuja | Gr 10 | 1st Place |
| J.Nishopana | Gr 11 | 1st Place |
| N.Thenujan | Gr 11 | 3rd Place |

## சமூகக் கல்வி பொது அறிவுப் போட்டிகள் - 2006
### கோப்பாய்க் கோட்ட மட்டம்

இப்போட்டியில் எமது பாடசாலை D வகைப்பிரிவில் தோற்றியது

| | | |
|---|---|---|
| க.லவந்திகா | தரம் 6 - 7 பிரிவு | 4ஆம் இடம் |
| த.மதுரகாந்தன் | தரம் 6 - 7 பிரிவு | 5ஆம் இடம் |
| த.நிரோஜன் | தரம் 8 - 9 பிரிவு | 1ஆம் இடம் |
| த.மகுணன் | தரம் 8 - 9 பிரிவு | 2ஆம் இடம் |
| ஸ்ரீ.சுகிர்தன் | தரம் 8 - 9 பிரிவு | 4ஆம் இடம் |
| கெ.நிசோபனா | தரம் 10 - 11 பிரிவு | 2ஆம் இடம் |
| ப.அகிலன் | தரம் 12 - 13 பிரிவு | 1ஆம் இடம் |
| ச.விஜிதரன் | தரம் 12 - 13 பிரிவு | 2ஆம் இடம் |
| க.அருண் | தரம் 12 - 13 பிரிவு | 4ஆம் இடம் |

## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி
### கோப்பாய்க் கோட்ட மட்டம்

| | | |
|---|---|---|
| வ.சரணி | தரம் 07 | 1ஆம் இடம் |
| ஸ்ரீ.சுகிர்தன் | தரம் 09 | 1ஆம் இடம் |
| த.நிரோஜன் | தரம் 09 | 2ஆம் இடம் |

## சர்வதேச சிறுவர், மதியோர் தினம் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| கட்டுரை – | உயர்பிரிவு | பொ.ஸ்ரீவர்ணன் | 2ஆம் இடம் |
| | உயர்பிரிவு | சு.மயூரா | 2ஆம் இடம் |
| | ஆரம்பப் பிரிவு | கு.மயூரதி | 3ஆம் இடம் |
| கவிதை | ஆரம்பப் பிரிவு | மா.கஜானி | 3ஆம் இடம் |
| | சிரேஷ்ட பிரிவு | ஸ்ரீ.மிர்தா | 3ஆம் இடம் |

## பெருவிளையாட்டுக்கள்
### கோட்டமட்டம்

**கரப்பந்து – ஆண்கள்**
19 வயது – 1ஆம் இடம்
17 வயது – 3 ஆம் இடம்
15 வயது – 3 ஆம் இடம்

**கரப்பந்து – பெண்கள்**
19 வயது – 2 ஆம் இடம்
17 வயது – 3 ஆம் இடம்

கரப்பந்து – பெண்கள்
17 வயது – 2 ஆம் இடம்

உடற்பயிற்சிப்போட்டி
19 வயது ஆண்கள் - 2 ஆம் இடம்

### வலய மட்டம்

**கரப்பந்து – ஆண்கள்**
19 வயது – 1 ம் இடம்
15 வயது – 2 ஆம் இடம்
17 வயது – 3 ஆம் இடம்

மாவட்ட மட்டம்

கரப்பந்து – 19 வயது ஆண்கள் - 2 ஆம் இடம்

மாகாண மட்டம்

கரப்பந்து - 19 வயது ஆண்கள் - 2 ஆம் இடம்

இதே வேளை தேசிய மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள 19 வயது ஆண்கள் அணி தெரிவு செய்யப்பட்டபோதும் நாட்டின் சூழ்நிலைகளால் கலந்து கொள்ள முடியாமற்போய்விட்டது

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

### கோட்ட மட்டம்

| | | | |
|---|---|---|---|
| 75 மீற் ஓட்டம் | 11 வயது ஆண் | அ.தனுஷன் | 03ஆம் இடம் |
| உயரம் பாய்தல் | 11 வயது பெண் | தி.நிஷாலினி | 01 ஆம் இடம் |
| 100 மீற் ஓட்டம் | 13 வயது ஆண் | ஶ்ரீ.அருளீசன் | 02 ஆம் இடம் |
| 200 மீற் ஓட்டம் | 13 வயது ஆண் | ஶ்ரீ.அருளீசன் | 01 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 13 வயது ஆண் | மோ.கஜீத்ராஜ் | 02 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 13 வயது பெண் | ம.சிந்துஜா | 02 ஆம் இடம் |
| உயரம் பாய்தல் | 13 வயது பெண் | ம.சிந்துஜா | 03 ஆம் இடம் |
| 400 மீற் ஓட்டம் | 15 வயது ஆண் | அ.நிருசன் | 02 ஆம் இடம் |
| 400 மீற் ஓட்டம் | 15 வயது ஆண் | சி.ஜெயதர்சன் | 03 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 15 வயது ஆண் | மோ.யர்சன் | 03 ஆம் இடம் |
| உயரம் பாய்தல் | 15 வயது ஆண் | ச.சத்தியசீலன் | 03 ஆம் இடம் |
| குண்டெறிதல் | 15 வயது பெண் | அ.தியாகினி | 03 ஆம் இடம் |
| 100 மீற் ஓட்டம் | 17 வயது ஆண் | மோ.கஜன்ராஜ் | 02 ஆம் இடம் |
| 400 மீற் ஓட்டம் | 17 வயது ஆண் | மா.தர்சன் | 03 ஆம் இடம் |
| 800 மீற் ஓட்டம் | 17 வயது ஆண் | சி.தீபன் | 01 ஆம் இடம் |
| 1500 மீற் ஓட்டம் | 17 வயது ஆண் | இ.சஞ்சீவன் | 02 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 17 வயது ஆண் | மோ.கஜன்ராஜ் | 01 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 17 வயது ஆண் | தி.ரகுபதி | 02 ஆம் இடம் |
| முப்பாய்ச்சல் | 17 வயது ஆண் | மோ.கஜன்ராஜ் | 01 ஆம் இடம் |
| குண்டு எறிதல் | 17 வயது ஆண் | இ.மகிதாஸ் | 02 ஆம் இடம் |
| 1500 மீற் ஓட்டம் | 17 வயது பெண் | க.தவலோஜினி | 02 ஆம் இடம் |
| 100 மீற் ஓட்டம் | 19 வயது ஆண் | யோ.மயூரன் | 01 ஆம் இடம் |
| 200 மீற் ஓட்டம் | 19 வயது ஆண் | யோ.மயூரன் | 01 ஆம் இடம் |
| 400 மீற் ஓட்டம் | 19 வயது ஆண் | யோ.மயூரன் | 01 ஆம் இடம் |
| 800 மீற் ஓட்டம் | 19வயது ஆண் | க.நித்தியானந்தன் | 03 ஆம் இடம் |
| முப்பாய்ச்சல் | 19வயது ஆண் | க.நித்தியானந்தன் | 02 ஆம் இடம் |
| குண்டு எறிதல் | 19 வயது ஆண் | மா.கிருஷ்ணா | 02 ஆம் இடம் |
| 200 மீற் ஓட்டம் | 19 வயது பெண் | லோ.ரஞ்சனராஜி | 03 ஆம் இடம் |
| 800 மீற் ஓட்டம் | 19 வயது பெண் | சி.கார்த்திகா | 03 ஆம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| குண்டெறிதல் | 19 வயது பெண் | த.மயூரணி | 02 ஆம் இடம் |
| ஈட்டியெறிதல் | 19 வயது பெண் | ம.சுதர்சினி | 02 ஆம் இடம் |
| 400 மீற் ஓட்டம் | 21 வயது ஆண் | சூரியகுமார் | 02 ஆம் இடம் |
| 800 மீற் ஓட்டம் | 21 வயது ஆண் | விஜிதரன் | 01 ஆம் இடம் |
| 800 மீற் ஓட்டம் | 21 வயது ஆண் | திலீபன் | 02 ஆம் இடம் |
| 1500 மீற் ஓட்டம் | 21 வயது ஆண் | திலீபன் | 01 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 21 வயது ஆண் | சி.கோகுலகிருஷ்ணன் | 02 ஆம் இடம் |
| முப்பாய்ச்சல் | 21 வயது ஆண் | சி.கோகுலகிருஷ்ணன் | 01 ஆம் இடம் |
| உயரம் பாய்தல் | 21 வயது ஆண் | சி.கோகுலகிருஷ்ணன் | 01 ஆம் இடம் |
| நீளம் பாய்தல் | 21 வயது பெண் | ச.தர்சிகா | 02 ஆம் இடம் |
| உயரம் பாய்தல் | 21 வயது பெண் | ச.தர்சிகா | 01 ஆம் இடம் |
| குண்டெறிதல் | 21 வயது பெண் | ச.தர்சிகா | 01 ஆம் இடம் |
| ஈட்டியெறிதல் | 21 வயது பெண் | இ.துஷ்யந்தி | 03 ஆம் இடம் |

அஞ்சலோட்டங்கள் (4x400m) 15 வயது பெண், 21 வயது பெண் - 03 ஆம் இடம்
அஞ்சலோட்டம் (4x400m) 17 வயது ஆண், 19 வயது ஆண் - 02 ஆம் இடம்

**தர்மகர்த்தா சபை**

நிறுவுநர் அவர்களால் கல்லூரிக்கென வழங்கப்பெற்ற ஆதனங்கள் தர்மகர்த்தா சபையினரால் பரிபாலனம் செய்யப்பெறுகின்றன. இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய்கள் யாழ் இலங்கை வங்கி மேற்றரக் கிளையில் உள்ள கல்லூரியின் அறக்கட்டளை நிதியத்தில் வைப்பிலிடப்பெற்று நலப்பணிகள் மேற்கொள்ளப்பெறுகின்றன.

* நிறுவுநர் நாள் நிகழ்வு, மதிய போசனம்
* ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நாடோறும் இருவேளைப் பூசைகள், அறுபத்து மூவர் குருபூசைகள்
* அத்திபாரதினம், வித்தியாரம்ப தின நிகழ்வுகள்

என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு மிகச் சிறு காலப் பகுதியே மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெறும் சந்தர்ப்பம் நிலவியமையாலும் நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகளாலும்

* நிறுவுநர் நினைவுத் திருக்குறள் போட்டி நிகழ்வுகள்
* முறைசாராக் கல்விப் பிரிவின் மூலம் வழங்கப்பெறும் தொழில் கற்கைநெறிகள்
* மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான விசேட நடவடிக்கைகள்
* நிறுவுநர் நாளில் உதயன் நாளிதழில் பிரசுரிக்கப்படும் நிறுவுநர் தொடர்பான முழுப்பக்க மலர் வெளியீடு

என்பவற்றை மேற்கொள்ள இயலாமற்போய்விட்டது.

## பழைய மாணவர் சங்கம்

இவ்வாண்டில் பழைய மாணவர் சங்க செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தரும் விடயமாகும். தாய்ச்சங்கத்திற்கு மேலதிகமாக கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மன், கொழும்பு கிளைகள் கல்லூரியின் விருத்திக்காக உழைக்கின்றன. இந்த ஆண்டில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள அவுஸ்திரேலியா, ஜேர்மன் கிளையினரை மனமுவந்து வாழ்த்தி வரவேற்கிறோம்பவளவிழாக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பெற்ற பணிகள் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் தொடரமுடியாதுபோய்விட்டன. இந்நிலையில் இப்பணிகள் யாவற்றையும் நிறைவேற்றும் தார்மீகப் பொறுப்பை பழையமாணவர் சங்கத்தினர் தமதாக்கியுள்ளமை மனநிறைவைத் தரும் விடயமாகும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தன்னால் ஆன பங்களிப்பை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கி வருகிறது. மாதத்தின் பூரணை தினத்தில் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இடம்பெற்றுவருகிறது. பாடசாலை குறித்த நிலைமைகளை அலசி ஆராய்வதுடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் சங்கத்தினர் வழங்கி வருகின்றனர்.

## கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் ஒரு கண்ணோட்டம்

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியில் மாணவனாக, ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பலதளங்களில் செயற்பட்டுள்ளேன். அதிபர்க்கதிபர் எங்கள் ஆசான் அமரர் சு.குமாரசுவாமி ஐயாவின் காலத்தில் கல்லூரியின் பெயர் இலங்கை எங்கணும் உச்சரிக்கப்பெறும் அளவிற்கு சிறப்பாகப் பேசப்பட்டது. வடமராட்சி தென்மராட்சி எனப் பலபாகங்களிலிருந்து மாணவர்கள் தேடிவந்து கல்லூரியில் கற்கும் நிலை காணப்பட்டது. ஆயினும் காலச் சூழ்நிலைகளால் இந்நிலையில் தளர்ச்சி ஏற்பட்டது. நான் அதிபராகப் பொறுப்பேற்ற நிலையில் மேற்கொள்ளப்பெற்ற மதிப்பீடுகளின் பிரகாரம் கல்வி கற்கும் மாணவர்களில் 85 சதவீதமான மாணவர்கள் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்கள் என்ற தரவைப் பெற முடிந்தது. பெற்றோரின் போதிய வழிகாட்டலுக்கு உட்படாத இம்மாணவர்களைச் சரியாக வழிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு இக்கல்லூரிச் சமூகம் சார்ந்த அனைவருக்கும் உரித்தான கடமை ஆகும்.

கல்லூரியின் உயர்ச்சி இப்பிள்ளைகளின் பின்புலச் சூழலின் மேலான வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. மறுபக்கமாக நோக்கின் இன்று உயர்ச்சியடையும் மாணவர்களே நாளை தமது சமூகத்தை உயர்த்தும் பொறுப்பினைக் கொண்டிருப்பர்.

இத்தகு நிலையில் எமது நிறுவுநர் கல்லூரிக்காக விட்டுச் சென்ற ஆதனங்களைப் பரிபாலித்து அதன் மூலம் வருவாய்களைப் பெற்று பின்தங்கிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அவற்றைப் பயன்படுத்த மேற்கொள்ளப்பெற்ற முயற்சிகள் 100 வீத வெற்றியைப் பெறவில்லை. இருந்த நிலையை விட மேம்படுத்த முடிந்துள்ளது என்ற

மனநிறைவுடன் எனது பணி நிறைவுற்றாலும் சில சொத்துக்களைப் பராமரிப்பதிலும் அவற்றால் ஏற்படும் சிக்கல் நிலைகளைத் தீர்த்து முழுமையான வருவாயை ஈட்டும் நிலையை அடைவதும் தொடர்ந்தும் சவாலாகவே எதிர்கொள்ளப்பெறுகிறது.

கால ஓட்டத்தில் மேற்கண்ட பிரச்சினைகள் யாவும் நீங்கப்பெற்று எமது கல்லூரி ஒரு தேசியப் பாடசாலையாகப் படிமலர்ச்சி பெற வேண்டும். அதற்கு ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானின் கிருபை கைகூட வேண்டும்.

**நிறைவுரை**

எனது சேவைக்கால நிறைவு அறிக்கையாக இந்த அறிக்கை அமைவதால் கடந்த பத்தாண்டுகளாக எனது அதிபர் பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறவேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு.

எனது சேவைக்காலத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஐவரின் கீழ் பணியாற்றும் பாக்கியம் பெற்றேன். நிர்வாக ரீதியான எனது முயற்சிகளை ஆற்றுப்படுத்தி கல்லூரியைச் செம்மையான பாதையில் வழிநடத்திய அவர்கள் யாவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கோப்பாய் கல்விக் கோட்டத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர்களாக இருவர் எனது சேவைக்காலத்தில் வழிகாட்டினர். எங்கள் கல்லூரி மீது தனிப்பட்ட கவனமெடுத்து செயற்பட்ட அவர்களது செயற்பாடுகள் யாவற்றிற்கும் எனது நன்றி.

யாழ் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

வலய நிர்வாகக் கிளையைச் சார்ந்த நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளாகள், நிதிப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பணிசார் அலுவலர்கள் யாவருக்கும் எனது மனப் பூர்வமான நன்றி. மேலும் பாடசாலை வேலைகள் பகுதிப் பொறியியலாளர், பணியாளர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

கல்லூரியில் எனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிய பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் யாவருக்கும் எனது நன்றி.

மேலும் எமது கல்லூரியின் பழைய மாணவரும் கணக்காய்வு அத்தியட்சகருமாகிய திரு ஆ.சுந்தரலிங்கம் கல்லூரியின் நிதிவளத்தை இலவசமாக ஆய்வு செய்து வருகிறார். தன்னலம் கருதாது தான் கற்ற கல்லூரிக்காக இது வரை காலத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதிக்கு ஈடான ஆய்வினை மேற்கொண்டு தந்துள்ளார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகக் குறிப்பாக - கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் எனது செயற்பாடுகளுக்கு வலுவூட்டியமையை நன்றியுடன் நினைவு கூருகிறேன். இளந் தலைமுறை அங்கத்தவர்கள் பலர் ஆர்வத்துடன் பழைய மாணவர் சங்க உறுப்பினரானதோடல்லாமல் செயற்பாட்டு ரீதியிலும் புது வேகத்தைக் காட்டிச் செயற்படுகின்றமை மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்கள் யாவருக்கும் எனது நன்றி.

நிறைவாக எனது பணிக்காலத்தில் நான் கைக்கொண்ட நிர்வாக ரீதியான கண்டிப்பு, சிலருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியிருக்குமாயின் எனது வருத்தத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

என்றும் எங்கள் சோமஸ்கந்த அன்னை குன்றாத இளமையுடன் வாழ்ந்து அறிவொளி பரப்ப எனது நல்வாழ்த்துக்கள். எமது அன்னையின் உயர்ச்சிக்காக எனது வாணாள் முழுவதும் உழைக்கத் தயாராக உள்ளேன்.

நன்றி, வணக்கம்.

31.10.2006

**வயிரவநாதன் ஆறுமுகம்**
அதிபர்

### *க.பொ.த. (சா/த) 2005 பரீட்சை தொடர்பாக*
### *பரீட்சைத்திணைக்களம் வெளியிட்ட சில தகவல்கள்*

*பரீட்சைக்குத் தோற்றியோர் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 679 இவர்களில் 22 ஆயிரத்து 900பேர் எந்தவொரு பாடத்திலும் சித்திபெறவில்லை. எல்லாப்பாடங்களிலும் சித்தியடைந்தோர் சதவீதம் 5.14% உயர்தரத்தில் கற்பதற்காகத் தகுதி பெற்றோர் 46.61%*

*(நன்றி - உதயன் : 11.05.2006)*



## நிறுவுநர் நாள், பரிசில் நாள் விழா

10.09.2005



புத்தூர் விசாலாட்சி அம்பிகா சமேத விசுவநாத சுவாமி கோவிலில் இடம்பெற்ற விசேட பூசையில் சங்கற்பம் செய்வதன் பொருட்டு ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சாமி. சோமசுந்தரக் குருக்கள் கல்லூரி அதிபருக்குத் தர்ப்பை அணிவிக்கிறார்.



சிவன் கோவிலில் இருந்து அமரர் மழவராயர் கந்தையாவின் திருவுருவப் பட ஊர்வலம். வீதியின் இருமருங்கும் மலர் தூவி வரவேற்கும் மாணவர்கள். (இந்நடைமுறை இவ்வாண்டு இடம்பெற்ற விழாவின் போது ஆரம்பித்து வைக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.)



கல்லூரியில் 27 வருடங்கள் ஆய்வுகூட உதவியாளராகவும் எழுதுநராகவும் பணியாற்றி இளைப்பாறிய திரு த.விஸ்வலிங்கத்தின் பணி நயப்பு வைபவம் 24.02.2006 அன்று கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது ஆசிரியர் திரு வி.செவ்வந்திநாதக் குருக்கள் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துப்பா கையளித்துக் கௌரவிக்கிறார்.பிரதி அதிபரும் உடன் உள்ளார்.



புத்தூர் அணியப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆக்கத்திறன் கண்காட்சி 15.03.2006 அன்று கல்லூரியின் நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது அணியப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

# நவீன மாற்றங்களை உள்வாங்கிய கல்வி முறை அவசியம்

## நிறுவுநர் நாள் விழாவில் வைத்திய கலாநிதி கு.மகேசன் ஆற்றிய உரை

**எமது கல்லூரியின் பழைய மாணவரும் யாழ் போதனா மருத்துவ மனையின் வைத்திய நிபுணருமாகிய வைத்திய கலாநிதி கு. மகேசன், 10.09,2005 அன்று எமது கல்லூரியில் இடம்பெற்ற நிறுவுநர் நாள், பரிசில் நாள் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.**

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”

என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வணங்கி இந்த விழாவைச் சிறப்புற ஒழுங்கமைத்துள்ள கல்லூரி அதிபர் அவர்களே! சிவன் தேவஸ்தானத்தின் பிரதம குரு சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் ஐயா அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள கோப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு இ.சிவஞானசுந்தரம் அவர்களே! நிறுவுநர் நினைவுப் பேருரையினை ஆற்ற tUifjeJ s $ gioa khz th;jpl M Rejuympfk;m thfNs !‘சோமாஸ்கந்தன்’ மலருக்கான மதிபபீட்டுரை வழங்க வந்துள்ள அதிபர் க.சுப்பிரமணியம் அவர்களே! இக்கல்லூரியின் பெருமையைக் காத்துச் சேவை செய்கின்ற ஆசிரியர்களே! மாணவச் செல்வங்களே! பெற்றோர்களே! நண்பர்களே! மற்றும் இங்கு வருகை தந்துள்ள நலன்விரும்பிகளே! இந்தக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற நிலையில், எனது பணிவான வணக்கத்தையும் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கல்லூரி 1931 ஆம் ஆண்டில் வள்ளலார் திரு மழவராயர் கந்தையா அவர்களால் தாபிக்கப்பட்டது. அவர் ஜனனித்த நினைவு தினமான இன்று பரிசளிப்பு வைபவம் நிகழ்வது சாலப் பொருத்தமாக உள்ளது. வள்ளலாரின் அறப்பணிகளோ பற்பல அவை பற்றி நினைவுப் பேருரை ஆற்ற வந்துள்ள பழைய மாணவர் விரிவாகக் கூறுவார் என நினைக்கிறேன். நான் ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். தொடக்க காலத்தில் எமது புத்தூர்க் கிராமம் ஒரு வறியநிலையில் இருந்தது. வசதி படைத்தவர்கள் யாழ்ப்பாணம் சென்று கல்வி பயின்றார்கள். இந்த நிலையில் ஆன்மீக ரீதியிலும் சமூக ரீதியிலும் அறிவியல் ரீதியிலும் மக்களை ஒருங்கிணைக்க முன்வந்தவர் வள்ளலார் மவராயர் கந்தையா அவர்ளாவார்.அதன் வெளிப்பாடே இந்தக் கிராமத்தின் அழியாப் பொக்கிசங்களாகத் திகழ்கின்ற ஆன்மீகப் பசி தீர்க்கின்ற ஆலயமும் கல்விப் பசி தீர்க்கும் கல்லூரியும் மக்கள் பசி தீர்க்கும் அன்ன சத்திரமும் ஆகும். வள்ளலார் கந்தையா அவர்கள் தாபித்த இக்கல்லூரியே இலங்கையில் இலவசக் கல்வி வழங்கிய முதலாவது நிறுவனமாகும்.

இக்கல்லூரியின் பழைய மாணவனாகிய என்னை ஒரு வைத்தியனாக்கிய இக்கல்லூரிக்கும் கல்லூரிச் சமூகத்துக்கும் தலை வணங்குகிறேன். நான் இக்கல்லூரியில் 1952 இல் இருந்து 1965 ஆம் ஆண்டு வரை கல்வி கற்றேன். அன்று அதிபராக இருந்தவர் பெருமதிப்புக்குரிய திரு சு.குமாரசுவாமி அவர்கள். இன்றும் அவர் புத்தூர் வாழ் மக்களால் பூசிக்கப் பெறுகிறார்.அவரது சேவையோ அளப்பரியது.அவருக்குப் பின் சேவையாற்றிய அதிபர்கள் எல்லோரும் தங்களது அயராத சேவையினை வழங்கி இக்கல்லூரியை நன்கு வளர்த்தார்கள். இன்றைய அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்கள் அன்றைய எனது சகமாணவன், நண்பன். அவரது தன்னலமற்ற சேவையால் இக்கல்லூரி பழையன கழிந்து புதியன புகுந்து இன்று புதுமெருகோடு காட்சி தருகிறது. மாணவர்களும் சாதனைகளை நிலைநாட்டுகின்றனர். எனினும் பொருளியல், மருத்துவம், கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடத்துறைகளின் வளர்ச்சி குறைவாகவே உள்ளது. இவற்றின் வளர்ச்சியை அதிகரித்தால் மட்டுமே தேசியப் பாடசாலை என்ற அந்தஸ்தைப் பெறமுடியும்.

மேற்கத்தய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் அபிவிருத்தியோ, வேலைவாய்ப்போ, சம்பளமோ, மிகவும் கம்மியாகவே உள்ளது.இது ஓர் துர்ப்பாக்கியம். அரச சேவையில் சேர்வதற்குத் தற்போது விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி கேட்கப்படுகிறது. இந்தக் கல்லூரியில் இத்துறை சார்ந்த வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட சமூகத்தினர் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மிகவும் அவசியமானது. குறிப்பாக ஆங்கில மொழி தெரியாவிடின் நல்ல வேலைவாய்ப்பு இல்லை எனும் நிலை தோன்றி வருகிறது. இதற்கு தற்போதுள்ள ஆசிரியர்களுக்கு மேலும் துணையாக இளைப்பாறிய சேவை மனப்பான்மை உள்ள ஆங்கிலத் தேர்ச்சி பெற்ற அறிஞர்களின் உதவியைப் பின்னூட்டலுக்குப் பெறுவது நன்மை பயக்கும். மாணவர்களுக்கு ஆங்கிலம் ஓர் கஸ்டமான பாடம் என்ற தாழ்வான அபிப்பிராயத்தைக் கிள்ளி எறிய வேண்டும். அறியாவிட்டால் எல்லாமே கஸ்டம். அறிந்தால் எல்லாமே சுலபம். ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி என்பதை உணர்ந்து மாணவர் அதைக் கற்பதில் ஆர்வத்தையும் முயற்சியையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான வசதிகளை மாணவர்களுக்கு அளிக்க வேண்டியது கல்லூரியின் தலையாய கடமையாகும். நான்கு தசாப்பதங்களுக்கு முன்பிருந்த மாதிரி எல்லாப் பாட விதானங்களையும் ஆங்கில மொழியில் போதிக்கக்கூடிய நிலைக்கு நாங்கள் தயாராக வேண்டும். அரசாங்கமும் அதனையே தற்போது பிரகடனப்படுத்தி வரகிறது.

இனிச்சற்று நேரம் இன்றைய மாணவர் நிலை பற்றிக் கவனிப்போம். "இன்றைய மாணவர்கள் தான் எதிர்காலச் சமுதாயத்தின் சிற்பிகள்". இந்த இளைஞர் சமூகத்தின் செயலாற்றலே ஒரு நாட்டின் அடித்தளம். இவர்களில் தற்போது அச்சுறுத்தும் வகையில்

ஏற்பட்டு வரும் மாற்றம் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுவரும் புதிய கலாசார மாற்றங்கள் மீது அதிதீவிர மோகம் கொள்வதே இவ் அச்சுறுத்தும் நிலைக்குக் காரணம். உதாரணமாக ரி.வி யில் அர்த்தமற்ற சினிமாவைப் பார்த்துவிட்டு அதன்படி நடக்க முயல்வது ஒரு மடமைத் தனமாகும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்று கூறப்பட்டாலும் அப்புதியதனால் ஏற்படும் பாதிப்பை பகுத்தறிவு கொண்டு நோக்காது அப்படியே புதியதைச் சிக்கனப் பற்றிக் கொள்வது அழிவின் தொடக்கமாகும்.

மனிதனில் புத்தி அதாவது பகுத்தறிவு, மனம் அதாவது எண்ணங்கள், ஐம்புலன்களின் செயற்பாடுகள் ஆகிய மூன்றும் செயற்படுகின்றன. ஒருவன் தனியே ஐம்புலன்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவானேயானால் முன்னேற்றம், விளக்கம், முடிவு எல்லாமே பிழைத்துவிடும்.

புத்தி மனச்சாட்சி ஆகியவற்றின் உதவியுடன் சீர்தூக்கிப் பார்த்து, மனத்தின் எண்ணங்களை வழிநடத்தி, ஐம்புலன்களைச் சரியான வழிகளில் வழிநடத்தினால் ஆசை, பொறாமை, ஆணவம், மமதை, காமம் எல்லாம் அடங்கி சாந்தி, மகிழ்ச்சி, அகிம்சை, சகிப்புத் தன்மை, அன்பு ஆகிய மனித மேம்பாட்டுக் குணங்கள் மிளிரும். வாழ்க்கை வெற்றியாக அமையும். மனம் போன போக்கெல்லாம் போகாது.

**எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்அப்பொருள்**
**மெய்ப் பொருள் காண்பது அறிவு**

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய சுய புத்தியையும் முதியோரின் அநுபவ அறிவையும் பயன்படுத்தி நான் என்ற மமதை கொள்ளாது, நானும் இந்த உலக ஆன்மாக்களும் ஒன்றே என்ற எண்ணத்தை உருவாக்கி, அன்பை, அகிம்சையை வளர்த்து எண்ணங்களையும் ஆசையின் செயற்பாடுகளையும் இறைவன் அளித்த புத்தியினால் கட்டுப்படுத்தி, கல்வியே கருத்தாக, விடா முயற்சியில் ஈடுபட்டால் ஒவ்வொரு மாணவனும் வெற்றியை அடைய முடியும் என்று கூறி எனது உரையை முடிவு செய்கிறேன்.

மீண்டும், இக்கல்லூரியின் பழைய மாணவனாகிய என்னை விழாவுக்கு அழைத்துக் கௌரவித்தமைக்கு கல்லூரிச் சமூகத்திற்கும் அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

# பரீட்சைக்காகப் பட்ட பாடுகளைப்
# பகிர்கின்றனர் சாதனையாளர்கள்.

க.பொ.த. (உ/த) 2005 பரீட்சைக்குத் தோற்றிச் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற சில சாதனையாளர்களை உதயன் நாளிதழ் செவ்வி கண்டு மேற்கண்ட தலைப்பில் பதிவு செய்தது. அவ்வகையில் எமது கல்லூரி மாணவர்கள் இருவரைப் பத்திரிகையாளர்கள் சந்தித்துப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் பகுதியை இங்கு நன்றியுடன் மீள்பிரசுரம் செய்கிறோம்.

## விளக்கு வெளிச்சத்தில் தான் ........




ஆவரங்காலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஜி.சி.ஈ. சாதாரண தரம் வரைக்கும் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் கற்று உயர்தரத்துக்காக ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் இணைந்து கொண்டார். இவரது தந்தை விவசாயி. தாய் இல்லத்தரசி. இவர் தனது சாதனைக்கு மேற்கொண்ட முயற்சிகள் குறித்துச் கேட்ட போது ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் 2 ஏ, 6பி, சி என்ற பெறுபேற்றினைப் பெற்றேன். எனது அண்ணா பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவில் மூன்றாம் வருடத்தில் கற்கிறார். அதனால்தான் நானும் அண்ணாவின் வேண்டுதலின் பேரில் கலைத் துறையினைத் தேர்ந்தெடுத்தேன்என்கிறார்.

படிக்கும் போது எத்தகைய வழிகளைக் கையாண்டீர்கள்? என்றபோது "இரவு நேரப் படிப்பு என்பது எனக்குச் சரி வராது. அதனால் பகல் படிப்பைத் தான் அதிகம் விரும்புவேன். படித்த மூன்று பாடங்களில் புவியியல் தான் எனக்குக் கடினமானதொன்றாக இருந்தது. அதனை மிகவும் அதீத கவனத்துடன் ஆசிரியர்களின் திறமையான வழிகாட்டலில் படித்தேன். பரீட்சைக் காலங்களில் அதிக நேரம் எடுத்துப் படித்துக் கொள்வேன். கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்துப் பல போட்டிகளில் பங்கு பற்றி உள்ளேன். ஊரில் மின்சார வசதி இருக்கிறது. ஆனால் எங்களுடைய வீட்டிற்கு இன்னும் மின்சார வசதி கிட்டவில்லை. அதனால் விளக்கு வெளிச்சத்தில் தான் கற்பேன்.

(உதயன் நாளிதழ் - 09.10.2005)

# அதிகாலையில் படிப்பேன்.




வாதரவத்தையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

தந்தையார் விவசாயம் செய்பவர்.தாயார் வீட்டுப் பணி செய்பவர். "எனக்கு ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் ஏ,பி,7சி என்ற பெறுபேறு கிடைத்தது.எதிர்பார்த்த அளவிற்குக் கிடைக்கவில்லை ஆனாலும் மனதைத் தளரவிடவில்லை. எப்படியாவது உயர் தரத்தில் 3ஏ எடுக்க வேண்டுமென்ற மன வைராக்கியத்துடன் என்னை முழுமையாக அர்ப்பணித்துப் படித்தேன்.

இரவு 9 மணி வரை தான் படிப்பேன். பகலில் தான் அதிக நேரமெடுத்துப் படித்துக் கொள்வேன். அதிகாலை 4 மணிக்கெல்லாம் எழும்பிப் படிப்பேன். "எங்கட கிராமத்தில மின்சார வசதிகள் போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லை. வீட்டில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரம் சைக்கிள் ஓடித்தான் பாடசாலைக்குப் போறனாங்கள்.

ஆரம்பத்தில் இருந்து இன்று வரைக்கும் குப்பி விளக்கில்தான் படிச்சனான். அம்மா அப்பாவின்ரை ஒத்துழைப்பு அதிகம் கிடைச்சது.

விளையாட்டுத் துறையில் அதிகளவான ஈடுபாடு எனக்கு உண்டு. வலய மட்டம் வரைக்கும் மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு பற்றியிருக்கிறேன்.

என்னுடைய எதிர்கால இலட்சியம் வனப்பிழந்து வசதியீனங்களுக்கு மத்தியில் திண்டாடும் எனது கிராமத்துக்கு என்னால் இயன்றளவு சேவையாற்ற வேண்டுமென்பது தான்.அதற்காகக் கல்வியைத்தான் கருவியாகப் பயன்படுத்தப் போகிறேன்."

"கலைத் துறை கற்கின்ற மாணவர்கள் பாடங்களை நன்றாக மனனம் செய்து கொள்ள வேண்டும். அத்துடன் வாசிப்புப் பழக்கத்தையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். அன்றன்று கிடைக்கிற பாடக்குறிப்புகள் உடனுக்குடன் படித்துக் கொள்ள வேண்டும்."

(உதயன் நாளிதழ் – 16.10.2005)

நிறுவுநர் நினைவுப் பேருரை - 2005

# முன்பள்ளிக் கல்வி

## வடக்கு கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு



எமது கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவரும் இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகருமாகிய திரு ஆ. சுந்தரலிங்கம் 10.09.2005 இல் இடம்பெற்ற நிறுவுநர்நாள், பரிசில்நாள் நிகழ்வுகளின் போது இடம்பெற்ற நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்றியிருந்தார். அப்பேருரையின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.

ஆரம்பப் பிள்ளைப் பருவம் என்பது குழந்தை கருக்கொண்ட காலத்திலிருந்து பிறந்து ஐந்து வயது வரையுள்ள காலமாகும். கருவில் இருக்கும் போதே குழந்தை கதைக்கத் தொடங்கிவிடுகிறது என ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.

ஆரம்பப் பிள்ளைப் பருவமே மனித மூளையின் முக்கிய வளர்ச்சிப் பருவமாகும். பிறப்பிலிருந்து மூன்று வயது வரை பிள்ளை வீட்டில் வளரும் காலமாக இருக்கிறது. மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையான முன்பள்ளிக் காலத்திலேயே குழந்தை கூடிய அநுபவங்களைப் பெற வழிகாட்ட வேண்டிய தேவையுள்ள காலமாக அமைகிறது.

இதனை உணர்ந்து இன்று வடக்குக் கிழக்கு முன்பள்ளிகள் மேம்பாட்டு நிலையம் என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரையும் உள்ளடக்கி இன, மத, மொழி வேறுபாடு இல்லாது அனைவருக்கும் ஒன்றிணைந்த கல்வி, ஒரே பாடத்திட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகிறது. 2010 ஆம் ஆண்டளவில் வடக்குக் கிழக்கு ரீதியாக எல்லா முன்பள்ளிகளையும் நிலையான, அனைத்து வசதிகளையும் கொண்ட நிரந்தரக் கட்டடத்தில் இயங்க வைக்கவேண்டும் என்ற இலக்குடன் வடக்கு கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையம் செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், வடக்கு கிழக்கு ரீதியாக, சிறுவர் பாதுகாப்பு நிதியம் (SCF) போரூட் (FORUT) ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திப் பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தற்போது 102 இணைப்பாளர்கள் வடக்குக் கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய ரீதியாக கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தற்போது 113 முன்பள்ளிகளில் 1216 முன்பள்ளி ஆசிரியர்களால் 15,400 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது. முன்பள்ளிகளைப் பதிவு செய்வதனை வடக்குக் கிழக்கு மாகாணசபை மேற்கொண்டு வருகிறது.

முன்பள்ளி ஆசிரியர்கள் குறைந்தது க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்தியவர்களாக இருக்க வேண்டும் என்பதோடு ஆசிரியர்கள் ஆளுமை பொருந்தியவர்களாக, முழுமையான

வளர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பகின்றனர். நேர்மை, நடுநிலைமை, தன்னம்பிக்கை, சமுதாயத்தின் - எதிர்காலத்தின் மீதான முழுநம்பிக்கை, நாட்டுப்பற்று ஆகிய பண்புகளின் நிலைக்களமாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். இவற்றுடன் சேர்த்து ஒத்துழைப்பு மனப்பான்மை, தலைமைத்துவப் பண்புகள், நகைச்சுவை உணர்வு, அன்பு, பரிவு, கொள்கை உறுதிப்பாடு, என்பனவும் அமைந்திருக்கவேண்டும்.

மேலும் ஒரு முன்பள்ளி ஆசிரியர் தனது பயிற்சி, ஆர்வம், அனுபவத்தினூடாகப் பின்வரும் பண்புகளைப் பெற்றிருத்தல் முன்பள்ளிக் கல்வித் துறைவளர்ச்சிக்கு வழிகாட்டுவதாக அமையும்.

01. பாலர்களுடன் புன்னகை தவழ நட்புரிமையுடன் உரையாடி உன்னிப்பாகப் பாலர்களின் உணர்வுகளுக்கு ஏற்பக் கற்பித்தல்.
02. பாலர்களின் பெயரைச் சொல்லி அழைப்பதுடன் பாலர்களின் மட்டத்திற்குக் குனிந்து செயற்படுதல்.
03. பேதம் காட்டாது அனைவரையும் மரியாதையுடன் நடத்துதல்
04. பாலர்களின் பார்வை மட்டத்திற்கு அவர்களது ஆக்கங்களைக் காட்சிக்கு வைத்தல்
05. பாலர் பாடசாலைக்கட்டடத்தின் உள், வெளிப்புறங்களை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல், நேரசூசி முறைமைகளுக்கு ஏற்ப சிறுவர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கிச் செயற்படுதல்.
06. முறைமைப்படுத்தப்பட்ட பெற்றார் முறைமையைப் பேணுதல். இது புதிதாகப் பாலர் பாடசாலைகளுக்குச் சேரும் பிள்ளைகள் பெற்றோருடன் உறவாட உதவும்.
07. ஒவ்வோர் பிள்ளையின் வளர்ச்சி, அபிவிருத்திகள் பதியப்படுதல். மேலும் பிள்ளையின் மொழி விருத்திக்கு பல்வேறு தரப்பினருடன் முறைமைப்படுத்தப்பட்ட, முறைமைப்படுத்தப்பட ாத வகையில் தொடர்பாடல் நுட்பங்களைப் பிரயோகித்தல்.
08. சமயம், பாரம்பரியம், பண்பாடு என்பவற்றினூடாக சமூக விழுமிய நன்னெறிகளுக்கு வழிகாட்டும் தேர்ச்சி பெறல்.

முன்பள்ளிக் கற்றல் வட்டம் பின்வரும் அம்சங்களை அடக்கியதாக அமையும்.

| | |
|---|---|
| 1. அழகியல் கற்றல் வட்டம் | 2. நீர் கற்றல் வட்டம் |
| 3. மணல் கற்றல் வட்டம் | 4. கணித கற்றல் வட்டம் |
| 5. மொழி கற்றல் வட்டம் | 6. சூழல் கற்றல் வட்டம் |
| 7. நாடகமும் அரங்கியலும் | 8. விளையாட்டு கற்றல் வட்டம் |

நுண்தசைநார் விருத்தி ஏற்படுவதற்கு மணல், நீர் கற்றல் வட்டங்களும், வன்தசைநார் விருத்தி - வெளி விளையாட்டுக்கள் மூலமும் விருத்தி அடைகின்றன.

பாலர் பாடசாலையில் பயிலும் குழந்தைகளும், பெற்றோரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவற்றை பின்வருவனவாக இனங்காண முடிகிறது.

01. உடலியக்க, புலன்கள், கற்றல் குறைபாட்டு இயல்புகளைக் கொண்ட பாலர்கள்
02. பெற்றோரை இழந்த அல்லது சகோதரர்களை இழந்த உளத்தாக்கங்களுக்கு உள்ளான பாலர்கள்

03 வறுமையின் தாக்கங்கள், போசாக்கின்மை, உடற்சுகாதாரமின்மை

04. யுத்தச் சூழல் தாக்கங்கள், அவயங்கள் இழந்த பாலர்கள்

05. தாய் அல்லது தந்தை வெளிநாட்டில், வெளியூரில் வேலை செய்வதால் தாக்கங்களுக்கு உள்ளான பாலர்கள்

06. பிளவுபட்ட குடும்பங்கள், பெற்றோரின் போதைப் பொருள் பாவனையால் தாக்கமடைந்த பாலர்கள்.

07. நரம்பியல், உடல், உளம் தொடர்பான நோயுள்ள பாலர்கள்

08. சாதாரண வகுப்பறை விளையாட்டு அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட அக்கறையில்லாத பாலர்கள்.

09. பாலர் பாடசாலைக்கு ஒழுங்கான வரவின்மை, இடைவிலகல்

10. சமூக வாழ்க்கையின் அடிப்படை அலகாக குடும்பங்களின் சிதைவுகளால் பாதிக்கப்பட்ட பாலர்கள்

மேலும் சுனாமி அலைகளால் பாதிப்புற்றோரும் இவ்வகுதிக்குள் அடங்குவர்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் விளைவாக வடக்குக் கிழக்கு ரீதியாக 33 ஆசிரியர்களும் 130 மாணவர்களும் இறந்துபோனமை இங்கு வேதனையுடன் சுட்டிக்காட்டத் தக்கது.

மேற்குறிப்பிட்ட பாலர்கள் சுயமாகப் பாலர் பாடசாலை விளையாட்டு, கல்வி அநுபவங்களைப் பெறமுடியாது இருப்பர். பெரும்பாலும் கண்பார்வை, காது கேட்டல், போசாக்கின்மை, அடிக்கடி சுகவீனமடைதல், தலையிடி, கேள்வி விளக்கக் குறைபாடுகள் உடல் சுகாதாரமின்மை, போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தம் குறைபாடுகளை வெளிக்காட்டாதிருப்பர். தாமாக முன்வந்து இப்பருவப் பாலகர்களால் ஆலோசனை வழிகாட்டல் சேவையைப் பெறமுடியாத நிலையுள்ளது. இப்பாலகர்களையும் பெற்றோர்களையும் சரியாக இனங்கண்டு அவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் சேவையை வழங்க வேண்டிய பொறுப்பும் பாலர் ஆசிரியர்களையே சார்ந்துள்ளது.

விவசாயி ஒருவன் தரமான விளைச்சலை நாடுமிடத்து, தரமான விதைகளைத் தேடிவாங்கி, செழிப்பான மண்வளமுள்ள தரையில் இட்டு நன்கு உரமிட்டு நீர்பாய்ச்சியே அதன் கூடிய விளைச்சலைப் பெறுவான். இவ்வாறே மனித வளர்ச்சியிலும் பரம்பரை இயல்புகளும் சூழல் இயல்புகளும் ஒன்று சேர்ந்து செயற்படுகின்றன. ஒரு பிள்ளை கூடிய விவேகத்தைக் கொண்டிருத்தல் மாத்திரம் போதாது. அதனை விருத்தி செய்யக் கூடிய குடும்ப, பாடசாலை, சமூகச் சூழல்களைக் கொண்டிருக்க வேண்டும். எனவே பெற்றோர்கள் நன்குணர்ந்து குடும்பச் சூழல்களைச் சிறப்பாகப் பேணவேண்டும். பிள்ளைகளை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பதோடு கடமை முடிந்ததாக எண்ணாது பெற்றோர் மிகுந்த பங்களிப்பினை வழங்க வேண்டும்.

கல்வியே குழந்தைகளின் செல்வம்
அவர்களே நாட்டின் செல்வம்

*********

## நலம்புரிக் கழகம் நடாத்திய பிரிவுபசார வைபவம் – 05.04.2006



பிரியாவிடை பெறும் பகுதித்தலைவர் திரு கு.சிவகுமாருக்கான நினைவுப் பரிசை சிரேஷ்ட ஆசிரியர் திரு க.தில்லைநாதன் வழங்கிக் கௌரவிக்கிறார். நலம்புரிக்கழகத் தலைவர் திரு சு.மோகனராசன், பிரதி அதிபர் திரு கு.வாகீசன்,கல்லூரி அதிபர் ஆகியோரும் படத்தில் உள்ளனர். பிரியாவிடை பெற்ற திருமதி மொறின் செல்வேந்திரன், திருமதி சுமதி பேமராஜ், திரு அந்தோனி இராஜசிங்கம் ஆகியோரும் கௌரவிப்புப் பெற்றனர்.

## வெள்ளியில் வடிவமைக்கப்பட்ட பவளவிழாச் சின்னம்



கல்லூரியில் இருந்து அண்மையில் பணிஓய்வு பெற்ற திருமதி த.தேவராஜன், கல்லூரியின் பவளவிழா ஆண்டைக் கௌரவிக்கும் முகமாக, வெள்ளியில் வடிவமைக்கப்பெற்ற பவளவிழாச் சின்னத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

# நிறுவுநர் நாள் - 10.09.2006

*(அமரர் மழவராயர் கந்தையாவின் 119 ஆவது பிறந்தநாள்)*





கல்லூரி அதிபர் திரு வ.ஆறுமுகம் நிறுவுநரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவதை முதற்படத்திலும் அலங்கரிக்கப்பெற்று மாணவர்களால் சுமந்து வரப்பெற்ற நிறுவுநரின் திருவுருவப் படத்தை அடுத்துள்ள படத்திலும் காணலாம்



நிகழ்வில் கலந்து கொண்ட யாவருக்கும் மதிய போசன உபசாரம் வழங்கப்பெற்றது

# 75 ஆவது ஆண்டு நிறைவு காணும்
# புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

கல்லூரியின் வித்தியாரம்ப நாளாகவும் 75 ஆவது ஆண்டு நிறைவு நாளாகவும் அமைந்த நன்னாளில் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் பவளவிழாச் சபையால் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பெற்ற சிறப்பான விழா இடம்பெற முடியாமற் போயிற்று. ஆயினும் கல்லூரி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், சில நூறு மாணவர்கள் ஒன்றிணைந்து ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலயத்தில் விசேட பூசை நடாத்துவித்துப் பொங்கலிட்டு மனநிறைவடைந்தனர். கல்லூரியைக் கௌரவிக்கும் முகமாக அன்றைய நாளில் தினக்குரல் பத்திரிகை பிரசுரித்த ஆக்கத்தை நன்றியுடன் மீள்பிரசுரம் செய்கிறோம்



*ஈழத்தில் சைவச் சூழலில் ஆங்கில மொழி மூலக் கல்வியை வழங்கிய முன்னோடிகளுள் ஒருவராக அமரர் மழவராயர் கந்தையா திகழ்ந்தார். நாவலர் பெருமான் 1872 இல் வண்ணார் பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவி, வழியாட்டியமையைப் பின்பற்றி, அமரர் கந்தையா சுதேச விழுமியங்களில் கொண்டிருந்த பற்றின் வெளிப்பாடாக 1931 சித்திரை 22 ஆம் திகதி சித்திரை மாத மிருகசீரிட நட்சத்திர நாளில் ஸ்ரீ சோமாஸ்கந்தத் தமிழ் வித்தியாலயம், ஸ்ரீ சோமாஸ்கந்த ஆங்கில வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் ஒரே இடத்தில் நிறுவினார்.*

*இவர் தனது சொத்துக்களின் பெரும்பகுதியை அறப்பணிகளில் செலவிட முயன்றார். இதன் வெளிப்பாடுகளாக ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் அன்ன சத்திரம், நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம் அமைப்பதற்கான நிலக்கொடை முதலிய திருப்பணிகள் இடம்பெற்றன.*

*புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவப்பட்டு இன்றுடன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன.*

*பவளவிழா ஏற்பாடுகளுக்காக கல்லூரிச் சமூகத்தவரால் பவளவிழாச் சபை அமைக்கப்பட்டு, கடந்த தை அத்த நாளில் கல்லூரிக்கென அத்திவாரமிடப்பெற்ற புனித நட்சத்திர தினத்தில் பவளவிழாப் பிரகடனமும் மேற்கொள்ளப்பட்டது.*

*கடந்த 75 வருடங்களாகக் கல்லூரி வழங்கிய கல்விப் பணி காத்திரமானது. உலகின் பல பகுதிகளிலும் கல்லூரியின் புதல்வர்கள் சீரிய கல்வியாளர்களாகவும் பல்துறைசார் நிபுணத்துவம் மிக்கவர்களாகவும் திகழ்கின்றார்கள்.*

*யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் வலி கிழக்குப் பிரதேசத்தின் அறிவுக்கண்ணை அகலத்திறக்கும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி மென்மேலும் பல துறைகளில் தடம்பதிக்க வாழ்த்துவோம்.*

**ச.லலீசன்**

**ஆசிரியர்.**

நன்றி: தினக்குரல் - 01.05.2006

சேவை நயப்பு

## திருமதி தங்கலட்சுமி தேவராஜன்



முதல் நியமனம் : 16.04.1984

**எமது கல்லூரியில் சேவைக்காலம்:**

**I ஆம் கட்டம்: 04.10.1989 - 31.07.1996**

**II ஆம் கட்டம் : 06.04.2005 - 01.05.2006**

ஆரம்பக் கல்வி முதல் உயர்தர வகுப்பு வரை எமது கல்லூரியில் கல்வி கற்று, விவசாய விஞ்ஞானப் பட்டதாரியாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற திருமதி தங்கலட்சுமி தேவராஜன் அவர்கள் 16.04.1984 இல் ஆசிரிய சேவையில் தம்மை இணைத்துக் கொண்டார். ஏறத்தாழ 07 வருடங்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை எமது கல்லூரியில் ஆற்றி நாட்டின் அசாதாரண சூழ்நிலையின் நிமித்தம் குடும்பத்தவரின் விருப்பப்படி யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம்பெற்றுச் சென்று பின் மீண்டும் எமது கல்லூரியில் சேவையாற்றும் விருப்புடன் நாடி வந்தார்.

மிகவும் மென்மையான சுபாவமும் அன்பான அரவணைப்பும் கொண்ட இவர் ஆங்கிலம், விவசாயம், உயிரியல் போன்ற பாடங்களை மாணவர்களுக்குப் போதித்து வந்தார். மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகத் திகழ்ந்து கல்வியில் முன்னேற வேண்டும் என்ற ஆதங்கம் இவரிடம் நிறையவே இருந்தது. இதனடிப்படையில் பாடசாலையில் இடம்பெறும் எந்த நிகழ்வாயினும் தன்னாலான பங்களிப்பை வழங்கத் தவறமாட்டார்.

சுற்றுலா - மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவக் கூடியது. 2005 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்து கல்லூரி மாணவிகளைத் தனது தலைமையில் அழைத்துச் சென்ற பெருமை இவரைச் சாரும். அத்துடன் தற்போது கல்லூரி அலுவலகத்தில் வெள்ளியில் வடிவமைக்கப்பெற்று அழகாகக் காட்சிதரும் பவளவிழா நினைவுச் சின்னத்தை ஏறத்தாழ ஐயாயிரம் ரூபா செலவில் கல்லூரிக்காக வடிவமைத்துக் கொடுத்தார்.

இத்தகைய பாரிய சிந்தனை கொண்ட இவர் 01.05.2006 இல் சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வு பெற்றுள்ளார். அவரதும் அவர்தம் குடும்பத்தினரும் சீருடனும் சிறப்புடனும் வாழ சோமாஸ்கந்தப் பெருமான் அருள் புரிவாராக.

**செல்வி து.இராகினி**
(ஆசிரியை)

சேவை நயப்பு

ஓய்வு பெற்றுச் செல்லும்

# திரு. தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்

முதல் நியமனம் : 16.07.1971
எமது கல்லூரியில் சேவைக்காலம்
15.09.1979 - 27.02.2006



முத்துச் சிரிப்பும்
முழுமதி முகமுங்கொண்டு
சத்தியாய் நின்று
எங்கள் கல்லூரிப் பெயர்
வளர்ந்து சித்திபெற
உழைத்திடும் சீராளன்
விசுவநாத சுவாமிக்காள்

அறங்காவல் பணிசெய்தே
ஆலயத்தை ஓம்பி நிற்பன்
கலங்காத் திறல் மிக்கோன்
கவினுறு குடும்பத்தை
கணம்தோறும் காக்கும் கரிகாலன்
வீசு புகழ்மிக்கோன் - எங்கள்
விசுவலிங்கப் பேரான்

ஆய்கூடப் பணிகளிங்கே அழகுபெற உழைத்த
வாகான பணியாளன்
வண்டமிழின் வண்மை
தாராளமாய் நல்கும்
தரமிகு அறிவிப்பாளன்
கண்ணுதலான் தன்கருணைத் துணைகொண்டே
பின்னாளில்
எழுதுநராய்ப் பணிமாறி ஏற்றமுற உழைத்த மகன்
இன்று
ஆசையால் சேவை இளைப்பாறல் கண்டோம்

தந்தையாய் சோதரனாய் நல்நேயத்தனாய் நின்றே
நாளும் பணிசெய்தீர்
நம்தம்மைப் பேணி நயந்தீர்
நற்கருணை
வேண்டிப் பணிகின்றோம்
நம்மிறைவன் சோமாஸ்கந்தன்
நாளும் வரம் நல்கும்
நம் வாழ்த்தும் சேர்ந்தினிக்கும்
வாழ்க! வாழ்வை நயந்து

ச.லலீசன்
பகுதி முதல்வர்

நீங்காத நினைவலைகள்

# அமரர் கணேசநாதன் ரிஷிகாந்தன்

(தரம் 9 T மாணவன்)

மண்மகிழ்:
13.10.1990



கண்நெகிழ்:
12.09.2005

இறந்தனன் எனநினைக்க இரும்பினால் இதயம் வேண்டும்
வருந்துவோர் துயரந் தீர்க்க ரிஷிகாந்தே வரவும் வேண்டும்
நீ இருந்த வகுப்பறையும் விளையாடிய மைதானமும்
வெறிச் சோடிப்போயிருக்கும் நிலைகண்டு இரங்காயோ?

கல்வியில் கரையேறிக் கல்லூரிக் கொடியதனை
கனதியாய்ப் பிடித்திடுவாய் என்று கனாக் கண்டிருக்க
காலனிடம் கைதாகிக் கங்கையூடு கடந்தாயோ?
காத்திருக்கும் எங்களுக்காய் கண்முன்னே வாராயோ?

கண்கள் குளமாகிக் கண்ணீரால் நாம்தொடுக்கும்
கவிதாஞ்சலி கண்டொருகால் மீண்டிங்கு வாராயோ?
பாதிவழி சென்றுவிட்ட பாலகனே - வாழ்க்கை
வாழும்வழி வகுத்தவழி என்பதனைக் காட்டிவிட்டாய்

*எங்களுடன் ஒன்றாய் உடனாய்க் கல்வி கற்ற ரிஷிகாந்தனின் மறைவினால் துயருற்றுக் கலங்கி நிற்கும் இதயங்களுடன் சேர்ந்து எமது துயரையும் பகிர்ந்து கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா ஸ்ரீ சோமாஸ்கந்தரின் திருப்பாதங்களை நண்ணுவதாக.*

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

**அதிபர், ஆசிரியர்கள்,**
**தரம் 09 மாணவர்கள்**

**நீங்காத நினைவலைகள்**



# அமரர் கிருஷ்ணா முத்துக்குமாரு

தோற்றம் : 14.09.1945 மறைவு : 13.03.2006

**கல்லூரியில் சேவைக் காலம்**

22.02.1985 - 29.08.1998

கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணா முத்துக்குமாரு ஆசிரியை அவர்கள் கொழும்பில் இறையடி எய்தியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப் பட்டதாரியாகிய இவர் தனது 28 வருட சேவைக் காலத்தில் 13 வருடங்கள் எமது கல்லூரியில் ஆசிரியராக, பகுதி முதல்வராகச் சேவையாற்றியுள்ளார். எல்லோரிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இனிய சுபாவமுடைய இவர் கல்லூரியில் நடைபெறும் விழாக்கள் யாவற்றிலும் தாமே முன்வந்து அதன் சிறப்புக்கான ஒத்துழைப்புகளை நல்குவார்.

சிறந்த தெய்வீக சிந்தனை இவரிடம் குடிகொண்டிருந்தது. நல்லூர் முருகப் பெருமானின் மீளா அடியவராக நாளும் அவன் புகழைப் பாடிப்பரவுபவராகத் திகழ்ந்தார். சமூகக் கல்வி, தமிழ் இந்து நாகரிகம் ஆகிய பாடங்களை மாணவர்களுக்குச் சிறப்புற கற்பித்து வந்தார்.

திடீரென நோய்வாய்ப்பட்டு யாழ் பொது மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபோது ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் அவரைப் பார்வையிடச் சென்றனர். அப்போதெல்லாம் கல்லூரியைப் பற்றியும் கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியும் ஆவலுடன் கேட்டறிந்தார். பவளவிழாக் குறித்த செய்திகளைக் கேள்வியுற்றதாகவும் அவ்விழாவிற்கு எவ்வகையிலேனும் வருகை தருவேன் எனவும் தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஆயினும் அவரது நோய் நிலைமைகளுக்கு ஏற்ப கொழும்பில் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இவரது நோய் நிலைமைகள் குறித்து அறிந்த அதிபர், ஆசிரியர்கள் உட்பட அன்பாகப் பழகிய யாவரும் அன்னார் நோயிலிருந்து மீண்டுவரவேண்டுமெனப் பிரார்த்தித்த வண்ணமிருந்தனர். ஆயினும் விதி யாரைத்தான் விட்டது?

சொல்லிக் கொண்டா பிறந்தோம்?சொல்லி மறைவதற்கு?

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதியல்லவா? அவரது மறைவைக் கேள்வியுற்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவர் முகங்களிலும் சோகங் குடிகொண்டது.அவரது மரண ஊர்வலத்தில் கூட நேரில் பங்குபற்றக் கூடிய வாய்ப்பு இருக்கவில்லையே என யாவரும் வேதனையுற்றனர். கல்லூரியின் காலைக் கூட்டத்தின்போது அஞ்சலி செலுத்தி அமைதியடைந்தனர்.

கிருஷ்ணா ஆசிரியரின் இழப்பு அன்னாரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றிக் கல்விச் சமூகத்தினருக்கே வேதனையைத் தரும் இழப்பாகும். அன்னாரது ஆன்மா சாந்தியடைய சோமாஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திப்போம்.

செல்வி வ.சிவலீலாதேவி
(பகுதி முதல்வர்)

நீங்காத நினைவலைகள்



# அமரர் பத்மாவதி மழவராயர்

*தோற்றம் : 11.04.1932 மறைவு : 11.08.2006*

**கல்லூரியில் சேவைக்காலம் :**

*முதற்கட்டம் : 15.05.1966 - 1971*

*இரண்டாம் கட்டம் : 1974 - 11.04.1992*

எமது கல்லூரியின் முன்னாள் விஞ்ஞானத்துறை ஆசிரியராகத் திகழ்ந்த திருமதி பத்மாவதி மழவராயர் அண்மையில் காலமானார். கொல்லங்கலட்டி என்ற செம்மண் பூமியைச் சேர்ந்த இவர் சிங்கப்பூரில் பிறந்தார். புத்தூரைச் சேர்ந்தவரும் எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமாகிய திரு எஸ்.மழவராயர் அவர்களைத் திருமணம் செய்து புத்தூரில் வாழ்ந்தார். புத்தூர் காரைக்கூடல் வைரவப் பெருமானின் மீளா அடியவராக, ஆலய அறங்காவலராகத் திகழ்ந்து அவ்வாலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

எமது கல்லூரியில் இடம்பெறும் கல்வி விருத்திச் செயற்பாடுகளில் கணவன் மனைவி ஆகிய இருவரதும் பங்களிப்புக்கள் காத்திரமானதாக இருந்தன. கல்லூரியில் க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு இரசாயனவியல் பாடத்தைப் போதித்தார். உலகில் உள்ள பொருள்கள் யாவும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே என்று சைவசித்தாந்தம் பேசுகிறது. உலகில் உள்ள பொருள்கள் யாவும் மூலக அணுக்களின் சேர்க்கைகளால் ஆனவை என விஞ்ஞானம் நிரூபிக்கிறது. அமரர் பத்மாவதி மழவராயர் அவர்கள் மெஞ்ஞான, விஞ்ஞான கருத்துகளுக்கு இடையிலான இணைப்பைத் தெளிவாக விளங்கியவராக இருந்தமையாலேயே இருதுறைகளிலும் தீவிர ஈடுபாட்டைக் கொண்டிருந்தார்.

தனது சேவைக்காலத்தில் மகாஜனக் கல்லூரி அதிபர் அமரர் T.T. ஜெயரட்ணம் உள்ளிட்ட பல திறமைமிக்க அதிபர்களின் கீழ் சேவையாற்றியுள்ளதுடன் அவர்களது நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

அன்னார் எங்கள் சமூகத்திற்கு ஆற்றிய பணி எம்மவர்களால் நீளநினைந்திருக்கப்படும்.

**க.தவதாசன்**
(ஆசிரியர்)

நீங்காத நினைவலைகள்

## ஊடாடுவதற்கு ஓர் அருமையான உருத்திரன்



அப்புக்காத்து உருத்திரர் அவர்கள் ஊடாடிப் பழகுவதற்கு ஓர் அருமையான மனிதர். இவர் எங்கள் கல்லூரியில் 06.05.1948 தொடக்கம் 29.09.1952 வரையான காலப் பகுதியில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். அவரது பண்புகளும் சுபாவங்களும் இவர் பற்றிய ஆழமான பதிவுகளை எம்மனங்களில் உண்டாக்கி அவரை மறவாதிருக்கச் செய்துள்ளன.

பள்ளிச் சினேகம் படலை மட்டும் என்ற வாக்கியத்திற்கு இவர் விலக்கானவர். இங்கிருந்த பின்னர் ளுயஉசநன ர்நயசவ கல்லூரியில் ஆசிரியரானார். தொடர்ந்து அப்புக்காத்துத் தொழிலை நாடினார். தொழிலில் மாற்றம் பெற்றாலும் தனது பழைய அன்பர்களின் சேமங்களைப் பற்றி அறிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

இக்கல்விக் கூடம் கண்ட அதிபர்களில் எல்லோரது நாவிலும் பெரும்பாலும் உச்சரிக்கப்படுபவர்கள் இருவர். ஒருவர் "வீரர்", மற்றவர் "குமாரர்". இந்த வீரர் எனப்படும் அமரர் வீரசிங்கத்தின் காலத்தில் உருத்திரனாரின் கல்விப் பணி இங்கு ஆரம்பமாகியது குமாரர் எனப்படும் அமரர் குமாரசுவாமியின் காலத்திலும் தொடர்ந்தது.

அமரர் உருத்திரா அவர்கள் இந்த அதிபர் பெருமக்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். கல்லூரியில் அமரர் வீரசிங்கம் ஞாபகார்த்த நிதியை நிறுவிய முக்கிய கார்த்தாக்களுள் அமரர் உருத்திராவும் ஒருவராகத் திகழ்கிறார். இவர் எனக்கு 17.12.2002 இல் எழுதிய கடிதத்தில் "The Memorial Scholarship Funded in Memory of SANGARAPILLAI VEERASINGAM, our highly revered and respected principal has to be incresed at least to Rs 50,000/- Hence Rs 15,000/- has to be added to the present amount" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த உருத்திரன் இப்படியான பரோப காரியங்களில் தானே முன்னின்று ஈடுபடுவது மாத்திரமன்றி தனக்கு நம்பிக்கையான நண்பர்களையும் ஈடுபடச் செய்வார்.

நிதானமான இறைபக்தி இவரிடம் மிகுந்து காணப்பட்டது. இந்து மதத் துறவிகள் பலருக்குப் பலவகைகளில் உதவிகளைச் செய்து அவர்களின் மேம்பாட்டிற்காக உழைத்திருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் செனற் சபை உறுப்பினராகவும் இருந்து எமது சமூகத்திற்கு அருந்தொண்டாற்றினார். எமது மண்ணில் பாரிய இடப்பெயர்வுகள் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் அகதி முகாம்களுக்கு தானே நேரில் சென்று அந்த மக்களின் துன்பங்களைத் துடைப்பதற்குத் தன்னால் ஆன பணிகளை மேற்கொண்டு வந்தார்.

இத்தகு பெருமகனாரின் பிரிவு எமது கல்லூரிக்கு மாத்திரமல்ல தமிழ்ச்சமூகத்திற்கே பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

**நீ. மனோகரன்**
(முன்னாள் அதிபர்)
நியூசிலாந்து

நீங்காத நினைவலைகள்

# நல்லாசாசன் அமரர் இராஜதுங்கம் சிவநேசராசா



ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி தனியார் பாடசாலையாக இயங்கிய காலத்தில் இதன் முகாமையாளராக திரு சான்டோ முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் விளங்கினார். இவரின் நெருங்கிய உறவினரான திரு இராஜதுங்கம் சிவநேசராசா அவர்கள் இக்கல்லூரியின் ஆசிரியராக நியமனம் பெற்று 11.09.1959 அன்று தனது கடமையை ஏற்றுக் கொண்டார். அந்நாள்களில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திரு E.U. சோமசேகரத்திற்கும் இவர் உறவினராவார். சைவப் பாரம்பரியத்தைப் பேணியக் குடும்பத்தைச் சேர்ந்தவராதலால் எமது கல்லூரிக்கு மிகவும் பொருத்தமானவராகத் திகழ்ந்தார்.

அமரர் சிவநேசராசாவை எனது மாணவப் பருவம் முதல் நான் நன்கு அறிவேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திரு. சிவநேசராசா மாணவனாக இருந்த சமயம் மாணவ முதல்வர்களுள் ஒருவராகவும் கற்றல் செயற்பாடுகளில் முன்னிலை வகிப்பவராகவும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கூடிய நாட்டம் கொண்டவராகவும் திகழ்ந்தார். அது மாத்திரமல்லாமல் இந்துக் கல்லூரி உதைபந்தாட்டக் குழுவிலும் கிரிக்கெற்குழுவிலும் இடம்பெற்று சிறந்தவோர் வீரனாகவும் விளங்கினார்.

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டார். இடைநிலை வகுப்புகளுக்கு ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்தார். இவரின் கற்பித்தல் அணுகுமுறை வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களையும் கவரக் கூடியதாகவும் நுட்பம் வாய்ந்ததாகவும் அமைந்திருந்தது.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தமையால் உதைபந்தாட்டம், கிரிக்கெற் , உடற்பயிற்சி ஆகிய விளையாட்டுக்களின் நுட்பங்களைப் பயிற்றுவிக்கப் பேருதவி புரிந்தார். அப்போது விளையாட்டுப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிய திரு தங்கராசா அவர்களுக்கு இவரது சேவை பேருதவியாக அமைந்தது. அத்துடன் சாரணிய ஆசிரியராகப் பணியாற்றி சாரணர்கள் மாவட்ட மட்டத்தில் பல பரிசில்களை வெற்றி கொள்ள வழிகாட்டினார். ஓய்வு நேரங்களில், இடைவேளை நேரங்களில் ஆசிரியர் அறை கலகலப்பாக விளங்கவும் காரணகர்த்தராக விளங்கினார்.

இத்தகு பன்முக ஆளுமை கொண்ட திரு சிவநேசராசா 05.12.2005 அன்று இறைபதம் நண்ணினார். அன்னவரின் கல்விப் பணி, விளையாட்டுத் துறைப் பணி, மற்றும் ஏனைய பணிகள் யாவும் என்றும் நினைவுகூரத்தக்கவை.அன்னவரின் மறைவுக்கு எமது கல்லூரிச் சமூகத்தவர் சார்பாக அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிறந்தார்: பயன்பட வாழ்ந்தார்: கடமை முடிந்தது:
சென்றார் சிவனடி: வாழ்க அவர் நினைவு.

**வே.சந்திரசேகரம்பிள்ளை J.P.**
முன்னாள் அதிபர்

(நீங்காத நினைவலைகள்)

# அமரர் க. அரிராசசிங்கம்



ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திரு. க. அரிராசசிங்கம் கடந்த ஆண்டு மார்கழி மாதம் 14ஆம் திகதி இறைபதம் எய்தினார்.

1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி இக்கல்லூரிக்கு மாற்றலாகி வந்த கோப்பாயை சேர்ந்த பயிற்றப்பட்ட கலைப்பட்டதாரியான திரு க. அரிராசசிங்கம் ஏறத்தாழ 8 ஆண்டுகள் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளோடு தொடர்பான நற்பணிகள் புரிந்துள்ளார். இக்காலப்பகுதியில் உயர்தரவகுப்புக்களுக்கு கணிதம் கற்பிக்கும் பழுத்த அனுபவம் உள்ள தனிப் பெரும் வித்தகனாகவும் பிற்பகுதியில் கடமைமிக்க பிரதி அதிபருமாக பணிபுரிந்து இளைஞர்களுக்கு முதிர்ந்த வழிகாட்டியாகவும் நிர்வாகத்துக்கு விசுவாசமான உறுதுணையாகவும் விளங்கினார். நைஜீரியாவிலுள்ள கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட விரிவுரையாளர் நியமனத்தை பொறுப்பேற்பதற்காக 1980 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் வெளிநாடு சென்றார்.

அன்னார் கம்பீரமான தோற்றமும், சாந்தமான சுபாவமும், கள்ளம் கபடமற்ற இன்முகமும், நிறைந்த மனிதநேயமும், ஆக்கபூர்வமான மனப்பாங்கும், பண்பான ஒழுக்கமும், அசையாத தெய்வ நம்பிக்கையும் கொண்டவர். இவரது குணாதிசயங்களை கண்டு வியந்து போற்றாத சக ஆசிரியர்களும் மாணவர்களும் இல்லையெனலாம்.

தம்வேலை நேரம் தவிர்ந்த நேரங்களில் தம் உற்றார், உறவினர், நண்பர், அயலவருக்கும் தம்மாலான உதவிகளை செய்து நல்ல ஒரு முன்மாதிரியான பிரஜையாக வாழ்ந்தார்.

கணிதம் அவருக்கு ஒரு கைகண்ட கலை. இவர் ஒரு நடமாடும் கணித கலைக் களஞ்சியம். , சாதாரண உயர்தர வகுப்பு மாணவர்களின் பாவனைக்காகப் பலகணித நூல்கள் ஆக்கியுள்ளார். நைஜீரியாவில் அன்னாரின் மேலதிகாரிகள் இவர் இயற்றிய கணித நூல்களின் தரத்தையும் தெளிவையும் வெகுவாக மெச்சினார்கள் என்று நண்பர்களிடமிருந்து கேள்விப்பட்டிருக்கின்றேன். அன்னாரின் பாரியார் உட்பட பிள்ளைகள் எல்லோரும் கணித விற்பன்னர்கள். "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைவாக அன்னாரின் பிள்ளைகள் எல்லோரும் உயர்தர தொழிற்றகைமைகள் பெற்று கவர்ச்சிகரமான பெரிய பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

நைஜீரியாவிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மிகவும் ஈடுபாடு கொண்டதினால் பாட அடைவுகளும் புகழும் மேலோங்கின. உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் சொந்த வாழ்விலும் பேரும் புகழுடனும் வாழ்ந்த அன்னார் வள்ளுவரின் எதிர்பார்ப்புக்கமைய புகழுடன் தோன்றினார் என்பது உறுதியாகிவிட்டது.

எம்நெஞ்சை விட்டகலா அவர்தம் நினைவுகளுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**சு.கனகராசா**
முன்னாள் அதிபர்

**கடந்த ஆண்டு எம்மால் வெளியிடப்பெற்ற சோமாஸ்கந்தன் சஞ்சிகை பற்றிய மதிப்பீட்டுரை 29.10.2005 உதயன் பத்திரிகையில் நூல்வரிசை பகுதியில் வெளியானது அதனை நன்றியுடன் மீள்பிரசுரம் செய்கிறோம்.**




நூல் : சோமாஸ்கந்தன்
வெளியீடு : புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி
பதிப்பாசிரியர் : ச.லலீசன்

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் ஆண்டு மலரான 'சோமாஸ்கந்தன்' கல்லூரியின் தகவல் தொழினுட்ப மையத்தால் முழுமையாக வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி மலரில் பன்னிரண்டாவது தொகுதி இதுவாகும்

இதன் உள்ளடக்கம் வாழ்த்தியல், பொதுவியல், பதிவியல் என மூவகைப் படுத்தப்பட்டுள்ளன. வாழித்தியலில் அறிஞர்கள், சான்றோரது ஆசிச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. பொதுவியல் அறிஞர் பகுதி, மாணவர் பகுதி என இரண்டாக வகுக்கப்பட்டுள்ளது.

அறிஞர் பகுதியில் கோப்பாய் சிவம், திருமதி சுகந்தினி சிறி முரளிதரன், சைவப்புலவர் மு.முரளிதரன், சு.மோகனராசன் ஆகியோரது கனதியான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மாணவர் பகுதி நிறைவாக, நிறைய ஆக்கங்களைக் கொண்டதாக அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. அவ்வகையில் 30 மாணவர்களது கட்டுரைகளும் கவிதைப் பூங்கா என்ற தனிப்பகுதியில் 11 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. Students' Section பகுதியில் 21 ஆங்கில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. மாணவர்களுடைய படைப்பாக்கத் திறன்களுக்கு களம் அமைத்துத் தருகின்ற இத்தகைய முயற்சிகள் விதந்து குறிப்பிடத்தக்கன. கல்லூரியின் எல்லாச் செயற்பாடுகளையும் தரவு ரீதியாகவும் புகைப்பட ஆவணமாகவும் இந்நூல் பதிவு செய்துள்ளது. நூலின் பதிப்பாசிரியர் ச.லலீசனதும் முகாமையாளர் கு.வாகீசனதும் ஒருங்கமைந்த செயற்பாடுகள் மலரின் காத்திரத் தன்மைக்கு வலுச் சேர்க்கின்றன. அண்மைக்காலத்தில் கவனிப்புக்குரிய பல முன்மாதிரிச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கும் சோமாஸ்கந்தக் கல்லூரியின் அத்தகு மாதிரியில் ஒன்றாக இம்மலரையும் குறிப்பிடலாம்.

**- எஸ்.ஸ்ரீகுமரன்**

## க.பொ.த. [உ/த] 2006 மாணவர்களின் ஒன்று கூடல் - 05.03.2006



நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பெருமைமிகு பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திரு தி.வேல்நம்பி உரையாற்றுவதை முதற்படத்திலும் திருமதி சஜிதா வேல்நம்பி மங்கல விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## பழைய மாணவர் சங்கத்தால் முன்னெடுக்கப்பெறும் குமாரசுவாமி மணிமண்டப நிர்மாணப் பணிகளின் தற்போதைய தோற்றம்



## நிறுவுநர் நாள், பரிசில் நாள் விழா



நிறுவுநர் திருவுருவப் பட ஊர்வலத்தை வரவேற்பதற்காக பூரண பொஙற் குடம் வைத்துத் தோரணம் நாட்டிக் காத்து நிற்கும் அன்பர்களில் ஒரு பகுதியினர்.




நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய நிபுணர் கு.மகேசன் உரையாற்றுவதை முதற்படத்திலும், "சோமாஸ்கந்தன் - 2005" இற்கான மலர் மதிப்பீட்டுரையாற்றிய வரணி ம.வி. அதிபர் திரு செ.சுப்பிரமணியம், நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றிய திரு ஆ.சுந்தரலிங்கம் மற்றும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காண்கிறீர்கள்

## PRIZE GIVING - 2006

### PRIZE LIST 2005

#### GRADE 1

| | | |
|---|---|---|
| 1. | K.Thivija | Speech ②, Reading , Art ②, Hand Work ①, Eas ②, Tamil ① , Mathematics ② , Environment ① , Hinduism ① , ***General Proficiency*** |
| 2. | A.Sinthuri | Reading ③ , Hand Work ③ , Tamil ② , Environment ③ , Hinduism ② |
| 3. | P.Kajani | Reading ① , Art ③ , Mathematics ① , Environment ② |
| 4. | P.Laxsika | Reading ② , Eas ① , Tamil ③, Hinduism ③ |
| 5. | R.Thanushan | Art ③ , Mathematics ② , |
| 6. | S.Sanjika | Speech ① |
| 7. | R.Sasitharan | Speech ③ |
| 8. | U.Thutharsika | Speech ③ |
| 9. | S.Vakini | Art ① , |
| 10. | N.Kajanan | Hand Work ② |
| 11. | J.Kisoran | Hand Work ③ |
| 12. | J.Piriyanthi | Eas ③ |
| 13. | R.Saranya | Eas ③ |
| 14. | S.Rishani | Mathematics ③ |

#### GRADE 2

| | | |
|---|---|---|
| 1. | V.Aruran | Tamil ② , Environment ② , Mathematics ① , Hinduism ① , Reading ② , Speech ② , Art ③ , ***General Proficiency*** |
| 2. | P.Jalini | Tamil ③ , Environment ① , Hinduism ② , Reading ① , Speech ① |
| 3. | V.Sankeerthana | Tamil ① , Hinduism ③ , Speech ③ , Eas ③ , Hand Work ① |

| | | |
|---|---|---|
| 4. | S. Harushanan | Environment ③ Mathematics ③ , Reading ③ |
| 5. | T.Pirinjan | Mathematics ③ , Art ③ |
| 6. | K.Kurushankar | Art ① , Hand Work ③ |
| 7. | R.Kamsika | Tamil ③ , Eas ③ |
| 8. | S.Jamsika | Reading ③ , Eas ① |
| 9. | K.Sathusra | Speech ③ , Eas ② |
| 10. | S. Shankeethan | Mathematics ② |
| 11. | T.Kopika | Environment ③ |
| 12. | R.Kokeethan | Hinduism ③ |
| 13. | P.Kritharan | Art ② |
| 14. | V.Pakena | Hand Work ② |
| 15. | M.Karthika | Hand Work ③ |

## GRADE 3

| | | |
|---|---|---|
| 1. | R.Kerthiga | Reading ① , Speech ① , Environment ① , Hinduism ② Mathematics ① , English ③ , Eas ① , Hand Work ① , art ③. ***General Proficiency*** |
| 2. | S.Sivakajan | Speech ③ , Tamil ③ , Enviornment ② , Hinduism ① Mathematics ② , English ① , Eas ② |
| 3. | T.Mithusha | Reading ③ , Speech ② , Tamil ① , Enviorment ③ , Hinduism ③ |
| 4. | T.Shanuga | Tamil ② , Mathematics ③ , English ② , Eas ③ |
| 5. | K.Sharmina | Speech ③ , Eas ③ Art ① |
| 6. | N.Suganthiga | Tamil ① |
| 7. | S.Shajini | Reading ② |
| 8. | J.Nirojini | Reading ③ |
| 9. | T.Demina | Hand Work ② |
| 10. | S.Thayana | Hand Work ③ |
| 11. | P.Vinoja | Art ② |
| 12. | P.Nitharshanan | Art ③ |

## GRADE 4

| | | |
|---|---|---|
| 1. | R.Keerthana | Tamil Writing ① , Environment ① , English Writing③ English Reading ① , Mathematics ③ . Hinduism ③ , ***General Proficiency*** |
| 2. | T.Niransali | Tamil writing ③ , Environment ③ , English Writing ① Mathematics ① , English reading ② , Hand Work ③ |
| 3. | N.Varaluxmi | Tamil writing ③ , Tamil Reading , Eas ② , Hinduism ① |
| 4. | P.Palakrishna | Tamil Speech ③ , Mathematics ② , Art ③ , Hand Work ① |
| 5. | N.Vinoja | English Writing ② , English Reading , Hand Work ③ |
| 6. | T.Kamsiga | Tamil Writing ② , Hand Work ② , Hinduism ② |
| 7. | S.Jathusha | Tamil Speech ② , Tamil Reading ① |
| 8. | S.Sivapriyatharsini | Environment ② , Tamil Reading ② |
| 9. | S.Rajitha | Art ① , Eas ③ |
| 10. | K.Karunja | Tamil Speech ① |
| 11. | S.Niroja | Art ② |
| 12. | R.Pirashanthan | Eas ① |

## GRADE 5

| | | |
|---|---|---|
| 1. | M.Kajani | Tamil Writing ③ , Environment ② , English Writing ① Tamil Reading ③ , English Reading ③ , Art ① , Hand Work ① , Hinduism ② , ***General Proficiency*** |
| 2. | K.Mayoorati | Tamil writing ② , English writing , Tamil reading ③ , Mathematics ② , English Reading ① , Art ③ , Hand Work ③ , Eas ②, Hinduism ③ |
| 3. | T.Pathuja | Tamil speech ③ , Tamil writing ① , English writing ③ Mathematics ① |

| | | |
|---|---|---|
| 4. | S.Nivetha | Tamil Reading ①, English Reading, Hinduism ① |
| 5. | R.Rajathiththan | Tamil Speech ①, Tamil Reading |
| 6. | S.Renuja | Tamil speech ③, Eas ① |
| 7. | M.Jenusiya | Tamil speech ② |
| 8. | S.Navakerthan | Environment ① |
| 9. | K.Yogaluxsi | Environment ③ |
| 10. | K.Thivakaran | Mathematics ③ |
| 11. | S.Ushalini | Art ② |
| 12. | S.Yasotharan | Art ③ |
| 13. | S.Sivaram | Hand Work ② |
| 14. | T.Thuaxshan | Hand Work ③ |
| 15. | S.Nitharshana | Eas ③ |
| 16. | P.Sharanja | Eas ③ |

**GRADE : 6**

| | | |
|---|---|---|
| 1. | V.Sharani | Hinduism ②, Tamil ①, Mathematics ③, Environment ③, Health ② |
| 2. | T.Pirashanthy | Hinduism ①, English ①, Mathematics ②, Environment ① |
| 3. | T.Thanikairuban | Tamil ②, Mathematics ①, Environment ② |
| 4. | K.Lavanethika | Hinduism ①, Health ① |
| 5. | V.Kajevana | Tamil ③, |
| 6. | P.Shanjeev | English ② |
| 7. | S.Banujah | English ③ |
| 8 | T.Mathuranth | Environment ③ |

**GRADE : 6**

English Medium

| | | |
|---|---|---|
| 1. | S.Banujah | Mathematics ①, Environment ②, Health ② |
| 3. | S.Sarvini | Mathematics ③, Environment ③, |
| 4. | P.Sanjeev | Environment ①, Health ① |

| | | |
|---|---|---|
| 2. | S.Sugirthan | Mathematics ② |
| 5. | K.Ramanujah | Health ③ |

## GRADE : 7

| | | |
|---|---|---|
| 1. | T.Lenuja | Tamil ①, English ①, Health ③, Geography ①, Civil ①, Music ①, ***General Proficiency*** |
| 2. | K.Sutharsana | Mathematics ①, Tamil ②, English ②, Hinduism ① Music ③ |
| 3. | S.Aruleeshan | Mathematics ②, English ③, Civil ②, history ② |
| 4. | K.Sivothayan | Science ②, Health ① Geography ②, Music ③ |
| 5. | T.Raguparan | Health ②, Geography ③, History ① |
| 6. | S. Rojina | Tamil ③, Christianity, Civil ③, |
| 7. | R.Niroja | Hinduism ②, Music ② |
| 8. | S.Tiluxshan | Mathematics ③ Health ③ |
| 9. | T.Puvitharan | Science ①, History ③ |
| 10. | Y.Thusjanthan | Science ③, Music ③ |
| 11. | R.Kowsigan | Art ① |
| 12. | R.Anojan | Art ② |
| 13. | K.Thanujan | Art ③ |
| 14. | N.Shaththiya | Dance ① |
| 15. | P.Ukanja | Dance ② |
| 16. | K.Renuga | Dance ③ |

## GRADE : 8

| | | |
|---|---|---|
| 1. | S.Sukirthan | Mathematics ②, Tamil ②, Science ①, Social Study ①, Hinduism ①, Health ①, Art ①, ***General Proficiency*** |
| 2. | T.Miruna | Tamil ①, English, Social Study, Hinduism ②, Music ② |
| 3. | T.Nirojan | Science ②, Social Study ③, Health ② |

| | | |
|---|---|---|
| 4. | N.Jekanthini | Tamil ③ , Hinduism ③ , Art ③ |
| 5. | S.Vinthuja | Mathematics ① , Science ③ |
| 6. | J.Sasikumar | Mathematics ③ , Art ② |
| 7. | K.Thulasika | Health ③ , Music ① |
| 8. | M.Pukalarasi | Music ③ |
| 9. | Y.Kayalvili | Dance |

## GRADE : 9

| | | |
|---|---|---|
| 1. | S.Shanjika | Tamil ① , English ② , Science ① , Social Study ① , Hinduism ① ***General Proficiency*** |
| 2. | K.Thusitha | Mathematics ①, Tamil ③. Hinduism ③ ,Health, Music |
| 3. | A.Vinuja | Tamil ② , English ③ , Christianity, Art |
| 4. | K.Thadshayini | Tamil ③, English ① , Dance |
| 5. | K.Shanjika | Hinduism ② |

## GRADE : 10

| | | |
|---|---|---|
| 1. | K.Thayalini | Mathematics ③ , Tamil ② , Science ① , Social Study ① , Hinduism ① , health ① , Agriculture ② , Music ① , ***General Proficiency*** |
| 2. | S.Jeevakini | Mathematics ② , Social Study ② , Science ② , Hinduism ③ , Geography ① , Agriculture ① |
| 3. | N.Pamina | Tamil ① , English ① , Science ③ , Tamil Literature ① , Commerce ① |
| 4. | V.Jeneeva | Mathematics ① , Commerce ② |
| 5. | S.Sinthuja | Tamil ③ , Commerce ③ |
| 6. | S.Akila | Hinduism ② , Dance |
| 7. | L.Shaminakeresh | Home Science , Christianity |
| 8. | M.Vilani | Tamil literature ② |
| 9. | N.Thenujan | Art |

## GRADE : 11

| | | |
|---|---|---|
| 1. | C.Partheepan | Mathematics ①, Science ①, Tamil Literature, Art, ***General Proficiency*** |
| 2. | M.Sinthuja | Hinduism ②, Science ②, Home Science |
| 3. | M. Sinthujan | Mathematics ②, Tamil |
| 4. | K.Pirashanthy | Hinduism ③, Geography Music |
| 5. | T.Nirosha | Social Study, Health Science |
| 6. | S.Janushan | Agriculture ②, Health Science ② |
| 7. | K.Pirashanth | Mathematics ③ |
| 8. | S.Mirtha | Hinduism ① |
| 9. | K.Luxman | Agriculture ① |
| 10. | A.Jimalan | Health Science ③ |
| 11. | K.Sinthuja | Dance |

## GRADE 12 - G.C.E (A/L) 2007 BATCH

| | | |
|---|---|---|
| 1. | T. Thileepan | Commerce ①, Economic, General English, Accounts, ***General Proficiency*** |
| 2. | A. Kopiga | Geography, Tamil, Hindu Civilization, ***General Proficiency*** |
| 3. | K. Sivarubini | Chemistry, Combine Maths ③, ***General Proficiency*** |
| 4. | M. Kajanthini | Hinduism ③, Political Science. |
| 5. | M. Krishna | Combine Maths ① |
| 6. | S. Rajitha | Combine Maths ② |
| 7. | S. Rajetha | Physics |
| 8. | S. Dayana | Hinduism ① |
| 9. | V. Ushananthini | Hinduism ② |
| 10. | P. Palasuthan | Agriculture ① |
| 11. | T. Amirthas | Agriculture ② |
| 12. | F. Arun | Agriculture ③ |

| | | |
|---|---|---|
| 13. | P. Kapilan | Commerce ② |
| 14. | T. Nantharaj | Commerce ③ |
| 15. | M. Thurja | Logic |

## GRADE 13 G.C.E (A/L) 2006 BATCH

| | | |
|---|---|---|
| 1. | R. Kogulnath | Chemistry ① , Physics ① , Biology ① , General English ①, ***General Proficiency*** |
| 2. | R. Sasitha | Commerce , Account , Economic, ***General Proficiency*** |
| 3. | M. Vanathy | Logic ① , Hindu Civilization ①, Tamil, ***General Proficiency*** |
| 4. | Kajeethan | Chemistry ② , Physics ② |
| 5. | Pirasath | Chemistry ③ , Biology ③ |
| 6. | M. Vijitharan | Biology ② , Physics ③ |
| 7. | R. Pakerathy | Hindu Civilization ② , Logic ③ |
| 8. | T. Kajanthan | Combine Maths ① |
| 9. | S. Satsoruban | Combine Maths ② |
| 10. | S. Thayaparam | Combine Maths ③ |
| 11. | J. Sanjeepan | Geography |
| 12. | K. Vasantharaj | Agriculture ① |
| 13. | S. Sivashangar | Agriculture ② |
| 14. | P. Srivarnan | Agriculture ③ |
| 15. | T. Kunaseeli | Logic ② |
| 16. | S. Mayuoora | Hindu Civilization ③ |
| 17. | D. Kesavan | General English ② |

## SPECIAL PRIZES

### 01. Grade 5 Scholarship Exam - 2005

| | |
|---|---|
| 1. M. Kajaani | 2. K. Majurathy |
| 3. J. Kirusika | 4. T. Pathuja |
| 5. K. Thivakaran | 6. S. Navakeerthan |

## 02. O.S.A Award for the Grade 5 Scholars - Still with us.

1. T.Pathuja
2. M. Kajani
3. K. Mayoorathi
4. J.Kirusika
5. K.Thadshajini
6. K.Suganja
7. R.Sopika
8. M.Sinthuja
9. A.Kopika
10. V.Jeneva
11. S.Navakerthan
12. J.Sasikumar
13. S.Sumanan
14. M.Kajanraj
15. T.Pirathap
16. K.Pirashanth
17. T.Thelepan
18. R.Kogulnath
19. M.Vanathi
20. V. Vaikunthan
21. T. Niros
22. D.Kesavan
23. T.Gunaseeli
24. S. Sabitha

## 03. G.C.E (O/L) Best Results - 2005 Dec.

| | |
|---|---|
| 1. C. Partheepan | 6A , 2B , C , S |
| 2. M. Sinthuja | 6A , B , 2C , S |
| 3. S. Mirtha | 5A , B , 4C |

## 04. G.C.E (A/L) Best Results - 2005 April

| | | |
|---|---|---|
| 1. R. Sinthuja | District Rank 14 Z-Score | 1.8084 |
| 2. T. Piriyanka | District Rank 24 Z-Score | 1.7402 |
| 3. V. Thayalini | District Rank 49 Z-Score | 1.6068 |
| 4. T. Usha | District Rank 53 Z-Score | 1.5886 |

## 05. University Entrants in G.C.E (A/L) - 2005

1. R.Sinthuja
2. T. Piriyanka
3. V. Thayalini
4. T. Usha
5. A. Vanathy
6. S. Vijayaragavan

7. T. Sarmila
8. M. Jeyanthini
9. Ketharani
10. Mathura
11. Piratheepa

**06. Won 2nd Prize - Volley Ball - North East Provincial Level - 2006**

01. T.Sujeevan (Captain)
02. K. Nithiyananthan
03. M.Krishna
04. Y.Mayooran
05. S. Ragulan
06. T.Nantharaj
07. J. Jeyachandru
08. M. Mathanaruban
09. R. Ratheepan
10. M.Baheerathan
11. P.Banushanthan

**07. Selected to Provincial Level - Long Jump**

M.Kajanraj

**08. Best Performance Award for Scouts**

1. L. THaventhirathas
2. K. Thanushan
3. K. Ramanan
4. S. Pulenthiran
5. R. Rajeevan

**09. Best Performance Award for Students' Welfare Society**

1. T. Sasikumar
2. K. Mayuooran
3. K. Pratheep
4. M. Vilani
5. J. Nisopana
6. K. Thayalini

**10. "Saiva Paripalana Sabai" 2005 - Grade 07**

Sillver Medal winner - Miss. S.Rojeena



# பல்கலைக்கழக அநுமதி

(க.பொ.த. (உ/த) 2005 பரீட்சை அடிப்படையில் தெரிவு செய்யப்பெற்றோர்)



தயானந்தன் உஷா
கலை
யாழ். பல்கலைக்கழகம்



இராசரட்ணம் கேதாரணி
கலை
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்



தம்பிப்பிள்ளை சர்மிளா
கலை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



இரத்தினசிங்கம் சிந்துஜா
கலை
பேராதனைப் பல்கலைக்கழகம்



விஸ்ணுசிங்கம் தயாளினி
கலை
யாழ். பல்கலைக்கழகம்



தங்கராசா பிரியங்கா
கலை
யாழ். பல்கலைக்கழகம்



ஆறுமுகம் வானதி
கலை
யாழ். பல்கலைக்கழகம்



சிவசுப்பிரமணியம் விஜயராகவன்
கலை
யாழ். பல்கலைக்கழகம்



மகேந்திரம் ஜெயந்தினி
கலை
யாழ். பல்கலைக்கழகம்

# பல்கலைக்கழக அநுமதி

(க.பொ.த. (உ/த) 2004 பரீட்சை அடிப்படையில் தெரிவு இடம்பெற்று 10.09.2005 இன் பின் தெரிவு செய்யப்பெற்றமையால் கடந்த சஞ்சிகையில் இடம்பெறாதோர்.)



தம்பையா மதுரா
பிரயோக விஞ்ஞானம்
வவுனியா வளாகம்



கணபதிப்பிள்ளை பிரதீபா
பிரயோக விஞ்ஞானம்
வவுனியா வளாகம்

# தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர்



த.பதுஜா
137 புள்ளிகள்



ஜெ.கிருசிகா
134 புள்ளிகள்



மா.கஜானி
134 புள்ளிகள்



கி. திவாகரன் -
129 புள்ளிகள்



கு.மயூரதி
129 புள்ளிகள்



ச. நவகீர்தன்
128 புள்ளிகள்

# கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களின் விபரம்

## (கடந்த ஒரு பதினோராண்டுகளுக்குரியது)

### க.பொ.த. (உ/த) 1995 ஆவணி

| பெயர் | கற்கைநெறி | சொந்தமுகவரி |
|---|---|---|
| 01. நளினி குமாரசாமி | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 02. மீராதேவி சின்னத்துரை | கலை | அச்சுவேலி தெற்கு |
| 03. தெய்வரதி தில்லைச்சிவலோகநாதன் | கலை | புத்தூர் மேற்கு |
| 04. தாரணி தர்மராசா | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 05. வனிதகுமாரி சிவசரணம் | கலை | மட்டுவில் |
| 06. பிறேமா ஜெகதீஸ்வரன் | கலை | புத்தூர் மேற்கு |
| 07. மேகநாதன் ஜெயந்திரபாலா | கலை | புத்தூர் கிழக்கு |
| 08. துரைராஜா மோகன்ராஜ் | கலை | புத்தூர் மேற்கு |
| 09. ரேவதி செல்வராசா | கலை | மாசிவன், நீர்வேலி |
| 10. துரைராஜா அருள்ராஜ் | பௌதிக விஞ். | புத்தூர் மேற்கு |

### க.பொ.த. (உ/த) 1996 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. நடராசா சிவதாசன் | முகாமைத்துவம் | மாசிவன்,நீர்வேலி |
| 02. கல்யாணி நவரட்ணம் | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 03. நிருபா பாலச்சந்திரன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 04. ஞானசசி தியாகராஜா | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 05. தர்மினி குமாரசாமி | வர்த்தகம் | புத்தூர் கிழக்கு |

★ *ஞானசசி தியாகராசா (4A)மாவட்ட மட்டத்தில் முதல் நிலை (Rank) பெற்றார்*

### க.பொ.த. (உ/த) 1997 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. செல்லத்துரை கிருபாகரன் (4A) | முகாமைத்துவம் | புத்தூர் மேற்கு |
| 02. மகேசன் மோகன்ராஜ் | கலை | அச்சுவேலி தெற்கு |
| 03. ஞானசுப்பிரமணியம் ஞானச்சந்திரன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 04. செல்லையா பன்னீர்ச்செல்வன் | பௌதிக விஞ். | புத்தூர் கிழக்கு |
| 05. கந்தசாமி மனோகரன் | கலை | நவக்கிரி, புத்தூர் |
| 06. கண்ணகி மயில்வாகனம் | முகாமைத்துவம் | புத்தூர் கிழக்கு |
| 07. சுகந்தினி பிள்ளையான் | கலை | சிறுப்பிட்டி தெற்கு |

## க.பொ.த. (உ/த) 1998 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. நடராசா பஞ்சசீலன் | கலை | அச்சுவேலி தெற்கு |
| 02. தெய்வேந்திரம் ஈஸ்வரன் | கலை | அச்சுவேலி தெற்கு |
| 03. கந்தசாமி ஜதீஸ்கரன் | கலை | கோணாவளை, வயாவிளான் |
| 04. காசிப்பிள்ளை வசந்தன் | பௌதிக விஞ். | சிறுப்பிட்டி வடக்கு |
| 05. பொன்னம்பலம் கேதீஸ்வரன் | கலை | சிறுப்பிட்டி கிழக்கு |
| 06. தில்லைஅம்பலவாணர் விமலன் | கலை | புத்தூர் மேற்கு |
| 07. ஆனந்தசெல்வராணி செல்லத்துரை | கலை | பத்தமேனி, அச்சுவேலி |
| 08. சத்தியரஜனி குமாரசாமி | கலை | வாதரவத்தை |
| 09. ஜலஜா தில்லைநாதன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 10. வாஹினி நாகேஸ்வரன் | கலை | புத்தூர் மேற்கு |
| 11. லலிதாராணி நாகராஜா | கலை | குட்டியப்புலம் |
| 12. கௌசலாதேவி இரட்ணம் | கலை | ஆவரங்கால் |
| 13. கௌசல்யா நடேசன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 14. சிவகௌரி சிவராஜா | கலை | புத்தூர் மேற்கு |
| 15. கஜேந்தினி நடராஜா | கலை | நெல்லியோடை,அச்சுவேலி |
| 16. அனுராதா இராமநாதன் | கலை | சிறுப்பிட்டி மத்தி |
| 17. சியாமளா கந்தையா | கலை | புத்தூர் மேற்கு |
| 18. அபிராமிதேவி ஐயாத்துரை | கலை | தோப்பு, அச்சுவேலி |
| 19. விஜயலஷ்மி ஸ்ரீபராபரன் | கலை | ஆவரங்கால் |

## க.பொ.த. (உ/த) 1999 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. சின்னராஜா பத்மதாசன் | கலை | வாதரவத்தை |
| 02. வசந்தகலா நாகேந்திரம் | கலை | வாதரவத்தை |
| 03. ஜெயசாந்தி திருநாவுக்கரசு | கலை | சிறுப்பிட்டி மத்தி |
| 04. சரவணமுத்து கருணாகரன் | கலை | நவக்கிரி |
| 05. தர்சினி சிவராஜா | கலை | ஆவரங்கால் |
| 06. தாருணி சபாரட்ணம் | கலை | சிறுப்பிட்டி மேற்கு |
| 07. கோகிலவதனி மார்க்கண்டு | கலை | புத்தூர் கிழக்கு |
| 08. சோபிதா செல்வரட்ணம் | கலை | ஆவரங்கால் |
| 09. சோபிதா நாராயணசர்மா | கலை | புத்தூர் மேற்கு |
| 10. கணேசகுலசிங்கம் துஷ்யந்தன் | பௌதிக விஞ். | அச்சுவேலி தெற்கு |

## க.பொ.த. (உ/த) 2000 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. மகேந்திரம் ஜெயந்தன் | பௌதிக விஞ். | புத்தூர் கிழக்கு |
| 02. குமரகுரு துஷ்யந்தன் | கலை | நவக்கிரி |

| | | |
|---|---|---|
| 03. விந்தியா குமாரசாமி | கலை | புத்தூர் கிழக்கு |
| 04. ரோகினி ஞானலிங்கம் | கலை | தோப்பு, அச்சுவேலி |
| 05. செந்தமிழரசி கணபுதிப்பிள்ளை | கலை | அச்சுவேலி தெற்கு |
| 06. டோசி திருச்செல்வமகாலிங்கம் | கலை | சிறுப்பிட்டி மேற்கு |
| 07. சுவிதா ஜெகசோதி | கலை | புத்தூர் கிழக்கு |
| 08. ரதிதேவி இரட்ணம் | கலை | ஆவரங்கால் |
| 09. முத்துக்குமாரசாமி திலீபன் | வர்த்தகம் | அச்சுவேலி தெற்கு |
| 10. விஜயா இராஜதுரை | கலை | புன்னாலைக்கட்டுவன் |
| 11. விஜயநந்தினி மகாலிங்கம் | கலை | ஆவரங்கால் |

### க.பொ.த. (உ/த) 2001 ஆவணி

| | | |
|---|---|---|
| 01. செல்லத்துரை வசீகரன் | கலை | நவக்கிரி, புத்தூர் |
| 02. சுபத்திரா செல்வராஜா | கலை | புத்தூர் மேற்கு |
| 03. கௌசிகா தங்கராஜா | கலை | புத்தூர் கிழக்கு |
| 04. கலைமகள் சதாசிவம் | கலை | நவக்கிரி |
| 05. உதயகுமாரி செல்வராஜா | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 06. நந்தினி தங்கராஜா | கலை | நவக்கிரி |
| 07. மகேந்திரன் செல்வேந்திரன் | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 08. காயத்திரி கந்தசாமி | கலை | ஆவரங்கால் |
| 09. தர்சினி விஸ்வநாதர் | நுண்கலை | புத்தூர் மேற்கு |

### க.பொ.த. (உ/த) 2002 சித்திரை

| | | |
|---|---|---|
| 01. விஜிதா ஜெகசோதி | கலை | புத்தூர் கிழக்கு |
| 02. ரூபநிதி முருகேசு | கலை | அச்சுவேலி |
| 03. குணராஜா முரளிதாஸ் | முகாமைத்துவம் | ஆவரங்கால் |
| 04. நடராஜா லோகிதன் | வர்த்தகம் | புத்தூர் கிழக்கு |
| 05. ஹேமகலா சிவசுப்பிரமணியம் | கலை | புத்தூர் மேற்கு |
| 06. அமிர்தநாயகம் செந்தூரன் | கலை | நவக்கிரி |
| 07. ஸ்ரீபராபரன் சிவசுந்தரம் | வர்த்தகம் | ஆவரங்கால் |
| 08. பிரபா பத்மநாதன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 09. தங்கராஜா பிரசன்னா | கலை | புத்தூர் கிழக்கு |
| 10. நளாயினி நவரத்தினம் | கலை | சிறுப்பிட்டி மேற்கு |
| 11. துரைசிங்கம் சுபேர்தன் | பௌதிக விஞ். | நீர்வேலி |
| 12. கதிர்காமு புகழேந்தி | கலை | புத்தூர் கிழக்கு |

| | | |
|---|---|---|
| 13. ஜனார்த்தனா மயில்வாகனம் (3A) | கலை | ஆவரங்கால் |
| 14. இராசு தங்கேஸ்வரன் | கலை | நவக்கிரி |

### க.பொ.த. (உ/த) 2003 சித்திரை

| | | |
|---|---|---|
| 01. த.சுகிர்தா | பௌதிக விஞ். | நவக்கிரி |
| 02. அ.அன்ரன் கமிலஸ் | கலை | அச்சுவேலி |
| 03. சி.இதயதீபன் | கலை | புத்தூர் கிழக்கு |
| 04. சி.சுதர்சினி | கலை | ஆவரங்கால் |
| 05. சி.ரவிதாசன் | கலை | வாதரவத்தை |

### க.பொ.த. (உ/த) 2004 சித்திரை

| | | |
|---|---|---|
| 01. வதனகீர்த்தனா மயில்வாகனம்(3A) | கலை | ஆவரங்கால் |
| 02. அம்பிகா தயானந்தன் | கலை | ஆவரங்கால் |
| 03. ஸ்ரீபராபரன் சிவதாஸ் | வர்த்தகம் | ஆவரங்கால் |
| 04. சிந்துஜா சின்னத்துரை | வர்த்தகம் | ஆவரங்கால் |
| 05. சிவகௌரி சிவராஜா | கலை | வாதரவத்தை |
| 06. சுகன்ஜா புலேந்திரகுமார் | நுண்கலை | சாவகச்சேரி |
| 07. விஸ்வலிங்கம் கணேசன் | கலை | சிறுப்பிட்டி மத்தி |
| 08. கீர்த்திகா நமசிவாயம் | கலை | சிறுப்பிட்டி வடக்கு |
| 09. ஜீவனா சின்னத்துரை | கலை | அச்சுவேலி |
| 10. திருவேணி கதிர்காமநாதன் | கலை | அச்சுவேலி |

★ *வதனகீர்த்தனா மயில்வாகனம் தேசிய நிலையில் 07 ஆம் இடம்பெற்றமைக்காக இலங்கை சனாதிபதியால் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டார்.*

### க.பொ.த. (உ/த) 2005 சித்திரை

| | | |
|---|---|---|
| 01. சிந்துஜா இரத்தினசிங்கம் (3A) | கலை | வாதரவத்தை |
| 02. பிரியங்கா தங்கராசா (3A) | கலை | ஆவரங்கால் |
| 03. உஷா தயானந்தன் | கலை | ஆவரங்கால் |
| 04. ஜெயந்தினி மகேந்திரம் | கலை | வாதரவத்தை |
| 05. தயாளினி விஷ்ணுசிங்கம் | கலை | நவக்கிரி |
| 06. கேதாரணி இராசரட்ணம் | கலை | புத்தூர் கிழக்கு |
| 07. வானதி ஆறுமுகம் | கலை | அச்சுவேலி |
| 08. சர்மிளா தம்பிப்பிள்ளை | கலை | சிறுப்பிட்டி மத்தி |
| 09. மதுரா தம்பையா | பிரயோக கணி. | ஆவரங்கால் |
| 10. பிரதீபா கணபதிப்பிள்ளை | பிரயோக கணி. | ஆவரங்கால் |
| 11. சிவசுப்பிரமணியம் விஜயராகவன் | கலை | புத்தூர் மேற்கு |

# Grade Five Scholars From 1995 upwards

**1995**
K. Kirija
T. Elagini
T. Teshani
T. Jananthan
P. Rohini

**1996**
S.Makilthini
T. Gunaseely
P. Krishanth

**1997**
R. Kogulnath
T. Kalpana
M. Vanathy
T. Senthan
A. Sangeetha
N. Thavaloshini

**1998**
V. Kugathalani
K. Pilatheepa
K. Shanmugapriya
P. Hamsha

**1999**
N. Kajeeparaj
G. Suganja
K. Pirathap
K. pirashanth
J. Aparna
M. Sinthuja

**2000**
N. Thenujan
V. Jeniva
S. Laxiya
V. Sinthujan

**2001**
N. Sarusan
R. Sureskumar
K. Thadsajini
B. Thanusan

**2002**
S. Navannan
J. Sasikumar
K. Thevatheesan
M. Siventhiny
N. Sumanan

**2003**
S. Narsuja
R. Pavithira
A. Tharakulan

**2005**
S. Navakirthan
M. Kajani
J. Kirushiga
K. Majurathy
T. Pathuja
K. Thivakaran

# எங்கள் அதிபர்

# திரு வயிரவநாதன் ஆறுமுகம்

- பிறப்பு : 01.11.1946 ஆவரங்கால்
- தந்தை : அமரர் ஆறுமுகம் வயிரவநாதன் (புத்தூர்)
- தாய் : அமரர் வயிரவநாதன் தெய்வானைப்பிள்ளை (ஆவரங்கால்)
- வாழ்க்கைத் துணை: திருமதி ருக்மணிதேவி ஆறுமுகம்
- ஆரம்பக்கல்வி : ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- இடைநிலைக் கல்வி : ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
- உயர் கல்வி : பேராதனைப் பல்கலைக்கழகம்
- பட்டப்பின் கல்வி : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- செய்முறை காட்டுநர் (Demonstrator) 1969 - 1970 :

  பேராதனைப் பல்கலைக் கழக பௌதிகத் துறை
- 1970 - 1972 : பட்டதாரிப் பயிலுநர்,

  வலிகிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை
- ஆசிரிய நியமனம் : 28.07.1972 நு/அல்மின்ஹஜ் மு.ம.வி., ஹப்புகஸ்தலாவ
- தொடர் கல்விச் சேவை :

  28.01.1975 - 13.06.1986: ஆசிரியர், கொழும்பு றோயல் கல்லூரி

  14.06.1986 - 19.11.1995: ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர் ஸ்ரீ.சோ.க.

  20.11.1995 - 31.10.2006: அதிபர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

## இந்து மன்றம் நடாத்திய வாணி விழா - 12.10.2005



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி சிறப்புரையாற்றுகிறார். இந்து மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவன் ஒருவருக்கு முதன்மை விருந்தினர் சைவப்புலவர் இ.செல்லத்துரை பரிசு வழங்கிக் கௌரவிக்கிறார்.

## சமய தீட்சை - 13.11.2005



சமய தீட்சை வழங்கும் வைபவம் மிக நீண்ட இடைவெளியின் பின் (1970 களின் பின்) ஸ்ரீ சோமாஸ்கந்தர் பிரார்த்தனைக் கூடத்தில் இடம்பெற்றது. 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சமயதீட்சை பெற்றனர். தீட்சா குரு சிவஸ்ரீ செ.கைலாசநாதக் குருக்கள், அதிபர், பொறுப்பாசிரியர்கள், தீட்சை பெற்றோர் இணைந்து எடுத்துக்கொண்ட படம்

## கல்லூரியின் அத்திவார நாள் நிகழ்வுகள் – 21.01.2006



கல்லூரியின் அத்திவார தினத்தில் இடம்பெற்ற பவள விழா அங்குரார்ப்பண நிகழ்வின் போது பெருமை மிகு பழைய மாணவரும் வாணாள் பேராசிரியருமாகிய வி.கே. கணேசலிங்கம் **பவளவிழாப்** பிரகடனத்தை வெளியிடுகிறார்.

## கல்லூரியின் வித்தியாரம்ப நாள் – 01.05.2006



1931 இல் கல்லூரி நிறுவப்பெற்று வித்தியாரம்பம் செய்து வைக்கப்பெற்றமையைக் கௌரவிக்கும் வித்தியாரம்ப நாள் (சித்திரை மிருகசீரிட நாள்) நிகழ்வின் போது சோமாஸ்கந்தர் பிரார்த்தனைக் கூடத்தில் பொங்கல் வைபவம் இடம்பெற்றது. சிரேஷ்ட ஆசிரியர் க.தவதாசன் பொங்கற் பானையில் அரிசியிடுகிறார். (புகைப்படக் கருவியின் வலுவின்மை காரணமாகப் படம் தெளிவில்லாமல் உள்ளது)

# All-in- one Arumugam



**Madduvil N.Manoharan.**
Former Principal of SSC
26 Allison Street, Mt,Roskill
Auckland- 1041.New Zealand

Navigating the ship of education is mostly a challenging task for school-heads in all countries, only a few emerge as unforgettable assets for successfully fulfilling the aspirations of society regarding educational institutions that invisibly mould generations and the role of school-heads involves a constant reciprocal interaction between the school and its community for a harmoniously conducive atmosphere for effective education.

This temple of learning – Sri Somaskanda – founded by Late Sri Malavarayar Kandiah, our philanthropist, has been fortunate, from its inception, to have talented tutorial staff and dedicated intellectual giants with unbiased, democratic, task oriented and active leadership, great wisdom and vision, tact and diplomacy, collectivist cultural attitudes and balanced personality, as principals for realizing and promoting the ideals of our beloved founder.

I have been very much impressed, delighted and proud that our old student, Vairavanathar Arumugam has displayed a synthesis of those good qualities while serving his old school as Principal to the entire satisfaction and admiration of all in and out the school.

I wish him all best and desirable for his retired life.

தலையைச் சொறி, நாக்கைக் கடி
பல்லை இளி, முதுகை வளை
கையைக் கட்டு, காலைச் சேர் என்ன இது?
வயிற்றைக் கேள் - சொல்லும் அது
*-கவிக்கோ அப்துல் ரஹ்மான்*

# A WELL - EARNED RETIREMENT

S.Kanagarajah
Ex. Principal



It is with exuberance of pride and pleasure I send this warm appreciation on the occasion of the retirement of Mr.Vairavanathan Arumugam under whose headship Sri Somaskanda College witnessed pristine glory and modernization.

Mr.Arumugam a trained Science Graduate entered teaching profession in 1976 and retire in November this year after successfully heading his Alma mater for a decade (1996 - 2006)

Synchronisation of Mr.Arumugam's retirment with the Platinum anniversary of his Alma mater is a rare phenomenon.

During his tenure of office a Herculean task endeavored by him was the building of the school after its displacement destruction and desolation .

Beside he put heart and soul into the development of the school. There are phenomenal improvements in physical facilities , quality of teaching meeting of deadlines and academic and non-academic performances .

His innate qualities of initiativeness , diplomacy, leadership and courage led him to brave many obstacle and run the school efficiently.

Professional democratization in the distribution of duties and responsibilities among the members of his staff characterize his school administration.

Buliding of a Hindu Temple (a brain child of the principal) within the percents of the school helps uphold Hindu tradition and heritage and provide a Hindu atmosphere for all school activities.

Mr.Arumugam's endeavour to complete the construction of "Kumarasamy Memorial Hall" to mark the platinum celebration of Sri Somaskanda college amply testifies not only his uncommon humanitarian outlook and resourcefulness but also his immaculate love and gratefulness for the founder and predecessors.

May Lord Shiva bless his devotes services to Puttur Sri Somaskanda college and community at large and grant him contentment and peace in his well-earned retired life.

# INDELIBLE MARK



**S.R.SHANMUGARATNAM**
Ex. Principal of SSC

Mr.V.Arumugam assumed duties as principal of Sri Somaskanda College on 1996. He has been principal for ten years when the development of schools in the north has to be taken with great care and precaution due to the uncertain political and military situation in the country since 1983.

He is an old student of this college, who entered the University of Peradeniya from it. He was appointed as a graduate to teach applied mathematics in 1976 at Colombo Royal College, where he taught creditably producing good results to the appreciation of the principals and parents.

In 1986 he was transferred to his alma-mater on appeal of the P.T.A Sri Somaskanda where he was appointed sectional head and deputy principal till 1996. In 1996 he was appointed principal of this college.

He has been taking systematic action to develop the school educational and sports activities and maintains a high standard in competition with leading colleges by producing good results in university entrance exams and grade5 scholarship tests besides training pupils to be "good speakers and writers'

He has organized suitable "Building projects" to commemorate the platinum anniversary of this college and honour the services of this founder and past principals late Mr S.Coomaraswamy during whose period school blossomed to a super grade college. He has also organized a series of function to celebrate the Platinum jubilee year in cooperation of the school community-via P.T.A,O.B.A,and trustees.

May his aspirations blooms a new Era and Be an INDELIBLE MARK of his service in the ansoles of schools' history.

# புத்தாக்கங்கள் பல புரிந்த முகம்

நா.கணேசபிள்ளை
முன்னாள் அதிபர்
(கனடா)



ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்னர் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் உயர் வகுப்புகளுக்கான ஒரு மிடுக்கான கணித ஆசிரியராக திரு.வ.ஆறுமுகம் அவர்களைக் கண்டேன். அன்றே என் மனதில் எங்கள் கல்லூரிக்கு ஒரு விடிவு காலம் தோன்ற ஓர் ஆசிரிய முகம் வந்துவிட்டது என எண்ணினேன். இன்று அது நிதர்சனமாகியுள்ளதை நினைத்துப் பூரிப்படைகிறேன்.

புனிதமான ஆசிரிய சேவையில் புகுந்த அந்தப் புதிய முகம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமல்லாது, மாணவர் மனங்களில் அன்றே குடிபுகுந்து விட்டது. மாணவர் மனங்களில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. அதன் விளைவு மாணவர் ஒழுக்கம், மாணவத்தலைவர் ஒருங்கிணைப்பு, எனப்பல புதிய நடைமுறை ஏற்படக் காரணமாகவிருந்தது. அந்த மாணவ ஒருங்கிணைப்பு முகம் நேரத்தோடு கல்லூரிக்கு வந்து விசேடவகுப்புகளை நடத்துவது மட்டுமல்லாது, ஏனைய அன்றாடக் கருமங்களையும் ஒருங்கு முறையில் நிர்வாகித்து வந்தமை, சில சிரேஸ்ட ஆசிரியர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியது, இதனால் விரக்தியடைந்த இவர் எனது அனுமதியுடன் தனது பொறுப்புக்களை மறுநாள் ஒருவரிடம் கையளித்தார். ஒரு நாள்கூட மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் மீண்டும் அப்பொறுப்புக்களை அவராக முன்வந்து திரு.வ.ஆறுமுகத்திடம் திரும்பவும் கையளித்தார். கல்லூரியின் செயற்பாடுகள் அனைத்திலும் இவரது திறமை துலாம்பரமாக வெளிப்பட்டது.

1987 ஆம் ஆண்டளவில் மகரகம தேசியக் கல்விக் கல்லூரியில் நான் கற்ற கல்விநிர்வாகச் செயற்பாடுகளை ஆசிரியர் குழுவிடம் எடுத்துக் கூறினேன். அப்போது இச்செயற்பாடுகள் எமது கல்லூரியில் எவ்வளவு தூரம் நிறைவேறுமோ என்று நான் தயங்கினேன். படிப்படியாக பகுதித்தலைவர் பதவியில் இருந்து உதவி அதிபர் பதவிக்கு உயர்ந்தார் உத்தமர் திரு.வ.ஆறுமுகம். இங்குதான் அவரது நிர்வாக முகம் வெளிப்பட்டு நிற்கிறது. சிலாகித்து மகிழ்ந்தேன் நான்.

கல்லூரியின் தர்மகர்த்தா சபை பெரும் அபிவிருத்தித் திட்டங்களை வேண்டி நின்ற போது, மாணவர் ஆசிரியர் பிரதிநித்துவத்தையும் உள்வாங்கிப் பல புதிய நடை

முறைகளை உட்புகுத்தியது அவரது இன்னொரு முகத் தோற்றம். அதுவிரிவடைந்து கல்லூரிச் சொத்துக்களைப் பராமரிக்கும் ஒரு முகமாக முற்போக்கான செயற்பாடுகளைக் கல்லூரியில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருவதைக் கேள்ளியுற்று வியப்படைந்தேன். பழைய மாணவராகவிருந்த திரு.வ.ஆறுமுகம் அவர்கள் அகில உலக ரீதியில் பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உதவியுடன் பல புதிய கட்டிடங்களைக் கட்டுவித்துள்ளார். கல்லூரியின் விரிவாக்கத்திற்காக காணியைக் கொள்வனவு செய்வதிலும், புதிய அரங்குளை நிர்மாணிப்பதிலும், அவரது **விரிவாக்கத்திற்கான முகம்** வெளிப்பட்டு நிற்கிறது.

கல்லூரி, பெற்றார், மாணவர், நலன் விரும்பிகள் யாவரையும் ஒருங்கிணைத்துச் செயற்படுவதில் வெற்றிகண்டுள்ளார். எமது மாணவர்கள் எட்டிய வெற்றிகள், பெறுபேறுகள் அவரது **வெற்றிமுகத்தை** வெளிக்காட்டி நிற்கிறது. ஈழத்தின் இக்கட்டான சூழலிலும் தனது சமூகப்பணிககளைச் செய்வதில் வெற்றிகண்டுள்ளார். தனது பதவிக்காலத்தில் பல சாதனைகளை நிலைநாட்டி அதிபர் பதவியில் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் வெற்றிகண்டுள்ளார். அவரது பல முகங்களையும் , சாதனைகளையும் விரிவாக எடுத்துக் கூறலாம். இருப்பினும் அவரது பெயருக்கேற்ப ஆறுமுகங்களை மட்டும் சுருக்கமாக கூறினேன்.

எமது நாட்டில் உள்ள சில பிரபல்யமான கல்லூரி அதிபர்களை அவர்களின் மகத்தான சேவையைத் தொடர்ந்து தமது கல்லூரிகளில் நிலைத்திருக்க வேண்டி, பெற்றோர் பழைய மாணவர்கள் இணைந்து அவ்வதிபர்களுக்கு விடுதி வசதி போக்குவரத்து வசதி எனப் பலவசதிகளைச் செய்கிறார்கள். ஆனால் எமது பெற்றோரும் பழைய மாணவரும் ஓய்வுபெறும் எமது அதிபருக்குஅத்தகைய உதவிகளை செய்யாவிடினும், கல்லூரியில் அவர் ஏற்படுத்திய முற்போக்கான திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவார்கள் என நம்புகிறேன். எமது அன்பிற்கும் மதிப்பிறகும் உரிய அதிபர் தனது ஓய்வு காலத்தில் தொடந்து கல்லூரிக்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்குவதற்கும், ஓய்வுகாலத்தில் சுகதேகியாக வாழ்வதற்கும் ஸ்ரீ சோமாஸ்கந்தனின் பாதங்களை வேண்டுகிறேன்.



MISS UNIVERSE **பிரபஞ்ச அழகி 2006**
இலத்தீன் அமெரிக்க நாடான போர்ட்டொ ரிக்கோவைச் சேர்ந்த ஜவுலேகா றிவேரா (Zuleyka Rivera) 2006 ஆம் ஆண்டிற்கான பிரபஞ்ச அழகியாகத் தெரிவாகியுள்ளார்.

# தன்னிகரற்ற அதிபர் ஆறுமுகம்

வே.சந்திரசேகரம்பிள்ளை J.P.
முன்னாள் அதிபர்.



இற்றைக்கு நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலில் ஓர் மாணவனாக யாழ் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் க.பொ.த ஆயத்த வகுப்பில் (G.C.E Prep) கல்வி கற்று வந்த வயிரவநாதன் ஆறுமுகம் அவர்களைச் சந்திக்கின்றேன். 1959ஆம் ஆண்டு நான் முதலில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த காலம் அது. அப்போது கல்லூரியின் அதிபராக அமரர் உயர்திரு சுப்பிரமணியம் குமாரசுவாமி அவர்கள் பணியாற்றிய காலம். கல்லூரி சகல துறைகளிலும் மேலோங்கி நின்ற காலம். நான் மாணவன் ஆறுமுகம் கற்று வந்த வகுப்பிற்கு உயிரியல் பாடம் கற்பிக்கப் பணிக்கப்பட்டேன். கற்றலில் ஊக்கம் உடையவராகவும் , நல்லொழுக்கமும் , அமைதியும் , மென்மையான சுபாவமும் உடையவராக விளங்கினார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். இதற்கேற்ப மாணவன் ஆறுமுகம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து பின்னர் க.பொ.த உயர்தர வகுப்பில் கணித விஞ்ஞானப் பிரிவில் தொடர்ந்து பயின்று பரீட்சையில் சித்தியெய்தி பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி கணித விஞ்ஞான சிறப்புப் பட்டதாரியாக பட்டம் பெற்றுக் கொண்டார். அந்தக் கால கட்டத்தில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாவோர் மிகக் குறைந்த எண்ணிக்கையாக இருந்தமையால் இவரின் தெரிவு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தது எனலாம்.

பட்டதாரியாக வெளியேறிய பின்னர் சில ஆண்டுகள் நு / அல்மினகஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் கொழும்பு றோயல் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கு பத்து ஆண்டுகள் வரை பிரயோக கணிதபாட ஆசிரியராகப் பணியாற்றி வந்துள்ளார். இலங்கையின் புகழ்பூத்த கல்லூரியாக இருப்பதால் மாணவரின் தரம் கற்றலுக்கு வேண்டிய வளங்கள், நல்ல சூழல் ஆகியவை நிலவியதால் இவரின் கற்பித்தல் நல்ல பெறுபேறுகளை மாணவர் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைந்தது. இங்கு சேவையாற்றியமையால் இவரின் ஆளுமைப் பண்புகள் வளர்ச்சி கண்டன எனலாம்.

1986ஆம் ஆண்டுப் பகுதியில் அங்கிருந்து இடமாற்றம் பெற்று யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் பதவி ஏற்றுள்ளார். அவ்வேளையில் திரு..S.R. சண்முகரத்தினம் அவர்கள் அதிபராகப் பணியாற்றி வந்தார்கள். கல்லூரியில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய துறைகளிலும் சிறிது தேக்க நிலை நிலவிய காலமது. ஆசிரியர் அறையில் சில ஆசிரியர்கள் தத்தமது கடமைகளைச் செய்யாது விலகியிருப்பதையும் வகுப்பறைகளில் ஆசிரியர் இல்லாமையால் ஒரே சத்தமும் குழப்பமுமாக இருந்த நிலையை அவதானித்த ஆசிரியர் திரு ஆறுமுகம் அவர்கள் என்னை ஆசிரியர் அறையில் அணுகி இந்த நிலைமையை நீங்களும் பார்த்துக் கொண்டா இருக்கிறீர்கள், வாருங்கள் சேர் (Sir) நாங்கள் அதிபரிடம் சென்று குறைகளை எடுத்துக் கூறி இதற்குப் பொருத்தமான பரிகாரம் தேடி கல்லூரிக்கு உதவ முன்வருவோம் என முன்வந்தார்.

திரு.ஆறுமுகம் அவர்கள் மாணவனாக இருந்த காலத்தில் திரு.S.R.சண்முகரத்தினம் அவர்களும் ஆசிரியராகப் பணி புரிந்தமையால் அவரின் ஆற்றலை நன்கு அறிந்தவராதலால் அவரின் ஆற்றலை வெளிக் கொணரும் வகையில் அவரையும் தட்டிக் கொடுத்து நாங்கள் உங்களுக்கு உறுதுணையாகவிருப்போம், நீங்கள் எல்லாத் திறமையும் உடையவர்கள், கொஞ்சம் கடும் போக்காக இருங்கள். மிகுதியை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்

என்று கூறிவைத்தார். இதன் பிரகாரம் அதிபரும் செயற்பட்டு கல்லூரிச் சமூகத்திலும் மனமாற்றம் அடையச் செய்து அதிபரையும் 1988ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை செயலாற்ற வைத்தமை திரு ஆறுமுகம் அவர்களின் திறமையான செயற்பாட்டால்தான் எனக் கூறவேண்டும். இத்தனைக்கும் இவர் ஓர் ஆசிரியராகவிருந்தார். இவரின் திறமையை மாணவர்கள் , ஆசிரியர்கள் , பாடசாலைச் சமூகம் என்பன நன்கு உணர்ந்து கொண்டனர். இதனால் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பிடித்துக் கொண்டார்.

அதிபர் சண்முகரத்தினம் காலத்தில் பகுதித் தலைவர்கள் முறை நடைமுறையில் இருந்தது. இதில் கூட திரு ஆறுமுகம் அவர்கள் இடம்பெற வாய்ப்பில்லாமல் இருந்தது. அப்போது சேவை மூப்பை அடிப்படையாக வைத்து இந்நியமனங்கள் இடம்பெற்றமையால் திரு ஆறுமுகம் அவர்கள் இடம்பெற முடியாமல் போனது. இதை நன்குணர்ந்த மூத்த ஆசிரியர் திரு. K. வினாசித்தம்பி அவர்கள் தனது பகுதித் தலைவர் பதவியை துறக்க முன்வருவதாகவும், அதனை திரு ஆறுமுகம் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்றும் அதிபரைக் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட அதிபர் அவர்கள் கல்வித் திணைக்களத்தின் ஊடாக அப்பதவியை பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத் தக்கது. இவ்வேளையில் நானும் பிரதி அதிபர்களுள் (Co-Deputy) ஒருவராக நியமனம் பெற்றுக் கொண்டேன்.

1988 - 1990 முற்பகுதிவரை திரு கணேசபிள்ளை அவர்கள் அதிபராகப் பணியாற்றி பதவியுயர்வு பெற்று உதவிக் கல்விப் பணிப்பாளராக மருதனார்மடம் கல்விக் கோட்டத்தில் இணைந்து கொண்டார். அவர்களின் இடத்திற்கு நான் அதிபராக நியமிக்கப் பட்டேன். பகுதித் தலைவராக இருந்த திரு ஆறுமுகம் அவர்கள் அவ்வாண்டு பிரதி அதிபராக நியமிக்கப் பட்டார். நான் 1995 ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றுவதற்கு உறுதுணையாக விளங்கியவர் திரு.ஆறுமுகம் ஆவார். இக்காலகட்டம் நெருக்குவாரம் காணப்பட்ட காலம். இடப்பெயர்வு காரணமாக பாடசாலையின் கட்டிடங்களில் பாதிகக்ப் பட்டவர்கள் இருந்தமை , ஒன்றுக்கு மேற்பட்ட பிற பாடசாலைகளை ஒரேநேரத்தில் வளாகத்தில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவியமை சுகாதார சீர்கேடுகள் போன்றவற்றையெல்லாம் சமாளிக்கக் கூடிய வழிவகைகளைத் தேடித் தந்தவர் திரு ஆறுமுகம் அவர்களே. இவற்றுக்கு வேறும் சில ஆசிரியர்கள் உதவியமை குறிப்பிடத் தக்கது.

புத்தூர் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக விளங்கிய சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபராகவும் புத்தூர் கொத்தணி அதிபராகவும் பணி புரிந்தேன். கொத்தணிப் பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கவனிப்பதற்காக சென்றபோதெல்லாம் பிரதி அதிபர் ஆறுமுகம் அவர்களே கல்லூரியின் செயற்பாடுகளை தனது கவனத்தில் எடுத்துக் கொண்டார். இவ்வகையில் எனக்கு பேருதவியாக விளங்கினார். மாணவர் வரவு , ஒழுக்கம் , கற்றல் செயற்பாடுகள் , பெற்றார் ஆசிரியர் தொடர்பு , பழைய மாணவர் தொடர்பு , பாடசாலை நிர்வாகம், வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களுடனான தொடர்புகள் , தர்மகர்த்தா சபைக்குரிய வளங்களின் உச்சப் பயன்பாட்டினை கல்லூரி பெற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்ற எல்லாவற்றையும் திறம்பட இயங்கவைத்த பெருமை பிரதி அதிபர் ஆறுமுகத்தையே சாரும். இவரின் இத்தகைய ஈடுபாடுகளால் அப்போது பணியாற்றிய கல்விப் பணிப்பாளர்கள் குறிப்பாக திரு. K. கந்தசாமி, திரு. இ. சிவானந்தன் ஆகியோரின் கணிப்பையும் பாராட்டுக்களையும் பெற்று விளங்கினார் என்றால் அது மிகையாகாது. ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலும் ஏன் பிரதி அதிபராக விளங்கிய காலத்திலும், அதிபராக பணியாற்றிய காலத்திலும் சரி க.பொ.த உயர்தர வகுப்புகளில் பிரயோக கணித ஆசிரியராக பணியாற்றி மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைந்தார்.

1996 ஆம் ஆண்டு வலிகாமப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற போது மீண்டும் கல்விச் செயற்பாடுகள் வழமையான வளாகத்தில் இடம்பெறலாயிற்று. அப்போது வகுப்பறைக் கட்டடங்கள் , நூல் நிலையம் , ஆய்வு கூடங்கள், தளபாடங்கள் இவையெல்லாம் பெருமளவில் பாதிப்புற்ற நிலையில் இருந்தன. இவ்வேளையில்தான் திரு ஆறுமுகம் அவர்கள் அதிபராகத் தொழிற்பட ஆரம்பித்தார். மேற்குறிப்பிட்டவற்றை நிவர்த்தி செய்யவேண்டிய உதவிகளைப் பெற்று இவைகள் சீராக்கப்பட்டன. அத்துடன் மாடிக் கட்டடம் , புதிய வகுப்பறைத் தொகுதிகள், கல்லூரியின் பிரதான மண்டபத்தின் புனரமைப்பு போன்றவையும் இடம்பெற அயராது உழைத்து வந்துள்ளார். இவ்வேளையில் வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களால் கல்லூரிக்கென தர்மசாதனம் செய்யப்பட்ட சொத் துக்களின் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். முன்னர் எந்தவோர் அதிபராலும் மேற்கொள்ளப் படாத கைங்காரியத்தை ஆற்றியுள்ளார். இவற்றுக்கெல்லாம் உறுதுணையாகவிருந்த பிரதி அதிபர் S.தர்மலிங்கம், மற்றும் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களையும் குறிப்பிட்டாக வேண்டும்.

தனது சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னராக ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக விளங்கிய அமரர் உயர்திரு. சுப்பிரமணியம் குமாரசுவாமி அவர்களின் சிறப்பான பணிகளை நினைவு கூரும் பொருட்டு குமாரசுவாமி மணிமண்டபம் அமைத்து அதில் பவளவிழா கொண்டாடவேண்டும் என்ற பேரவா கொண்டவராக கல்லூரிச் சமூகத்தின் ஏகோபித்த ஒத்தாசையைப் பெற்று மண்டபத்தின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு பூர்த்தி செய்யும் நிலையில் தற்போதைய சூழ்நிலை தடையாக அமைந்தது துர் அதிஷ்டம் எனலாம். திரு ஆறுமுகம் அவர்கள் சிறந்த பழைய மாணவராக இருப்பதால் ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரிச் சமூகத்திற்கு தலைமை தாங்கி இம்மண்டபத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து உதவுவது வேண்டத்தக்கது. இதுவே தனது ஆசானுக்குச் செய்யும் கைமாறாகும்.

திரு. ஆறுமுகம் அவர்களில் நான் அவதானித்த சில அரும்பெரும் பண்புகள் சிலவற்றைக் கூறி இதனை நிறைவு செய்ய முனைகின்றேன். அறிவாற்றல் மிக்கவர், அமைதியான போக்கு , வன்சொல் பேசாமை , நேர்மை , கண்ணியம், ஒழுக்கம் , பிறர்க்கு உதவுதல் , பிறர்மேல் அன்பு , ஆசிரியர் எவரையும் சார் (Sir) என்று அன்பாக அழைத்தல் , உயர் அதிகாரிகளுக்கு கீழ்பப்டிதல் , நினைத்தவற்றைச் சாதித்தல் , மாணவர்களிடத்து மிகுந்த அக்கறை போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் இதுவரை பணியாற்றிய அதிபர்களுள் மிக உன்னத மதிப்பினைப் பெற்று அதிபராக விளங்கியவர் அமரர் உயர்திரு சுப்பிரமணியம் குமாரசுவாமி ஆவார். இவருக்கு அடுத்தாற்போல் இடம் பிடித்தவர் அதிபர் திரு.வ. ஆறுமுகமாகத்தான் இருக்க முடியுமே தவிர வேறு யாருமில்லை என்பதே எனது கணிப்பாகும்.

அதிபர் ஆறுமுகம் 31.10.2006 இல் அகவை அறுபதை எய்துவதால் அன்று ஓய்வு பெற்றுக் கொள்ளுகிறார். இவரின் அளப்பரிய சேவையை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருத்தி அவர்களுக்கு எமது இதயம் கனிந்த இனிய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வோமாக. கல்லூரியின் மகுடத்தில் இடம் பெற்ற மணிவாசகத்திற்கு "கற்றாங்கு ஒழுகுக" (motto) அமைவாக வாழ்ந்து காட்டிவரும் அதிபரைப் போன்று கல்லூரியில் பயிலும் ஒவ்வொரு மாணவனும் திகழ வேண்டும். இவரின் ஓய்வு காலத்தில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டுகிறேன்.

வாழ்க பல்லாண்டு, ஓங்குக சோமாஸ்கந்தாவிற்கான பணி.

# A Successful Principal – Mr.V.Arumugam



Prof.V.K.Ganesalingam
Former Dean, Faculty of Science & Acting Vice-Chancellor, University of Jaffna ; Chairman, Sri Lanka Red Cross Society, Jaffna Branch

**BIRTH**

***Born in a local community absorbing the local customs , traditions and heritage, became a great gentleman , one in million.***

"He has born to share and serve and not to grab and grief."

"He has fulfilled the task of being borne in this world."

"He has achieved enough to be proud of himself."

**EDUCATION**

***Education in a school for which he became the Principal later, and the degree he earned at Peradeniya university is a prestigious one, now and then.***

"To climb up , one needs knowledge and power which he generated in plenty by himself."

"Education gave him spiritual , moral cultural and ethical values."

"Science degree gave him a gateway for better progress and prosperity."

**TEACHING**

***Royal College belongs to people of higher strata. One who studies or teaches in Royal college becomes a prominent leader in Sri Lanka.***

"The way to rise is to obey and please which he applied throughout his life."

"Growth is the only evidence of life ; he grew and grew with achievements."

"Vigor and vitality are in his blood ; action without delay is his secret weapon."

**VICE PRINCIPAL**

***The magnet of the school attracted him to serve and to make the school prominent, which he did with full force.***

"Teaching is beautiful if you love it ; he has sacrificed his life for teaching."
"He considered the students as treasurer ; next to God he loved his students most."
"By keeping the school in his heart and blood ; he was recognized as a 'hero' among all."

**PRINCIPAL**

*As a Principal , he is exemplary , took the school up and up in the ladder of prominence with his wit , wisdom and willingness.*

'As a king of the kingdom of school he achieved victory in all directions."
"Cooperation is better than conflict and prevention is better than healing , are his motto."
"Constructive thoughts , consoling words and compassionate actions are great in him."
"He talks low , talks slow and talks less ; anger is his enemy , and honesty is his policy."
"Give him the tools , he finishes the job; noting is impossible to his willing heart."
"smile and simple are his language; his effective governance gave him a public confidence."
"He sweat for the school as a leader, physically, mentally and whole heartedly."
"The prominent status of thr school is everlasting monument of his creations."

**RETIREMENT**

*His name will go in the history as a contributor towards education as a successful principal. He has a long way to service to humanity and human development. God bless him for his long life.*

"To him work is worship, duty is good; honour him whom honour is due"
"Rement is the age of recapitulation; blessed is he who lives in the heart of all."
"We are grateful to God to have given him to this school; we thank the God to have created him as a **Successful Principal**."

## கல்லூரியின் பெருமைக்கு உயிரூட்டிய அதிபரின் சேவைக்கு

# ‘சோமாஸ்கந்தன்’ சமர்ப்பணம்

கலாநிதி ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



எமது கிராமத்தின் சிறப்பை அடையாளப்படுத்தி நிற்கும் நினைவுச் சின்னங்களில் ஒன்று அமரர் கொடை வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் அமைத்து தந்த “புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி” ஆகும். அக்கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தவர்கள் அவ்வப்போது அங்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஒரு சில அதிபர்களாவர். அவர்களுள் , அமரர் சு.குமாரசுவாமி, அமரர் ச.வீரசிங்கம், திரு. பொ.கனகசாபாபதி போன்றோர் அதிபர்களாக இருந்து ஆற்றிய பணிகள் இன்றும் மக்களால் நன்றியோடு நினைவு கூரப்படுகின்றன. தற்போது அவர்களின் வழிவந்த இன்னொரு அதிபராகவே இவ்வாண்டுடன் ஓய்வு பெறும் திரு.வைரவநாதன் ஆறுமுகம் அவர்களைப் பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தில் ஒரு சில பாடசாலைகளின் பெருமையை அப்பாடசாலைகளில் கடமையாற்றிய அதிபர்களின் சாதனைகளோடு இணைத்துப் பேசப்படும் மரபு காணப்படுகிறது. எதிர்காலத்தில், சோமாஸ்கந்தக் கல்லூரியின் பெருமைக்குரிய மரபு பற்றிய பேச்சில் நினைவு கூரப்பட வேண்டிய முக்கிய அதிபர்களில் ஒருவராக நான் திரு.ஆறுமுகம் அவர்களைப் பார்க்கிறேன். ஏனெனில் ஒரு அதிபரின் சாதனை பற்றிய மதிப்பீடு என்பது அவர் அதிபராக இருந்த காலகட்டத்தில் அவரது ஆளுமைக்கும், கடின உழைப்பிற்கும், சுதந்திரமான செயற்பாட்டுக்கும் சாதகமாக இருந்த சமகால அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியில் இருந்து பார்க்கப்படுவது அவசியமாகும். அவ்வாறான சாதகமான சூழ்நிலைகள்தான் கடந்த காலங்களில் ஒரு சில அதிபர்கள் ஆற்றிய சாதனைகளுக்கு உந்து சக்தியாகவும் இருந்ததை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் 1990களின் பின்னர் தமிழர் பிராந்தியத்தில் உயர் பதவி வகிப்பதென்பது அப்பதவி வகிப்பவர் தனது ஆயுளையும், ஆளுமையையும் பரிசோதித்துப் பார்க்கும் ஆபத்து நிறைந்த தொழிலாகவே கருதினர். இத்தகைய இடர் மிகுந்த காலகட்டத்தில்தான், அதுவும் வலிகாமத்தில் உள்ள சில பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களால் கல்லூரி பல இன்னல்களை எதிர்நோக்கிய சூழ்நிலையில் திரு.ஆறுமுகம் அவர்கள் அதிபராகப் பதவியேற்று பத்து ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். இத்தகைய ஒரு சூழ்நிலையிலும் அவர் முன்னைய அதிபர்கள் சிலர் தேடிவைத்த கல்லூரியின் பெருமையைச் சிறிதும் பிசகாமல் தக்கவைத்துக் கொண்டதுடன், பலவீனப்பட்டிருந்த முன்னைய கல்லூரிச் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளித்து சமகாலச் சூழ்நிலைக்கு ஏற்ப கல்லூரியின் கற்றல் வளத்தையும், கல்வியின் தரத்தையும் உயர்த்திய சாதனையாளராகக் காணப்படுகிறார்.

திரு. ஆறுமுகம் அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக மட்டும் கடமையாற்றவில்லை. நல்லாசிரியராக, சிறந்த பகுதித் தலைவராக, பிரதி அதிபராக ஏறத்தாழ பத்து ஆண்டுகள் கடமையாற்றியவர். அவற்றின் ஊடாகப் பெற்ற அனுபவம்,

ஆற்றல், நற்பெயர் என்பன அவர் சிறந்த அதிபராக வளர்ந்ததற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

இக்கல்லூரியின் பழைய மாணவனான திரு.ஆறுமுகம் அவர்கள் தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குமாராவடிவேல் அவர்களுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு சாலை மாணவனாகக் கல்வி கற்ற பௌதீக விஞ்ஞானப் பட்டதாரி. இலங்கையின் முதன்மையான பாடசாலைகளில் ஒன்றான கொழும்பு றோயல் கல்லூரியில் பத்தாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். அக்கால கட்டத்தில் அவரின் ஆசிரிய வாண்மை, சாதனை என்ன? என்பது பற்றி நான் அறியேன். ஆனால் 1986 இல் அவர் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டமை எமது கல்லூரியின் வளர்ச்சியில் புதிய கால கட்டமாகவே பார்க்கப்படுகிறது. அன்றைய ஆசிரிய குழாம் பற்றிய பேச்சில் அவர் கல்லூரிக்கு உள்ளேயும், வெளியேயும் கவர்ச்சிமிக்க பாத்திரமாகவே திகழ்ந்தார். அவர் பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் பதவி வகித்த காலம் கல்லூரியின் வளர்ச்சியின் இன்னொரு காலகட்டமாகும். அக்காலப் பகுதியில்தான் தொய்ந்து போயிருந்த எமது கல்லூரி மாணவர்களது ஒழுக்கமும், கற்றல் செயற்பாடுகளும் புத்துயிர் பெற்றன. அக்காலப் பகுதியில் எமது குடும்ப உறவுகளுடனும், கிராமத்து மாணவர்களுடனும் கல்லூரியின் வளர்ச்சி பற்றிய உரையாடலின் போது திரு. ஆறுமுகம் அவர்களது பெயர் அடிக்கடி அச்சத்துடன் கௌரவமாக உச்சரிக்கப்பட்டதைக் காணமுடிந்தது. இதன் காரணமாக அப்போது அதிபராக இருந்தவரை நல்லவராகவும், திரு. ஆறுமுகம் அவர்களை வல்லவராகவும் மாணவர்கள் விமர்சித்த சம்பவங்களும் உண்டு. இதனால் அடுத்த அதிபராக திரு.ஆறுமுகம் அவர்களே வரவேண்டும் என்ற விருப்பம் கல்லூரி நலம் விரும்பிகளிடையே ஆழமாக வளர்ந்தது. அவ்வாறு வருவதற்கு சிலர் விடுவார்களா என்ற அச்சம் காணப்பட்டாலும் அவரே வரவேண்டும் என்ற வாஞ்சை பலரிடம் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி என எண்ணுகின்றேன். ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி விளையாட்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராக வந்த அன்றைய கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி அவர்கள் விழா முடிந்து வீடு திரும்பும் போது என்னைச் சந்தித்து நீங்கள் எல்லோரும் விரும்பியது போல் திரு. ஆறுமுகமே அடுத்த அதிபராக வரவுள்ளார். அது உங்கள் கல்லூரிக்கு நல்ல காலம்தான் எனக் கூறியது என் நினைவுக்கு வருகிறது. அவர் கூறியதில் எவ்வளவு உண்மை உண்டு என்பதை அவர் பத்தாண்டு காலம் அதுவும் ஒரு அசாதாரண சூழலில் அதிபராக இருந்த ஆற்றிய பணிகளை மதிப்பிடுவதிலிருந்து கண்டு கொள்ள முடிகிறது.

1986இல் திரு.ஆறுமுகம் அவர்கள் ஆசிரியராக இணைந்த காலத்தில் நான் கல்லூரியை விட்டு வெளியேறியிருந்ததால் அவரிடம் கல்வி கற்கவோ, நெருங்கிப் பழகவோ வாய்புக்கள் இருக்கவில்லை. ஆனால் அவர் அதிபராகப் பொறுப்பெற்ற காலத்தில் இருந்து கல்லூரியின் பழைய மாணவர்களை அரவணைந்து கல்லூரியை வளர்க்க அவர் முற்பட்டதால் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் பிரதி அதிபராக இருந்த காலம் தொட்டு தனது வாழ்க்கையை கல்லூரியின் வளர்ச்சியோடு இணைத்துக் கொண்டவர். பல

கனவுகளோடும், கற்பனைகளோடும் அதிபராகப் பொறுப்பேற்றவர். ஆயினும், கல்லூரியின் வளர்ச்சி தொடர்பான அவரது கனவுகள் அனைத்தும் பூரணமாவதற்கு நாட்டுச் சூழல் சாதகமாக இருக்கவில்லை என்ற மனக்குறை அவரிடம் இன்றும் காணப்படுகிறது. ஆனால் அவர் அதிபராக இருந்த காலத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்புக்கள் அனைத்தையும் முறையாகப் பயன்படுத்தி கல்லூரியை வளர்த்தார் என்ற மனத்திருப்தி எம் எல்லோருக்கும் உண்டு. கல்லூரியை வளர்ப்பதற்கு அவருக்கு வாய்ப்புக்கள் தேடிவந்தன எனக் கூறுவதைவிட, வாய்ப்புக்களை தேடி அவர் ஓடித்திரிந்த சம்பவங்களே அதிகம் எனக் கூறுவது பொருத்தமாகும். இதற்காக துவிச்சக்கர வண்டியிலும், உந்துருளியிலும் கல்வித் திணைக்களத்திற்கும், அரச அலுவலகங்களும் அவர் ஓடி அலைந்த சம்பவங்கள் என்நினைவில் இன்றும் உள்ளன.

ஏட்டுக் கல்வி முதல் பல்கலைக்கழகம் செல்லும் வரை சோமாஸ்கந்த கல்லூரியில் கல்வி கற்ற எனக்கு அக்கல்லூரியின் அனைத்து மூலைமுடுக்குகளும், கல்வி மூலவளங்களும் அத்துப்படி என்ற தற்பெருமை என்னிடம் இருந்ததுண்டு. ஆனால் திரு. ஆறுமுகம் அவர்கள் அதிபராக வந்த மூன்று ஆண்டுகளின் பின்னர் இந்தியாவில் இருந்து திரும்பி வந்த நான் ஒரு தடவை கல்லூரியைச் சுற்றிப் பார்த்த போது அடையாளம் காண முடியாத அளவுக்குச் சில இடங்கள் புதுமையாகக் காட்சியளித்தன. மலசல கூடம் தொட்டு முன் முகப்பு மண்டபவம் வரை அனைத்தும் புதுப் பொலிவு பெற்றுக் காணப்பட்டன. தொய்ந்து போயிருந்த மாணவ மன்றங்களும், மாணவரது ஒழுக்கமும் புத்துயிர் பெற்றன. மாணவரது பரீட்சை முடிவுகள் நம்பிக்கை தரும் வகையில் படிப்படியாக வளர்ந்தன. எனது காலத்தில் மாணவச் சிறார்களாக இருந்த பலர் கல்லூரி ஆசியர்களாகக் காணப்பட்டனர். எமது காலத்தில் கல்லூரியை அடையாளப்படுத்த வீதியோரத்தில் நாட்டப்பட்டிருந்த பெயர்ப்பலகை சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது. ஆனால் இன்று பெயர்ப் பலகை இருந்த இடமே இரண்டு மாடிக் கட்டிடமாக வளர்ந்து வருகின்றது. விட்டுப் போன பழைய மாணவர்களின் உறவுகளை வெளிநாடுகளில் தேடிக் கண்டுபிடித்து அவர்களின் நிதியுதவியோடு கல்லூரியை நவீன கால வளர்ச்சிக்கு அடியெடுத்து கொடுக்கப்பட்டிருந்தது. **கல்லூரியின் சுற்றாடலில் கிராமச் சூழல் காணப்பட்டாலும் கல்லுரிக்கு உள்ளே நகரத்தில் உள்ள பிரபல பாடசாலைக்குரிய தோற்றமும், பொலிவும், நவீன வசதிகளும் காணப்படுகின்றன.** இவ்வளர்ச்சிகளுக்கு எல்லாம் அதிபர் ஆறுமுகம் அவர்களின் ஆளுமையும், நிர்வாகத் திறனும், கடின உழைப்பும் காரணங்களாக இருந்தன என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்கும் என நான் எண்ணவில்லை.

இதனால், அதிபர் ஓய்வுபெறப் போகிறார் என்ற செய்தி எமக்கு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியா இல்லை. அவர் அறுபது வயதிலும் இருபது வயது இளைஞனாக இருந்து இக்கல்லூரிக்கு உழைத்த ஒரு பெருமகன். அவர் அறுபது வயதை எட்டியிருந்தாலும் அவரது தோற்றத்திலும், நடத்தையிலும் இளமையே இழையோடிக் காணப்படுகிறது. நிமிந்த நடை, சொல்லிலும், செயலிலும் காணப்பட்டும் தெளிவு, நேர்மை, பதவிக்குரிய கண்டிப்பு, சக ஆசிரியர்களையும், மாணவர்களையும் அரவணைக்கப் பயன்படுத்தும் புன்சிரிப்பு, பதவி நேரம் தவிர்ந்த நிலையில் பிறருடன் வயது மூப்பு பாராது, பட்டம் பதவி காணாது காட்டிய அன்பு, நல்லுறவு என்பன அவரது அடக்கமுள்ள

ஆளுமையின் கோலங்களாக இருந்தன. அவர் வல்லவர் என்பதற்கு அப்பால் கல்லூரியில் எல்லோர் மத்தியிலும் நல்லவர் என்ற பெயரைப் பெற்றவர். அவர்மீது கொண்ட பற்றின் காரணமாக அவர் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவருக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் நீண்ட காலத்திற்கு முன்னரே கருக்கொண்டு விட்டது. அதில் நானும் ஒரு பங்காளி. தற்போது பிரதி அதிபராக இருக்கும் திரு.கு. வாகீசன் அவர்கள் எம்மைச் சந்திக்கும் போதெல்லாம் அதிபரின் சேவை நலன் பாராட்டுப் பற்றியே பேசுவார். உரிய காலத்தில் அதைச் சிறப்பாகச் செய்து முடிக்க காலச் சூழல் சாதகமாக அமையவில்லை என்ற மனக்குறை எம்மிடையே உண்டு. ஆனால் அது தற்காலிமானதே. இந்நிலையில் கல்லூரியில் ஆண்டு தோறும் வெளிவரும் "சோமாஸ்கந்தன்" சஞ்சிகையை இவ்வாண்டு அதிபர் ஆறுமுகம் அவர்களின் சிறப்பு மலராக வெளியிடுவது காலத்திற்குப் பொருத்தமானதாகும். இது அதிபர் பற்றிய முன்னுரையே தவிர முடிவுரையல்ல. இதன் மூலம் அதிபர் பெருமை அடைந்தார் என்பதைவிட அதிபரால் மலருக்கு ஒரு பெருமை ஏற்பட்டதெனக் கூறுவது பொருத்தமாகும். ஆயினும் அதிபரை நேசிக்கும் எம் எல்லோருக்கும் இது மனமகிழ்வைத் தருவதாக உள்ளது.

அதிபர் ஆறுமுகம் இக்கல்லூரியின் முன்னோடி மாணவர்களில் ஒருவர். அவர் பிறப்பால் புத்தூரின் எல்லைக் கிராமமான ஆவரங்காலாக இருந்தாலும் சோமாஸ்கந்தக் கல்லூரி சம்பாதித்த கல்விப்புலத்தால் அவரை புத்தூரின் தலைமகனில் ஒருவராகப் பார்க்கிறோம். மழவராயர் கந்தையாவால் எமது ஊருக்கும், கல்லூரிக்கும் நல்ல பெயருண்டு. அதேபோல் கல்லூரியால் அவருக்கும் நற்புகழ் உண்டு. அவர் தன்னோடு தனக்குரிய பிற்கால வம்ச வரிசையை முடித்துக் கொண்டாலும், தனது நிலையான வாரிசுகளாக அறிவுப் பசியைத் தீர்க்க கல்லூரியையும், ஆன்மீகப் பசியைத் தீர்க்க சிவன் ஆலயத்தையும், வயிற்றுப் பசியைத் தீர்க்க அன்ன சத்திரத்தையும் புத்தூருக்கு விட்டுச் சென்றுள்ளார். தற்போது அவரின் உண்மையான உறவு வழிக் குடும்பங்கள் சில ஆரவாரமின்றி அடக்கத்துடன் அவரின் புகழால் பெருமைப்பட்டாலும், சுற்றி வளைத்து உறவு முறை காட்டும் பலர் அவர் புகழில் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகின்றனர். ஆனால் அமரரின் பொது நிறுவனங்கள் வளர்வதிலும், வளர்ப்பதிலும் யார் மனச் சுத்தியுடன் பங்களிப்புச் செய்கின்றனரோ அவர்கள் எல்லோரும் தன்னில் உரிமை பாராட்டலாம் என்பதற்காகவே இந்த நிறுவனங்களை மக்களுக்காக விட்டுச் சென்றுள்ளார். தற்போது அதற்கு தகுதியுள்ள ஒருவராக அதிபர் ஆறுமுகம் ஐயா காணப்படுகிறார்.

அறுபது வயதைக் காரணம் காட்டி அதிபருக்கு ஓய்வு கொடுத்திருப்பது அவரது உடல் உழைப்பிற்கு ஓய்வு கொடுப்பதாக இருக்கலாம். ஆனால் அவர் கனவிலும், நினைவிலும் இக்கல்லூரியின் வளர்ச்சியை நேசித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் அவருக்கு ஓய்வு கொடுப்பது என்பது அவர் காலத்தில் தொடக்கப்பட்ட நல்ல பணிகள் பல எதிர்காலத்தில் கெட்டுப்போய்விடும் என்ற அச்சத்தை அவருக்கு ஏற்படுத்தலாம். ஆகவே அவரது அறிவு, அனுபவம், ஆலோசனை என்பன எமது கல்லூரி வளச்சிக்கு தொடர்ந்தும் கிடைக்க வேண்டும். இதற்கு அவருக்கு நீண்ட ஆயுளையும், மன அமைதியையும் கொடுக்க இறவனைப் பிராத்திப்போமாக.

# அதிபர்கள் வரிசையில் "ஆறுமுகம்" அவர்கள்...

*க. சிவானந்தமூர்த்தி*
(கல்லூரியின் பழைய மாணவன்)
முதுநிலை விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்



அதிபர் ஆறுமுகம் ஐயாவின் பணிஓய்வினை குறித்து எழுதவேண்டும் என்று எனக்கோர் ஆதங்கம். நயந்து எழுதுதல் வியத்து எழுதுதல் என்பனவற்றைக் காட்டிலும் மதிப்பீட்டு எழுதுதல் பெருந்தும் என்பது என்நிலைப்பாடு. மழவராயர் கந்தையாவின் ஸ்தாபித நோக்கினை தெளிவுற அறிந்துகொண்டவன். அவ்வழியே நின்று பணியாற்றிய அமரர் அதிபர் சு. குமாரசுவாமியின் பணிகளை நிதர்சனமாக கண்டுகொண்டவன் என்கின்ற நிலைப்பாடும் நினைவுகளும் அதிபர் ஆறுமுகம் அவர்களின் சேவையை அமரர் சு.குமாரசுவாமியுடன் ஒப்பிட்டு அதன்வழி சோமஸ்கந்தக் கல்லூரியின் நீண்ட வளர்ச்சியில் நிறைந்த ஈடுபாடுகாட்டிய ஆதர்ச புருஷர்களின் வரிசையில் வைத்தெண்ணும் தரத்தாரோ ஆறுமுகம் அவர்கள் என்பதைஅறிவதே என் ஆதங்கம்.

அதிபருடனான என்தொடர்புகள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் செயலாளர், போசகர் , தர்மகத்தாசபை உறுப்பினர் என்ற பதவிவழித் தொடர்புகளாலும், உறவினர் என்கின்ற உரிமை வழித்தொடர்பாயும் விரிந்தன. இவ்விதமாய் விரிந்த உறவுகள் ஊடாட்டங்கள் ஊடாய் அதிபர் பற்றிய என் உசாவல் உருவாக்கம் பெறுகிறது.

உயர் வகுப்பில் பயிலும் மாணவர்களை ஒத்த தோற்றம் கொண்ட அதிபர் உடலாலும் உள்ளத்தாலும் என்றும் இளைஞனே. இந்த இளைஞனுக்கு ஏன் ஓய்வு?. ஓய்வினை உறுதிப்படுத்த உடல்வனப்போ உளவளமோ உடன்பாடாய் இல்லை. ஆக, சான்றொன்றுதான உண்டு. அதாவது பிறப்புச்சான்றிதழ் மட்டும் தான் ஓய்வுக்குரியவர் என்பதை உறுதிப்படுத்தியது. இன்றும் இனியும் ஊக்கமும் தற்துணிபும் உடல் வலிமையும் கொண்ட அதிபரது உத்தியோக நிலைப்பட்ட சேவையை கல்லூரி இழப்பது துரதிஷ்டவசமானதே.

நேரிய, நெடிய தோற்றத்தினையுடைய அதிபர் அவர்களிடம் உயர்ந்து காணப்பட்டது " நேர்மைப்பண்பே " ஆகும். இலகுவாக எவராலும் நையகப்படுத்தமுடியாத ஒன்றை இவர் லாவகமாக தன்வசப்படுத்திக் கொண்டார். இந்தப் பண்பின் பரிணமிப்பே இவரது ஆளுமையின் அதீதபாரம். இந்த நேர்மையாளன் என்கின்ற முத்திரைப்பதிவு இவரிம் அருகிய நிலையில் காணப்பெற்ற பிடிவாதப்போக்கு, சமூகமயமாதலின் பின் நிற்றல் ஆகிய எதிர்கணிய நோக்குகளையும் ஏனையோரால் ஜீரணிக்க உதவியது.

ஸ்தாபகரின் மனக்கிடக்கையே சோமாஸ்கந்தக்கல்லூரியின் அறக்கட்டளையாய் விரிந்தது. அனைவருக்கும் இலவசக்கல்வி, ஏழை மாணவர்களுக்கு போசனத்துடன் கல்வி வழங்குதல், கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்கள், சமயத்தத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த சமயவிழாக்கள், வள்ளலின் ஏனைய தர்மஸ்தாபனங்களுடன் தொடர்பைப் பேணுதல் என்கின்ற விடயங்களில் அதிபர் காட்டிய அக்கறைப்பாடு பல கஸ்டங்களுக்கிடையிலும் அவற்றை நடைமுறைப்படுத்த அவர் எடுத்த முயற்சிகளை தர்மகர்த்தா சபை உறுப்பினராக இருந்த வேளையில் நிதர்சனமாகக் கண்டேன். அறக்கட்டளை நியமங்களை மெருகூட்டி செயற்படுத்திய அதிபர் அவர்களது சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை, தொடந்தும் தொடரப்பட வேண்டியவை.

அதிபர் குமாரசுவாமி அவர்கள் கல்லூரியுடன் கொண்டிருந்த ஓர் உறவு நிலையினையே அதிபர் ஆறுமுகமும் கொண்டிருந்தார். மணமகன், மணமகள் உறவே இது. அதிபர் கல்லூரி மீது கொண்டிருந்த தீராக் காதலை ஓர் நிகழ்வின் மூலம் ஊகிக்கலாம். 15. 08. 2006 இல் தொடர் ஊரடங்கு சில மணிநேரம் மட்டும் தளர்த்தப்பட்டு மனிதர்கள் ஊசாட அனுமதிக்கப்பட்ட போது கொளுத்தும் வெயிலில் தட்டுப்பாடான பொருட்களைத்தேடி ஒவ்வொரு மனிதனும் பயத்துடனும் பதட்டத்துடனும் ஓடுகின்றான். ஆனால் அதிபர் அவர்களோ கிடைத்த இரு மணித்தியாலங்களை பயன்படுத்தி மண்ணெண்ணையுடன் வந்து கல்லூரி வளாகத்துப் பயிர்களுக்குப் பாசனம் செய்யுமாறு காவலாளியை பணித்ததோடு கல்லூரியையும் பார்வையிட்டுச் சென்றார். இந்த நிகழ்வொன்றே கல்லூரியில் அதிபர் கொண்ட காதல் சாதலற்ற சாசுவதமானதொன்று என்பதை வெளிப்படுத்தியது.

ஆறுமுகம் அவர்கள் சிறந்த ஒழுக்க சீலர் , சிறந்த ஆசிரியர், சிறந்த அதிபர், சிறந்த நிர்வாகி அவர் கால வழிநின்று மட்டும் சோமாஸ்கந்தாவிலிருந்து பிரிந்து செல்வது சோமாஸ்கந்தாவுக்கு பேரிழப்பாகும். இதனால் ஏற்படும் இடைவெளி பெருவெளியே, நிரப்புதல் கடினமானதே. அதிபர் ஆறுமுகம் ஆற்றிய பணிகள் குமாரசாமி அவர்களின் பணிகளை ஒத்தது, உயர்ந்தது.

அதிபர் அவர்கள் பணிகளால் உயர்ந்து நெஞ்சங்களில் நிலைத்து விட்டார். தொடர்ந்தும் ஆறுமுகம் ஐயா (அண்ணர்) அவர்களது சேவை சோமாஸ்கந்தக் கல்லூரி சமூகத்துக்கும், புத்தூர் வாழ்மக்களுக்கும் தடையின்றிக் கிடைக்கவேண்டும் என வேண்டுவதோடு இன்று போல் இனியும் "இளைஞனாகவே" இருக்க விசாலாட்சி உடனமர் விசுவநாத சுவாமியை பிரார்த்திக்கிறேன்.



## ஐ.நா.வின் புதிய செயலாளர் நாயகம்

ஐ.நா.வின் புதிய செயலாளர் நாயகமாக பான் கி மூன் (Ban - ki-moon) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தென் கொரிய நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சராகச் செயற்பட்டவர். இவர் ஐ.நா.வின் 8வது செயலாளர் நாயகம் என்ற பெருமையைப் பெறுகிறார். அத்துடன் இப்பதவியைப் பெறும் இரண்டாவது ஆசிய நாட்டவர்.

# சோமாஸ்கந்தமும் ஆறுமுகமும்



**தி.வேல்நம்பி**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*வணிகத்துறை*
*முகாமைக் கற்கைகள் வணிக பீடம்*
*யாழ்பல்கலைக்கழகம்*

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக விளங்கும் கல்வியானது தமிழர்களாகிய எமது வாழ்வின் சொத்தாகவும் அமைகின்றது. இத்தகைய கல்வியை ஊட்டி வளர்க்கும் பெரும்பணியில் பாடசாலைகளும் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகின்றன. ஆரம்ப , இரண்டாம் கல்வியைப் போதித்து மாணவர்களை உயர்கல்விக்குத் தயார்படுத்துவதில் பாடசாலைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்வாறு பாடசாலைகள் முதன்மையானவையாக இருப்பினும் அவற்றை நிரிவகித்து வழிநடாத்தும் தலைவர் என்ற வகையில் அதிபர்களின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. மேய்க்கப்படும் ஆணினமும், ஆடுகளும் நல்ல பயனைத் தந்துதவுமெனினும் அவை அவற்றை நெறிப்படுத்தும் ஆயனின் கையிலேயே தங்கியுள்ளது. அவ்வாறே பாடசாலைகளும் அவற்றின் பயன்களும் அதிபரின் கையிலேயே தங்கியுள்ளது.

இவ்வகையில் யாழ் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் அதிபர் "ஆறுமுகம்" அவர்களின் பங்களிப்புப் பிரதான இடத்தைப் பெறுகின்றது. கடந்த ஒரு தசாப்த காலமாகப் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திரு வயிரவநாதன் ஆறுமுகம் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியவை. ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட "ஆறுமுகம்" அவர்கள் தனது இடைநிலைக் கல்வியை ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலும், உயர்கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்று ஆசிரியர் சேவையில் பிரவேசித்த அவர்கள் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பிரயோக கணிதத்தைப் ( Applied Mathematic) சிறப்பாகப் போதித்து வந்தவர். 1976 - 1986 காலப்பகுதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1986 இல் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கு ஆசிரியராக மாற்றம் பெற்றுத் தன்விருப்போடு வந்தார். உண்மையில் கொழும்பில் சிறந்த பாடசாலையில் ஆசிரியராக இருக்கும் வாய்ப்பைப் பெற்ற எவரும் அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு விரும்பாத இக்காலகட்டத்தில் இவர் இக்கல்லூரிக்கு வருகைதந்தமை அவருக்கு இக்கல்லூரியில் இருக்கும் விசுவாசத்தையும், இங்கு சேவை செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் காட்டுகின்றது. இங்கு வருகை தந்த ஆரம்பத்திலேயே அவர் பாடசாலைச் செயற்பாடுகளில்

காட்டிய அக்கறை அப்போது இக்கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த எனக்கு நன்கு தெரியும். 1986 - 1996 காலப்பகுதியில் இக்கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் அக்காலப் பகுதியிலேயே பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் இருந்து ஆற்றிய சேவை குறிப்பிடத் தகக்து. பின்னர் 1996 - 2006 காலப்பகுதிகளில் கல்லூரியின் அதிபராக இருந்து அரும்பணியாற்றிய அவரது சேவை உண்மையில் பாராட்டுதற்குரியது.

நீண்ட காலப் பகுதியில் தூங்கிக் கிடந்த கல்லூரியைத் தட்டியெழுப்பிய பெருமை அவரைச் சார்ந்தது. நீண்ட காலமாக க.பொ.த உயர்தர வகுப்பில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்துக்குத் செல்லாத மாணவர் மத்தியில் ஒரு புதுப்பொலிவும், தெம்பும் காணப்படட்து. குறிப்பாக கணித விஞ்ஞானப் பிரிவுகள் உயிர்த் துடிப்புப் பெற்றன. பெரருத்தமான ஆசிரியர்கள் பொருத்தமான பாடங்களுக்கு இடப்பட்டு கடமையுணர்வுடன் பணிபுரியும் நிலை கட்டியெழுப்பப்பட்டது. இதன் பயனாக 1987 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லத் தொடங்கினர். இந்நிலை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து 1996 - 2006 காலப் பகுதியில் பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். 1987 இல் ஒரு மாணவன் மட்டுமே பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்றிருந்தார். இந்நிலை 1988 - 1995 காலப்பகுதிகளில் கணிசமான அளவுக்கு அதிகரித்திருந்தது. 1996/97 - 2005/06 கல்வியாண்டுக் காலப்பகுதிகளில் மொத்தம் 114 பேர் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக் கொண்டனர் எனின் அதற்கு அதிபர் அவர்களின் அயராத உழைப்பும் , வழிகாட்டலுமே காரணம் எனலாம். மேற்படி மாணவர் தொகையில் 92 பேர் கலைப்பிரிவுக்கும் , 10 பேர் வணிகத்துறைக்கும் ஏனையோர் பௌதிக விஞ்ஞான (மருத்துவம் உட்பட) ப் பிரிவுக்கும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறே க.பொ.த சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் வகுப்புக்களிலும் குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அதிபர் அவர்கள் தனது வாழ்நாளில் பெருமளவைப் பாடசாலையிலேயே செலவு செய்திருக்கின்றார். பாடசாலையில்லாத நாட்களிலும் கூட பாடசாலையில் இருந்து பல்வேறு கடமைகளைப் புரியும் அவர் சதா கல்லூரியின் வளர்ச்சியைப்பற்றியே சிந்திப்பார். பாடசாலை அபிவிருத்தித்திட்டங்கள், விளையாட்டு, தமிழ்விழா, திருக்குறள் மையம் அமைத்தல், பழைய மாணவர்சங்கம் என்று பல விடயங்களிலும் அவர் காட்டிய அக்கறையும். பங்களிப்பும் உண்மையிலேயே ஒரு அதிபர் காட்டியிருக்க வேண்டிதிலும் கூடியதாகவே இருந்தது எனலாம். இறுதிக்காலங்களில் பாடசாலையின் பவள ஆண்டை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக அவர் எடுத்த முயற்சிகள் அளப்பரியன. குறிப்பாக கலையரங்கம்

(Auditorium) கட்ட அவர் எடுத்த முயற்சிகளும் ஊரூராக மக்ககளிடம் சென்று அவர்களைப் பாடசாலையோடு ஒன்றிணைத்த செயலும் பாராட்டுதற்குரியது. இதற்காக அவர் தனது சொந்தப்பணத்தைக் கூடச் செலவு செய்திருக்கின்றார். ஆயினும் நாட்டுச் சூழல் காரணமாக பவளவிழாவை நினைத்தது போன்று கொண்டாட முடியவில்லை. எனினும் அம்முயற்ச்சிகள் மெதுவாக நடந்து ஒரு நிலையை அடைந்திருக்கின்றன. சுருக்கமாகக் கூறின் அல்லும் பகலும் பாடசாலைக்காகத் தன்னை அர்பணித்துப் பாடசாலையின் வளர்ச்சியில் மகிழ்ச்சி பெற்றவர். அப்படிப்பட்ட தன்னலமற்ற ஒருவர் இளைப்பாறிச் செல்வதென்பது உண்மையில் நமக்கு ஒரு பேரிழப்புத்தான். இருந்த போதிலும் அவர் இளைப்பாறிய பின்னும் தனது பங்களிப்பை இக்கல்லூரிக்குத் தத்துவுவார் என்பது நம்பிக்கை

இவ்வாறு கட்டியெழுப்பட்டு ஒரு உயர்வான நிலையில் வைக்கப்பட்ட கல்லூரியின் நிர்வாககத்தைத் தாங்கி நடக்க வேண்டியது உண்மையில் அடுத்து வரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்வரும்பிகள் அனைவரினதும் கடமையாகும் எனக் கூறி இதுவரை சேவையாற்றி இளைப்பாறும் திருவாளர் வ.ஆறுமுகம் அவர்களை வாழ்த்தி அவர் மேலும் பலசிறப்புக்களுடன் நீடுழி வாழ இறைவனை வேண்டிப் பிராத்திப்போமாக.

## 10 வது சார்க் விளையாட்டுப் போட்டி

★ *10 வது சார்க் விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் நடைபெற்றன.*

★ *இம் முறை நடைபெற்ற போட்டிக்கான சின்னம் - போர்த் தேங்காய் வீரன், காட்டுக்கோழி. (போர்த்தேங்காய் இலங்கையின் கிராமிய விளையாட்டு, காட்டுக்கோழி இலங்கையின் தேசியப் பறவை)*

★ *இதற்கு முன்னர் 1991 இல் சார்க் நாடுகளின் விளையாட்டுப் போட்டி* SAF Games *என்ற பெயரில் கொழும்பில் இடம்பெற்றிருந்தன. அது 5 வது போட்டி ஆகும்.*

★ *இவ்வாண்டு இடம்பெற்ற போட்டியில் 8 நாடுகள் பங்கேற்றன. இதில் இந்தியா 118 தங்கப்பதக்கங்களையும் பாகிஸ்தான் 43 தங்கப் பதக்கங்களையும் இலங்கை 37 தங்கப்பதக்கங்களையும் பெற்றன.*

★ *இவ்வாண்டுப் போட்டியில் இலங்கையின் தங்கப் பெண்* (Golden girl) *எனப் புகழாரம் சூட்டப்பட்டவர் - மயூமி றகீம்.(17 வயது)*
*இவர் நீச்சல் போட்டியில் 10பதக்கங்கள் பெற்றார். அதில் 3 தங்கப்பதக்கங்கள்*

# ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்



அ.க.த. கிருஸ்ணராசா J.P
ஓய்வு பெற்ற கிராம அலுவலர்.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி தனது 75 ஆவது ஆண்டு பூர்த்தியான பவளவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இவ்வாண்டு ஆரம்பம் முதல் பவள விழா நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இறுதி நிகழ்வுகள் நிறுவுநர் நினைவு நாளில் கொண்டாட ஏற்பாடாகியிருந்தது. அவசரகால நிலைமை , ஊரடங்குச்சட்டம் போன்ற போர்க்காலச் சூழல் காரணமாக இவற்றில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. அமரர் அதிபர் சு.குமாரசுவாமி மணிமண்டபம், வள்ளுவர் சிலை, திருக்குறள் மையம் ஆகியவற்றின் திறப்புவிழாக்கள் இறுதிநாள் நிகழ்வுகளாக நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இவ்வேளையில் இவற்றின் அடிநாதமாக இருந்து இயங்கிய அதிபர் வ. ஆறுமுகம் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லவிருப்பது காலத்தின் கட்டாயம். கல்லூரிச் சமூகத்திற்கு இது ஓர் நெருடலான செய்தியாகும்.

சோமாஸ்கந்த அன்னை இதுவரை பல அதிபர்களைக் கண்டிருக்கின்றாள். தன் மைந்தர்கள் பலரை ஆசிரியர்களாக தன்னகத்தே கொண்டு மகிழ்ந்திருக்கின்றாள். புகழ்பெற்ற நிர்வாகிகள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், படைப்பாளிகள், பல்துறை விற்பன்னர்கள், துறவிகள் எனப் பல்துறை சார்ந்த பெருமக்களை உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இந்த வரிசையில் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் வ.ஆறுமுகம் அவர்களுக்குத் தனியிடம் உண்டு.

இக்கல்லூரி அன்னை கண்ட பல்வேறு அதிபர்களுக்கும் தனித்தனி முத்திரை இருந்திருக்கலாம். கல்லூரி நிறுவுநர் மழவராயர் கந்தையா வள்ளலாரின் மூன்று அறக்கொடைகள் தொடர்பான அறக்கட்டளைகளின் உள்ளார்ந்த உணர்வுகளை, நோக்கங்களை நடைமுறையில் ஒருங்கிணைத்து, நெறிப்படுத்தி வளம்பெருக்கி, கல்லூரியின் வளர்ச்சிக்கு திசைதிருப்பி, பாரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்தி கல்வியின் நோக்கங்கள் மேம்பாடடைய உழைத்த உத்தமர் அமரர் அதிபர் சு.குமாரசுவாமி அவர்கள் இக்கல்லூரியில் பதினேழு ஆண்டுகள் அதிபராக இருந்திருக்கிறார். இக்காலம் இக்கல்லூரியின் பொற்காலம் என போற்றப் படுகின்றது. இதனால் கல்லூரி அன்னை வளமும் வனப்பும் அழகும் பொலிவும் பெற்று என்றும் இளமை குன்றா கன்னியாகத் திகழ்கிறாள்.

*"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவுஅறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற"*

என வள்ளுவம் பேசும் பல மைந்தர்களைக் கொண்டது இக்கல்லூரி அன்னை தன் மைந்தன் ஒருவர் அதிபராக அமர்ந்து பணியாற்றும் பேற்றினை அதிபர்.வ.ஆறுமுகம் அவர்களுக்கு வழங்கி ஈன்றபொழுதின் பெரிது உவக்கும் நிலைப்பேற்றினைப் பெற்றவள்

கல்லூரி அன்னை. இக்கல்லூரியின் வரலாற்றில் பழையமாணவர் ஒருவர் அதிபராக இருந்த பெருநிகழ்வு அதிபர்.வ.ஆறுமுகம் அவர்களுடன்தான் ஆரம்பமாகிறது.

அமரர் அதிபர் சு.குமாரசுவாமி அவர்களின் மாணவர்களில் ஒருவர் அதிபர் வ.ஆறுமுகம் அவர்கள். ஒரு நன்மாணவனிடம் குருவின் பாதிப்பு அதிகம் காணப்படும் என்று சொல்வார்கள். இத்துடன் இருவருக்கும் இயல்பாகவே அமையப்பெற்ற சில ஒற்றுமைகளும் உண்டு. அதிபர் குமாரசுவாமி வி.எஸ்.எஸ்.கே சுருட்டை அசைபோடுவதைத் தவிர!.

அமரர் அதிபர் சு.குமாரசுவாமி அவர்கள் தமது ஒரே மகளான கமலாவை அவரது சிறுவயதிலேயே இழந்தவர். அதிபர் வ.ஆறுமுகம் அவர்களுக்கு இறைவன் அப்பேற்றைக் கொடுக்கவில்லை. இருவரும் இல்லறத் துறவிகள். பற்றற்றான் பற்றினைப் பற்றிக்கொள்ளும் நிலையில் இவர்கள் இருவரது பற்றும் நடமாடும் தெய்வங்கள் பால் திரும்பியதில் வியப்பொன்றுமில்லை. பல்லாயிரம் குழந்தைகள் அரவணைப்பைத் தமதுமுழுநேரப் பணியாகக் கொண்டிருந்தார்கள். கண்டிப்பில் பிதாவாகவும் அன்பைச் சொரிந்து அரவணைப்பதில் அன்னையாகவும் திகழ்ந்தார்கள்.

அமரர் அதிபர் சு.குமாரசுவாமி அவர்கள் இக்கல்லூரியில் பதினேழு ஆண்டுகள் அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். இக்காலங்களில் ஒரு நாள்கூட விடுப்பில் நிற்காது விடுமுறைக் காலங்களையும் கல்லூரியில் கல்லூரிக்காகச் செலவழித்தவர் என்று புகழாரஞ் சூட்டப்பட்டவர். அதிபர் வ.ஆறுமுகம் அவர்கள் சிறிது உடை மாற்ற மாலையில் வீடு சென்று அதிகாலையில் உணவருந்தாமலேயே கல்லூரிக்கு வந்துவிடுவார் என்று கல்லூரிச் சமூகம் விதந்து பேசுகிறது. ஓர் அதிகாலையில் நான் அவர் வீடு சென்றிருந்தேன். அவர் அங்கு இல்லை. இதனை அவர் துணைவியாரின் வாயினால் குறைபாடாகவே கேட்டிருக்கின்றேன்.

அமரர் அதிபர் சு. குமாரசுவாமி அவர்கள் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த ஆங்கில வித்தியால்யத்தின் அதிபராகப் பொறுப்பேற்றபோது மழவராயர் கந்தையா வள்ளலாரின் அறக்கொடைகள் மூன்றும் பெரிதாக இணைந்து செயற்பட்டதாக இல்லை. இதற்கான அறக்கட்டளைகளைப் புரிந்துகொண்ட அதிபர் இதன் தர்மகர்த்தாக்களின் ஒத்துழைப்புடன் இணைந்த சேவைக்கான திட்டங்கள் மூலம் நிறுவுநரின் உணர்வுகளுக்கும் நோக்கங் களுக்கும் வடிகால் அமைத்தார்கள். இதனால் இவ்வித்தியாலயம் சிறிது காலத்திலேயே இப்பகுதியின் முதல்தரக் கல்லூரி என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டது. கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களின் போது இக்கல்லூரி பௌதிக ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அதிபர் வ.ஆறுமுகம் அவர்கள் புனருத்தாரணம், புனர் நிர்மாணம் மூலம் இப்பாதிப்புக்களுக்கு தீர்வு கண்டமை அவர் பல்வேறு தரப்பினரையும் ஒன்று சேர்த்து எடுத்த ஒருங்கிணைப்பு முயற்சியே காரணமாகும். தமது சக மாணவர்கள் , கல்லூரியின் பழைய மாணவர்கள் , தம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் எனப் பலர் வெளிநாடுகளிலும் உள்நாட்டில் உயர் பதவிகளில் இருந்தார்கள். நல்ல கல்லூரிச்

சமூகம் கிடைத்தது. இதற்கு மேலாக தர்மகர்த்தா சபையின் பிரதிநிதிகள் இனத்தவர், நண்பர்கள் என்ற நெருக்க உறவும் இருந்தது. தொண்டு நிறுவனங்கள் கைகொடுக்க நண்பர்கள் வழிசமைத்தார்கள். ஒத்துழைப்புக்கள் , சிபார்சுகள், நிதிகள், அறிமுகங்கள் பௌதிக வளர்ச்சிக்கு கைகொடுத்தது.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த ஆங்கில வித்தியாலயம் அமைப்பதற்கான நாற்சாரம் கொண்ட பாரிய நீள அகலம் கொண்ட கட்டடம் அக்காலத்தில் மழவராயர் கந்தையா வள்ளராலால் அமைக்கப்பட்டது. இதற்கான நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நம்நாடு அந்நிய ஆட்சியிலிருந்த அக்காலத்தில் ஆங்கிலேய கல்வி அதிகாரி ஒருவர் நிறுவுநருக்கு கட்டடம் சம்பந்தமான சில ஆலோசனைகள் வழங்க முன்வந்தார். இலவசக் கல்வியை இலவச மதிய போசனத்துடன் வழங்கிய இலங்கையின் முதல் பாடசாலையின் நிறுவுநர் ஆங்கிலேய கல்வியதிகாரியின் ஆலோசனையை முகத்திலடித்தாற்போல் நிராகரித்து விட்டார். ஆனால் சமகாலத்திலும் பின்னரும் ஆரம்பிக்கப் பட்ட பாடசாலைக் கட்டடங்களோடு ஒப்பிடுகையில் தொழில் நுட்பம் நிறைந்த, உயர்ந்த தரம் மிக்க மூலப் பொருட்கள் கொண்டு அமைக்கப் பட்ட தொலைநோக்கங் கொண்ட பாரிய கட்டடம், கடந்த வன்செயலின் போது பாதிப்புக் குள்ளானது. பாரிய பாலைத் தீராந்திகள் பரப்பி இணைப்பில்லா பனைமரங்கள் பரப்பி ஓட்டினால் வேயப்பட்ட நாற்சார மண்டபம். கூரையில் எதுவித பாதிப்பு மாற்றமும் இல்லாமல் சுண்ணாம்புக்குப் பதிலாக சீமெந்து தூண்களால் சுவர்கள் எழுப்பி ஆரம்பகால அமைப்பில் எதுவித பாதிப்பும் இல்லாமல் புனரமைப்புச் செய்யப் பட்டிருக்கின்றது. இது மழவராயர் கந்தையா வள்ளலார் கோட்டமாகவே திகழப் போகிறது. இது ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் வ.ஆறுமுகம் அவர்கள் காலத்துப் பணிகளில் விதந்து பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதிபர் வ.ஆறுமுகம் அவர்களின் பணிகளில் சிலவற்றையே தொட்டுக் காட்டியிருக்கின்றேன். ஏனையவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன. அதிபர் வ.ஆறுமுகம் அவர்களின் குணம், பண்பு, குடும்பம், பொதுவாழ்வு, கல்விச் சேவை, வாழ்க்கை நெறி எதையும் குறித்து எழுதுவதை வேண்டுமென்றே தவிர்த்துள்ளேன். எனது நெருங்கிய உறவினர் பற்றிய இத்தகைய செய்திகளை பிறர்மூலம் அறிந்துகொள்வதே சிறப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

அறுபது வயது பூர்த்தி பெரிய முதுமைக்குரியதல்ல. ஓய்வு பாடசாலைக் கடமைகளுக்கே. இப்பொழுது சுதந்திர மனிதனாக நம் மக்களுக்கும் நாட்டுக்கும் சேவையாற்ற முழுநேர வாய்ப்பேற்பட்டுள்ளது. இனிமேல்தான் வயது எண்ணப்பட வேண்டும். அதிபர் அவர்கள் தமது துறைசார்ந்த நூல்கள் சிலவற்றை வெளியிட்டிருக்கலாம். இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இது எனது ஆதங்கம்.

அவர் பல்லாண்டு வாழ இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# கனவிலும் நனவிலும் கல்லூரி பற்றியே சிந்திப்பவர்



க.இராசதுரை
செயலாளர்,
பழையமாணவர் சங்கம்
(தாய்ச் சங்கம்)

இன்று, பிறர்நலம் கருதி செயற்படும் மனப்பாங்கு , பொதுநலம் கருதும் பண்பு , பொது நோக்கு என்பன மக்களிடையேயருகி வருகின்றன. இற்றைக்கு 70 வருடங்களுக்கு முன்பு புத்தூர் என்னும் அழகிய கிராமத்தில் அவதரித்த மழவராயர் கந்தையா என்னும் வள்ளல் தன்னிடமிருந்த பெரும் செல்வத்தை பேரறிவால் சரியாக பயன்படுத்தி உலகின் தேடற்கரிய பொருளாம் கல்வியை வழங்க ஒரு கல்விக் கூடத்தை உருவாக்கி

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு"*

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப சேவை செய்து ஏழைக்கு எழுத்தறிவிப் பதனால் வரும் கோடி புண்ணியத்தைச் சம்பாதித்தார். இக்கல்விப் பணி , இடையூறின்றி தடையின்றி நடைபெறத் தேவையான செல்வத்தையும் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்விக் கூடத்தின் மேல் விட்டுச் சென்றார். இவர் ஆரம்பித்த பணியைச் சிறப்புற நிறைவேற்றியவர்களுள் தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் காலம்சென்ற சு.குமாரசுவாமி அவர்கள் ஆவார். அவருக்குப் பின் கடமையாற்றிய அதிபர்களும் கல்லூரியின் வளர்ச்சியில் அதிக பங்கு எடுத்தவராயினும் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இவ்வருடம் 31.10.2006ம் திகதி முதல் இளைப்பாறிச் செல்லவிருக்கும் திரு.வ.ஆறுமுகம் அவர்களாவர்.

இவர் எனது அயல் கிராமமான ஆவரங்காலில் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தார். இவர் என்னிலும் வயதில் இளையவராயினும் எமது சோமாஸ்கந்தக் கல்லூரியிலேயே சம காலத்தில் கற்றவராதலால் இவரைச் சிறுவயது முதல் நன்கறிவேன். அவரது பெற்றோரைப் போல மிகவும் அமைதியும், பண்பும் மட்டுமன்றி ஆற்றலுடையவராகவும் காணப்பட்டார். கல்வி கற்ற காலப்பகுதியில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கினார்.

நானும் இக்கல்லூரியின் பழைய மாணவனாக இருந்த போதிலும் எனது கடமையின் தன்மை, வெளிமாவட்டங்களில் அமைந்த சேவை போன்ற வசதியீனங்களினால் கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளில் எவ்வித ஈடுபாட்டையும் காட்டாது இருந்த ஒருவன். நான் எனது நீண்டகால வெளி மாவட்ட சேவையை முடித்துக் கொண்டதன் பின்னர் இங்கு

கடமையாற்றிய போதும் இதற்கென ஒருசில மணி நேரத்தைக்கூட ஒதுக்காதிருந்தவன். இந்நிலையில்தான் திரு.ஆறுமுகம் என்னை நேரில் வந்து சந்தித்து கல்லூரியின் வளர்ச்சியில் நாம் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பங்கை உணரச் செய்தவர். என்னைப் போல் இன்னும் எத்தனையோ பலரை தானே சென்று சந்தித்து தனது பண்புடைமையால் தன்பால் ஈர்த்து கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபடச் செய்தவர். எங்கெங்கிருந்தெல்லாம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்களிப்பைப் பெற முடியுமோ அங்கங்கிருந்தெல்லாம் அவற்றைப் பெற்றவர், பெற்றுக் கொண்டிருப்பவர்.

இவரது காலப் பகுதியில் ஏற்பட்ட கல்வி மற்றும் பௌதிக வளர்ச்சிகளைப் பட்டியலிடலாம். பல்கலைக்கழக புகுமுகத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கையிலும், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு பல்கலைக்கழகத்திற்கு புகுந்தவர்களிற்கு கொடுக்கப்படும் ஊக்குவிப்புத் தொகை, கல்வியில் பின்தங்கிய மாணவர்களிற்கான விசேட வகுப்புக்களும், கற்கை நெறிகளும் குறிப்பிடத் தக்கவையாகும். விளையாட்டிலும் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் பெற்ற வெற்றிகளின் பின்னணியிலும் அதிபர் கடுமையாக உழைத்திருக்கிறார். பௌதிக மாற்றங்களில் புதிய காணி கொள்வனவு , புதிய கட்டடங்கள், பேணப்படவேண்டிய பழைய கட்டடங்களின் பழமை சிதையாது புதுப்பித்தல் , புதிய கோவிலை அமைத்தல் இன்னும் சொல்லப் போனால் காலம்சென்ற குமாரசுவாமி அதிபருக்காக எழுப்பப் படுகின்ற நினைவு மண்டபம் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். நினைவிலும் கனவிலும் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து செயலாற்றியவர் இளைப்பாறிச் செல்லும் திரு.வ.ஆறுமுகம் என்றால் அது மிகையாகாது.

ஒருமுறை அவருடன் உரையாடும் போது இப்படி ஒரு வினாவை எழுப்பினேன். அதாவது "நீங்கள் தொடங்கி வைத்த இவ்வேலைத் திட்டங்களின் நிறைவேற்றத்திற்கு உங்களுடைய இளைப்பாறலின் பின் தொய்வேற்படாதா?" எனக் கேட்டேன். அதற்கு அவர் "அப்படி எதனையும் விட்டுவிட முடியாது" என்றார். "எப்படி?" என்றேன். "தொடர்ந்தும் பழையமாணவன் என்ற வகையில், பழையமாணவர் சங்கத்தினூடாகவும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினூடாகவும் அழுத்தம் கொடுக்க வேண்டிய விதத்தில் அதனைப் பிரயோகித்து நிறைவேற்றியே தீருவேன்" என்றார். இதிலிருந்து அவர் ஆரம்பம் முதலே எவ்வளவு தூரம் அர்ப்பணிப்புடனும் உள்ளுணர்வுடனும் செயலாற்றி வந்திருக்கிறார் என்பதையும் உணரமுடியும். அதுமட்டுமன்றி தனது இறுதி மூச்சுவரை பாடசாலைக்கென தனது சேவையை ஆற்றுவதே தனது பிறவியின் நோக்கமென்பதைக் கருத்திற் கொண்டுள்ளார் என்பதையும் நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவருடைய இளைப்பாறலுக்கு பின்னான வாழ்க்கை அமைதியானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைய மனமுவந்து வாழ்த்துவதுடன் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கான அவருடைய முயற்சிகள் யாவற்றிலும் நானும் எனது பங்களிப்பை வழங்குவேன் என்பதையும் உறுதிபட இந் நயப்புரையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



## மாணவர் கௌரவிப்பு
07.10.2005

க.பொ.த. (உ/த) பரீட்சை 2005 இல் 3A சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வொன்றை சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையினர் மேற்கொண்ட போது வங்கி முகாமையாளர் பிரம்ம ஸ்ரீ ச.சுந்தரேஸ் வரன் மாணவி செல்வி இ.சிந்துஜாவைக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் மாணவி செல்வி த.பிரியங்காவைக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்

## ஆசிரியர் தினம் - 07.10.2005

ஆசிரியர் தின விழாவின் போது நிகழ்விற்குத் தலைமை தாங்கிய கிராம சேவகர் லயன் க.ஸ்ரீஸ்கந்தராஜா உரையாற்றுவதை மேலுள்ள படத்திலும் கல்லூரி ஆசிரியர்களான செல்வி இ. தர்ஷினி, திருமதி மே.பிலிப் தம்பிராஜா, திருமதி ச. வேல்முருகன், திருமதி செ. கனகசபாபதி, திரு பேர்னாட் மகேந்திரன், திரு க. தவதாசன் ஆகியோர் இணைந்து ஆசிரியர் கீதம் பாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (சர்வதேச ஆசிரியர் தினமாகக் கொள்ளப்பெறும் 05.10.2005 அன்று தமிழர் தாயகப் பகுதி ஆசிரியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டமையால் இந்நிகழ்வு பிறிதொரு தினத்தில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.)



## தரம் 01 மாணவர்களுக்கான கால்கோள் விழா - 19.01.2006



தரம் 01 மாணவர்களுக்கான கால்கோள் விழாவின் போது தரம் 01 இல் அனுமதி பெற்ற 120 மாணவர்களை தரம் 02 மாணவர்கள் பூஞ்செண்டு கொடுத்து வாழ்த்தி வரவேற்கின்றனர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் பிரம்மஸ்ரீ ச.சுந்தரேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.




கால் கோள் விழாவின் போது தரம் 02 மாணவர்கள் நிகழ்த்திய ‘அபிநயப் பாடல்’ - கலை நிகழ்வின் போதான ஒரு காட்சி

# இவரது சேவைக்காலம் கல்லூரியின் பொற்காலம்

வே.தருமலிங்கம்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



யாழ்ப்பாணச் சொத்தாக கருதும், கல்வியின் சரிவு பற்றி மனங்கலங்கும் கல்விமான்களின், எண்ணங்களில், இன்றைய மாணவச்சமுதாயம் தொலைக்காட்சியிலும், வீண்பொழுது போக்குகளிலும் திசைமாறிச் செல்லும் நிலையில் மாணவருக்காக தம்மை முற்றாக அர்ப்பணித்து முழுநேரமாகப் பாடசாலை நிர்வாகத்தைப் பற்றி சிந்தித்து செயலாற்றும் அதிபர்கள் வரிசையில் இடம்பெறுபவர் திருவாளர் வயிரவநாதன் ஆறுமுகம் ஆவார்.

இவரின் காலத்தில் கல்லூரி சகலதுறைகளிலும் அரியபெரிய சாதனைகளை கண்டுள்ளது. மாணவர்களின் கல்விநிலை தொடரபாக பெற்றோரை அழைத்து கலந்துரையாடும் போதும் கூட பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் தெரியப்படுத்துவதுடன் அவர்களின் அரிய நல்ல கருத்துக்களையும் கேட்டு அதற்கேற்ப சிறந்த முறையில் பாடசாலையை நிர்வகிக்கும் பெருமை ஓய்வு பெறும் அதிபர் அவர்களையே சாரும். அத்துடன் கல்லூரி மாணவச் செல்வங்களை பிள்ளையாய் கண்டு, அவர்கள் தவறிழைக்கும்போது தந்தைபோல் கண்டித்து, ஆசிரியர்களை நண்பர்களாக அன்புகாட்டி பாடசலையையே ஆலயம் எனக்கொண்ட பெருமகன். இப்படியான பெருமைகளைக் கொண்டவர் கல்லூரியில் இரு தசாப்த காலமாக அளப்பரிய சேவையாற்றி, கல்லூரியின் பெருமைமிக்க வளர்ச்சிக்கு மிகுந்த உதவி புரிந்து ஓய்வு பெற்றுச்செல்லும் அவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மனதாரப் பாராட்டுகிறது. இவர் பணிசெய்த காலம் கல்லூரியின் பொற்காலமாகும்.

சகல வளங்களையும் கொண்ட கல்லூரியாக இப்பாடசாலையை உயர்நிலைக்கு கொண்டுவர உழைத்த திருவாளர் வயிரவநாதன் ஆறுமுகம் அவர்களை வாழ்த்துவதோடு அவர் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் இக்கல்லூரி சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டுமென இறைவனை பிரார்த்தனை செய்வதுடன் எங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திருவாளர் வயிரவநாதன் ஆறுமுகம் அவர்களுக்கு என்றென்றும் நன்றி கூறிக்கொண்டேயிருக்கும்.

# பலர் வியக்கும் முகம் ..... ஆசான் ஆறுமுகம்




**தூ.ந.பஞ்சாட்சரம்**
**ஆசிரியன்**
**நீர்வேலி**


சகல ஆளுமையுள்ள ஒருவருக்கு for a plus personality ஓர் அசல் ஆசாற்கு, கல்லூரி முதல்வருக்கு , சொல் ஓவியம் மூலம் அன்னவரை உருவடிக்கும் ஆற்றல் எனக்கில்லை. என் பேனாவிற்குமில்லை!. ஆயினும் கல்லூரிச் சமூகம் வேண்டியமைக்கிணங்க என் உணர்ச்சி மிகு பணிவான பாராட்டினை நன்றி உணர்வுடன் எழுத விளைகின்றேன் !

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் முதல்வர் ஸ்ரீமான் வயிரவநாதன் ஆறுமுகம் ஓர் கனதியான பாத்திரம் ; எம் பெருமைக்குரிய முகம் ; பலர் நயந்த; நயக்கும் முகம் ; அழகு நிலா குளிர் முகம் ; சிறப்புக்குரிய ஆழ்ந்த புலமை மிக்க முகம் ; சாதனைகள் பலதினை சோதனைகள் மத்தியில் புரிந்த ஆற்றல் உடைய முகம் ; பேராசான் ஒருவருக்குரிய அணிகலன்கள் அனைத்தும் நிறைந்த முகம் ! இத்துணை முகங்களும் இயல்பாய் உடையவரே அதிபர் பெருமகனார் ஸ்ரீமான் ஆறுமுகம் !

இலங்கைப் பல்கலைக்கழக சிறப்புத்தர , கணித-விஞ்ஞானப் பட்டதாரியாய், நாட்டின் புகழ் பூத்த கொழும்பு றோயல் கல்லூரியில் தம் ஆசிரியப் பணியை ஒரு தசாப்தம் ஆற்றிய சிறப்பும் கணித பாடத்தை மாணவர்கள் கசப்பின்றிக் கற்கும் வகையில் போதித்த திறனையும் , நாம் அவரை நன்கு அறிய முன்னரே , அவர் மாணவர்கள் , ஆசிரிய நண்பர்கள் மூலம் அறிந்த சிறப்பும் அவர்க்கேயுரியது ! பகலவன் ஒளியை மறைக்கவோ மறுக்கவோ முடியுமா ?

றோயல் கல்லூரியிலிருந்து தாம் கல்வி கற்ற கல்லூரிக்கு மாற்றலாகி வந்தவர் கணித ஆசானாய் , பகுதித் தலைவனாய், துணை முதல்வராய் , ஈற்றில் பத்தாண்டுகளுக்கு மேல் கல்லூரி முதல்வராய் , தம்பணியைத் திறம்பட ஆற்றி , கல்லூரியின் வளர்ச்சி , விரிவாக்கம் , மற்றும் வேண்டிய பணிகளில் அவர் ஆற்றிய மகத்தான தொண்டினைச் சகலரும் அறிவர் ; நாம் கூறவேண்டியதில்லை !

யாழ் கல்வி வலயத்தில் முன்வரிசையிலுள்ள முதல்வர்களில் சிறப்புடன் விளங்கிப் பலரின் மதிப்பினைப் பெற்றவர் ஸ்ரீமான் ஆறுமுகம் எனத் தரமுடைய பலரின் கணிப்பைப் பெற்ற பேற்றுக்குரியவர். அவர் அர்ப்பணிப்புடனும் திரிகரண சுத்தியுடனும் கல்லூரிக்காற்றிய சேவையே அதன் பெருமையைக் கூறும் ஞாபகார்த்த சின்னமாகும். ஆங்கில மகாகவி சேக்ஸ்பியர் (Shakespeare) பற்றி அன்னவர் அன்பர் பென் ஜோன்சன் (Ben Jonson)

கூறிய " THOU ART A MONUMENT WITHOUT A TOMB , THOU ART ALIVE STILL ..............." என்ற கூற்று ஒரு சிலரின் வாழ்க்கையின் சிறப்பினை என்றுமே எடுத்தியம்பும் வேதவாக்கெனலாம் ! முதல்வர் ஆறுமுகத்தாருக்கும் இக் கூற்று மிகப் பொருத்தமாகவே அமைகின்றது !

அதிபர் பெருமகனார் ஸ்ரீமான் ஆறுமுகம் அவர்களைப் பாராட்டும் இவ்வேளை , அவர் போன்று அவர்க்கு முன்னர் கல்லூரிக்கு அரும்பணியாற்றிய இருவரை நாம் நினைவு கூரல் சாலச்சிறந்ததாகும். அவ்விருவரில் ஒருவரே அச்சுவேலியூர் அமரர் ஸ்ரீமான் சங்கரப்பிள்ளை வீரசிங்கமாவார். அன்னார் தாம் ஓய்வு பெறும் வேளை தானே சுண்டிப்பார்த்து தெரிவு செய்யப்பட்டவரே பருத்தித்துறை – தம்பசிட்டியை உறைவிடமாகக் கொண்ட ஸ்ரீமான் சுப்பிரமணியம் குமாரசுவாமியாவார். அவ்விருவரின் காலத்திற்குப் பின்னர் தொய்வு கண்ட பள்ளிக்குப் புத்துயிர் நல்கி இன்றைய பூரண பொலிவிற்கு அரும்பணியாற்றிய சிறப்பு இப்பாராட்டு விழாவுக்கு நாயகராய் - வாழையடி வாழையாய் வந்த ஆறுமுகனாருக்கேயுரியது என நன்றியறிவுடன் கூறுவோமாக !

நிற்க : ஸ்ரீ சோமாஸ்கந்தாவே நாட்டில் இலவசக் கல்வி புகுத்தப்படு முன்னர் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே ஆங்கிலக்கல்வியை இலவசமாக வழங்கிய சிறப்பிற்குரியது! அச்சிறப்பான பணிக்கு மூலகாரணனாயிருந்தவர் அதன் அறக்கொடை வள்ளலே. அது ஸ்தாபகரின் வித்தியா தர்மத்திற்கோர் எடுத்துக் காட்டாகும்.

இன்றைய அரசு அனுபவம் , ஆற்றல் மிக்க அரச பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதினை அறுபதிலிருந்து அறுபத்தைந்து வரை நீடிக்க தன் விருப்பத்தை தெரிவித்துள்ளது. இது போற்றப்பட வேண்டிய செயலாகும். இது நடைமுறைக்கு வரின், கல்லூரியின் நலன் கருதி முதல்வர் ஸ்ரீமான் ஆறுமுகம் அவர்களின் சேவை நீடிப்பிற்கு – அவர் விரும்பின் - ஆவன செய்தல் கல்லூரிச் சமூகத்தின் தலையாய பணி எனக் கூறி – கீர்த்தி மிகு அதிபர் ஸ்ரீமான் வயிரமுத்து ஆறுமுகம் அவர்கள் ஆனைமுகன் , ஆறுமுகன் , அம்பிகை பொன்னம்பலவனின் அருள் , ஆசி சிறக்கப் பெற்றுக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை அவர் கண்குளிரக் காண இறையருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து , இப்பாராட்டுரையை முடிவு செய்கின்றேன் ! வணக்கம் !

செழிப்புடன் கல்லூரிச் சமூகம் வளர்க !
வளம்பல காண்க ! கற்றாங்கு ஒழுகுக !



## உலக அழகி - 2006

2006 ஆம் ஆண்டிற்கான உலக அழகியாக (Miss World) செக் குடியரசைச் சேர்ந்த 18 வயதுப் பள்ளி மாணவியான **ரரானா குஷொரோவா** (Tatana Kushorova) தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலக அழகிக்கான தெரிவுப் போட்டி போலந்து நாட்டில் இவ்வாண்டின் ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெற்றது

# பணியாளனைப் பாராட்டுவோம்...

திரு சி.மகேஸ்வரதாஸ்.
தலைவர்
கோப்பாய்கோட்ட அதிபர்கள் சங்கம்.



*இதனை இதனால் இவன் முடிப்பன் என்றாய்ந்து*
*அதனை அவன் கண்விடல்*

என்ற வள்ளுவர் வாக்கு பொய்க்காமல் காப்பவர்கள் வரிசையில் அதிபர் ஆறுமுகம் அவர்களும் ஒருவர் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. நல் ஆசானாக, உபஅதிபராக, அதிபராக படிமான வளர்ச்சி பெற்று சமுதாய மேம்பாட்டு விருத்திக்கு தன்னை அர்ப்பணம் செய்தவர் இவர். இவரது அறிவியல் சார் சிந்தனைகள் நல்நோக்கங்களை வென்றெடுக்கும் ஒரு சக்தியாக அமைதல் கண்டு நாம் வியந்த வேளைகள் பலவுண்டு.

ஆசிரியராக இருந்து அதிபராக பொறுப்பேற்றவேளை ஒரு சிறந்த கணித ஆசானின் பணியை இழக்கப்போகின்றோம் என்ற வினா எல்லோர் மனதிலும் எழுந்ததுண்டு ஆனால், அதிபராக இருந்த வேளைகளிலும் தன் கற்பித்தற் பணியை எந்தவிதமான தொய்வுகளும் ஏற்படாது தொடர்ந்த தன்மை அவரது தனித்துவமான செயல் என்பதைக் கண்டோம். எந்த வேலைகளைச் செய்யும்போதும் அதிபர் என்ற தோரணையில் என்றுமே அவர் உத்தரவுகள் பிறப்பித்தது இல்லை. தானும் ஒருவராக நின்று செயற்படும் தன்மை அவரது தனித்துவமான தன்மையாகும். எளிமையான தோற்றம், கண்ணியம் நிறைந்த மனப்பாங்கு அவரது உயர் குணங்களுக்கு சான்று பகரும் அணிகலன்களாகும்.

ஒரு இக்கட்டான காலகட்டத்தில் தனது பணியைப் பொறுப்பேற்ற அதிபர் அவர்கள் பாடசாலையை உயர்த்திச் சென்ற பாங்கும், உரிய காலங்களில் எடுத்த காத்திரமான முடிவுகளும் பாடசாலை வளர்ச்சியில் அவர் கொண்ட அக்கறைகளும் போற்றத்தக்கவை என்பதை நாம் அறிவோம். கோப்பாய் கோட்ட அதிபர் சங்கத்தின் முதலாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டு தனது பதவிக் காலத்தில் அவர் எம்மைக் கட்டியணைத்து செய்த பணிகள் அளப்பரியன. தலைவர் என்பதை வெளிக்காட்டாமல் தலைமைத்துவத்தை வழங்கும் நுட்பம் இவரது தனிச்சிறப்பான அம்சமாகும். தற்போதும் எமது சங்கத்திற்கு தக்க நேரத்தில் தகுந்த ஆலோசனை வழங்குவதில் அவர் பின்னிற்பதில்லை. இப் பணிக்காகவும் அவரை பாராட்டப்படவேண்டிய வேளை இது. புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் ஸ்தாபகர் அவர்களின் நோக்கம் நிறைவேற உழைத்த ஒரு பெருமகனின் தலைமையை இழக்கப்போகின்றோம் என்ற எண்ணம் எல்லோர் இதயத்திலும் தாக்கத்தை உண்டு பண்ணுவதை உணர முடிகிறது.

ஆவணப்படுத்தலின்றியே இவர் பெயர் என்றென்றும் இந்த மண்ணில் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. பெயருக்கு ஏற்றாற் போல் இருந்த இடத்தில் இருந்தே எத்திக்கும் நோக்கும் இவர் என்றும் ஆறுமுகம் தான்...............

# சேவையால் உயர்ந்த உன்னத மனிதர்



த.நடராசா
செயலாளர்.
வலி கிழக்கு பிரதேச சபை
தலைமை அலுவலகம், புத்தூர்.

ஆறுமுகம் சிறப்பு மலராக வெளிவருகின்ற "சோமாஸ்கந்தன் 2006" சஞ்சிகையில் எனது பெரு மதிப்புக்குரிய அதிபர். திரு. ஆறுமுகம் அவர்களைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சோமாஸ்கந்தாவின் பழைய மாணவன் என்கின்ற ரீதியில் அதிபர் அவர்களுடன், அவர்கள் அதிபராகப் பணியேற்ற பின்னரே அதிகம் பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

எளிமையான உடை , அவசரமற்ற மென்மையான நடை , எந்நேரமும் ஒரு புன்முறுவல், எல்லோரிடமும் நட்புரிமையுடன் பழகும் பண்பு , தெளிவான சிந்தனைகள் , கருணையுள்ளம் - இவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றதே திரு.வ.ஆறுமுகம் அவர்களது தோற்றம்.

தன்னை இத்தகைய நிலைக்கு கொண்டுவந்த, தான் படித்த பாடசாலையிலேயே ஆசிரியராக , பகுதித் தலைவராக , பிரதி அதிபராக , அதிபராக பணியாற்றுகின்ற ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதனை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட அவர் தனது பணியை ஒரு தெய்வீகப் பணியாகக் கருதி "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கீதையின் வாக்கியத்திற்கேற்ப தனது பாடசாலையை சகல துறைகளிலும் சகல வளங்களிலும் முன்னேற்றுவதற்கு மிகவும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் இரவு பகலாகப் பாடுபட்டவர். தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை கல்லூரிப் பணிகளுக்கே அர்ப்பணித்ததுடன் கல்விச் சேவையிலும் மூன்றில் இரண்டு பகுதி காலம் சோமாஸ்கந்தாவிலேயே கடமையாற்றியவர்.

பாடசாலைப் பணிகளுக்கேற்ப கடமையைச் செய்யும் கல்விச் சமூகத்திலிருந்து வேறுபட்டவர். பாடசாலை நாட்கள் என்றால் என்ன, விடுமுறை நாட்கள் என்றால் என்ன, சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரையும் பாடசாலையில் மட்டும் சந்திக்கக் கூடிய ஒருவராக மற்றையவர்களிடமிருந்து வேறுபட்டு விளங்கியவர்.

திரு.வ.ஆறுமுகம் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணிதப் பாடத்தினை மிகவும் எளிமையான முறையிலும் திறமையான முறையிலும் அவர்களுக்கு இலகுவாக விளங்கக் கூடிய வகையிலும்

கற்பித்து மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதில் அளப்பரிய பங்காற்றினார். அதன் பலனாக அவரது மாணவர்கள் பலர் இன்று பல்வேறு துறைகளில் பல்வேறு பெரும் பதவிகளில் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அவ்வாறே பகுதித் தலைவராக கடமையாற்றிய காலத்தில் மாணவர்களின் ஒழுக்கம் , விழுமியங்கள், கட்டுக்கோப்பு என்பனவற்றில் அதிக அக்கறை செலுத்தி பாடசாலை பற்றி சமுதாயத்தின் மத்தியில் பெரு மதிப்பு ஏற்படுவதற்கு ஆணிவேராகத் திகழ்ந்தவர். அதிபராகப் பதவியேற்றது முதல் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவது மட்டுமன்றி பாடசாலையின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டவர். அதன் பலனாக இன்று சோமாஸ்கந்தக் கல்லூரியானது அனைவரையும் வியக்க வைக்கும் வகையிலும் கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலும் மிகவும் பிரமாண்டமாகவும் அழகாகவும் காட்சியளிப்பதைக் காணலாம்.

இவர் அதிபராகப் பதவி வகித்த காலம் இக் கல்லூரி வரலாற்றின் பொற்காலம் ஆகும். இந்நிலையை கல்லூரி அடைவதற்கு அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. பாடசாலையின் ஒவ்வொரு சுவரும் அவரின் கதை சொல்லும். அந்தளவிற்கு கல்லூரிக்குள் ஊறியவர். அவரது செயற்பாடுகள் அனைத்தும் பாடசாலையை மையமாகக் கொண்டே இடம்பெற்றது. எப்போதும் கல்லூரி வளர்ச்சி பற்றிய சிந்தனையிலேயே இருப்பார். முகமன் சலுகைகளுக்காக தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ளாதவர்.

அகவை அறுபதை அதிபர் அவர்கள் அடைந்துவிட்டார் என்பதனை ஆண்டுதான் கூறுகின்றதேயொழிய அவர்களது செயற்பாடுகளில் எதுவித மாறற்த்தையும் காணமுடியவில்லை.

அதிபர் அவர்களது ஓய்வுக்காலம் சிறந்த முறையில் உடல் உள ஆரோக்கியத்துடன் கழியவும் தொடர்ந்தும் பாடசாலைக்கு தனது சேவையைத் தொடரவும் எல்லாம் வல்ல புத்தூர் சிவன் பாதம் வேண்டுகின்றேன்.



### சமாதானத்திற்கான
## நோபல் பரிசு - 2006

சமாதானத்திற்கான நோபல் பரிசை இவ்வாண்டில் பேராசிரியர் முகமட் யூனுஸ் (Muhammad Yunus) அவர்களும் அவரால் அமைக்கப்பெற்ற கிராமிய வங்கியும் (Grameen Bank) பெற்றுக் கொள்கின்றனர். பங்களாதேசத்தைச் சேர்ந்த முகமட் யூனுஸ் பொருளாதார பேராசிரியர். Micro credit என்ற சிறு கடன் திட்டத்தின் மூலம் வறுமைப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார். இன்று இத்திட்டம் உலகளாவிய ரீதியில் பிரபலமடைந்துள்ளது.

# தோன்றிற் புகழொடு தோன்றுக

க.சண்முகலிங்கம்,
முகாமையாளர்,
மக்கள் வங்கி, அச்சுவேலி.



யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றான புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி சைவப் பிள்ளைகள் சைவப் பாரம்பரியச் சூழலில் கல்வி பயில வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமானின் அறப்பணியினை அடியொற்றி 1931ஆம் ஆண்டு கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களால் நிறுவப்பட்டது.

75 வருடங்களாக இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த அதிபர்களில் தற்போதைய அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்களின் பங்கு அளப்பரியதாக இருக்கின்றது.
கடந்த சில ஆண்டுகளாக யாழ் மாவட்டக் கல்வி வளர்ச்சியினை போர் நடவடிக்கைகள் கல்வி பொருளாதார தடைகள் என்ற பல காரணிகள் பாதித்த போதும் அதிபர் அவர்கள் தனது முகாமைத்துவ ஆற்றலினால் கல்லூரியின் கல்வித் தரத்தை உயர் நிலைக்கு கொண்டு வந்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம் முழுவதும் பரந்து காணப்படும் கல்லூரியின் அறச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்து வள்ளலாரின் கனவுகளை நனவாக்கிக் கொள்வதில் பெரும்பங்காற்றிக் கொண்டு இருக்கின்றார்.

வள்ளலார் மழவராயரின் அபிலாசைக்கு ஏற்ப 63 நாயன்மாரது குருபூசைத் தினங்களையும் எங்கும் இல்லாதவாறு சிறப்பாக நிகழ்த்தி சைவசமய விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த அயராது உழைத்து வருவதோடு கல்லூரியில் திருவாசக விழாவும் நடைபெற வழிகாட்டியுள்ளார்.

தனது திறமையாலும் உழைப்பினாலும் பாடசாலை சமூகத்தினதும் , கிராமத்தவரதும் மதிப்பை பெற்றவர். வனப்பு மிகு கட்டடங்கள் செழுமை பெற்றிருக்கும் பாடசாலையின் எழுச்சிக்கும் , புகழுக்கும் காரணகர்த்தாவாக இருப்பதோடு , தனித்து கல்வியினை மட்டுமன்றி ஏனைய கல்விசாரா நடவடிக் கைகளிலும் இக்கல்லூரி முன்னிலையில் திகழ்வதற்கு தனது பங்களிப்பை செய்து வருகின்றார். அந்த வகையில் மக்கள் வங்கியினால் பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப் படுத்தப்பட்ட மாணவர் சேமிப்பு கணக்கை இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி மாணவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு சகல வழிகளிலும் எமது அச்சுவேலி மக்கள் வங்கிக்கு உதவியமையால் இக்கல்லூரி மாணவர்கள் பல இலட்சம் ரூபாவை சேமித்துக் கொள்வதற்கு வழிகாட்டியாக திகழ்ந்துள்ளார்.

**“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”**

என்ற பொய்யா மொழியை மெய்ப்பிப்பதாக தனது சேவைக் காலத்தில் பல சாதனைகளை செய்து புகழ் பெற்ற அதிபரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

அதிபர் அவர்களின் பணியும் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் கிராம வளர்ச்சிக்கும் சிறந்த முறையில் பயன்படும் என்பது திண்ணம். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் நலத்துடன் வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# சேவை நயந்து சிலவரிகள்

திரு.த.பரமேஸ்வரன்
ஓய்வு பெற்ற ஆசிரியர்.



"எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

எனும் கூற்றிற்கமைய தான் எண்ணியவற்றையெல்லாம் திறம்பட நெறிப்படுத்திச் செயற்படுத்திய யாழ் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இன்றைய தலைமகன் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் 31.10.2006 அன்று தன் அகவையில் வைரவிழாவைக் கண்டு இளைப்பாறுகின்றார். இச்சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியில் இருபத்தேழு வருடங்கள் ஆறு அதிபர்களின் கீழ் கடமையாற்றிய நான் தற்போதைய அதிபர் திருவாளர் ஆறுமுகம் அவர்களின் கீழ் பதினாறு ஆண்டுகள் பணியாற்றியவன் என்ற தகைமையில் அவர் சேவை மீது நயந்த சிலவற்றை எழுதுவதில் பெருமையடைகின்றேன். அதுமட்டுமன்றி வருடாந்தம் கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களின் நினைவுநாளில் வெளியிடப்பட்டுவரும் கல்லூரிச் சஞ்சிகை சோமாஸ்கந்தன் இம்முறை "ஆறுமுகம் சிறப்பு மலராக" மலர்கின்ற பொழுது அதனுடைய ஓர் அங்கத்தில் நானும் ஒரு வண்ணத்தை வரைந்து வைப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

வடநிலத்தில் புத்திஜீவிகளை உருவாக்கிய கல்லூரிகளில் எமது கல்லூரிக்கும் சிறப்பான பங்குண்டு. இதனை மெய்ப்பிக்கும் காட்டியாக இருப்பது எமது பழைய மாணவர்களாகும். இத்தகு சிறப்பு மிக்க மாணவர்களை உருவாக்கித் தமிழ்கூறு உலகுக்கு நல்கிய பெருமை அதிபர்களாக இருந்தவர்களையே சாரும். அத்தகைய புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் ஒரு பழைய மாணவன் இருந்து ஓய்வு பெறுகின்ற பொழுது சொல்வதற்கு ஏராளம் உள்ளன.

திரு.வ.ஆறுமுகம் அவர்கள் இக்கல்லூரியிலேயே கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கையினைச் சிறப்புச் சித்தியுடன் முடித்த மிகச் சிறந்த கணித ஆசிரியர் என்ற பெருமையுடனும், மிக்க கௌரவத்துடனும் கொழும்பு றோயல் கல்லூரியில் தன் சேவையை ஆரம்பித்தார். தன்னை உருவாக்கிய கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர் முன்னேற்றத்துக்கும் தன்னை உவந்தளிக்க எண்ணிய இவர் தலைநகரின் தலைசிறந்த கல்லூரியுடனிருந்த வசதி வாய்ப்புக்களை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாது எமது கல்லூரியில் ஓர் ஆசிரியராக இணைந்து கொண்டார். அன்று தொட்டு அவர் இக்கல்லூரியை வளம்படுத்துவதிலும் மாணவர்க்கு உகந்த முறையில் கல்வியறிவூட்டலை மேம்படுத்துவதிலும் தனது சொல் செயல் சிந்தனை அனைத்தையும் ஒருமுகப் படுத்தி தன்னை முழுமையாக ஈடுபடுத்தத் தொடங்கினார். இவருடைய செயற்பாடுகளுக்கு பாடசாலைச் சமூகத்தால் மிகுந்த எதிர்பார்ப்புடன் கூடிய வரவேற்பும், ஒத்துழைப்புமே பின்னர் இவர் சிறந்த அதிபராக மிளிர்வதற்கு கால்கோளிட்டது.

இவர் முன்னாளதிபர் திரு.வ.சந்திரசேகரம்பிள்ளை அவர்களின் கீழ் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டிருந்த பொழுது நாமெல்லாம் இடம்பெயர நேரிட்டது. இக்கட்டான இக்கால

கட்டத்தில் என்றுமில்லாத பல பிரச்சினைகளின் மத்தியில் எமது கல்லூரி மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் இயங்கவைக்கப் பட்டிருந்தது. அங்கு வைத்துத் தான் இவருக்கு அதிபர் பொறுப்பு வழங்கப்பட்டது. எத்தகைய சூழலிலும் அவர் தியான சிந்தையும் திடசங்கற்பமும் அசைக்க முடியாத மனவுறுதியும் கொண்டிருந்த காரணத்தினாலேயே அவர் மீண்டும் வந்து பல்வேறு வழிகளிலும் விடாமுயற்சி மேற்கொண்டு கல்லூரிக்கிருந்த பழைய நற்பெயரை வெகுவாகக் கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது. உதாரணமாக ஊருக்கு வந்தபொழுது அரைவாசிக்கு மேல் கட்டடங்கள் இல்லை, தளபாடங்கள் இல்லை, நூலகத்திலோ ஆய்வு கூடத்திலோ எதுவுமில்லை என்ற நிலைமையே காணப்பட்டது. ஆயினும் அதிபர் தன் தனித்துவத்தினால் இழப்புக்களை ஈடு செய்ததுடன் இழந்தவற்றுக்கு மேலாக புதிய புதிய பல கட்டடங்களையும் நவீன வசதி வாய்ப்புக்களுடன் கூடிய சிறந்த விளையாட்டு மைதானத்தையும் ஏற்படுத்தி கல்லூரி தலை நிமிர்ந்து நிற்க வழிவகுத்தார்.

எனக்கு எனது தொழிலடிப்படையில் இது நான்காவது நிலையமாக இருந்த போதிலும் மிக நீண்டகால "இருப்பும்" இங்குதான் இடம்பெற்றுள்ளது. இக்காலத்தில் பல்வேறு பாடசாலைகளுக்கும் நான் சென்றுள்ளேன். ஆனால் இங்குதான் அதிபர் பாடசாலையில் , பாடசாலை நாட்களில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் தொடர்ந்திருப்பதோடு சனி, ஞாயிறு மற்றும் விடுதலை நாட்களிலும் கூட கடமையாற்றிக் கொண்டிருப்பதை கண்டிருக்கின்றேன். அதிபர் இவ்வாறு வந்து நிற்கின்ற பொழுது அவருடன் கல்வி பயின்றவர்கள் , பழைய மாணவர்கள் , பெற்றோர் , பழையமாணவரது பெற்றோர் என பாடசாலைச் சமூகத்தினருடன் ஓர் இடையறாத தொடர்பைக் கொண்டிருந்தார்.

அவர் காலையில் கல்லூரிக்கு வந்ததும் நேரே சோமாஸ்கந்தப் பெருமானிடம் சென்று முதலில் அவரைத் தரிசித்துவிட்டு உயர்தர மணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்கத் தொடங்குவார். பாடசாலை நேரம் அண்மித்ததும் அதிபராக தனது கடமைகளைத் தொடங்குவார். இவரது தொழிற்பாடுகளைப் பார்த்து ஆசிரியர்களும் விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பர். இதைத் தான் கண்டுகொண்டமைக்கு அறிகுறியாக ஒரு புன்முறுவல் உதிர்ப்பதோடு தொடர்ந்து தம் பணியை முன்னெடுப்பது அவரது தனிச்சிறப்பாகும்.

துடிப்புடன் செயலாற்றும் தன்மை நெகிழ்வுப் போக்கு ஒருவரை விரைவாக கணிப்பிடுதல் பிரச்சனைக்குரியவர்களை தம்பக்கம் ஈர்த்து தீர்ப்பிடும் பண்பு விமர்சனங் களையும் மாற்றுக் கருத்துக்களையும் தனக்கேயுரிய தனித்துவத்துடன் கேட்டு முடிவுகளை எடுக்கும் திறன் முதலான குணங்கள் இவருக்கு தனித்துவத்தை வழங்குகின்றன.

இவர் தனது கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமன்றி வேறு மாணவர்களுக்கும் கணித அறிவு புகட்டி வந்திருக்கின்றார். இவரிடம் கற்று பொறியியலாளர்களாக வந்தவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் புரியும் பலருடைய பெற்றோர் என்னிடம் வந்து (அவரைக் கண்டு பேசிப் பழகாதவர்கள் கூட) "சிவன் கோவில் ஒழுங்கைக்குள்ள இருக்கும் மாஸ்டர்- உங்கட அதிபர் சுகமாக இருக்கிறாரே! அவரிட்ட படிச்சுத் தான் என்ர மகன் எஞ்சினியராக இருக்கிறான்" என்று கூறக் கேட்ட சந்தர்ப்பங்கள் பல உள. இது ஒரு ஆசிரியனுக்குக் கிடைக்கும் உயரிய பரிசும், அவனது பணிக்குக் கிடைத்த வெற்றியும் ஆகும். இது எமது அதிபருக்கு என்றும் இருக்கும்.

எமது கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் திரு.வ.ஆறுமுகம் அவர்களும் பிரகாசித்து ஓய்வு பெறுகின்ற போதிலும் அவருடைய பங்கும் பணியும் எமது கல்லூரிக்கு என்றும் இருக்க வேண்டும் .

# கல்லூரிக்கோர் பாரி..



## திரு. க.சுப்பிரமணியம்
*முன்னாள் பிரதி அதிபர்*

நயப்புரை வழங்குதல், சேவைநலம் பாராட்டு விழாக்கள் நடாத்துதல் பிரிவுபசாரம் என்பவை இன்றைய காலகட்டத்தில் வழமையாகிவிட்ட ஒன்று. அவர் எப்படிப் பட்டவர், எத்தகையவர் என்றில்லாது எல்லோருக்கும் செய்யும் நிகழ்வாகி விட்டது. இதை எண்ணும்போது எனக்கு இரட்டைப் புலவர்களின் ஒன்றும் கொடாதானை "கோ" என்றும், "கா" என்றும் பாடின் என்ற பாட்டின் அடிகள் தான் நினைவுக்கு வருகின்றது. அந்தவகையில் திரு ஆறுமுகம் அதிபரையும் சேர்க்க வேண்டி உள்ளதே என்று மனம் சஞ்சலப்படுகின்றது. இருந்தும் காலத்தின் தேவைக்கு பணிந்துபோக வேண்டியுள்ளது. திரு. ஆறுமுகம் அவர்களின் பண்புகள் , பழக்கவழக்கங்கள், நடத்தைகள் என்பன சில சொற்களால் எடுத்து இயம்பக் கூடியவை அல்ல. இறை அன்பு, காதல் உணர்வு இவற்றை எவ்வாறு அனுபவ ரீதியாக உணர்ந்து கொள்ளலாமோ அதுபோல் திரு ஆறுமுகம் அவர்களின் நற்பண்புகளை சேர்ந்து பழகும் போதுதான் உணர்ந்து கொள்ள முடியும்.

இப்பாடசாலையில் எத்தனையோ அதிபர்கள் அரும்பெரும் சேவையாற்றி இருக்கின்றார்கள். அது பெரிதல்ல. ஆனால் 1986ஆம் ஆண்டு திரு. ஆறுமுகம் அவர்கள் சாதாரண ஆசிரியராக கடமையாற்ற வந்த வேளையில் பாடசாலை இருந்த நிலையை இப்பொழுது எண்ணிப் பார்க்கின்றேன். நாட்டில் தோன்றிய அசாதாரண நிலை மற்றும் பாடசாலைக்கு உள்ளே, வெளியே உள்ள நிலை. இச்சூழ்நிலையில் அவர் என்னுடன் முதல் பேசிய வார்த்தை "நாங்கள் இப்பாடசாலைக்கு ஏதாவது செய்ய வேண்டும்" என்பது எனக்கு இப்பொழுதும் நினைவில் இருக்கின்றது. அன்று தொடங்கிய பணியில் அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள், அர்ப்பணிப்புக்கள் என்பவை என்னைப் போன்ற ஒருசிலருக்குத் தான் தெரியும்.

- 15 ஆசிரியர்களுக்கு மேல் ஆசிரிய பற்றாக்குறை , தளபாட பற்றாக்குறை,
- இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் குறைபாடு. இச்சந்தர்ப்பத்தில் பகுதித்
- தலைவராக பொறுப்பேற்று நடத்தியமை.
- பாடசாலைக்காக தனது சொந்தப் பணத்தை இழந்த சந்தர்ப்பங்கள் உண்டு
- நெருக்கடியான சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்ட நிலை

  நினைப்பு, சொல், செயல் என்பனவற்றில் மாறுபடாத தன்மை
- பாடசாலை நலனுக்காகத் தன் சுயகௌரவத்தையும் பாராது கீழ் இறங்கி
- செயற்படும் தன்மை
- எதிரியையும் அரவணைத்து போகும் பண்பு

  எல்லோரையும் எளிதில் நம்பிவிடும் சுபாவம்

- தான் நடந்துகொண்ட முறை தவறு என்று உணர்ந்த மாத்திரத்தில் மன்னிப்பு கேட்கும் உயர்ந்த பண்பு
- எளிமையான தோற்றம், எளிமையான வாழ்க்கை
- நேரம் தவறாத, பக்கம் சாராத, சதா பாடசாலைக்கு என்ன முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம் என்று எண்ணும் இயல்பு
- தனது சொந்தப் பணத்தையே பாடசாலையின் நலனுக்கு கொடுத்து விட்டு இரண்டாம் பேருக்கும் தெரிவிக்காமல் இருப்பார்.
- இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் திரு மழவராயர் கந்தையா அவர்களால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட அசையாச் சொத்துக்களில் கிடைக்க வேண்டிய வருமானங்களை அதிகரித்த தொகையாக்கியமையும் அவற்றை ஒழுங்காக வசூலித்தமையும் , வசூலித்த பணத்தை வீண்விரயமாக்காமல் பாடசாலையின் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தியமையும் திரு. ஆறுமுகம் அவர்களின் நன் முயற்சியாகும்.

அவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் இப்பாடசாலையின் பழைய மாணவன், ஆசிரியர், அதிபர் என்ற வகையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார் என நம்புகிறேன். அவரின் ஓய்வு காலம் மனஅமைதியுடனும் சந்தோசமாகவும் கழிய பிரார்த்திக்கின்றேன்.

### சர்வதேச ஆசிரியர் தினம்

சர்வதேச ஆசிரியர் தினம் வருடாவருடம் ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நடைமுறை 1994 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமானது. எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கவல்ல உறுதுணையை (mobilize support) ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

100 இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. சர்வதேசக் கல்வியகமும் (Education International ) அதன் 348 உறுப்பு அமைப்புகளும் இத்தினத்தைக் கொண்டாட அனுசரணைப்பணி புரிந்து வருகின்றன.

இலங்கையில் ஒக்டோபர் 05 இல் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டாலும் 1994 ஒக்டோபர் 06 ஆம் திகதி இலங்கை ஆசிரிய சேவை நிறுவப்பட்டமையால் அதனைக் கௌரவித்து ஒக்டோபர் 06 ஆம் திகதியை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுவாரும் உளர்.

#### சில முக்கிய நாடுகளின் ஆசிரியர் தினங்கள்

இந்தியா - செப்ரெம்பர் 05 (இது முன்னாள் இந்திய ஜனாதிபதி கலாநிதி 'சர்வபள்ளி' இராதாகிருஷ்ணனின் பிறந்த தினமாகும். இவர் 1962 இல் இந்திய ஜனாதிபதியாக இருந்த போது இத்தினம் ஆசிரியர் தினமாக்கப்பட்டது.)

துருக்கி - நவம்பர் 24
அல்பேனியா - மார்ச் 07
செக் குடியரசு - மார்ச் 28
போலந்து - ஒக்டோபர் 14
தென் கொரியா - மே 15
மலேசியா - நவம்பர் 24
சீனா - செப்ரெம்பர் 10
ஈரான் - மே 02
சிங்கப்பூர் - செப்ரெம்பர் 01
தாய்வான் - செப்ரெம்பர் 28
ஐக்கிய அமெரிக்கா - மே மாதத்தில் வரும் முதலாவது செவ்வாய்க்கிழமை
(நன்றி : **Wikipedia**)

# என்கடன் பணி செய்து கிடப்பதே

த.விஸ்வலிங்கம்.
அறங்காவலர்
அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி சமேத
விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்.



மனிதனை மனிதனாக வாழவைப்பது சமயம். இந்து மக்களது வாழ்க்கையில் இந்து மதம் , வாழ்வு முழுதுமே பின்னிப் பிணைந்துள்ளது. "எல்லாம் வல்லவன் இறைவன்" என்னும் நம்பிக் கையோடு வாழும் வாழ்வியலாக எமது சமுதாயம் அமைந்து விட்டது.

சைவமும் தமிழும் ஒருங்கே அமையப் பெற்ற எமது பாடசாலையில் "ஆறுமுகம்" என்னும் பெயர் கொண்ட அதிபர் கிடைக்கப் பெற்றமை இக்கல்லூரிக்கும், எமது கிராமத்துக்கும் ஓர் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

சமகால அனர்த்தங்களினால் கட்டடங்கள், சொத்துக்கள் யாவும் சேதமுற்ற நிலையில் 1996ஆம் ஆண்டு மட்டுவிலில் இருந்தே அதிபராக இப்பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அன்றிலிருந்து காலை 7 மணிக்கே பாடசாலையில் சமூகமாயிருப்பார். பின்னர் பி.ப 4 மணிக்குப் பின்னரே வீடு திரும்புவார். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்கள் என்பன அவருக்கு தெரியாது. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு அமைய பாடசாலையின் வளர்ச்சியில் அபார ஈடுபாடும் , அக்கறையும் கொண்டிருந்தார்.

பெயரும், புகழும் பெற்ற பின்னரும் அடக்கத்தின் உருவமாகவும், எளிமையின் சின்னமாகவும் விளங்கினார். ஆடம்பரம், வேடிக்கை என்பனவற்றை சிறிதளவேனும் விரும்பாதவர்.

நான் மாணவனாக கல்வி பயின்ற காலத்திலிருந்து தொழில் புரிந்து ஓய்வு பெறும் காலம் வரை ஆசிரியராக இடமாற்றம் பெற்று பின் அதிபராகி சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை அதிபர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மாணவர் கல்வி நலன்களில் மட்டுமன்றி ஆன்மீகப் பற்றினையும் மாணவரிடையே ஏற்படுத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் நிறுவுநர் உயிலில் எழுதப் பெற்ற 63 நாயன்மார்களின் குருபூசைகளையும் சிறப்புடன் நடைபெற வழி செய்துள்ளார். மேலும் பாடசாலையில் கலை, கலாச்சாரம் இரண்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல் என்பவற்றையும் நடைமுறைப்படுத்தியுள்ளார். தினமும் காலையும் மாலையும் சோமாஸ்கந்தப் பெருமானுக்கு விசேட வழிபாடுகளும், அத்திவாரத் தினம், வித்தியாரம்ப தினம், நவராத்திரித் தினம் என்பனவற்றையும் சிறப்புற நடைபெறச் செய்துள்ளார்.

சிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் 8ஆம் நாளான சப்பரத் திருவிழாவினை மிகுந்த சிரத்தையோடு ஏற்றுச் செய்து வருகின்றார். யாவற்றுக்கும் மேலாக பல ஆண்டுகளுக்குப் பின் 2005ஆம் ஆண்டிலிருந்து நிறுவுநர் நினைவு நாள் அன்று வள்ளலார் அவர்களின் திருவுருவப் படத்தினை மேற்படி தேவஸ்தானத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவர வீதிகள் தோறும் நிறைகுடம் வைத்து மாலை அணிவித்து நன்றிக்கடன் செலுத்தும் நடைமுறையினையும், அன்றையதினம் அந்நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கும் முறையினையும் மீண்டும் ஏற்படுத்திய பெருமை அதிபர் அவர்களையே சாரும். கோயில் வேறு பாடசாலை வேறு என்ற பேதம் இன்றி இரண்டும் ஒன்றுதான் என்ற அனுபவத்தினை நடைமுறையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறு பலகாலம் விடாமல் செய்த முயற்சியினால் இன்று 75 ஆவது அகவை அடைந்து பவள விழாக் காணும் நிலைக்கு வித்தாகி மரமாகி விருட்சமாகி பல்திசையும் பரந்து காட்சியளிக்கிறது எமது பாடசாலை. அனைத்தையும் உற்று நோக்கும் போது அதிபர் அவர்களின் காலம் பாடசாலை வரலாற்றில் பொற்காலம் என்றே குறிப்பிடலாம்.

மாணவர் கல்வி முன்னேற்றம், இணை பாடவிதான செயற்பாடுகளின் முன்னேற்றம், மாணவர்களின் ஆன்மீக இணைப்பு, பெற்றோர் ஆசிரியர் உறவு, பழைய மாணவர்களின் உறவு, சமூக இணைப்புக்கள் என்ற பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் சென்ற அதிபர் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது என்பது தவிர்க்க முடியாத தொன்றாகும். அவரது சேவை மேன்மேலும் எங்கள் கல்லூரிக்குக் கிடைக்கப் பெறவேண்டும் என்று வேண்டி , அவரின் ஓய்வுக்காலம் நலமுடனே வாழ எல்லாம் வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் துணைக்காகப் பிரார்த்திக்கிறேன்.

## International Red Cross and Red Crescent Movement

ICRC எனப்படுவது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகும். செஞ்சிலுவைச் சங்கத்தை 19 ஆம் நூற்றாண்டில் ஜீன் ஹென்றி டுனாற்(Jean Hendry Dunat) (1828 - 1910) என்ற சுவிஸ் நாட்டுக் கொடைவள்ளல் நிறுவினார். 5 சுவிஸ் பிரசைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று மிகப்பெரு விருட்சமாக மலர்ந்துள்ளது. இவரது பிறந்த தினமாகிய மே 08 ஆம் நாள் சர்வதேச செஞ்சிலுவை தினமாக அனுட்டிக்கப்படுகிறது. ஹென்றி டுனாற் 1901 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை பிரான்ஸ் நாட்டின் Frédéric Passy என்பருடன் பகிர்ந்து கொண்டார். இஸ்லாமிய நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கமானது செம்பிறைச் சங்கம் என்றே அழைக்கப்படுகிறது.

இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது 1936 ஆம் ஆண்டாகும். இது பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளையாகவே ஆரம்பத்தில் நிறுவப்பட்டது

# An Exemplary Teacher Administrator



**S.Thiakarajah**
Asst Director of Education (English)
Zonal Education Office
Jaffna

I am happy and indeed fortunate that an opportunity is offered to me to express my feelings of love and admiration for an ideal teacher and administrator in the special number being published to commemorate the unique services of Mr V.Arumugam, Principal, J/Sri Somaskanda College, who is retiring on 31st October 2006 after serving the College in different positions - teacher, deputy principal and principal - for well over two decades.

His crossover from Royal College, Colombo, consequent to the Race Riots of 1983 benefited 'Somaskanda' who found in her distinguished son Arumugam a potential disciple to work zealously for the preservation of the Founder's rich heritage and the glory and welfare of the College.

When I was transferred to 'Somaskanda' as a teacher in early 1991, I admired the role Mr Arumugam played as the Deputy Principal and his immense help to Principal Sandrasegarampillai in solving the day to day problems of the College. He was always loyal to his principal and his principal would act on his advice because it was always given impartially and in the best interests of the school. Having been connected with the school for a considerable period, both as pupil and teacher, he is regarded as the upholder and custodian of the traditions of 'Somaskanda'.

Shortly after his assumption of duties as Principal in November 1995, I was seconded for service on the staff of Palaly Teachers' College, but my relationships with the school both as a parent and as an officer of the Zonal Education Office *do* exist even today.

It was said of a famous teacher that people in their homes checked their watches as she passed them on her way to school. Mr Arumugam's punctuality has become almost a legend at 'Somaskanda'; so have been his other qualities - conformity to discipline, high standards of perfection, system and thoroughness and his absolute commitment to Somaskanda's welfare. Directress without rudeness, humility without the least trace of

a sycophant are other virtues I respect in him. I have always found him noble, sincere, sympathetic and helpful. Modest and soft spoken, **his supreme quality has been his high sense of duty and towering sense of rectitude.**

As an administrator, he is firm, kind and understanding. His relationship with the staff is cordial and he has the tact and patience to urge upon them to give of their best to their pupils. He has found happiness in the path of duty and won the respect and confidence of his students and colleagues. Duty, decency and discipline have been his watchwords. **What best he could give 'Somaskanda' has ever been uppermost in his mind than what he could receive from her.** The vast number of distinguished old students of 'Somaskanda' in the various government departments and private sectors owe their elevated positions to Mr Arumugam for laying a firm foundation for them to build their future.

When we pay our tribute to Mr Arumugam, it would be a bad omission if we ignored the part played by Mrs Arumugam. To be the wife of a person wedded to another cause or institution is an unenviable lot. Mrs Arumugam has borne that role with grace, dignity and efficiency. She has looked after the home, relieved her husband of the worries which many others experience when they return home after a day's work.

It is difficult to read Mr Arumugam's feelings when his 23 years of close and intimate association with the College ends - relief or excruciating pangs of separation from the bonds that bind him to 'Somaskanda'. Whatever it is, it is our fervent prayer that Lord Somaskandan, the presiding deity of the school bless him with long life, good health and happiness !

**நாம் பிறருடன் கதைக்கும் போது OK என்று சொல்கிறோம் அல்லவா? இதன் அர்த்தம் என்ன தெரியுமா?**

All Correct என்பதன் சுருக்கமே OK என்கிறார்கள். ஆனால் OLL KORRECT என்ற பழைய ஆங்கிலச் சொல்லே அது என்று வாதிப்பவர்களும் உள்ளனர். இது குறித்து ஆனந்த விகடன் தந்த சுவையான தகவல் இதோ.

*நியூயோர்க் நகரில் '**Old Kinderhook**' என்கிற கிராமத்தில் பிறந்து வளர்ந்த மார்ட்டின் வான் பியூரன் என்பவர் 1840 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.அந்தக் கிராமத்து மக்கள் அவரை ஆதரித்து OK க்ளப் ஒன்றை ஆரம்பித்தார்கள். அவர்கள் OK சொல்லிப் பிரபலமாக்கியதால் வந்ததுதான் இன்று உலகில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தையான OK*

நன்றி: ஆனந்தவிகடன் 16.07.2006

# தன்னலம் அற்ற அதிபர்



ச.குகதாஸ்
கணக்காளர்
(புனர்வாழ்வு புரமைப்பு செயலாளர் மாவட்டசெயலகம்)
பொருளாளர் பழைய மாணவர் சங்கம்
(தாய்ச் சங்கம்)

திரு.வ.ஆறுமுகம் அவர்கள் 1996ம் ஆண்டு இக் கல்லூரின் அதிபர் பொறுப்பினை ஏற்று கொண்ட நாளிலிருந்து அவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. பாடசாலையின் அனைத்து பௌதிக வளங்கள், மனிதவளங்கள் என்பவற்றை தக்க முறையில் பயன்படுத்தி பாடசாலையின் அபிவிருத்தியில் முழுமூச்சாகச் செயப்பட்டமையை அவரது ஆளுமைக்கான சாட்சியாகக் குறிப்பிடலாம்.

இக் கல்லூரியின் கட்டிட புனரமைப்பு, கணினி செயற்பாடு, முன்பக்க காணி கொள்வனவு, விளையாட்டு மைதான விஸ்தரிப்பு போன்ற பல பணிகளை கண் கூர்ந்து பார்ப்பதன் ஊடாக அவரது ஆளுமை வெளிப்பாட்டை அறிய முடியும். அத்துடன் தன்னலம் அற்றவர் என்பதற்கு உதாரணமாக தனது அறையினை எதுவித மெருகூட்டலும் இன்றி - எளிமையாக அதிபர் பொறுப்பு வகித்தமையையும் அவர் தன்னை அலங்கரிக்காது மிக எளிய கோலத்தில் நடந்து கொள்வதையும் நோக்கலாம். அவருடைய சேவை இக்கல்லூரிக்கு தொடர்ந்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அவர் பல ஆண்டுகள் சிறப்பாக வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

## சஷ்டியப்த பூர்த்தி

ஒரு மனிதனுடைய பூரண வாணாள் 120 ஆண்டுகள் என எமது சமய நூல்கள் கூறும். ஆயுட் காரகன் சனி பகவான். இவன் 12 இராசிகளையும் ஒரு முறை சுற்றி வருவதற்கு 30 ஆண்டுகளாகும். எனவே ஒரு மனிதனின் வாணாளில் 4 முறை பவனி வருவான். அப்போது அவனது ஆயுள் 120 ஆண்டுகள். இதனை தசவருஷ முறை என்று சோதிட வல்லுநர் கூறுவர். இந்த முழுமையான ஆயுளில் பாதியாண்டுகள் அதாவது 60 ஆண்டுகள் சிறப்பாக வாழ்ந்து விட்டாலேயே அவனைப் பூரண மனிதன், நிறைவான மனிதன் என அழைக்கலாம்.

60 அகவை நிறைந்து 61 ஆவது அகவை தொடங்கும் போது செய்யப்படுவதே சஷ்டியப்த பூர்த்தியாகும். 61ஐத் திருப்பினால் 16 என்றாகும். என்றும் மார்க்கண்டேயனைப் போல சிரஞ்சீவியாக வாழ வேண்டும் என்று இந்நாளில் வாழ்த்துவர். காலனை உதைத்த தலமாகிய திருக்கடவூரில் சஷ்டியப்த பூர்த்தி காண்போர் அபிஷேகம் முதலிய சடங்குகளைச் செய்வது சிறப்பானதெனக் கூறப்படுகிறது.

நன்றி : இந்துக் கலைக் களஞ்சியம் (தொகுதி 05)

## க.பொ.த (உ/த) 2005 மிகச் சிறந்த பெறுபேறு



செல்வி சிந்துஜா இரத்தினசிங்கம்
3 A கலை



செல்வி பிரியங்கா தங்கராசா
3 A கலை

## க.பொ.த. (உ/த) 2006 மிகச் சிறந்த பெறுபேறு



செல்வன் இரங்கநாதன்
கோகுல்நாத்
உயிரியல் விஞ் 2A B



செல்வி கமலச்செல்வி
விசுவலிங்கம்
கலை 3A



செல்வி மதுரா
துரைராஜசிங்கம்
கலை 3A

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்



செல்வன் மோகனராசன் கஜன்ராஜ்
மாவட்ட மட்டம் - 17 வயதுப்பிரிவு
நீளம் பாய்தல் 2 ஆம் இடம்



செல்வி றொஜீனா சகாதேவன்,
சைவ பரிபாலன சபைத் தேர்வு
தரம் 07 - வெள்ளிப் பதக்கம்




சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற அருணகிரிநாதர் விழாவின் போது எமது கல்லூரி மாணவர்களால் வழங்கப்பெற்ற 'திருப்புகழ் கானாமிர்தம்' நிகழ்வின் போதான ஒரு காட்சி

## அதிபர் வ.ஆறுமுகத்தின் சேவை நயப்பு வைபவம்
## 31.10.2006




சிறப்புக் கலை நிகழ்வாக இடம்பெற்ற உயர்தர மாணவர்களினால் வழங்கப்பெற்ற வில்லிசை நிகழ்வின் போதான ஒரு காட்சி

# INDELIBLE MARK

**K.Balasubramanium,**
Retired store keeper C.E.B.
Justice of the peace all Island.

I take great pleasure in chalking up this message of appreciation at this occasion of the superannuation in service. Having known Mr. Vairavanathar Arumugam more than two decades. Prior to the intake into Sri Somaskanda College, Puttur, he was in the panel of tutorial staff of the Royal College in the 70s. Only for the V.I.PP and the high ranking society, during this period he was flying the fabric of the college with a splendid record in the academic arena.

To his villagers he is all in all their lawgiver, protector and educator. He found time to foster the spiritual and intellectual wherever he found it. His tamil tongue fostered double maths, As the principal Mr. Arumugam bears unquestionably the stamp of unperceptive greatness. He is a man of perfection him self is that of perfect balance, whose brain in many sided and can grasp the details and see the innermost and yet have creative faculties as well. In the capacity as of a well wisher of this college I had the golden opportunity to access his capability in negotiating in the developments of the College in many ways.

Mr. Arumugam after deep study of all matters willfully enunciates and impregnate righteous action accordingly. He has underone untold hardship, and agony in the renovation of the war torned and divested college buildings. I quote a version from the Mahawamsa as follows

Those who lend lands to cut
roads
Those who cut roads
and
Those who see the roads
under construction.

That is the road to the heaven.

He has instituted the gigantic project of putting up the auditorium in the name of the late. Hon principal S.Coomarasamy here

Thus ... Those who lend money
Those who lend land for the construction
Those who see the building under construction
Too no doubt will go to the heaven.

# செயல் வீரம் மிக்க அதிபர்



**ச.கருணாகரன்** B A(Hons)
*ஆசிரியர்*

எமது கல்லூரியின் அதிபர் திரு.வைரவநாதன் ஆறுமுகம் அவர்கள் ஒரு ஆசிரியன், கல்விச்சேவையாளன், சமூகத்தொண்டன், பொதுமையாளன், நற்பண்பாளன் போன்றவற்றிற்கு உரித்துடையவாக விளங்குவதோடு செயல்வீரனாகவும் காணப்படுகின்றார். ஆவரங்காலிலே பிறந்து தனது ஆரம்பக்கல்வியை யா/நடராஜ இராமலிங்க வித்தியத்திலும் உயர்கல்வியை யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரியிலும். பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பொற்றார். B.Sc. பட்டதாரியான இவர் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்பித்த சிறப்பிற்குரியவர். அமைதியான முகமும், ஆழ்ந்த அறிவும், ஆற்றல் மிகு திறமையும் இவரை றோயல் கல்லூரியிலேயே சிறப்பான ஒரு இடத்தைப் பெறவைத்து. தனது திறமையால் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் அக்கல்லூரியில் ஆசிரியப் பணியில் நிலைபெற்றதோடு 1986 ஆம் ஆண்டு தான் கல்விகற்ற சோமாஸ்கந்தக் கல்லூரிக்கு ஆசிரியராக மாற்றம் பெற்று வந்தார்.

அதிபர் வ. ஆறுமுகம் அவர்கள் தனது அயலூர் கல்லூரி என்ற பற்றினாலும், தான் கல்விகற்ற கல்லூரி உணர்வினாலும் உயர்ந்த சேவையாற்றும் உறுதியினைப் பெற்றார். கல்விச் சொயற்பாடுகளில் மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் மாணவர்களை உயரவைத்த பெருமை அவரையே சாரும். ஆசிரியாக நியமனம் பெற்றாலும் தனது தனித்திறமையால் பகுதித்தலைவர், பிரதியதிபர் போன்ற பொறுப்புமிக்கவராகச் செயற்பட்டு அதிபர் என்ற தலைமைப் பொறுப்பையும் பெற்றுக்கொண்டார்.

எமது கல்லூரி அதிபர்களைப் பற்றிப் பேசுபவர்கள் அதிபர் குமாரசுவாமி அவர்களை நினைவு கூரத் தவறுவதில்லை அவ்வளவு உன்னத சேவையாற்றிய உத்தமர் குமாரசுவாமி என்று பலரும் பேசக் கேட்டிருக்கின்றேன். அந்த வரிசையில் எனது கண்முன் கண்ட குமாரசுவாமியாக நான் அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்களைப் பார்க்கின்றேன். தனது வாழ்நாள் முழுவதையும் கல்லூரிக்காக அர்ப்பணித்த பெருந்தகையாக அவர் விளங்குகின்றார்.

கட்டிறுக்கமான நிர்வாகமும் கண்பியமான செயலும் கொண்ட எமது அதிபர் கொள்கைப் பிடிப்பு உள்ளவராக காணப்படுகின்றார். நான் கல்லூரியில் கல்விகற்ற காலப்பகுதியில் அவரிடமிருந்து அவதானித்த நற்பண்புகளில் ஒன்று அவருடைய வருகை நேரமாகும். தினமும் சரியாக காலை 7.30 மணிக்கு கல்லூரியைச் சுற்றிவலம் வருவார். அப்போதெல்லாம் நான் என் மனதுக்குள் கூறிக்கொள்வது "மாரிமழை பொய்த்தாலும்

எமது அதிபரின் நேரவரவு பொய்க்காது'' என்று இவ்வாறு கடமை. கண்ணியம், கட்டுப்பாடு என செயலாற்றும் செயல் வீரனாக விளங்குகின்றார்.

கல்லூரி வளர்ச்சியில் ஊன்றுகோலாக விளங்கும் எமது அதிபர் தன்னுடைய சிரமத்தையும் பொருட்படுத்தாது எங்களுடன் மிதிவண்டியில் ஒவ்வொரு பெற்றோரதும் வீட்டிற்குச் சென்று கல்லூரியின்அபிவிருத்திப் பணிகளுக்கான உதவிகளைப்பெற்று கல்லூரியினது வளர்ச்சியின் அத்திவாரமாக விளங்கினார். நான் நினைக்கின்றேன் இப்படியான ஒரு மனப்பக்குவம் ஏனையோருக்கு ஏற்படாது என்று.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்பத்தைக் கொண்ட எமது அதிபர் ஆறுமுகம் அவர்களின் சேவைக்காலம், வேதனைகளும் நிறைந்த காலமாகும். ஆனாலும் சாதனைகளும் சரித்திரங்களும் நிலைபெற்ற காலமாகும். காலச்சூறாவளியால் அள்ளுண்டு கரைந்து போகவிடாது கல்லூரியைத் தலைசிறந்த கலைக் கோபுரமாக்கிய பெருமைக்குரியவர் இவராவர். தற்போதும்கூட கல்லூரியின் தேவையை அறிந்து மிகப்பிமாண்டமான முறையில் குமாரசுவாமி கலையரங்கை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பழையமாணவர் களின் அயராத முயற்சியினையும் ஒத்துழைப்பையும் பெற்று 75 வீதமான வேலைகளை நிறைவேற்றி தொடர்ந்தும் அப்பணியில் பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

காலச்சக்கரத்தைச் சுழற்றிப் பார்க்கின்ற போது இவ் உலகத்திலே பொதுநோக்கும் பொது நலனும், பிறர்பொருளில் ஆசை கொள்ளாத அற்புத மனமும், பண்பான சேவையும், அன்பான அவரவணைப்பும் திமிர் கொள்ளாத ஆழ்ந்த அறிவையும் கொண்ட மனிதர்கள் இலட்சத்தில் ஒருவர்தான் பிறந்திருக்கின்றார்கள். எனது சிற்றறிவுக்கு எட்டியவகையில் அந்த இலட்சத்தில் ஒருவராக நான் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய எமது அதிபர் திரு. ஆறுமுகம் அவர்களைக் காண்கின்றேன்.

காலமறிந்து, தேசமறிந்து கற்பிக்கும் சூழலறிந்து இக்காலத்திலன்றி எக்காலத்திலும் செயல் வீரத்தோடு சேவையாற்றவல்ல என் அருமை ஆசானும் அதிபருமான திரு.ஆறுமுகம் அவர்களது நயப்புரை எழுதக் கிடைத்ததமையை நற்பேறாக மனதிருத்தி 'உலகப்பொதுமறையாம்'' திருக்குறள் என்ற நூலிருந்து ஒரு குறளைச் சான்றாக்கி முடிக்கின்றேன்

*''தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்.''*

**உங்களுக்குத் தெரியுமா?**

*யாழ் - கண்டி நெடுஞ்சாலையை A9 வீதி என்பது போல் எங்கள் கல்லூரி பிரதான வாயிலின் முன் அமைந்த யாழ் - பருத்தித்துறை நெடுஞ்சாலையை AB 23 வீதி என்கிறோம்*

# அர்ப்பணிப்பான, ஆளுமை மிக்க சேவையாளன்




**செல்லத்துரை கிருபாகரன்**

கணக்காளர்

பிரதேச செயலகம்.

கரவெட்டி / ஊர்காவற்றுறை


சோமஸ்கந்தன் - 2006 **'ஆறுமுகம் சிறப்பு மலரில்'** எண்ணற்ற முகம் கொண்ட உன்னதமான அர்ப்பணிப்பான சேவையாளனும் எனது ஆசானும் அதிபருமான உயர்திரு ஆறுமுகம் ஐயா அவர்களைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பேருவகை அடைகின்றேன்.

எமது அதிபர் அவர்களின் திறமையைப் பற்றிக் கூறுவதற்கு அவரது கல்விச் சேவை ஒன்றே போதுமானது. அதியுயர் கல்விப்பாரம்பரியத்தை கொண்ட, அரச பரம்பரையினர் கல்விகற்கின்ற கொழும்பு றோயல் கல்லூரியில் இவரது கல்விச் சேவை அமைந்திருந்தது மட்டுமல்லாமல் ஒருதசாப்த காலத்தையே அங்கு செலவு செய்ததன் மூலம் அன்று நாட்டின் அதியுயர் பதவிகளில் உள்ள பல நற்பிரஜைகளின் உருவாக்கத்திற்கு காரணியாகவும் இருந்துள்ளார். மேலும் தனது சொந்த இடத்து மாணவர்களிற்கு தனது கல்விச் செல்வத்தை வழங்கியதன் மூலம் இந்நாட்டில் மட்டுமல்லாது உலகின் பல்வேறு நாடுகளிலும் பொறியியலாளர்களாகவும் மற்றும் பல் உயர் பதவிகளிலும் சேவையாற்றி வருகின்றனர். இவரது கற்பித்தல் திறனுக்கு எடுத்துக்காட்டாக , இலங்கை அரச உயர் பதவியில் உள்ள அவரது மாணவர்களில் ஒருவரிடம் நான் கதைத்த போது அவர் கூறினார். " ஆறுமுகம் ஐயா அவர்கள் தன்னை தனது மாணவன் என்று கூறுவதிலும் பார்க்க தான் அவரிடம் கற்ற மாணவன் என்று கூறுவதில் **பெருடையடைகிறேன"** என்று.

சோமாஸ்கந்தக் கல்லூரி, தனது பவழ விழாவினை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், இவ் 75 வருட வரலாற்றில் சில வரப்பிரசாதங்களைப் பெற்றிருக்கின்றது. அத்தகைய சிலவற்றில் எமது அதிபர் அவர்களின் இருபது வருட சேவையை பெற்றதே மிக மகத்தான சேவையாகும். இந்த இருபது வருட சேவையின் பயனை இக்கல்லூச் சமூகம் இன்னும் இருநூறு வருடங்களல்ல அதற்கும் மேற்பட்ட காலங்களிற்கும் அறுவடை செய்யப் போகின்றது.என்பதை எவரும் மறுக்க முடியாது.

மதிப்பிற்குரிய எமது அதிபர் அவர்கள் தனது அறுபதாவது வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெறும் இத்தருணத்தில், இதுவரை தனது வாழ்க்கைக்காலத்தில் கூடுதலான தனது நேரத்தை செலவு செய்த இடம் எது என்றால் அது ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியாகத்தான் இருக்க முடியும். நான் நினைக்கிறேன் எமது கல்லூரி சேவைக்காலத்தில் அவரிற்கு நாட்காட்டி , மணிக்கூடு என்பவையெல்லாம் தேவையற்ற பொருளாகத்தான் இருந்துள்ளன என்று! இவ்வாறு செலவு செய்த ஒவ்வொரு நிமிடமும் பாடசாலையின் ஏதோ ஒரு அபிவிருத்தியில் செலவு செய்யப்பட்டவையாகத்தான் இருக்கும். இவற்றை கல்லூரியின் சகல விதமான முன்னேற்ற கரமான விளைவுகளிலிருந்தும் காணலாம்.

சாதாரண ஒரு கிராமப்புறத்து பாடசாலை இலங்கை சனாதிபதி அவர்களிடமிருந்து விருது பெறுமளவிற்கு மாணவர்களை உருவாக்கியதுடன் ஆரோக்கியமான வளம் நிறைந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்கியுள்ளமை சாதாரண விடயமல்ல. மேலும் இணையத்தளத்தில் வலம் வரும் ஓரிரு வடமாகாணப்பாடசாலைகளில் எமது கல்லூரியும் ஒன்று எனக் கூறுமளவிற்கு அதன் செயற்பாடுகள் இருக்கின்றது என்றால் அது எமது அதிபர் அவர்களின் கடும் முயற்சியின் வெளிப்பாடு தான் என்பது வெளிப்படையாகும்.

எமது அதிபர் அவர்களின் சிறந்த சேவையைப்பற்றி எழுதுவதற்கு எனக்கு இந்த ஒரு மலரினைத்தந்தால் கூட போதாது . சமுத்திரம் போன்ற அவரது சேவையில் ஒரு சில துளிகளை மட்டுமே என்னால் குறிப்பிட முடிந்துள்ளது. இவர் தனது இளைப்பாற்றுக்காலத்திலும் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியுடன் தான் ஒன்றித்து இருப்பார் என்பதில் எதுவித ஐயமும் கிடையாது.

### ஆசிரியர் வரவின்மை குறித்த தகவல் இது...

மாகாண வகைப்படி 2002 ஆம் ஆண்டில் ஆசிரியர் வரவின்மை குறித்து மெற்கொள்ளப்பட்ட ஆய்வில் மேல் மாகாணம் முதலிடம் பெறுகிறது. அங்கு ஓர் ஆசிரியருக்கான சராசரி வரவின்மை நாள்கள் வருடத்திற்கு 40 ஆக உள்ளன. வடக்கு கிழக்கு மாகாணத்தில் இது 38 நாள்களாக உள்ளன. இலங்கை முழுவதுக்குமான சராசரி வரவின்மை நாள்கள் வருடத்திற்கு 37 நாள்களாக உள்ளன.

(நன்றி : அகவிழி யூன் 2006)

# உதாரண புருஷர்

இ.கோகுல்நாத்



நடையில் கம்பீரம், நடத்தையில் நேர்மை, எளிமை ஆம்! அவற்றுக்குச் சொந்தரக்காரர்தான் எங்கள் அதிபர் ஐயா.

ஆறுமுகம் சேர் என்றால் அவர் மீது எல்லோருக்கும் ஒரு மரியாதை. அச்சம் கலந்த பணிவு. மாணவர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் - அறியாமல் ஏதாவது தவறுகள் விடும்போது அவற்றை அன்பாக எடுத்துக்கூறித் திருத்தும் சுபாவம். ஆனால் மாணவர் அறிந்தும் பெரிய தவறுகள் விடும் போது எரிமலையாகப் பொங்கிவிடும் குணம். இவை அதிபரொருவருக்கு இருக்கவேண்டிய இலச்சணங்களே.

எங்கள் அதிபர் ஐயா ஒரு போதும் ஆடம்பரத்தை விரும்பியதில்லை. இதற்கு ஒரு எடுத்துக்காட்டைக் கூறுலாம். சென்ற வருடத்திற்கு முந்திய வருடம் 'சோமாஸ்கந்தன்' சஞ்சிகைக்காகக் குழுக்களாகப் படங்கள் எடுத்த போது அதிபர் காலில் சாப்பத்து எதுவும் அணியாமல் சாதாரண செருப்பையே அணிந்திருந்தார். இது எமக்கு ஒரு மாதிரியிருந்து. நாங்கள் இது பற்றி அதிபருக்கு எடுத்துச்சொன்ன பின்னரேயே அதிபர் சப்பாத்து அணியச் சம்மதித்தார் இது அவரது எளிமைக்கு மட்டுமல்ல, மற்றவர்களுடைய வேண்டுகோள்களையும் மதித்து ஏற்றுக்கொள்ளும் தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

எங்கள் அதிபர் ஐயா காலை 7.10 க்கு முன்னரேயே பாடசாலைக்கு வந்துவிடுவார். பாடசாலை முடிந்த பின்னும் மாலை 4.00 க்குப் பின்னரேயே அதிபர் வீடு திரும்புவார். கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்பன எமது அதிபரில் எப்போதும் குடிகொண்டிருக்கும்.

அதிபர் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவம் அளப்பரியது. கல்விமட்டுமல்ல, விளையாட்டுத்துறைக்கும் நல்லாதரவளிப்பார். நாங்கள் ஏதாவது போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் போது எங்களை வாழ்த்தியனுப்புவார். அதுவே எமக்கு மிகப்பெரியதொரு உற்சாகமாக இருக்கும்.

அதிபர் என்றால் மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களும் சற்று அஞ்சுவார்கள். இதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வைக் கூறலாம். ஒரு நாள் எட்டாம் பாடவேளை சில ஆசிரியர் கூடிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். அதிபர் தனது அலுவலகத்திலிருந்து வெளியே வந்து ஒரு நோட்டம் விட்டதுதான் தாமதம், எல்லா ஆசிரியர்களும் விரைவு விரைவாகத் தத்தமது வகுப்பாறைகளை நோக்கி நடந்தார்கள். அதிபர் ஆசிரியர்களின் நலனில் மிகுந்த அக்கறை உள்ளவர் ஆயினும் கடமை தவறும் போது அவர்களைத் தட்டிக்கேட்கவும் தயங்கமாட்டர்.

எமது பாடசாலையின் கல்வித்தரம் பாதாளம் நோக்கி வீழ்ந்துகொணடிருந்த வேலையில் அதனைத் தூக்கி நிறுத்திய பெருமை எமது அதிபரையே சாரும். எமது அதிபரின் காலத்தில் பெறப்பட்ட க.பொ.த சாதாரணதர, உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகள் இதற்கு சான்றுபகரும்.

அத்துடன் எமது அதிபரின் காலத்திலேயே மாணவர்கள் அனைவரும் சப்பாத்து அணிவது கட்டாயமாக்கப்பட்டது. ஆண் மாணவர்களுக்குரிய மேற்சட்டைச் சின்னமும் கழுத்துப்பட்டியும் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே எமது கல்லூரிக்கென ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவதில் எமது அதிபர் ஐயாவின் பணி அளப்பரியது.

இவ்வளவு மேன்மைகள் மிக்க எமது பாசத்துக்குரிய ஆறுமுகம்சேர் ஓய்வுபெற்று செல்வது எமக்கு மிகுந்த கவலையளித்தாலும் ஒய்வின் பின்னரும் எமது அதிபரின் வழிகாட்டல்கள் எமது கல்லூரிக்குத் தொடர்ந்தும் கிடைக்கும் என்பதில் ஆறுதலடைகிறோம். மேலும் எமது அதிபர் இறைவனருளால் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வளமாக வாழப் பிரார்த்திக்கின்றேன்.

## ஐரோப்பிய ஒன்றியம் (Europeon Union)

*1993 நவம்பர் 01 அம் திகதி அமைக்கப்பட்ட அமைப்பு. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பாதுகாப்பை வலுப்படுத்தல், பொருளாதார ஏற்றத்திற்கு வழிசமைத்தல், போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டது. பிரான்ஸ்,ஜேர்மனி, கிரீஸ்,பெல்ஜியம், டென்மார்க், அயர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து,லக்சம்பேர்க், போர்த்துக்கல், ஸ்பெயின், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுடன் அமைக்கப்பட்டது. 1995 இல் ஒஸ்ரியா, பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து கொண்டன. 2004 மே மாதத்தில் சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்ரோனியா, ஹங்கேரி, லத்வியா, லித்துவேனியா,மோல்ரா, போலந்து, சுலோவாக்கியா, சுலோவெனியா ஆகிய நாடுகள் இணைந்து EU வில் அங்கத்துவம் பெற்ற நாடுகளின் எண்ணிக்கையை 25 ஆக்கின.,*

*1007 ஆம் ஆண்டில் இன்னும் புதிதாக ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளும் அங்கத்துவம் பெறவுள்ளன.*

*2002 ஆம் ஆண்டில் இந்நாடுகளில் பாவனை செய்யக் கூடிய ஒரே நாணயமாக யூரோ அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் டென்மார்க், சுவீடன், ஐக்கிய இராச்சியம்* (United Kingdom) *யூரோ நாணய அமைப்பில் இணைந்து கொள்ளவில்லை.*

*நன்றி* :Microsoft Encarta 2006.

# கல்லூரியின் விடிவெள்ளி எங்கள் அதிபர்

கா.வசந்தன்.Bsc
கல்லூரி பழைய மாணவன்



எமது அதிபர் திருவாளர் வைரவநாதன் ஆறுமுகம் அவர்கள் ஆவரங்காலை பிறப்பிடமாகவும், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் கல்வியையும் பயின்று ஒரு கணித ஆசிரியராக தனது சேவையை ஆரம்பித்தார். பொதுவாக எந்த ஒரு பணி புரிபவர்களும் இரண்டு விதமான நோக்கங்களைக் கொண்டே செயற்படுவார்கள். ஒன்று உயர்ந்தபுகழைப் பெறுதல், மற்றையது நிறைய வருமானம் பெறல். ஆனால் எங்கள் அதிபர் இந்த இரண்டில் ஒன்றைக் கூட தமக்காகப் பெற்றுக்கொள்ள முயலவில்லை என்பதற்கு அவரது நகர்ந்த நாட்கள் சான்று பகர்கின்றன. எமது அதிபரின் தன்னலம் கருதா, தன்நிகரற்ற செயற்பாட்டையும், பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களாகிய எமது முன்னேற்றத்திலும் தம்மையே முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்ட ஒவ்வொரு செயலையும் சொல்வசப்படுத்தி தருவது என்பது இயலாத விடையம். இந்த வகையில் ஆரம்ப கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை, எமது அதிபர் பணியாற்றிய காலத்தில் கல்வி கற்றவன் என்கின்ற வகையிலே ஒரு சில விடயங்களை பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

ஆரம்பகாலத்தில் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் விரும்பியிருந்தால் சகல வசதிகளோடும் றோயல் கல்லூரியில் பணியாற்றி பெரும் புகழை ஈட்டியிருக்க முடியும். ஆனால் அவர் புகழையோ, வசதி வாய்ப்புக்களையோ துளியேனும் விரும்பாது தான் கல்வி கற்ற கல்லூரிக்கே சேவை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கில் இக்கல்லூரியில் ஆரம்பத்தில் ஆசிரியராக தம்மை இணைத்துக் கொண்டார். அன்றிலிருந்து இளைப்பாறும வரை இவர் இக்கல்லூரிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளை பட்டியலிட்டு கொண்டே போகலாம். அவைகளை இக்கல்லூரியை சார்ந்த எவரும் அறியாமலிருக்க முடியாது.

இவர் அதிபராக இருந்த காலத்தில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தை எடுத்து நோக்குவோமாயின் அவர் தனது கடமையில் கொண்ட ஈடுபாட்டின் அதீத தன்மை புலனாகும். அதிபரின் தாயார் மரணித்து இறுதி கிரியை முடிவடைந்து மயானத்தில் இருந்து யாவரும் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது, அவ்வேளையில், பகுதி தலைவராக இருந்த திருவாளர் சிவசுப்பிரமணியம் அவர்களும் தனது பதில் கடமையை செவ்வனே முடிக்கும் முகமாக ஒரு முக்கிய ஆவணத்தை குறிப்பிட்டு "சேர் நீங்கள் அதில் சைன் (Sign) பண்ண வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அதிபர் அவர்கள் சற்றேனும் தாமதிக்காது "நாளைக்கு பாடசாலைக்கு வருகிறேன்" என்று பதிலளித்தார். அதற்கு

பகுதி தலைவர் மறுத்து "நீங்கள் வீட்டிலிருந்து வெளிக்கிடக்கூடாது, நான் இங்கே கொண்டு வருகிறேன்" என்றார். இங்கே எங்கள் அதிபர் தனது தாயாரை இழந்த மிகப்பெரிய துயரத்தை கூட பொருட்படுத்தாது தனது கடமையின் பால் கொண்ட தீவிரம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் புலப்படுகிறது. நிலையாமையை வலியுறுத்தி பல பாடல்களை பாடிய பட்டினத்தடிகளார் கூட தனது தாயாரின் பிரிவிலே துயரம் தாங்க முடியாது " ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம்......." என்ற அந்த பாடல் மூலம் கலங்கியதை நாமறிவோம். எமது அதிபர் தனது தாயினும் மேலாக கடமையை நேசிக்கும் இவரின் உயர்ந்த பண்புக்கு இதை விட வேறு உதாரணம் தேவையா?.

அது மட்டுமன்றி எங்கள் அதிபர் வருமானமாக பெறும் ஊதியத்தின் மிகப்பெரும் பங்கை பாடசாலையின் அபிவிருத்திக்காக பயன்படுத்தி வருவது பலருக்கு தெரிந்திருக்க முடியாத உண்மை. பணத்தையோ, புகழையோ பெற வேண்டும் என்று கருதாது எமது கல்லூரியின் வளர்ச்சியே ஒரே நோக்கமாக கொண்டு செயற்பட்டவராவார்.

பாடசாலையில் மாணவரின் முன்னேற்றம் கருதி தனக்கேயுரிய பாணியில் மாணவர்களிடம் ஒரு கண்டிப்புடன் கூடிய கண்காணிப்புடன் செயற்பட்டார். ஒரு மாணவர் தவறு செய்தால் அவரை அழைத்து "கடும் பிழை" என்ற ஒரு சொல்லை பயன்படுத்துவார் அதனால் அம்மாணவர் தான் செய்த தவறுக்கு அதிபர் கடும் பிழை என தீர்ப்பு வழங்கியதாக கருதி மறுபேச்சின்றி தமது தவறுகளை திருத்தி கொள்கின்றனர். அத்துடன் இன்றைய மாணவர் சமூகமும், பழைய மாணவர்களும் அவருக்கு கீழ்ப்படிவுத்தன்மையுடன் கூடிய மதிப்பு கொடுத்து ஒரு உயர்ந்த இடத்தை வழங்கி வருவதை காணும் போது அவரின் நிர்வாக ஆளுமையின் திறன் தெட்ட தெளிவாக புலப்படுகிறது. மேலும் 1996ம் ஆண்டு அதிபராக பொறுப்பேற்று இரண்டு வருடங்களில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் (18 மாணவர்கள்) பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின்னரும் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பல மாணவர்கள் தெரிவாவதும் அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை, கலை நிகழ்வுகளிலும் பாடசாலை முன்னணியில் திகழ்வது யாவரும் அறிந்ததே. இவை எல்லாம் எமது அதிபரின் தன்னிகரற்ற செயற்பாட்டுக்கு கிடைத்த வெற்றிகளாகும்.

எமது கல்லூரிக்கு வழங்கிய சேவையால், எம்மை எல்லாம் முன்னேற்ற பாதைக்கு வழிகாட்டிய எமது அதிபர் ஓய்வு பெற்று செல்வது எமக்கு ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாகவே கருத வேண்டும். அவரது வழிகாட்டலும், அபிப்பிராயங்களும் எமது கல்லூரிக்கு தொடர்ந்தும் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம். பல்வேறு செயற்கரிய சேவைகளை வழங்கி, எமது கல்லூரியின் விடிவெள்ளியாக திகழ்ந்த எங்கள் அதிபர் அவர்கள் உடல் நலத்துடன் மேலும் பல்லாண்டு காலம் சீரோடும், சிறப்போடும் வாழவேண்டும் என சோமாஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்தித்து கொள்ளுகிறேன்.

# எங்கள் அதிபர்



ம.வதனகீர்த்தனா
யாழ். பல்கலைக்கழக மாணவி

அரிது அரிது மானிடராதல் அரிது என்ற ஔவைப் பெருந்தகையின் அமுத வாக்கிற்கிணங்க அரிதான மானிடப் பிறவியினை எடுத்த எம் அமரர் மழவராயர் கந்தையா அவர்கள் தன் மேலான சிந்தனை மூலம் தேவாலயம், மடாலயம், வித்தியாலயம் என்ற மூன்று ஆலயங்களையும் ஒருங்கே அமைத்து மக்களை தருமத்தின்படி வாழ வழி சமைத்தார். ஏழைகள் இலவசக் கல்வியின் உச்சப் பயனைப் பெற்று உலகெங்கும் புகழ் பரப்பும் வண்ணம் அவரால் வழங்கப்பட்ட பெரியதொரு தானம் எங்கள் கல்லூரியின் உதயமாகும். இவ்வாறு பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று அளவிடற்கரிய சேவைகளையும் அதன் மூலமாக உயர்ந்தோங்கும் புகழையும் கொண்ட எம் வள்ளலாரின் ஜனன தினமாகிய செப்ரெம்பர் 10 நாளில் , எம் கல்லூரியானது நிறுவுனர் நினைவுதினம் கொண்டாடி வருவதுடன் , அன்றைய தினம் "சோமாஸ்கந்தன்" சஞ்சிகையையும் வெளியிட்டு வருவதும் யாவரும் அறிந்ததே.

எங்கள் அதிபர் அவர்கள் எம் பாடசாலை மூலமாக நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்ற உயர்ச்சியும் , அதனை திறம்படச் செய்வதற்கான பயிற்சியும், உயர்ந்த ஒழுக்கத்தின் ஆட்சியும் உள்ளவர்கள், எம் கல்லூரியில் இயங்காமல் இருந்த பல மன்றங்களையும் மற்றும் சபைகள், சங்கங்களையும் திறம்பட இயங்கவைத்து அவற்றுக்கு உத்வேகம் கொடுத்தவர்கள். எம் கல்லூரியின் பழைய கட்டடங்களைத் திருத்தி அதன் கட்டட அமைப்பிற்கு ஓர் ஒழுங்கான கலைவடிவம் கொடுத்தவர்கள்.

மாணவச் செல்வங்களின் சீருடை ஒழுங்கை சிறப்புறச் சீர்ப்படுத்தி, அவர்களின் மனதில் கல்லூரிப் பற்றையும் ஒழுக்க சீலத்தையும் திறம்பட விதைத்தவர்கள். தனியே புத்தகப் படிப்பு மட்டுமன்றி , நாம் ஏற்றுச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி எடுத்துக் கூறி , நாம் பல்துறைகளிலும் ஈடுபட்டு , எம் திறமைகளை வளர்ப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி , எம் வாழ்க்கையை வென்றெடுப்பதற்காக எம்மை நல்வழிப்படுத்துபவர்கள். கண்டிப்பும் , கருணையும் நிறைந்த எம் அதிபர் அவர்கள் , பண்போடு பழகி அன்போடு பல அறிவுரைகள் கூறுவார்கள். அதிகாலை முதல் அந்தி சாயும் வேளை வரை கல்லூரியிலேயே நின்று, சுயநலம் கருதாது எங்கள் கல்லூரி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு நாட்டின் உயர் பாடசாலைகளுக்கு நிகராக எங்கள் கல்லூரியையும் உயர் நிலையடையச் செய்தவர்கள்.

எங்கள் எல்லோருக்காகவும் அரும்பாடுபட்ட எங்கள் அதிபர் அவர்கள் இக்கல்லூரிச் செல்வங்களின் உள்ளங்களில் மட்டுமன்றி, இக் கல்லூரி சார்ந்த சமூகத்தவர்கள் யாவரது உள்ளங்களலும் என்றென்றும் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருப்பார் என்றால் அது மிகையாகாது. ஓய்வு பெறும் வயதினிலும் ஓயாத ஊக்கமும் உழைப்பும் கொண்ட எங்கள் அதிபர் அவர்கள் எல்லா வகையான நிறைவும் பெற்று நல்லாரோக்கியத்துடன் என்றும் வாழ்ந்திட எல்லாம் வல்ல ஏகனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

# English Day Celebrations

## 03.10.2005




The chief guest Mrs S. Gnaneswaran (Former Teacher of English) is welcomed. English Union President Mas R. Kogulnath is also in the Picture.



A recitil of primary kids


அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்களின் சேவை நயப்பு விழா 31.10.2006

முகப்பு வாயிலில் இருந்து ஊர்வலம். மலர்மாரி பொழியும் மாணவர்கள்.


ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

அதிபர் திரு வ. ஆறுமுகம் அவர்களின் சேவை நயப்பு வைபவம்

நலம்புரிக் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தும் திரு கு.வாகீசன் (பிரதி அதிபர்)

## அதிபரின் பணிகளை

# பட்டியற்படுத்தலும் பகுப்பாய்வு செய்தலும்



**வ.சிவலீலாதேவி**

**பகுதி முதல்வர்**

ஈழமணித் திருநாட்டின் மகுடமென விளங்கும் யாழ்ப்பாணத் துவீபத்தின் வடபாலமைந்துள்ள புத்தூர்ப் பதியதனில் வள்ளலார் மழவராயர் கந்தையா அவர்களால் காலத்தின் தேவையை உற்றுணர்ந்து சமயக் கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும் உள்ளிட்டும் கிராமிய மக்களின் அறிவுப்பசியைப் போக்கவெனவும் அமைக்கப்பெற்ற ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவராகவும், விஞ்ஞானப் பட்டதாரியாகவும் விளங்கிய திரு வ.ஆறுமுகம் அவர்கள் 1986ம் ஆண்டு இக் கல்லூரிக்கு இடமாற்றலாகி ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக 2006ம் ஆண்டு வரையில் ஆற்றிய பணிகளினை இங்கு பட்டியலிடுதலோடு பகுப்பாய்வு செய்தலையும் நோக்காகக் கொண்டு இக் கட்டுரை வடிவமைக்கப்படுகிறது.

எளிமையான தோற்றமும், உற்சாகமான செயற்பாடும் கொண்ட இவரிடம் ஆடம்பரம் என்பது கிஞ்சித்தும் அணுக முடியாதது. சிறந்த ஆளமைக்குரிய தோற்றத்தைக் கொண்ட அதிபர் அவர்கள் உடல், உள வளம் நிறைந்த ஓர் உன்னத ஆசிரியராக 20 ஆண்டுகள் இக் கல்லூரியில் பணிபுரிந்தமை கல்லூரிக்குக் கிடைத்ததோர் வரப்பிரசாதமாகும். மாணவர்களது மனநிலைகளை துல்லியமாக அறிந்து கொண்டு அவர்களது நலனை அவர்களது பாங்கில் சென்று நல்வழிப்படுத்திய ஆசிரிய ஆதர்சம் நிறையப் பெற்றிருந்தமையே அவரை ஓர் சிறந்த ஆசிரியராக, சிறந்த நிர்வாகியாகப் பரிணமிக்கச் செய்தது எனலாம்.

இவரது கற்பித்தல் பணி உயர்தர மாணவர்களுக்குக்காய் ஆரம்பமாகிறது. கணிதபாடத்தினைச் சிறப்பாகக் கற்பித்து வந்ததோடு பல்கலைக்கழகப்பிரவேசத்திற்கு விஞ்ஞானத்துறை மாணவர்கள் இக்கல்லூரியிலிருந்து பல காலம் உள்வாங்கப்படாதிருந்தமையினை நிவர்த்தி செய்தற்பொருட்டாய் விஞ்ஞானத்துறையில் கூடுதலான அக்கறைப்பாட்டினைக் காட்டினார். இவரது சிறப்பான கற்பிதலினால் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கணிதத்துறையில் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இவரது செயற்பாடுகள், திறமைகள், மாணவர்களை வழிப்படுத்தும் முறைகள் என்பவற்றை அவதானித்த பாடசாலைச் சமூகமானது பகுதித்தலைவராக ஏற்றுக்கொண்டது. மாணவர்கள் மத்தியில் அன்பால், ஒழுங்கு கட்டுப்பாடுகளினை ஏற்படுத்தினார். அதிபர் ஆசிரியர்கள் பெரியோர்களுக்கு மாணவர்கள் எவ்வாறு மதிப்புக்கொடுத்துப் பழகவேண்டும் என்பதனை அறிவுரை வாயிலாக எடுத்துக்கூறுவார். தவறு செய்த மாணவர் ஒருவர் தான் செய்த தவறை - தவறு என அறியவைப்பதில் கூடிய கவனம் செலுத்தி மாணவர்களை

நல்வழிப்படுத்தினார். இவரது மேலான சேவையினால் மிகக்குறுகிய காலத்தில் பிரதி முதல்வராக நியமிக்கப் பெற்றார்.

1995ம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. அச்சூழ்நிலையில் பாடசாலையின் பெறுமதி மிக்க சொத்துக்களும், கட்டடங்களும் சேதமாக்கப்பட்டன. அவ்வேளையில் எமது பாடசாலையின் அதிபராகக் கடமை புரிந்த திரு .வே. சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் கடமையிலிருந்து ஓய்வுபெறத் திரு வ. ஆறுமுகம் அவர்கள் அதிபராக 1995ம் ஆண்டு பதவியேற்றார். நாம் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்த போது சேதமுற்ற நிலையில் கட்டடங்கள் மட்டுமே இருந்தன. அந்நிலையில் கூட அதிபர் அவர்கள் எந்தவித சோர்வும் இன்றி “செய்யும் தொழிலே தெய்வம்” எனப்போற்றி காலை 7.00மணிக்கு பாடசாலைக்கு ஆஜராகுவார். பின் மாலை 4.00 மணிக்கு வீடு திரும்புவார். சனி, ஞாயிறு, விடுமுறை காலம் என்று எதனையும் பாராது மாணவர் நலன் கருதி பாடசாலைக்கு வந்து செல்வார். அன்றைய அசாதாரண சூழ் நிலையில் 1147 மாணவர்களே கல்வி கற்றனர். தற்போது இம் மாணவரகளின் எண்ணிக்கையானது 1764 ஆக உயர்வடைந்தமைக்கு அதிபர் அவர்களின் விடாமுயற்சியும், தளரா்த மன உறுதியுமே காரணம் எனக் கூறலாம்.

ஆசிரியர்கள் முகாமைத்துவப் பணியாளர்கள், மற்றும் ஊழியர்கள் அனைவரையும் நண்பர்களாகவும், மாணவர்களை தன் பிள்ளைகள் போன்றும் வழிப்படுத்தினார். மனிதராய் பிறந்தவரை மட்டுமல்ல சகல ஜீவராசிகளையும் ஏன் விலங்குகள், செடிகள், கொடிகளையும் கூட வெறுத்தலாகாது. வேதனைக்குள்ளாக்கக் கூடாது. எனக் கூறும் இவர் வாடிய பயிர்களைக் கண்ணுறும் போதெல்லாம் தானும் வாடும் மனநிலையைக் கொண்டிருந்தார். இவ்வாறான ஈரமனம் படைத்த அதிபர் அவர்கள் தனக்குத் தீங்கு விளைவிப்பவர்களைக் கூட அவர்கள் நாண உதவிசெய்வது, நேசிப்பது போன்ற இன்னோரன்ன மேலான பண்புகளினைத் தன்னகத்தே கொண்டிருந்தார்..

தனது குடும்ப நலனிலும் மேலாக பாடசாலை நலனை மதித்து செயற்பட்டு வந்தார். அதுமட்டுமன்றி, விடாமுயற்சியுடன் செய்வதைத் திருந்தச் செய்வதே வெற்றிக்கு வழி என எடுத்துக்காட்டிய பெருந்தகையுமாவர். எதிரகாலத்தில் மாணவர்கள் எதிர் கொள்ளும் சகல விதமான கல்விச் சவால்களையும் தீர்க்கக் கூடிய வகையில் இன்னோரன்ன பல்வேறு பணிகளினை உறுதியான இலட்சியத்தோடு முன்னெடுத்து வந்த அதிபர் அவர்களது சோமாஸ்கந்தக் கல்லூரிக்கான பங்களிப்பினை பல்வேறு உப தலைப்புக்களில் நோக்குதல் இங்கு பொருத்தமென எண்ணுகின்றேன். அவற்றுட் சில...

**பௌதீக வள மேம்பாடுகள்:-**

- 1995-2006ம் ஆண்டு வரை 730,000.00 ரூபா பெறுமதியான தளபாடங்களை கல்வித் திணைக்களம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை, தர்மகர்த்தா சபை என்பவற்றின் பங்களிப்புடன் உருவாக்கித் தளபாடப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தமை

- 1997-1998ம் ஆண்டு காலப் பகுதியில் பிரதம பகுதியில் 9வகுப்பறைகளும், மலசல

கூடத்தொகுதியும், U.N.H.C.R. நிறுவனத்தினதும், பாடசாலைச் சமூகத்தினதும் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது.

- 1997-1998ம் ஆண்டு காலப் பகுதியில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை, தர்மகர்த்தா சபை என்பவற்றின் பங்களிப்புடன் விளையாட்டு மைதானம் விஸ்தீரணப்படுத்தப்பட்டது

- 1999-2000ம் ஆண்டு காலப்பகுதியில் மூலவள நிலையக் கட்டடத்தினைத் தொடர்ந்து தெற்குப் புறமாக அமைக்கப்பட்ட 4 வகுப்பறைத் தொகுதியும், மனையியற் கூடமும், ஆசிரியர்களுக்கான துவிச்சக்கர வண்டித்தரிப்பிடமும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சபை, தர்மகர்த்தா சபை என்பவற்றின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.

- 2000-2001ம் ஆண்டு காலப்பகுதியில் விஞ்ஞான ஆய்வு கூட மேல்மாடிக் கட்டட மேம்பாடும், விளையாட்டு மைதான வடக்குப்புற சுற்

- 2001-2004ம் ஆண்டு காலப்பகுதியில் வள்ளலார் அவர்களால் அமைக்கபெற்ற பிரதான மண்டபத்தினை அழிவுறாது பாதுகாக்கும் நோக்கமாக பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடன் சுண்ணாம்புச் சுவர்களை நீக்கி சீமெந்தினாலான சுவர்களாக , புதியன புகுவதற்கு இடமளிக்கப்பட்ட போதிலும் புதிய கட்டடத்தில் பழையன பழையவாறே பேணப்பட்டு வள்ளலார் அமைத்த கட்டடம் அவ்வாறே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

- 2004ம் ஆண்டு காலப்பகுதியில் பிரதான மண்டபத்திற்குத் தெற்குப்புறமாக 240அடி நீளமான மாணவர்களின் துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது.

- 2003-2004ம் ஆண்டு காலப்பகுதியில் திறந்த வெளி அரங்கின் வடக்குப்பக்கமாக அமைக்கப்பட்டுள்ள 4 வகுப்பறைத் தொகுதிகளும், தரம் 8,9 பிரிவுகளுக்கான பகுதி முதல்வர் அலுவலகமும், விளையாட்டு உபகரணங்களைப் பாதுகாக்கும் அறையும், ஆண்பிள்ளைகளுக்கான மலசல கூடமும், நடை பாதை விஸ்தரிப்பும், பெண்பிள்ளைகளுக்கான மலசலகூடமும், G.T.Z நிறுவனத்தின் பங்களிப்புடனும் பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடனும் அமைக்கப்பட்டுள்ளது.

- 2003-2004ம் ஆண்டு காலப்பகுதியில் திறந்த வெளியரங்கு பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டது.

- 2003-2004ம் ஆண்டு காலப்பகுதியில் முகப்பு வாயிலுக்குரிய நிலமானது பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, தர்மகர்த்தா சபை என்பவற்றின் பங்களிப்புடன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

- 2003-2004ம் ஆண்டு காலப்பகுதியில் 1999ம் ஆண்டுப்பிரிவு உயர்தர மாணவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கல்லூரியின் பெயர் பொறித்த முகப்பு வளைவினை யாழ்-

பருத்தித்துறை வீதி அருகில் அமைத்ததோடு நிறுவுநர் அவர்களின் திருவுருவச் சிலையினையும் அனைவரது பார்வைக்கும் ஏற்றவகையில் பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடன் நுழைவாயிலில் அமைத்துப் பிரபல்யப்படுத்தியமை.

❖ 2004ம் ஆண்டு காலப்பகுதியில் பிரதம பகுதியை புனரமைப்புச் செய்ததுடன் வகுப்பறைகளினைச் சுற்றி மூடிய சுவரும் பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.

❖ 2004-2005ம் ஆண்டு காலப்பகுதியில் G.E.P.2 திட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடனும், பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்புடனும் 10 வகுப்பறைகளுடன் கூடிய மாடிக்கட்டடம் அமைத்து, பார்வையாளர் அரங்கு, களஞ்சிய அறை, தரம் 6-7 பகுதி முதல்வர் அறை என்பனவும் அமைக்கப்பட்டது

❖ 2004ம்ஆண்டு காலப்பகுதியில் சோமாஸ்கந்தனுக்குத் தனியான ஆலயம் ஒன்றினை பழைய மாணவரான திரு அ.பதியமரன் அவர்களது முழுமையான பங்களிப்புடன் அமைக்கப்பட்டு தற்போது அப்பணியானது நிறைவுறும் தறுவாயிலுள்ளது.

❖ 2004ம் ஆண்டு காலப்பகுதியில முன்னாள் அதிபர் அமரர் குமாரசுவாமி ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை அமைப்பதற்கு, புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள பழையமாணவர்களின் உதவியுடனும், உள்நாட்டிலுள்ள பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, தர்மகர்த்தா சபை என்பவற்றின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் தடங்கலுற்று நிறைவுறமுடியாத நிலையில் உள்ளது

மேலே கூறப்பட்ட செயற்பாடுகளுள் 2004ம் ஆண்டு காலப்பகுதியில் தளபாடம் உற்பத்தி செய்வதற்கு தேவையான மரங்களினை தர்மகத்தா சபை அங்கத்தவர்களது உதவியுடன் குறைந்த விலைக்கும், நிறுவுனருடைய குடும்ப உறவினரிடமிருந்து இலவசமாகவும் ஏறத்தாழ ரூபா 6இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியான மரங்களை தானே முன்னின்று, முறைப்படி அனுமதி பெற்று அம்மரங்களினை தறிப்பித்து பல சிரமங்களுக்கு மத்தியில் விசேட பார ஊர்தியில் கல்லூரிக்குக் கொண்டுவந்து, அவற்றை உபயோகத்திற்குத் தக்கவாறாக அரிவித்து தளபாடங்களை உருவாக்கியமை. மாணவரின், நலன்களிலும் கல்லூரி வளர்ச்சியிலும் கொண்ட ஆத்மார்த்தமான ஈடுபாட்டினை வெளிப்படுத்துகிறது. மேலும் பிரதான மண்டபத்தினை பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணியானது வள்ளளார் அமைத்த கட்டடம் அவ்வாறே பேணப்பட்டமை என்பதைக் காட்டிலும் எதிர்மறையாக நன்றிமறவாத பண்பினையும், அதிபர் அவர்கள் வள்ளலார் மீது கொண்ட பெரு மதிப்பினைப் புலப்படுத்துகின்றது.

இதுமட்டுமன்றி அதிபர் அவர்கள் பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவரது இல்லங்களுக்கும் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளுடன் சென்று நிதியினை சேகரித்து முகப்புவாயில் நிலத்தினை பெற்று சோமாஸ்கந்தக் கல்லூரியை

யாழ் - பருத்தித்துறை வீதிக்கருகில் கொண்டுவந்து பிரபல்யப்படுத்தியமை காலத்தின் தேவையாகவும், கல்லூரியின் எழுச்சியாகவும் அதிபரின் மகத்தான சேவைக்கான நிரந்தர முத்திரையாகவும் அமைகிறது.

**கல்வி மேம்பாடுகள்**

❖ 2001-2002ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டிலுள்ள பழையமாணவர்கள் மூலமும், கல்வித் திணைக்களத்தின் மூலமும், நலன் விரும்பிகள் மூலமும் G.E.P.2 திட்டத்தினூடாகவும் மொத்தமாக 32 கணினிகளினைப் பெற்று சகல வசதிகளினையும் கொண்ட தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றினை அமைத்து தரம் 6-13 வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படைக் கணினி அறிவினை ஏற்படுத்தி வருவதோடு, நவீன கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்தமை.

❖ 2002ம் ஆண்டு சிறுவர் பூங்கா பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.

❖ 2003ம் ஆண்டு காலப்பகுதியில் கல்லூரி முழுவதுமாய் ஏககாலத்தில் இறை பிரார்த்தனையினையும் கல்லூரிக் கீதத்தினையும் கேட்பதற்கு ஏதுவாக ஒலி பெருக்கி வசதியினை ஏற்படுத்தியதோடு காலையில் இறை பிரார்த்தனையினையும்,மாலையில் கல்லூரிக் கீதத்தினையும் மாணவர்கள் பிரார்த்திக்கவும் இசைக்கவும் கட்டாயப்படுத்தியமை.

❖ 2001ம் ஆண்டு காலப்பகுதியில் பாடத்திட்டத்திட்டத்திற்கு ஏற்பத்தொடரமுடியாமல் மெல்லக்கற்கும் மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்குத் தர்மகர்த்தா சபையின் உதவியுடன் தேநீரும் , சிற்றுண்டியும் வழங்கி மாலை வேளைகளில் பின்னூட்டல் வகுப்புக்களினை ஆரம்பித்தமை.

❖ 2004ம் ஆண்டு காலப்பகுதியில் இணையத்தளம் (Internet), மின்னஞ்சல் (E-Mail) என்பவற்றினை பாடசாலையில் ஏற்படுத்தியமை

❖ 1999-2005ம் ஆண்டு காலப்பகுதியில் ஆங்கிலதின விழாவினை அறிமுகம் செய்ததோடு, மாணவர்கள் இலகு முறையில் ஆங்கில அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக வெளிச்ச வீடு **(LIGHT HOUSE)** என்னும் திட்டத்தினையும், தரம் 6 முதல் ஆங்கில மொழி மூலமான கல்வியினையும் எமது பாடலையிலும் ஆரம்பித்தமை.

❖ 2001-2004ம் ஆண்டு காலப்பகுதியில மாணவர்கள் சமயவிழுமியங்களைப் பின்பற்றி வாழ்க்கையிற் செயற்படவேண்டும் என்ற ஆர்வத்தினால் வள்ளலாரின் உயிலில் எழுதப்பெற்ற 63 நாயன்மார்களுடைய குரு பூசைகளை ஒழுங்குற செயற்படச் செய்ததோடு திருஞானசம்பந்தரது குருபூசை விழாவினைத் தீருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடாத்தி வருவதுடன், நவராத்திரி விழா, தைப்பொங்கல், சித்திரைப்பொங்கல், சிவன் தேவஸ்தானத்தின் உற்சவ விழா வித்தியாரம்பதின விழா, அத்திபாரதினவிழா, என்பவற்றையும் சிறப்புற நடாத்தி வருதல்.

❖ 1996ம் ஆண்டு காலப்பதியிலிருந்து இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்தி மாகாணமட்ட, தேசியமட்டப் போட்டிகளில் பங்கு பெறச் செய்தமை.

அத்துடன் கல்வி ரீதியான செயற்பாடுகளுக்காக தேசிய மட்டத்தில் ஜனாதிபதி விருது பெற்றமை, ஏறத்தாழ 25 வருடங்களுக்குப் பின்னர் மருத்துவத் துறைக்கு மாணவன் தெரிவு செய்யப்பட்டமை அதிபரது காலப்பகுதியிலேயேயாகும்.

❖ கல்வித்திணைக்களத்தின் மூலம் நூலக வாரம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே அதிபர் அவர்களால் 2001ம் ஆண்டு காலத்திலிருந்தே நூலக வாரம் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் தங்கள் பிறந்த நாள் பரிசாக நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்யும் வழக்கத்தினை ஏற்படுத்தியமை. இதற்கு முன் உதாரணமாக அதிபர் அவர்கள் வருடா வருடம் பிறந்த நாளின் போது நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

❖ 1996ம் ஆண்டு காலத்திலிருந்தே மாணவர்களுக்கப் பொது அறிவானது அவசியமானது என்பதனை மேலான அறிவாற்றலினால் உணர்ந்த அதிபர் அவர்கள் எமது பாடசாலையில் பொது அறிவுப் பரீட்சை அறிமுகப்படுத்தியதற்குப் பின்னரே உயர்தர மாணவர்களுக்க பொது அறிவுப்பரீட்சையானது அறிமுகப்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவானவை:-

❖ 1996ம் ஆண்டிலிருந்தே பாடசாலையின் பழைய மாணவர்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஒன்றிணைத்து அதற்கான கிளைச்சங்கங்களினை கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா, இலண்டன், ஜேர்மன் போன்ற இடங்களில் அமைத்தும், ஏற்கனவே இருந்த சங்கங்களினையும் துடிப்பு மிக்க சங்கமாக செயற்படச் செய்தும் பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளில் அக்கறை கொண்டு செயற்படச் செய்தமை.

❖ 2003ம் ஆண்டிலிருந்து மேற்கத்தேய Band வாத்திய அமைப்பினை ஆரம்பித்தமை.

❖ ஆசிரியர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த ஆசிரியர் சம்மேளனம் என்பதனை மாற்றியமைத்து பாடசாலையில் தொழில்புரியும் அனைத்து அங்கத்தவர்களையும் உள்ளடக்கியதான நலன்புரிக்கழகமாக 2000ம் ஆண்டிலிருந்து மாற்றியமைத்தமை.

❖ பெண் பிள்ளைகள் போன்று ஆண்பிள்ளைகளும் சீருடையில் வரவேண்டுமென்று ஆண்களுக்கான சப்பாத்து. **S.S.C** பொறிக்கப்பட்ட சட்டைப்பை, கழுத்துப்பட்டி என்பவற்றினை 2004ம் ஆண்டிலிருந்து அறிமுகம் செய்தமை.

❖ 2003ம் ஆண்டுகாலப்பகுதியிலிருந்து நிர்வாகச் செயற்பாடுகளை இலகு படுத்தும் நோக்கில் பகுதி முதல்வர்களுக்குத் தனியான அலுவலகங்கள் ஏற்கடுத்திக் கொடுத்தமை
.

❖ 1995ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து தர்மகர்த்தா சபை சொத்துக்களை சீரான முறையில் பரிபாலித்து, வள்ளலார் அவர்களின் அபிலாசையினை நிறைவேற்றும் வழிக்குக் கொண்டுவந்தமை.

❖ 2001ம் ஆண்டிலிருந்த நிறுவுநர் நினைவாக மாவட்ட மட்ட மாணவர்களுக்கிடையில் திருக்குறள் வினாடிவினாப் போட்டியினை நடாத்திவருவதோடு, திருவள்ளுவர் சிலையினையும், திருக்குறள் மையம் ஒன்றினையும் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்துள்ளமை

❖ 2005ம் ஆண்டிலிருந்து நிறுவுநர் ஜனன நாளன்று நிறுவுநருடைய திருவுருவப்படம் சிவன் ஆலயத்திலிருந்து மேளவாத்திய சகிதம் எடுத்துவரும் முறையினை பல வருடங்களிற்குப் பின்னர் மீண்டும் ஏற்படுத்தியதோடு அன்றைய தினம் விழாவில் கலந்து

கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கும் முறையினையும் ஏற்படுத்தி, அத்துடன் அன்றைய தினம் நிறுவுநர் நினைவாக சோமாஸ்கந்தன் சஞ்சிகை வெளியிடும் முறையினையும் அறிமுகப்படுத்தியமை.

மேலே கூறப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும், பாடசாலைச் சமூகத்தினதும் பங்களிப்புக்கள் பெரிதும் உதவியாக அமைந்திருந்தன் இந்த வகையில் பாடசாலையின் தர்மகர்த்தாசபையின் மூலம்.5,657,141 ரூபா 89 சதமும், பழைய மாணவர் சங்கத்தின் மூலம்.5,183,798 ரூபா 07 சதமும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் 2,391,002ரூபா 69 சதமும் அரசசார்பற்ற நிறுவனங்களில் U.N.H.C.R நிறுவனத்தின் மூலம் 736,420ரூபாவும்,G.T.Z நிறுவனத்தின் மூலம் 1,590,,795ரூபாவும், G.E.P-II திட்டத்தின் மூலம் 4,400,000ரூபாவும், RRAN நிறுவனத்தின் மூலம் 500,000 ரூபாவும் DCB மூலம் ரூபா 350,000 பெற்று பாடசாலை அபிவிருத்திப் பணியானது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரச சார்பற்ற நிறுவனத்தின் பங்களிப்பிலும் பார்க்க எமது பாடசாலைச் சமூகத்தினது பங்களிப்பானது மேன்மைப்பட்ட வகையில் அமைந்திருந்தமை பாடசாலைச் சமூகத்தினர் கல்லூரியில் காட்டும் அக்கறையினை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதாவது பாடசாலைச் சமூகத்தினரின் பங்களிப்பு 13,231,942 ரூபா 65 சதமாக இருக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட பங்களிப்பு 6,840,795 ரூபாவாக அமைந்துள்ளது.

மேற்கூறிய அனைத்து செயற்பாடுகளும் இனிதே நிறைவேறி பாசாலையின் துரித வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது சிறந்த தலைமைத்துவத்துடன் கூடிய முகாமைத்துவம் கொண்ட அதிபரது நிர்வாகக் கட்டமைப்பு என்று கூறுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். கல்லூரியின் பழைய மாணவராக விளங்கிய அதிபர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் தமக்கு மேலான பங்கு உண்டு என உணர்ந்து இதுவரை காலமும் சேவையாறறிய அதிபர் அவர்களது காலம் கல்லூரியின் பொற்காலம் என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.

கல்லூரியின 17வது அதிபராக விளங்கி , பவளவிழா ஆண்டில் பணி செய்து ஓய்வு பெறும் எமது கல்லூரி அதிபர் திரு வ.ஆறுமுகம் அவர்கள் இதுவரை காலமும் கல்லூரியினுடைய பௌதிக வளங்களையும், கல்வி வளங்களையும்,கல்வி சார் சமூகத்தின் உறவு மேம்பாடுகளையும் உருவாக்கி உன்னதமான பாதையில் கல்லூரியை வெற்றிநடை போடுவதற்கு வழிவகுத்தது போன்று தொடர்ந்தும் அவர் தம் பணிகளினை மேன்மேலும் எமது கலலூரிக்கு வழங்க வேண்டுமென வேண்டுகிறேன்

## ஓய்வு பெறும் அதிபருக்கு சில வார்த்தைகள்....

*தாங்கள் தொடக்கிவைத்த பணிகளில் முடிவுறாத நிலையிலுள்ள குமாரசுவாமி மணிமண்டபத்தினையும், சோமாஸ்கந்தன் ஆலயத்தினையும் தாங்களே நிறைவேற்றி வைப்பதன் வாயிலாக ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், தர்மகத்தாசபையினர்கள், நலன்விரும்பிகள் என அனைவரும் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்*

அதற்கு வேண்டிய உடல், உள ஆரோக்கியத்தினைப் பெற்று குடும்பசகிதம் நலமே வாழ எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப்பெருமான் அருள் புரிவாராக.

*30.10.2006 யாழ் தினக்குரல் நாளிதழிலும் 31.10.2006 தினக்குரல் (கொழும்பு) நாளிதழிலும் பிரசுரமாகிய நயப்புரை*

# பிறர்க்கென வாழும் பெருந்தகை

வடக்கில் பிரயோக கணிதத் துறையின் மிகப் பெரும் ஆசானாக விளங்கும் வ.ஆறுமுகம் (Applied Arumugam) எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அகவை அறுபதை எய்தி புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

1976 முதல் 1986 வரை தலைநகரில் றோயல் கல்லூரியில் ஆசானாக விளங்கி பலரது நன்மதிப்பையும் பெற்ற இவர் தான் கற்ற கல்லூரிக்காகவும் தனது பிரதேச மாணவர்களுக்காகவுமெனத் தனது தலைநகர வாழ்வைத் துறந்து ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் ஆசிரியரானார். தொடர்ந்து பகுதித்தலைவர் பிரதி அதிபர் எனப் பல தளங்களில் சேவையாற்றி 1996 முதல் 2006 வரை ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் அதிபராக விளங்கி ஓய்வு பெறுகிறார்.

எளிமை, நேர்மை உண்மை என வாழ்வில் சில இலட்சியங்களைத் தனித்துவமாகக் கையாளும் குணமுடையவர். இவரது காலத்தில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நகரப் பாடசாலைகளுக்குரிய வளத்தையும் தரத்தையும் பெற்றுக் கொண்டது. விடுமுறைநாள் நோக்காது நாடோறும் காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்லூரியில் கல்லூரிக்காக வாழ்ந்தவர்.

கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் ஜனாதிபதியடம் விருதுகள் பெற்றமை, விளையாட்டுத்துறையில் தேசிய மடடப் போட்டிகள்வரை முன்னேறியமை எனப் பல தளங்களில் கல்லூரியின் உயர்ச்சிக்கு ஏணியாகச் செயற்பட்டார். புலம்பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவர்களைத் திரட்டி கனடா, லண்டன்,சுவிஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்ககங்களையும் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தையும் நிறுவி கல்லூரியில் அபிவிருத்தியைக் கண்டுள்ளார்.


இவ்வுலகம் ஏன் வாழ்கிறது எனக் கூறும் புறநானூற்றுப் புலவனாகிய கடலுண் மாய்ந்த இளம் பெரு வழுதி


*'தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முயலுநர் உண்மையானே''*

எனக் கூறுகின்றமை அதிபர் வ. ஆறுமுகத்துடன் பொருத்திப் பார்க்கத் தக்கதாகும்.


**'சிவத்தமிழ்ச் சொல்லழகர்' ச.லலீசன்,**
**ஆசிரியர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**


## Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)







**Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)**




# இல்ல மெய்வல்லுநர் போட்டி - 18.02.2006




நிகழ்வின் பிரதம விருந்தினர் திரு க. ஞானலிங்கத்தை (பழைய மாணவர், தலைமை அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்) கல்லூரி அதிபர் மாலை சூட்டி வரவேற்கிறார். சிறப்பு விருந்தினர் திரு நா. சுவாமிநாதனும் (பழைய மாணவர், உதவிக் கல்விப் பணிப்பாளர் - யாழ் வலயம்) படத்தில் உள்ளார்.



முதலிடம் பெற்ற தில்லைநாதர் இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை இல்லத் தலைவர் ச.விஜிதரன், தலைவி மயூரிணி தங்கராசா ஆகியோர் பிரதம விருந்தினரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். (இவ்வாண்டுப் போட்டிகளில் தில்லைநாதர் - 414, கந்தையா - 408, மழவராயர் - 363, பொன்னம்பலம் - 308 புள்ளிகளைப் பெற்றிருந்தன.)




## வெற்றிப் பெருமிதத்துடன்.....



வடக்கு கிழக்கு மாகாண மட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற கல்லூரியின் கரப்பந்தாட்டக் குழுவினர் தாம் பெற்றுக் கொண்ட வெற்றிக்கிண்ணத்தை வைபவரீதியாக கல்லூரி அதிபரிடம் கையளிப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு வ.செந்தூரனும் படத்தில் உள்ளார்.



# FAREWELL TO THEE

**Mrs.S.Jeyarajah**

He is a good shephered to guide the students,
a kind judge to decide the teachers,
a generous planner to consult the parents,
an agreeable solicitor to request the society,
a pleasant giver to educate the poor children,
and a great leader of inspiring guidance and stiff efforts.
Who do you think is he?
No doubt,it is our Arumugam Sir!

I happily remember the year 1996
When I stepped into SSC,with panics
I inquired where the principal was
and they directed me towards a margosa tree
I was shocked to see a lean and tall man
who was very simple with a half sleeve shirt
I approached very slowly to greet him
but he himself greeted me first
"Are you the English teacher Miss.Sivasakthy?
transferred to SSC from ASV?

Now we are in the year 2006
Those kind words still heard and echoes
I know the first impression is the best
And I experience it the last
I just can't forget the first meeting
And it will last for the many more years
A "tireless" principal we all astonish
performed many duties as he always wish
I confidently assure you Sir
Your efforts efforts will keep the school with vigour

The retirement is for your "Tireless deeds"
May God always fulfill all your needs
We sincerely thank you for your service
May God always bless you with solace
Each stone in the school premises praises you
May God bestow his blessing showers on you
We wish you a healthy and peaceful retired life!
May God guard and guide all through your life!

# தந்தையாய் வழி காட்டும் பெருமகன்



திரு பொன். சுகிர்தன்
முகாமைத்துவ உதவியாளர்

அதிபர் திரு வ. ஆறுமுகம் அவர்களுடன் சில காலங்களே பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது ஆயினும் முற்பிறப்புத் தொடர்பாளர் போல் மிகவும் இனிமையாக அரவணைக்கும் அன்புரிமையான தொடர்பு எனக்கு அவருடன் ஏற்பட்டது.

திரு த. விஸ்வலிங்கம் அவர்கள் கல்லூரியில் இருந்து ஓய்வு பெறுவதற்குச் சில காலங்கள் முன்னரேயே எனது வருகையும் அமைந்திருந்தது. புகழ் பூத்த கல்லூரி ஒன்றின் அதிபர் எவ்வாறு நடந்து கொள்வாரோ? என என்னுள் நினைத்து திருகோணமலையில் இருந்து இடமாற்றலாகி வந்த எனக்கு அவரது எளிமையும் இனிமையும் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் தந்தன.

என் வயதொத்தவர்கள் என்னூரவர்கள் நண்பர்கள் எனப் பலருடன் கல்லூரியில் பழகும் சூழல் ஏற்பட்டுப் போக கல்லூரி வாழ்வின் இனிமை என்னுள் தென்றலாய் வருடத் தொடங்கியது


அதிபர் திரு வ. ஆறுமுகம் அவர்கள் - இன்று முகாமைத்துவத் துறையில் அதிகம் விரும்பிப் பேசப்படும் தந்திரோபாய முகாமைத்துத்தையே கையாண்டார். தலைமைத்துவத்திற்குரிய அணுகுமுறைகளில் இது இன்றியமையாததாக விளங்குகிறது. எங்கள் கல்லூரி என்ற உணர்வும் பெருமையும் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும் என்பதில் மிகுந்த அவதானமாக கைங்கரியங்களை மேற்கொண்டார்.


மாணவர்களின் சீருடைகளில் தென்படும் கல்லூரிக்கான தனித்துவ அடையாளங்கள் தொடங்கம் பாரிய வேலைத்திட்டங்கள் வரை யாவும் கல்லூரியின் பெருமையைப் பறை சாற்றுமாறு அமைத்துக் கொண்டார்.

எமது கல்லூரியை நிறுவிய பெருமகனார் அமரர் மழவராயர் கந்தையா ஆவார். இத்தகு கல்லூரியின் பெயர் திக்கெட்டும் பரவக் காரணமாயிருந்தவர் அமரர் அதிபர் திரு சு. குமாரசுவாமி ஆவார். இவ்விருவருக்கும் கல்லூரி மண் என்றும் கடமைப்பட்டது. இதனை நன்கு உணர்ந்து இருவரது பெருமைகளும் மேலோங்க வேண்டும் என்பதற்காக அரும் பெரும் காரியங்களை கல்லூரியில் முன்னெடுத்து வருகிறார்.


அதிபருக்கு ஓய்வு என்பது பதவி வழியாக மாத்திரமே. ஓய்வின் பின்னரும் இவரை எதிர்நோக்கியவாறு பாரிய பணிகள் காத்திருக்கின்றன. இவர் முன்னெடுத்த பணிகள் யாவும் தொடரவும் முழுமையடையவும் எம்மால் ஆன ஒத்துழைப்பை வழங்குவோம்.


## Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)



## Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)





# THE ROYAL HIGHNESS

Mrs. R. Perinpamoorthy

My heart gets overwhelming merriment
to pen a few lines on our Princi's retirement.
A Royal man with all power of Royalty
leading a simple life in real.
And surely secures a unique place
in the list of principals.

I find no words to sing thy glory!
but very much eager to praise thee!
I get proud for serving under thee!
and many longing for the golden chance.
The precious days of your reign never come again
and your leaving leave us in pain.

In the S.S.C. garden you've given shade
and thy glory never fade.
You're enriched with love and kindness
and the tower of strength amidst distress.
We realized the burden you've faced
to make this S.S.C. as " *Royal Garden*".

Scholars and Diplomats tossing their heads
making salutations and prostrations to thee!
All wonder thou art in teaching and administration
maintain a good rapport and no fringe areas.
Sir! You are the *God father* of S.S.C kids
I wonder how is it possible!!!

Sir! Felicitations for thee!!
Let's ever sing thy glory!
And
Pray for your good health!!!!!

# வழிகாட்டிய உத்தமர்



**திருமதி.சு.கோபாலகிருஷ்ணன்**
**ஆசிரியர்**

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்பது திருவள்ளுவர் வாக்கு. இவ்வாக்குக்கு இலக்கணமாய் வாழ்பவர் சிலரே.அந்த வகையில் நமது அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் தாம் கற்ற கல்விக்கமைய தமது பணியை திறம்பட ஆற்றியுள்ளார்.

தற்கால யுத்த அனர்த்த செயற்பாடுகளிலும், சமாதான முன்னெடுப்பு நேரங்களிலும், எவ்வாறு கல்லூரியைச் செயற்படுத்துதல் வேண்டும் என்ற செயல்திறன் கொண்டவராக அவர் காணப்படுகின்றார்.

மனித விழுமியங்களில் அன்பு, பணிவு, சாந்தம், சகிப்புப்புத்தன்மை, பொறுமை, முதலிய தன்மைகள் கொண்டவராய் வாழப் பழகிக் கொண்டவர் எமது அதிபர் அவர்கள். கால நேரம் தளராது, அமைதியாக ஒழுங்குற பாடசாலைக் கடமைகள் நடைபெறுதலில் மிகவும் அவதானமாக நடந்து கொள்பவர்.

எமது கல்லூரி அபிவிருத்தி விடயங்கள் சரிவர இயங்குவதில் அவரது அயரா உழைப்பு தங்கியுள்ளமையை நாம் கண்ணாரக் காண்கிறோம். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கிணங்க, எமது கல்லூரி இயங்குவதிலும் பெறும் பாராட்டுகளிலும், அவர் தங்கியிருப்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம்.


காலைநேரவரவு ஒழுக்கு, ஆராதனை உடற்பயிற்சி, கற்பித்தல், கற்றல்நிகழ்ச்சிகள், கணிப்பீடுகள், மன்ற போட்டிகள் மெய்வல்லுனர்போட்டிகள், சமயநிகழ்வுகள், விழா என்று ஒவ்வொன்றையும் உன்னிப்பாக ஆராய்ந்து, சரிவர நடைபெற ஆசிரியர்களை முன்னெடுத்து வைப்பதிலும் மாணவர்களை அதற்கென தயார்படுத்திவைப்பதிலும் சிறந்த வல்லுனராகவும், கடமையுணர்வுடையராகவும் எமது அதிபர் காணப்படுவதனை நாம் பார்க்கலாம்.


பாடசாலை நாட்களில் மட்டுமன்றி ஓய்வு நாட்களிலும் தாம் மட்டுமன்றி, ஏனைய ஆசிரியர்களையும் மேலதிக கற்பித்தல், போட்டிகள், பரீட்சை செயலமர்வுகள் நடத்த தேவையான வசதிகளை ஏற்படுத்துவதில் ஊக்கமுடையவர்.

மற்றவர் பாராட்டுதலுக்கோ அன்றி சுயநலத்திக்காகவோ செயல்படாது தாம் வாழ்வாங்கு வாழ வேண்டும், மற்றவரும் வாழவேண்டும் என்னும முனைப்பும், சுயசிந் தனையும் உடையவராய் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்புடையவர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள்


நம் பாடசாலை கடமைகள் யாவற்றிலும் உணர்வு பூர்வமாக அதிபர் காட்டிய வழிப்படுத்தல்கள் என்றும் கலந்திருக்கும். இறை அருளுடன் நீடு வாழ வாழ்த்துவோமாக.


## Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)



**Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)**



# தன்னலம் கருதாச் சேவையாளன்

திருமதி.க.ஜெயபாலன்
ஆசிரியர்



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தன் அருளுடன் பல வருடங்களாக எம் கல்லூரியை நிர்வகித்த எமது அதிபர் குழாமில் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் இன்று எம்மை விட்டு ஒய்வு பெறும் நிலையில் நாம் அவரது சேவைகள் பலவற்றை நினைவு கூருதல் வேண்டும்.

அவரது பல வருடகால சேவையில் ஒவ்வொரு செயற்பாடுகளும் மிகவும் அவதானமாக நிதானமாகவும், நடைபெற்று வந்தமை யாவரும் அறிந்தவிடயம், வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியாயினும் ஏனைய மெய் வல்லுனர் போட்டியினும், பரிசுகளையும், சான்றிதழ்களையும், வெற்றிக்கேடயங்களையும் பெற்றுத் திகழும் கல்லூரியாக அமைய ஊக்கப்படுத்தியவர் நமது அதிபர் ஆறுமுகம் அவர்கள்

பாடசாலையில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் கடமை ஒழுங்குகள் யாவும் அதற்கமைய சரிவர நடைபெறுவதில் மிக அவதானமும், கவனமும் உடையவராக அதிபர் அவர்கள் காணப்பட்டமை நாமறிந்த விடயம். எல்லாவற்றிலும் மகுடம் வைத்தாற்போல் அமைந்தவை என்று கூறின், பாடசாலையில் நடைபெறும் ஏனைய சிறப்புறுநிகழ்ச்சிகளாகிய ஆசிரியவருடாந்த ஒன்றுகூடல், உயர்தர மாணவர் ஒன்றுகூடல், சமய நிகழ்வுகளாகிய 63 நாயன்மார் குருபூசை, ஒவ்வொரு மன்ற நிகழ்வுகள், நூல் நிலையம் பாடசாலை ஏனைய அபிவிருத்தி அமைப்புக்கள் யாவற்றுக்கும் ஊக்கமும் ஆக்கமும் தந்து சிறப்புற வழிநடத்தியவர் நமது அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள்,

இவ்வாறு வழி நடத்துதல் கடினமான பணியெனினும், தன்கடன்பணி செய்து கிடப்பதே எனும் அப்பரின் வாக்கிற்கேற்ப தன்னலம் பாரா சேவையை இடம் பெயர்ந்து வாழும் சூழ்நிலையிலும் திறம்பட இயக்கிய பெரும் பணிக்குரியவராக மதிக்கப்படுகின்றார். இவ்வாறு சுயநலம் பாராது, கடமையே கண்ணாய் அதனையே பெரிதாக நினைத்து வாழ்ந்த பெரியார்கள் வரிசையில் ஒருவராக உலாவிய நமது அதிபர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் என்றும் நலமுடன் தொடர்ந்தும் தமது சேவைகளை வழங்கி, மகிழ்வுடன் நெடிது வாழ இறையருளை வேண்டி நிற்போம்.

# சுயநலமறியாத பொதுநலவாதி

கு. சிவரூபினி
சிரேஷ்ட மாணவ முதல்வர்



எமது கல்லூரி முதல்வரும் எனது குருவுமாகிய திரு.வ.ஆறுமுகம் அவர்கள் எமது பாடசாலையில் இணைந்தது முதல் இன்று வரை பாடசாலைக்காக தன்னையே அர்ப்பணித்து செயற்படுகின்ற சிறந்த அதிபராவார். இவர் தனது வருட சேவைகாலப்பகுதியில் $^{3}/_{4}$ பங்கு காலப்பகுதியை எமது பாடசாலையிலேயே கழித்தார். அவர் காலை 7.00 மணிக்கெல்லாம் பாடசாலைக்கு சமூகளித்து மீண்டும் 4.00 மணியளவிலேயே திரும்புவார். அதிபர் அவர்கள் சிறந்த பிரயோக கணித ஆசானாவார். இப் பாடத்தில் இவர் கொண்ட ஆழமான அறிவு, கற்பிக்கும் உத்திகள்,தீவிரவிருப்பம் போன்றவை மாணர்களை மிகவும் கவரக்கூடியதாக இருக்கின்றன.


நாம் அவரிடமிருந்து கற்றுக் கொண்ட மிகப்பெரிய விடயம் அவரது ஒழுங்கே ஆகும். இவர் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் அக்கறையுடனும் விருப்பத்துடனும் குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் திறன் கொண்டவர். இது மாணவர்களாகிய எங்களிற்கு பயனுள்ளதாக அமைந்தது.


அதிபர் அவர்கள் எங்களிற்கு தினமும் வகுப்பு நடத்துவார். ஒரு நாள் அவரிற்கு சுகயீனம் ஏற்பட்டது அன்றும் எங்களிற்கு வகுப்பு நடத்தினார். அவரது சுகயீனம் காரமாக நாம் அடுத்த நாள் வகுப்பிற்கு செல்லவில்லை. ஆனால் அதிபர் அவர்கள் தனது உடல் நிலையையும் பாராது வகுப்பிற்குரிய நேரத்திற்குச் சமூகமளித்திருந்தார் ஆனால் நாங்கள் செல்லவில்லை. உடனே என்னை அழைத்து ஏன் வகுப்பிற்கு வரவில்லை எனக்கேட்டார். நான் என்ன சொல்வதென்றே தெரியாது திகைத்தேன். இவ்வாறு தனது உடல் நிலையையும் பாராது இந்தப் பாடசாலை மாணவர்கள் கல்வியில் சிறப்படைய வேண்டும், பாடசாலை முன்னேற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளையே கொண்டு செயற்பட்டவராவார்.

இவரது ஆடம்பரமற்ற வாழ்க்கை முறையும், எளிமையான உடையும் அன்பான பேச்சும் அனைவரையும் கவர்ந்தது. இவர் அடிக்கடி எமக்கு சொல்லும் தாரகமந்திரம் **பழகவழக்கத்தை பழகுங்கள், படிப்பு தானாக வரும்** என்பதாகும். தேவையான போது எம்மை கண்டிப்பதுமுண்டு. சுயநலமே அறியாத பொதுநலவாதியாவார்.ஒரு சிறந்த சமயபத்தனும் கூட. பாடசாலையில் அனைத்து விழாக்களும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற பேரவா கொண்டவர். இது மட்டுமல்லாது பாடசாலை கட்டடங்களை அபிவிருத்தி செய்தலில் சிறந்து விளங்கினார்.

எமது பாடசாலையின் அனைத்து நடவடிக்கைகளையும் சிறந்த முறையில் திட்டமிட்டு முழுமையாகத் தன்னை அரப்பணித்து செயற்பட்டமையால் மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர் மத்தியிலும் சமூகத்தினர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்ட சிறந்த அதிபராவார். எமது அதிபரது செயற்பாடுகள் எல்லாம் எம்மால் எத்தனை வருடங்கள் சென்றாலும் மறக்க முடியாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு நற்செயற்பாடுகளும் எமது மதிற்பிற்குரிய அதிபரும் ஆசிரியருமாகிய திரு.வ.ஆறுமுகம் அவர்களையே சாரும்.


**Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)**



## Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)



# எமக்கோர் முன்னுதாரணம்



*ஸ்ரீ.வாகீசன்*

**சிரேஷ்ட மாணவ முதல்வர்**

யாழ்ப்பாணச் சூழலில் புத்தூரில் உள்ள எமது பாடசாலையானது வள்ளலார் அமரர் மழவராயர் கந்தையா அவர்களினால் நிறுவப்பட்டது. இப்பாடசாலையானது இன்றுவரை சிறப்புப் பொருந்தியதும் பெருமை மிகுந்ததுமாக மிளிர்கின்ற அதே வேளை பாடசாலையுடன் கூடிய சோமாஸ்கந்தர் ஆலயம் மாணவ செல்வங்கள் மனதை லயிக்கும் இடமாகவும் விளங்குகின்றது. மானவர்களிடையே சமய நிகழ்வுகளை வளர்க்கும் நோக்குடனும் அவர்களின் பேச்சுத்திறன், சிந்தனைத்திறன், தலைமைத்துவ பண்பு என்பவற்றை வளர்க்கும் இடமாகவும் இப்பாடசாலை அமைவதுடன் அதிபர், ஆசிரியர், மாணவர் பாடசாலை மேல் வைத்துள்ள அளவு கடந்த பற்றும் பாடசாலை வளர்ச்சிக்கு காரணமாகின்றன.

அதிபர் அதிபராக மட்டுமன்றி ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சின்னஞ்சிறார் களுடனும் அவர்களது நிலையில் இருந்து உரையாடும் நற்குணம் படைத்தவராக நற்பண்பாளராக, புன்னகை பூத்தவராக உயர்ந்து நிற்கின்றார். எங்கள் அதிபர் அவர்கள் மாணவர்களை கல்வியில் சிறந்தவர்களாகவும் அறிவுத்திறன் மிக்கவர்களாகவும் உலகம் போற்றும் நற்பிரஜைகளாகவும் உருவாக்குவதற்கு முயற்சிப்பவராகவும் முயற்சிக்க வைப்பவராகவும் விளங்குகின்றார். அதிபர் அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஒழுக்க நடவடிக்கைகளால் பொதுவாக மாணவர்களின் வரவை கணக்கிட்டு மாணவர்கள் வராமைக்குரிய காரணங்களை அவர்களிடம் கேட்டும் பெற்றோர்களை அழைத்தும் ஒழுக்க நடவடிக்கைகளை மேம்படுத்தி புகழ் சேர்த்துள்ளரார். மற்றும் மாணவர்களின் ஏனைய செயற்பாடுகளிலும் அதாவது விளையாட்டுக்களின் வளர்ச்சியிலும் மாணவர்களின் பரீட்சை சித்தி பற்றி ஆராய்ந்து ஆசிரியர்களிடம் கலந்தாலோசித்து அவர்களின் நிறைகுறைகளை சரியான பாதையில் இட்டுச் செல்கின்றார்.

பாடசாலையின் முன்புறமாக படிப்படியாக வளர்சியடைந்துவரும் குமாரசுவாமி மணிமண்டபம் அமைத்தற் பணிகள் மற்றும் சிறுவர் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் ஆலயம் ஆகியன மூலம் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சி புலனாகின்றது. அதிபர் அவர்களின் சுறுசுறுப்பும் ஆர்வமும் மாணவர்கள் மேலும் மேலும் வளர்ச்சியடைய வழி செய்கின்றது.

ஓய்வுக் காலத்திலும் எமது கல்லூரிக்காகத் தொடர்ந்து பணி செய்து வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

# ஒரு புன்னகை சிந்துமையா....

எங்கள் கல்லூரி அதிபர் ஓய்வு பெறுகிறார் என்ற செய்தியை அறிந்த நாள் முதல் என் உள்ளத்தில் ஏனோ ஒரு பதகளிப்பு. இவ்வாண்டின் ஆரம்பத்தில் சஞ்சிகைக்கான ஆங்கங்களைக் கோரி திரு லலீசன் ஆசிரியர் உரையாற்றிய போது இச்செய்தியை வெளிப்படுத்தினார். என் ஆழ் மனம் இதை ஏற்க மறுத்தாலும் காலத்தின் கட்டளைகளை ஏற்றுத்தானே ஆக வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கவே மனம் அமைதியுற்றது.

எங்கள் கல்லூரிக்கும் அதிபருக்கும் இடையிலான உறவுத் தொடர்பு என்பது கணவன் மனைவிக்கிடையிலான அத்யந்த உறவு போன்றதோ என நான் கருதுவதுண்டு. சனி, ஞாயிறு ஆகட்டும் மற்றும் விடுமுறை நாள்களாகட்டும் அதிபரை நிச்சயம் கல்லூரியில் தரிசிக்கலாம். வீடு மனைவி எல்லாம் கல்லூரிக்குப் பின்னால்தான். எப்படி இவரால் மட்டும் இப்படி முடிகிறது?

பாடசாலை நாளென்றால் முகத்தைக் கொஞ்சம் கடுப்பாகவே வைத்திருப்பார். விடுமுறை நாளென்றால் பிறைவேற் கிளினிக்கில் வைத்தியம் செய்யும் டாக்டர் போல நைசாகக் கதைப்பார். அவரது நிர்வாக வெற்றிக்கு இப்படியெல்லாம் முகங்களை மாற்றிச் செயற்படுவதுதான் காரணமோ? அவர் ஆறுமுகனல்லவா?

சிலவருடங்களுக்கு முன்பு ஒரு நாள். மதிய நேரம். தரம் 02 மாணவர்கள் சிலர் அதிபர் அலுவலகத்துக்கு அருகில் இருந்த எங்கள் கல்லூரி நிறுவுநரின் உருவச்சிலைக்கு அருகில் நின்று (சிலை முன்பு இவ்விடத்திலேயே இருந்தது) ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தம்முள் பிரிந்து பந்தயம்வேறு கட்டிக் கொண்டனர். அந்தச் சிலை யாருடையது என்பதே அந்தச் சிறுசுகளின் ஆராய்ச்சி.

"தடியோட நிக்கிறபடியா உது ஐயா சேர் தானடா" இது சிலர் கண்ட முடிவு.

"வாசல்லை ஆர் நிக்கிறது? ஒவ்வொரு நாளும் அதிபர் தானே நிக்கிறவர். உது அதிபற்றை சிலை தான்"

இது இன்னும் சிலரது கண்டுபிடிப்பு.

"ஆனால் உவர் வேட்டியோடயெல்லோ நிக்கிறார்" சந்தேகம் கிளப்பப்படுகிறது.

"உவர்தான் பள்ளிக்கூடத்தைக் கட்டினவர். அதுதான் சிலை வைச்சிருக்கினம்" சில பிஞ்சுகள் வாதிடுகின்றார்கள்,

சுவாரசியமாக நடைபெறும் இந்த வாதப்பிரதிவாதங்களை அதிபரும் இரசிக்கிறார். ஈற்றில் அவர்களை அழைக்கிறார். அமரர் மழவராயர் கந்தையாவைப் பற்றி ஒரு குட்டி வகுப்பெடுக்கிறார். சிறிசுகளின் முகத்திலும் ஒரு திருப்தி. அதிபரும் ஓரளவு திருப்தி அடைந்திருக்க வேண்டும்.

உடனடியாக ஒரு செயற்பாடு அவ்விடத்திலேயே நடக்கிறது. திரு லலீசன் ஆசிரியர் வரவழைக்கப்பட்டார். கல்லூரி பற்றியும் நிறுவுநர் பற்றியும் மாணவர் மனங்களில் பதியுமாறு எதிர்வரும் நாள்களில் சுவைபட உரையாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

பின் அவர்கள் தொடர்ந்து பேசிக்கொள்கிறார்கள்.

இவற்றை அவதானித்த எனக்கு அவரது செயற்பாடுகளின் வேகத்தின் மீது ஒரு மரியாதை பிறந்தது. இவரது காலத்தில் இங்கு கல்விபெறக் கிட்டியமைக்கு என்ன தவம் செய்துவிட்டேன்?

எங்கள் ஆசிரியர்களில் சித்திர ஆசிரியர் திரு தவதாசன் சேர் ஒரு காமெடித் திலகம். கடுப்பாக இருக்கும் அதிபரை சிரிக்கச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே தான். சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடந்த சம்பவம் இது. அன்று அதிபர் மிகவும் கண்டிப்புடன் இருந்தார். இடைநேரத்துடன் வீடு செல்லப் பாஸ் எடுப்பவர்களும் அன்றைய தினத்தைத் தவிர்த்துக் கொண்டனர். இவ்வேளையில் திரு தவதாசன் ஆசிரியர் அதிபரிடம் செல்கிறார். அதிபரின் வயதொத்தவராதலால் அன்னியோன்னியமாக அவருடன் பழகும் திறம் அவரிடமிருந்தது. கண்டிப்பின் வெளிப்பாடுகள் அவரிடமும் காண்பிக்கப்பட்டன போலும்.

தனக்குள் ரி.எம்.சௌந்தரராஜன் இருப்பதாக நினைத்துப் பாடல்கள் பாடும் திரு தவதாசன் ஆசிரியர் திடீரென்று பாடத் தொடங்கிவிட்டார்

"அவன் ஆறுமுகம்........ ஒரு புன்னகை சிந்துமையா....."

அதிபர் குழந்தைத் தனமாகச் சிரிக்கிறார். அவரது கடுகடுப்பு அன்று கலைந்து போகிறது. இதை எங்கள் ஆசிரியர் ஒருவர் கூறக் கேட்ட எனக்கு அதிபரைக் காணும் போதெல்லாம் "புன்னகை சிந்துமையா..." என்ற அடிகள் இயல்பாய் எழுந்து வரத் தொடங்கிவிட்டன.

**பா.பாலசுதன்**
தரம் 13 கலை

# பிறர் சொற்களை மதிப்பவர்

எங்கள் கல்லூரியின் பெருமைக்குரிய அதிபர் திரு வ.ஆறுமுகம் ஐயா ஆவார். எமது பாடசாலையை மீண்டும் நகரப் பாடசாலை ஒன்றுக்கு ஒத்ததான பீடுநடையைக் கொடுத்த சிறப்பு இவருக்குரியது.

எமது கல்லூரியில் பாரிய கட்டடங்கள் கட்டப்பட்டதும் கல்வி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதும் சிறப்பார்ந்த வளர்ச்சிநிலை மீண்டும் வெளிக்காட்டப்பட்டிருப்பதும் இவரது சேவைக்குக் கிடைத்த பலன்களாகும்.

பொதுவாகப் பாடசாலைகளில் அதிபர்களாகச் செயற்படுவோர் அதிகாரத்தை நிலைநிறுத்தும் செயற்பாடுகளிலேயே கூடிய கவனத்தைச் செலுத்துவர். ஆனால் எங்கள் அதிபர் பாடசாலை நாள்களில் காலை 7மணி தொடக்கம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு

வகுப்பு எடுப்பதிலும் மாணவர் கல்வி வளர்ச்சியிலுமே கூடிய கவனத்தைச் செலுத்தினார்.

அதிபர் அவர்களிடம் சமய நம்பிக்கை ஆழமாக உள்ளது. எங்கள் கல்லூரியில் பல இலட்ச ரூபா செலவில் சோமாஸ்கந்தருக்கெனத் தனியான ஆலயம் அமைக்க ஆவன செய்த இவரது உள்ளத்திறம் இதனை வெளிக்காட்டுகிறது. மாணவர் சமூகமயமாக்கப்படுவதற்கும் அவர்கள் மனத்தில் நல்ல ஒழுக்கப் பண்புகள் கருக்கொள்வதற்கும் ஆலய வழிபாடு அவசியம் என்பதை உறுதியாக நம்பினார். எனவே தரம் 5, 6, 7, 8 மாணவர்கள் முறையே திங்கள், செவ்வாய், புதன், வியாழன் நாள்களில் கட்டாயம் ஆலய வழிபாட்டுக்கு வருகை தரவேண்டுமெனவும் வெள்ளிக்கிழமைகளில் எல்லா மாணவர்களும் கோவில் பூசையைத் தரிசித்து வழிபட வேண்டுமெனவும் வழிமுறைகளைக் காட்டினார்.

நாயன்மார்களின் குருபூசைத் தினங்கள் கிரமமாக நடைபெறுவதில் கவனம் செலுத்தினார். குருபூசையின் போது குறித்த நாயனார் பற்றிய உரை பொறுப்பாசிரியரால் இடம்பெறச் செய்வதோடு தானும் கூடவே நின்று அதில் நாம் எவ்வளவிற்குக் கிரகித்துள்ளோம் என்பதை அறியும் பொருட்டுப் பொறுப்பாசிரியர்களோடு தானும் சேர்ந்து வாய்மொழி மூல வினாக்கள் தொடுத்து எம்மை ஊக்குவிப்பார்.


எளிமையை விரும்பும் அதிபர் அரைக்கை சேட் அணிவதை வழக்கமாக கொள்வார். சேட்டை எப்போதும் வெளியில் விட்டிருப்பார். கால்களில் எளிமையான செருப்புகளையே அணிந்திருப்பார். எப்படிப்பட்ட விழாக்கள் நடந்தாலும் இவரது உடையின் பாணியில் மாற்றமிருக்காது.


ஒரு முறை நவராத்திரி விழாவில் சிறப்புரை ஆற்ற வருகை தந்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அம்மையார் நவராத்திரி விழாக்களின் போது எல்லோரும் கலாசார உடையில் வருகை தர வேண்டும் எனப் பகிரங்க வேண்டுகோளொன்றை விடுத்தார். அதை உளப் பூர்வமாக ஏற்றுக் கொண்ட அதிபர் அன்று முதல் கலாசார விழாக்கள் மற்றும் பரிசளிப்பு விழா என சிறப்பான நிகழ்வுகளின் போதெல்லாம் வேட்டியணிந்து நெற்றியில் வெண்ணீறணிந்து மிக எளிமைக் கோலத்தில் கலந்து கொள்ளத் தொடங்கினார். இவ்வாறான நற்பண்புகள் மிக்கஅதிபரின் சேவை கிடைத்தது எங்கள் சைவப் பாடசாலை செய்த மாபெரும் தவம்.

அதிபரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவோம்.


ஸ்ரீ.மிர்தா
தரம் 12 கலை

**Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)**




**Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam.**
**Performances for the last 10years.(1996 -2005)**




**Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam.**
**Performances for the last 10years.(1996 -2005)**



# வாழ வழிபல காட்டுகிறார்

அருமை அதிபர் எம் அதிபர்
அன்பால் எம்மை அரவணைக்கின்றார்
அவரோ பிரம்பைக் கையிலெடார்
எம்மைப் பிள்ளைகளாய்க கருதிடுவார்

அல்லும் பகலும் பாடசாலைக்காய்
அயராது சேவையாற்றுகின்றார்
அடிக்கும் ஆசிரியரை இனங்கண்டு
அன்புப் பாடம் புகட்டுகிறார்

ஏழை மாணவர் எனக்கண்டால் - மனம்
ஏங்கித் தானும் மாறுகிறார்
ஏற்றம் ஒன்றையே, எண்ணுகிறார்
எமது இதயத்தில் வாழுகிறார்

கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை
கண்காணித்தே நின்றிடுவார்
ஆற்றல் உள்ள மாணவரைப்
போற்றி மேலும் உயர்த்துகிறார்

குற்றம் புரியும் மாணவர்க்கு
சித்தம் தெளியும் போதனைகள்
நித்தம் செய்யும் சீராளன்
வாழ வழிபல காட்டுகின்றார்

அன்பும் பண்பும் அரவணைப்பும்
அமையப் பெற்ற எம் அதிபர்
வாழ்க வாழ்க நீடூழி
வளர்க தொடர்க அவர்சேவை

**யோ. சரணி**
தரம் 07 K

# வரலாறு உமை நினைக்கும்

காலைக் கதிரவன்போல் கல்வியிலே இருளகற்ற
காலைமுதல் கங்குல்வரை காதலித்தீர் கல்லூரியை
வித்தைகள் பலபயிற்றும் கல்லூரி தாயவளை
விதந்துரைக்க வைத்திட்ட உத்தமரே வாழியவே

செக்கச் சிவந்த சூரியன்போல் முகமிருக்கும்
சேவைகள் செய்யத்தினம் செயலில் துடிப்பிருக்கும்
வெள்ளிக் கம்பிபோல் வெண்மை மயிரிருக்கும்
வெற்றிகள் பலபடைக்க நெஞ்சில் உரமிருக்கும்

அதிபராய்ப் பத்தாண்டு அயராது பணிசெய்தீர்
ஆக்கிவைத்தீர் மாணவரை சாதனையாளர்களாய்
உங்கள் பணியாலே உருவானோர் பலரையா
உம் புகழைப் போற்றிடுவோம் நாளும் நாமையா

கண்களிலே காந்தம் கருணையாய் கவர்ந்திழுக்கும்
பைய உலா வரவே எம் மனது கிடுகிடுக்கும்
மெல்லக் கற்போரை மென்மையாய் அணுகிடுவீர்
மேலதிக வகுப்பு மூலம் மேன்மையுற வைத்திடுவீர்

குருபூசை நாளென்றால் பக்திக்களை தெரிந்திருக்கும்
நாயன்மார் வரலாற்றை நாமறிய வகையிருக்கும்
அவல்கடலை சாதத்தை அள்ளித்தரும் மனமிருக்கும்
அன்பான அதிபரையா வரலாறு உமை நினைக்கும்

ந.தேனுசன்
தரம் 11 K

## எங்கள் அதிபர்

அன்பாய் எம்மை அணைத்திடுவார்
அன்னை தந்தை போல் இருப்பார்
ஆடம்பரம் இல்லா எளிமைத்யுடன்
சிறந்த குணங்கள் அவர் சொத்தாம்

உற்றமும் சுற்றமும் பள்ளியென
உளன் உறக்கம் பாராது
என்றும் கடமையே கண்ணாக
கல்லூரி அன்னையை காத்து நின்றார்

காலைப் பிரார்த்தனை கூட்டத்திலே
கண்டிப்புடன் உரை தருவார்
காலம் பாரா அர்ப்பணிப்புகளும்
காலம் உள்ளவரை நாம் மறவோம்.

**பா.கஜானி**
தரம் 2K

## அன்பான அதிபர்

அதிபர் எங்கள் அதிபர்
ஆறுமுகம் அதிபர்
அன்பான அதிபர்
அறிவை வளர்க்கும் அதிபர்
நாம் அவரைக் கண்டதும்
வணக்கம் சொல்லிச் சிரிப்போம்
நல்ல நல்ல அதிபர்
நீண்ட காலம் வாழ்க.

**இ.தனுஷன்**
தரம் 2P

எங்கள் எங்கள் அதிபராம்
தங்கமான அதிபராம்
அன்பு முகம் காட்டியே
அரவணைக்கும் அதிபராம்

சின்னஞ் சிறுவர் நாமுமே
சிறுகுறும்பு செய்திட்டால்
சீர்திருத்தம் காணவே
வழிகாட்டும் அதிபராம்


**அ.சசீதா**
தரம் 1P


## எங்கள் அதிபர்

எங்கள் அதிபரின் பெயர் திரு.வ.ஆறுமுகம் எங்கள் அதிபர் மிகவும் நல்வலர்.அவர் மிகவும் அமைதியானவர். நாம் பவளவிழா ஆண்டிலே தரம் 1 ற்கு வந்தபோது எமக்கு கால்கோள் விழா வைத்து வரவேற்றார் எனக்கு நல்ல விருப்பம்


**சு.டென்சா**
தரம் 1P


**Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)**



**Subjectwise Percentage Analysis of the G.C.E.(O/L) )Exam. Performances for the last 10years.(1996 -2005)**



# தாய்மை உள்ளம்

அன்றொரு நாள் கொடூரமான கோடை வெய்யில் தகித்தது. இடைவேளைக்கு முன் எமக்கு உடற்கல்விப் பாடம் நடைபெற்றமையினால் தாகம் இருமடங்காகியது. இடைவேளை மணி அடித்தது. நீரைதேடி ஓடினோம். என்ன சோதனை அன்று முழுவதும் மின்சாரம் தடைப்பட்டமையினால் நீர்க்குழாய்களில் நீர் இல்லை. கிணற்றடிக்கு ஓடினோம். அங்கே கிணற்றடியில் பெரியதொரு கூட்டம். நெருங்க முடியவில்லை. இன்று தண்ணீர் குடிக்க முடியாது என்பதனை திட்டவட்டமாக தெரிந்து கொண்டேன். சிறிய மாணவர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு கொண்டிருந்தார்கள். தாகத்தையும் அடக்கமுடியயில்லை. மணிஅடிக்கப் போகிறது. சிறியவர்கள் தண்ணீர் தண்ணீர் என அங்கலாய்தனர்.

அந்தவேளை "அதிபர் வாறார்" என்று ஒரு மாணவன் கூக்குரலிட்டான். எல்லோரும் வகுப்பறையை நோக்கி ஓடத்தொடங்கினோம். அதிபர் எங்களைக் கைதட்டிக் கூப்பிட்டார். பயத்துடன் திரும்பி வந்தோம். இன்று தண்டனையும் பெறவேண்டியுள்ளது எனப்பயந்தோம். "சிறிய பிள்ளைகள் முன்னால் நிற்க எல்லோரும் வரிசையாக நில்லுங்கள்" என்றார். சரிதான் எங்களுக்குத்தான் முதலில் தண்டனை என நினைத்தேன். " இன்று மின்சாரம் இல்லை. எமது இறைக்கும் இயந்திரமும் பழுதடைந்தது விட்டது. அதனால் வேறு இடத்திலிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டுவந்துள்ளோம். இப்போது உங்களுக்கு நீர் கிடைக்கும் வரிசையாக குடித்துவிட்டுச் செல்லுங்கள்" என்றார்.

எனது தாகம் தணிந்தது. நிமிர்ந்து பார்த்தேன் தூரத்தில் அதிபர் ஒரு தாயின் வடிவுடன் எங்களை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

தே.சானுகா
தரம் 4P

# எங்கள் அதிபர்

அதிபராம் எங்கள் அதிபர்
அன்பும் பண்பும் மிக்கவர்
ஆறுமுகம் என்ற பெயருடனே
ஆவலுடன் எம் தேவைகளை நிறைவேற்றிடுவார்
சிந்தனைகள் பல கூறியே
சிரித்த முகத்துடன் மலர்ந்திருப்பவர்
பஞ்சாமில்லாத அயராத சேவையும்
பண்புள்ள உள்ளமும் கொண்டவர்
எம் அதிபர் ஐயா வாழ்க
பல்லாண்டு காலம் வாழ்க

செ.சபிஸ்ரா
3K

## அதிபரைப் போற்றுவோம்

*ஈழத்தின் சிரசாம்*
*யாழ்ப்பாணத்தில் புதுமை புரியும்*
*புதுமையூராம் புத்தூரிலே*
*வள்ளல் மழவராயர் கந்தையா*
*வழங்கிய கொடையாம்*
*யாழ் சோமாஸ்கந்த கல்லூரி*

*இக் கல்லூரி புதுவை வாழ் மக்களின்*
*அறிவுக் கண் திறக்கும் திறவுகோலாம்*
*இத்திறவு கோலின் பயனாம்*
*ஆசான் மார், வைத்தியார், பொறிவல்லுனர்*
*ஆகியோரை உருவாக்கிய*
*ஆலயம் என எங்கள் கல்லூரியைப் போற்றுவோம்*

*கல்வியை வழங்கி அறிவைப்*
*புகட்டும் ஆலயத்தின் அதிபராம்*
*திரு.ஆறுமுகம் ஐயா காலத்தில்*
*அற்புதங்கள் அதிகம்*
*ஆய கலைகளின் சிறப்பு அபார*
*வளர்ச்சி இக்கால்த்திலேயே ஏற்பட்டது.*

*அதி உயர் கட்டக்கலை வேகமாக வளர்தது*
*சிறந்த அறிவு வளர்ச்சி ஊற்றெடுத்துப் பாய்ந்து*
*மாணவன் ஒழுக்கக் கட்டுப்பாடும்*
*கணினி அறிவும் மேலாங்கியது*
*அதிபரின் பணிக்கு தலைசாய்ந்து*
*வணங்குவோம்.*


**ஆ.புவிதா**
தரம் 4K


## எங்கள் அதிபர்

அன்பான அதிபராம்
ஆறுமுகம் அதிபரே
இரக்கம் மிக உள்ளவர்
ஈசன் அருள் உடையவர்
உயர்ந்த தோற்றம் உடையவர்
ஊக்கமுடன் உழைப்பவர்
எங்கள் கல்வி வளரவே
ஏற்ற பணிகள் செய்பவர்கள்
ஐயம் இன்றிக் கற்கவே
வழிகள் பல செய்பவர்
வாழ்க அதிபர் வாழ்கவே


**சி.சஞ்சிகா.**
தரம் 2P


**Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)**



## Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)



# எம் மனதில் நிறைந்த அதிபர்

எமது பாடசாலை ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இது புத்தூர் என்றும் கிராமத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலையின் அதிபராக விங்குபவர் திரு.வ.அறுமுகம் ஆவார். இவர் தனக்கெனவே உரித்தான சிறந்த தலைமைத்துவ ஆளுமை கொண்டவர். இவர் மற்வர்களிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் ஏனைய பாடசாலைச் சமூகத்தினருடனும் அன்பாகவும் நற்பண்புடனும் பழகும் உயர் குணம் உடையவர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பாடசாலையின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டு வருகின்றார். அவரின் முயற்சியினால் மாடிக்கட்டடங்கள், மணிமண்டபம் என பலவசதிகள் ஏற்பட்டன. மாணவர்களின் கணினிக் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு பல கணினிகளைப் பெற்றுத் தந்துள்ளார் எம்மை அறிவுமிக்கவர்களாகவும் பண்பில் சிறந்தவர்களாகவும் உருவாக்குவதில் அரும்பாடுபட்டு வருகின்றார். தனது கடமையே கண்ணகாக கொண்டு செயற்படும் எம் அதிபரை மாணவர்களாகிய நாம் அன்பாக நேசிக்கின்றோம்.

ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பின் உபஅதிபராகவும் இருந்து தற்போது அதிபராக சேவையாற்றி ஒய்வுபெறும் இவரது ஈடிணையற்ற சேவைகள் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

**ம.கார்த்திகா**
தரம் 3K

# எமது அதிபர்

எமது கல்லூரி அதிபரான திரு.வ.ஆறுமுகம் அவர்கள் கடந்த பல வருடங்களாக சேவையாற்றி தனக்கென ஒரு தனிமதிப்பை பெற்றுக்கொண்டிருப்பவர். இவரின் சேவைக்காலம் நிறைவு செய்யும் காலத்தில் அவரது சேவையை கௌரவிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

எமது அதிபரான திரு.வ.ஆறுமுகம் அவர்கள் எமது பாடசாலை பவளவிழாவைகாணும் ஆண்டில் ஓய்வு பெறுகின்றமை அனைவருக்கும் பெருமை தரும் விடயமாகும். அதிபர் அவர்கள் சோமாஸ்கந்தக்கல்லூரியை உன்னத நிலைக்கு கொண்டுவர பலதிட்டங்களைத் தயாரித்து பாடசாலையை முதன்மை பெறச் செய்தார்.

கோப்பாய் கோட்டத்தில் முதன்மை பெற்ற பாடசாலையாக விளங்குவதற்கு ஆசிரியருடனும் மாணவர்களும் சேர்ந்து தனது பணியை திறம்பட செய்து பாடசாலையை முன்னேற்றினார். இவர்மாணவர் சில தவறுகள் விட்டாலும் கூட அவற்றை திருத்தி அவர்களுக்கு நல்வழியை காட்டுபவர். அதிபர் ஆறுமுகம் அவர்கள் கடமை,கண்ணியம்,காட்டுப்பாடு போன்றவை பேணுவதில் அக்கறை செலுத்துபவர்.

எமது அதிபர் இன,மத,சமய வேறுபாடின்றி அனைவரையும் சமமாக மதித்து வழிநடத்துபவர் இவர் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இக் கல்லூரியின் அதிபராக பணியாற்றியவர்.

எமது கல்லூரியின் முன்பறமாக அமைக்கப்பட்டுவரும் குமாரசுவாமி மண்டபம் முன்னாள் அதிபரான குமாரசுவாமி ஐயா அவர்களுக்கு அர்ப்பணமாக கட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு நமக்கு பல அரிய சேவைகளை செய்து தற்போது ஓய்வு பெறுகின்ற அதிபர் ஆறுமுகம் ஐயாவின் ஓய்வுக்காலம் சிறக்கவும் தொடர்ந்தும் அவர் எமது கல்லூரிக்கான வழிகாட்டல்களை மேற்கொள்ளவும் வேண்டி வாழ்த்துகிறோம்.

**ந.நிலக்ஷிகா** 4K

# எங்கள் அதிபர்

அதிபர் எங்கள் அதிபராம்
ஆற்றல் மிக்க அதிபராம்
அன்பு காட்டி அரவணைத்து
அறிவைப் புகட்டும் அதிபராம்

பண்புகள் பலவும் கொண்டவராம்
பட்டங்கள் பலவும் பெற்றவராம்
பள்ளிச் சிறுவர் எம்மையெலலாம்
பார் புகழ வழி செய்பவராம்


பாடசாலையின் நல்வளர்ச்சிக்காய்
பற்பல கருமங்கள் ஆற்றுபவராம்
கடமை என்ற சொல்லிற்கே
கண்ணியமாய் வாழ்த்து காட்டுபராம்


கண்களை இமை காப்பது போல்
கல்விச்சாலையை கட்டிக் காப்பவராம்
காலை மாலை என்றும் பாராது
கல்விபெற வழி செய்பராம்


அறிவு என்னும் அகல் விளக்கை
ஆசையாய் நாம் என்றும் பெற்றிட
வழி அமைத்த அதிபரை நாம்
வாழ்க வாழ்கவென வாழத்துவோம்.

**கி.சர்மிளா**
தரம் 4M


## Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)




## Subjectwise Percentage Analysis of the G.C.E.(A/L) )Exam. Performances for the last 11years.(1996 -2006)



# Our Principal

Arumugam Sir!
Tis is how we call you
With affection.
Felicitation for you!
For your tire and service.
We pause for a moment
To see what you done to S.S.C
Our hearts stop to thank you.
No hearts dare to stop to frown.
For your service Stand firm to crown.
May God bless you!
For your good and healthy life.
For ever and ever!

**S.Sanchika.** ,Gr.10K

# To My Guru

A good teacher
takes many roles.
At S.S.C too
You have done much
to the school.
You're an administrator
to the society
You're a guide
to the poor
You're an adviser
To the teachers
You're a facilitator
And to many more
in a long list.
Well done sir!
And
Best wishes from....

**N.Thenujan** , Gr.11K

# The Venus of S.S.C

When I joined at S.S.C. as a student in Gr.12 Arumugam sir was our Principal. At that time I was very much attracted by his pleasant personality.
Swami Sathya Sai Baba says.............

Start the day with love
Spend the day with love
And
End the day with love
This is the way to
Achieve God.

According to this, our Principal practiced greeting-" Good morning" in the pleasant morning. From time to time he encouraged all to say 'Good morning' with each other in the morning.

He took special care in our studies and in moulding our character, I hope that I am very much fortunate enough for being a student under his administration. By by nature he would not hurt any one and he tried his best to over come that problem.

May God bless him with good health and may he continue to serve to SSC when ever he finds time......

**V.Thileepan**
Gr. 13 Commerce.




**Mayurathy**
Gr. 6 , English Medium

**A** Administrator
**R** Rector
**U** Utilizer
**M** Majesty
**U** Upholder
**G** Generocity
**A** Acadamic Personality
**M** Manager

**K.Prashanthy**
Gr. 7 , English Medium

# இரத்ததான வைபவம் - 03.05.2006




கல்லூரியின் வித்தியாரம்ப தினத்தைக் கௌரவிக்கும் வகையில் கல்லூரி மாணவர், ஆசிரியர் எனப் பலர் யாழ் போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு ஒரு தொகுதி இரத்தத்தைத் தானமாக வழங்கினர். இதன்போது எடுத்துக் கொள்ளப்பட்ட ஒருபடத்தையே காண்கிறீர்கள்.

## நூற்கண்காட்சி



கல்லூரியின் பவளவிழா அங்குரார்ப்பண நிகழ்வில் சிறப்பம்சமாக இடம்பெற்ற யாழ் ஸ்ரீலங்கா புத்தகசாலையினரின் புத்தகக் கண்காட்சி, விற்பனை நிகழ்வை கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு எஸ்.கனகராசா ஆரம்பித்து வைக்கிறார்.

# கல்விசார், கல்விசாரா ஆளணி - 2006




**இருப்போர் (இ-வ):** திருமதி த.சத்தியலிங்கம், திருமதி ம.கருணாமூர்த்தி, திரு பொ.சற்குணநாதன்,திரு சு. மோகனராசன், திரு க.தவதாசன், திரு மு.முரளிதரன், திரு வ. ஆறுமுகம், திரு கு. வாகீசன், திரு ச. லலீசன், திரு து. ஸ்ரீகனகசபேசன், திரு க.தில்லைநாதன், திருமதி சி.யோகேஸ்வரன், செல்வி சி.வடிவேலு, திருமதி சு. கோபாலகிருஷ்ணன்

**நிற்போர் I(இ-வ):** திருமதி றி, குணதாசன், செல்வி க.கந்தசாமி, திருமதி சு.வசந்தன், திருமதி கோ.பொன்வாசன், செல்வி கசற்குணலிங்கம், திருமதி சி,ஜெயராஜ் திருமதி. மே.பி. தம்பிராஜா, செல்வி ச.சந்திரசேகரம்பிள்ளை, திருமதி சி.குணசீலன், திருமதி சி.ஏகாந்தநாதன், செல்வி செ.செல்வரூபா, திருமதி ஜெ.இராஜமகேந்திரன், திருமதி ச.வேல்முருகன், திருமதி த.சுவாமிநாதன், திருமதி ரே.பேரின்பமூர்த்தி, திருமதி ஸ்ரீ.சாந்தகுமார், திருமதி வி.திருக்கேதீஸ்வரன், திருமதி ப.நாகராஜா

**நிற்போர் II(இ-வ):** திருமதி ச.நாகநாதன், திருமதி ஈ.கிருஷ்ணானந்தன், திருமதி ரே பிரபாகரன், திருமதி செ.கனகசபாபதி, திருமதி க.பிரபாகரன், செல்வி கோ.மார்க்கண்டு, செல்வி ர.கந்தையா, திருமதி ஜெ.கேதீஸ்வரன், திருமதி ச.இளங்கோ, திருமதி இ. சண்முகநாதன், திருமதி வ. ஸ்ரீவடிவேல், செல்வி இ.துரைராஜா, திருமதி நா. திலகராஜ், திருமதி த. தேவபாதம், திருமதி இ.கந்தசாமி, திருமதி க. ஜெயபாலன்,, செல்வி வி.அப்புத்துரை செல்வி கா.திருச்செல்வம்

**நிற்போர் III(இ-வ):** திரு பே.மகேந்திரன், திரு ச.நடராஜா, திரு க. புஸ்பராசா, திரு இ. பிரபாகரன், திரு சி. கணேசலிங்கம்,, திரு சி.சிவராம், திரு ப.பாலபவன், திரு க.கேதீஸ்வரன், திரு வ. செந்தூரன், திரு யோ.ஜெயகாந்தன், திரு து.உமாகாந்தன், திரு பொ.சுகிர்தன், திரு எஸ்.ஜே. ஸ்ரீபன், திரு வி. செவ்வந்திநாதக்குருக்கள்

# STAFF - 2006

**Principal**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Mr | V. | Arumugam | *B.Sc (Hons), P.G.D.E* |

**Deputy Principal**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Mr. | K. | Vakeesan | *Specialist Trd. (Science), B.A, P.G.D.E.* |

**Sectional Heads**

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | Mrs. | S. | Gobalakrishnan | *Specialist Trd. (Maths).* |
| 4 | Mrs. | M. | Karunamoorthy | *Specialist Trd. (Maths).* |
| 5 | Mr. | S. | Laleesan | *Specialist Trd. (Science), B.A (Hons), P.G.D.E.* |
| 6 | Mr. | S. | Mohanarajan | *B.A (Hons), P.G.D.E.,M.Ed.* |
| 7 | Mr. | M. | Muralitharan | *Specialist Trd. (Music),B.A , P.G.D.E,M.Ed. Saivapulavar, Siththantha Pandit.* |
| 8 | Mrs. | T. | Sathiyalingam | *Specialist Trd. (Primary Ed.).* |
| 9 | Mr. | P. | Satkunanathan | *B.Sc (Hons) Agri, P.G.D.E, M.Ed.,* |
| 10 | Mr. | T. | Srikanakasabesan | *B.A, P.G.D.E, H.N.D.C, M.Phil (Ed.).* |
| 11 | Miss. | S. | Vadivelu | *B.A, P.G.D.E .* |

**Suject Co-ordinaters**

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | Mrs. | S. | Jeyarajah | *Specialist Trd. (English), B.A, Sub.Co.(English)* |
| 13 | Mrs. | P. | Nagaraja | *Specialist Trd. (Hinduism), Sub. Co. (Hinduism)* |
| 14 | Mrs. | S. | Santhakumar | *B.A (Hons), P.G.D.E, Sub.Co.(Social Siudies)* |
| 15 | Mr. | K. | Thavathasan | *Specialist Trd. (Art), Sub.Co.(Aesthetic)* |
| 16 | Mrs. | T. | Thevapatham | *Specialist Trd. (Science), Sub.Co.(Science)* |
| 17 | Mrs. | V. | Thiruketheeswaran | *Specialist Trd. (Tamil), Sub.Co.(Tamil)* |
| 18 | Mr. | K. | VijayaKumar | *Specialist Trd. (Maths), Sub. Co. (Maths)* |
| 19 | Mrs. | S. | Yogeswaran | *Specialist Trd. (Home Eco.), Sub.Co. (Tec. Subjects)* |

**Tutorial Staff**

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | Mr. | P. | Balabavan | *Specialist Trd. (Maths), Scout Leader Ph iv* |
| 21 | Mr. | E. | Bernard Mahendren | *B.A , P.G.D.E.* |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | Miss. | S. | Chanthirasegarampillai | *Specialist Trd. (Science)* |
| 23 | Mrs. | S. | Ehanthanathan | *Specialist Trd. (Primary Ed.)* |
| 24 | Mr. | S. | Ganeshalingam | *Specialist Trd. (Maths)* |
| 25 | Mrs. | S. | Gunaseelan | *Specialist Trd. (Primary Ed.), B.A* |
| 26 | Mrs. | R. | Gunathasan | *Specialist Trd. (English)* |
| 27 | Mrs. | C. | Ilanco | *Specialist Trd. (Science)* |
| 28 | Mrs. | K. | Jeyabaalan | *Specialist Trd. (Hinduism)* |
| 29 | Mr. | Y. | Jeyakanthan | *B.A (Hons).* |
| 30 | Mrs. | S. | Kanagasabapathy | *Specialist Trd. (Commerce), B.Com.* |
| 31 | Miss. | R. | Kandiah | *Specialist Trd. (Primary Ed.) , B.Com.* |
| 32 | Miss. | K. | Kanthasamy | *B.Sc, P.G.D.E* |
| 33 | Mr. | K. | Keetheswaran | *B.Sc, P.G.D.E* |
| 34 | Mrs. | J. | Ketheeswaran | *Specialist Trd. (Science)* |
| 35 | Mrs. | E. | Krishnananthan | *Specialist Trd. (Primary Ed.)* |
| 36 | Miss. | M. | Kokilavathani | *B.A (Hons).* |
| 37 | Mrs. | M. | Kugananthan | B.A (So.Sc) |
| 38 | Mrs. | C. | Naganathan | *Specialist Trd. (Primary Ed.)* |
| 39 | Mrs. | J. | Navaloganathan | *Specialist Trd. (Primary Ed.), B.A, P.G.D.E, Teacher Librarian* |
| 40 | Miss. | G. | Nellinathalingam | *B.A (Hons), P.G.D.E* |
| 41 | Miss. | I. | Shanmuganathan | *B.Dance(Hons), Kalaviththagar.* |
| 42 | Mrs. | G. | Pathmanathan | *Specialist Trd. (Home Eco.)* |
| 43 | Mrs. | R. | Perinpamoorthy | *Specialist Trd. (English), B.A* |
| 44 | Mrs. | M. | Philip Thambirajah | *B.Com, P.G.D.E, H.N.D.C* |
| 45 | Mrs. | K. | Pirabakaran | *B.A, (Special Social Science)* |
| 46 | Mrs. | R. | Prabaharan | *B.Com.* |
| 47 | Mrs. | K. | Ponvasan | *National Dip. In Teaching (Primary)* |
| 48 | Mrs. | J. | Rajamahenthiran | *Specialist Trd. (Science)* |
| 49 | Miss. | K. | Satkunalingam | *B.A , P.G.D.E,* |
| 50 | Mrs. | S. | Selvakumar | *Specialist Trd. (Maths)* |
| 51 | Miss. | S. | Selvarathnam | *Specialist Trd. (Primary Ed.)* |
| 52 | Mr. | V. | Senthuran | *Specialist Trd. (Physical Ed.)* |
| 53 | Mr. | V. | Sevanthinathakkurukkal | *Specialist Trd. (Hinduism)* |
| 54 | Mrs. | T. | Sivayogan | *M.Sc, B.Sc.(Hons),.* |
| 55 | Mrs. | V. | Srivadivelu | *B.Sc, P.G.D.E* |
| 56 | Mr. | S.J. | Stephen | *Specialist Trd. (English), B.A.F.,P.G.D.E.* |
| 57 | Mrs. | T. | Suwaminathan | *B.A , P.G.D.E* |
| 58 | Mrs. | M. | Thayaparan | *Specialist Trd. (science).* |
| 59 | Mrs. | N. | Thilagaraj | *B.Sc (Hons), P.G.D.E* |
| 60. | Mr. | V. | Thileepan | B.Sc (Hons) |
| 61 | Mr. | K. | Thillainathan | *B.Sc, P.G.D.E* |
| 62 | Miss. | R. | Thurairaja | *Specialist Trd. (Maths)* |

| | | | |
|---|---|---|---|
| 63 Mrs. | S. | Vasanthan | *Specialist Trd. (Primary Ed.)* |
| 64 Mrs. | S. | Velmurugan | *Dip.in Music,P.G.D.E* |
| 65 Mr. | M. | Vickneswaran | *B.A (Hons) Econ.P.G.D.E.* |

**Prospective Teachers *(J.N.C.O.E)***

| | |
|---|---|
| 01. Mr. T. Umakanthan | Art |
| 02. Miss. T. Kayisthiri | Primary |

**Non - Teaching Staff**

| | |
|---|---|
| 01. Mr. P. Sugirthan B.Com. | Managment Assistant |
| 02. Mrs. N. Ilamurugan B.Com. | Managment- Financial Assistant |
| 03. Miss. E. Kandasamy B.A | Managment- Financial Assistant |
| 04. Mrs. S. Gnanasegaram | Library Assistant |
| 05. Mrs. A. Ketheeswaranathan | Laboratory Assistant |
| 06. Mrs. M. Saththeeswaran | Laboratory Assistant |
| 07. Mr. S. Balasubramaniam | Watcher |
| 08. Mr. R. Prabakaran | Agriculture Labourar |
| 09. Mr. S. Nadarajah | Labourar |
| 10. Mr. P. Yogarajah | Labourar |
| 11. Mr. S. Navaratnam | Labourar |
| 12. Mr. K. Pushparajah | Labourar |

**Retired From Service**

01. Mrs. T. Devarajan
02. Mr.T.Visvalingam

**Transfer to other Stations**

01. Mr. K. Shivakumar
02. Mrs. S. Pemaraj
03. Mr. S.Sivaram
04. Mr.A.Rasasingam
05. Miss. V. Selvarajah

# கல்லூரிக் கீதம்

*இராகம் : சங்கராபரணம்* *தாளம் : ஆதி*

சீர்பல ஏந்திநம் அன்னையை நிகர்த்திடும்

ஸ்ரீசோ மாஸ்கந்தக் கல்லூரி

கார்நிகர் கொடையினன் மழவரின் மைந்தன்

கந்தைய வேள்தந்த கல்லூரி

ஏர்பெறு கலைகளை இலவச மாகவே

ஈந்தொளி மலரநீ இலங்கிடுதி

சீர்பண் பொடுநம் சிந்தையும் வாழ்வும்

திருவுடன் செழித்திட வளர்த்திடுநீ

வாழ்க ! வாழ்க ! வாழ்க !

வாழிய வாழியவே !!

சோமாஸ்கந்தன் சிறப்புடன் மலரவும் எங்கள் அன்பிற்குரிய அதிபரின்
ஓய்வுக்காலம் சிறக்கவும் எமது நல்வாழ்த்துக்கள்

# ஸ்ரீ மகாவிஷ்ணு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. : 222 2371, 222 2372



CIC உற்பத்திப் பொருள்கள், கால்நடை மருந்து வகைகள், கிருமி நாசினி வகைகள், தம்ரோ தளபாடப் பொருள்கள், BROWN உழவு இயந்திரம், இரண்டு சில்லு உழவு இயந்திரம், பிளாஸ்ரிக் பொருள்கள், உரவகைகள் என அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்







பலசரக்குப் பொருள்கள் விவசாய உள்ளீடுகள், CIC விவசாய இரசாயன மருந்து வகைகள் CIC உரவகைகள்பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

## பவானி களஞ்சியம்

இராசவீதி,நீர்வேலி

## கஜமுகா ரேட் சென்ரர்

கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே. : 222 2049

Design & Layout: Computer Unit, PSSC. T.P :021 4591644
Printed By : Shampavi Printers, 276, Kasthuriar Road, Jaffna. T.P. : 077 6184425